ஸ்ரீ

ஆழ்வார் நூற்றந்தாதி

என்கிற

சடகோபரந்தாதி.

சடகோபரது அந்தாதி என விரியும்; சடகோபர்விஷயமாக அந்தாதித்தொடையாற் பாடப்பட்டதொரு பிரபந்தம் என்பது பொருள்: இத்தொடர் மொழியில் தொக்குநின்ற ஆறும்வேற்றுமையுருபின்பொருளாகிய சம்பந்தம், விஷயமாகவுடைமை; விஷ்ணுபுராணம், விநாயகரகவல் என்பவற்றிற்போல, சடகோபரைப் பற்றிய அந்தாதி என விரித்தால், இரண்டாம் வேற்றுமையுருபும் பொருளும் உடன்தொக்க தொகையாம்.

'சடகோபர்' என்பது - ஸ்ரீவைஷ்ணவமதத்திற் சிறந்த மெய்யடியாரென்று கொண்டாடப்படுகிற ஆழ்வார்கள் பன்னிருவரில் ஐந்தாமவரான நம்மாழ்வாரது திருநாமங்களி லொன்று. பாண்டியநாட்டில் தாமிரபர்ணி நதிதீரத்தி லுள்ளதான திருக்குருகூரில் வேளாள வருணத்தவராகிய திருவழுதிவளநாடரென்பவரது சந்ததியிலே காரியென்பவர்க்கு உடையநங்கையார் திருவயிற்றில் திருவவதரித்த இவர், பிறந்தபொழுதே தொடங்கி அழுதல் பால்குடித்தல் முதலிய குழந்தைச்செய்கையொன்றையுங் கொள்ளாமலே வாட்டமின்றிப் பரிபூர்ணராய் வளர்ந்துவருகிற ஆச்சரியத்தைத் தாய்தந்தையர் கண்டு இவரை அத்திருப்பதியிலுள்ள திருமாலின் திருக்கோயிலிற் கொண்டுபோய் விட, இவர் அங்குஇருந்த ஒருபுளியமரத்தின்கீழ்ச்சென்றுவீற்றிருந்து பதினறு பிராயமளவும் கண்திறவாமல் மௌனமாக எழுந்தருளியிருந்த பின்பு, மதுரகவிகள் இவ்வாழ்வாருடைய மகிமையையறிந்து வந்து அடைந்து அடிமைத்தொழில் செய்துவருகையில், ஆழ்வார் இருக்கு யசுர் அதர்வணம் சாமம் என்ற நான்குவேதங்களின் ஸாரார்த்தங்கள் முறையே அமையத் திருவிருத்தம் திருவாசிரியம்
...ரியதிருவந்தாதி திருவாய்மொழியென்னும் நான்குபிரபந்தங்களை
...ருளிச்செய்து உலகத்தை உய்வித்தன ரென்று வரலாற்றின்
...க்கம் அறிக. கர்ப்பத்திலிருக்கிறபொழுது ஞானமுடையன
...பிருக்... குழந்தைகளைப் பிறந்தஉடனே தன ஸ்பரிசத்தால்
... உள்ளாக்கி அழுதல் அரற்றுதல் முதலியன
...விடுந் தன்மையதான சடமென்னும் வாயு,
...தபொழுது இவரையும் தொடுதற்கு வர,
...னை உங்காரத்தால் ஒறுத்துஓட்டி யொழித்
...ன்று இவர்க்குத் திருநாமமாயிற்று: எம்
...ன குணகணங்களாகிய அமுத

http://acharya.org

வெள்ளத்திலே முழுகி மிகவும் ஈடுபட்டு நன்றாக ஆழ்ந்திடுபவராதல்பற்றி 'ஆழ்வார்கள்' என்று பெயர்பெற்ற பரமபாகவதர்களில் இவர் பிரதானராதலால், 'ஆழ்வார்' என்பது இவர்க்குச் சிறப்புப்பெயராக வழங்கும். மாறன், பராங்குசன், வகுளாபரணன், திருநாவீறுடையபிரான், திருக்குருகூர்நம்பி, குருகைப்பிரான் முதலிய திருநாமங்களும் இவர்க்கு உண்டு.

அந்தாதி - அந்தத்தை ஆதியாகவுடையது, அன்மொழித்தொகை; வடமொழித்தொடர், தீர்க்கசந்தி: அந்த ஆதி எனப் பிரிக்க. அந்தாதியாவது-முன்நின்ற செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் அடுத்து வருஞ் செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது; இங்ஙனம் பாடும் நூலினது ஈற்றுச்செய்யுளின் அந்தமே முதற்செய்யுளின் ஆதியாக அமையவைத்தல், மண்டலித்தலெனப்படும். இது, தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்றாம். பதிற்றந்தாதி, நூற்றந்தாதி என்ற வகைகளில் இந்நூல், நூற்றந்தாதியாம்; அதாவது - நூறுவெண்பாவினாலேனும், நூறு கட்டளைக் [illegible]த்துறையினாலேனும் அந்தாதித்தொடையாற் கூறுவது. இந்[illegible]ல்-அந்தாதித்தொடையா லமைந்த நூறுகட்டளைக்கலித்துறைகளையுடையது. சொற்றொடர்நிலைச்செய்யுள் பொருட்டொடர்நிலைச்செய்யுள் என்ற வகையில், இது, சொற்றொடர்நிலை; "செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே" என்றார் தண்டியலங்காரத்தும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் செய்யுளியலில் "விருந்தேதானும் புதுவதுகிளந்த யாப்பின்மேற்றே" என்பதனால், 'விருந்துதானும் பழங்கதைமேலதன்றிப் புதிதாகத் தாம்வேண்டியவாற்றால் தொடுக்கப்படுந்தொடர்நிலைமேலது' என்று கூறினமையின், இந்நூல், அங்ஙனங்கூறிய விருந்தாமென்று உணர்க. அச்சூத்திரவுரையில் அந்தாதியும் கலம்பகமும் முதலாயின உதாரணங் காட்டப்பட்டுள்ளவாறுங் காண்க. இனி, இதனைச் சிறுகாப்பியத்துள் அடக்குவர் பிற்காலத்தார். இப்பிரபந்தம், தோத்திரரூபமானது.

சிறப்புப்பாயிரம்.

1. ***தேவிற்சிறந்ததிருமாற்குத்தக்கதெய்வக்கவிஞன்***
பாவிற்சிறந்ததிருவாய்மொழிபகர்பண்டிதனே
நாவிற்சிறந்தவம்மாறற்குத்தக்கநன்னாவலவன்
பூவிற்சிறந்தவாழ்வான்கம்பநாட்டுப்புலமை[illegible].

(இதன்பொருள்.) தேவில் - (பிரமன் முதலிய) தேவர்களனைவருள்ளும், சி[illegible] திருமாற்கு-ஸ்ரீமந்நாராயணனுக்கு, தக்[illegible] கவிஞன்-தெய்வத்தன்மையுள்ள கவிபா[illegible] சிறந்த திருவாய்மொழி பகர் பண்டி[illegible]

மேம்பட்ட திருவாய்மொழியென்னுந் திவ்வியப்பிரபந்தத்தைத் திருவாய்மலர்ந்தருளிய ஞானபண்டிதரான நம்ஆழ்வாரேயல்லது வேறில்லை; (அவ்வாறே), நாவின்சிறந்த அ மாறற்கு தக்க நல் நாவலவன் - (அங்ஙனம்பாடவல்ல) நாவினாற்சிறந்த அச்சடகோபர்க்குத் தக்க கவிபாடவல்ல சிறந்தபுலவன், பூவில் சிறந்த ஆழ்வான் கம்பநாட்டுப் புலமையனே - இந்நிலவுலகத்திற் சிறந்த கம்பநாட்டாழ்வாரென்னும் வித்துவானேயல்லது வேறில்லை; (என்றவாறு.)

தேவாதிதேவனான திருமாலின் வைபவத்துக்கு ஏற்றபடி கவிபாடவல்லவர் சடகோபரே; அச்சடகோபருடைய வைபவத்திற்கு ஏற்றபடி கவிபாட வல்லவர் கம்பநாட்டாழ்வாரே என்பது கருத்து. ஏகாரமிரண்டும் - பிரிநிலையோடு, தேற்றம். இச்செய்யுளில் முன்னிரண்டடியை உபமானமாகவும், பின்னிரண்டடியை உபமேயமாகவுங் கொண்டு **எடுத்துக்காட்டுவமையணி** யென்னலாம். திருமால் - திருமகள்கொழுநனான ஸ்ரீமகாவிஷ்ணு. தேவிற் சிறந்த திருமால் - "பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்பூநதம், ஆவிற்கு அருமுனியா யானைக்கு அமரரும்பல், தேவில் திருமாலெனச்சிறந்த தென்பவே" என்றார் கவிசாகரப்பெருந்தேவனாரும். தெய்வக்கவிஞன் - எல்லாப் பொருளையும் உள்ளபடி உணர்ந்து அங்ஙனமே உரைக்குந் திவ்வியஞானத்தையுடைய கவி; பரதேவதையான திருமாலின் திருக்கல்யாண குணங்களையே பாடுங் கவி.

ஆழ்வாரை "தெய்வக்கவிஞன்" என்றதற்கும் திருவாய்மொழியை 'பாவிற் சிறந்தது' என்றதற்கும் ஏற்றதொரு வரலாறு வருமாறு:—நம்மாழ்வாரது சிஷ்யரான மதுரகவியாழ்வார், அச்சடகோபர் திருநாட்டையலங்கரித்த பின்பு, அந்த ஆசிரியரைப் பிரிந்ததற்கு மிக இரங்கி அரிதில் தேறி, அர்ச்சாரூபமான ஆழ்வார் விக்கிரகத்தை ஏறியருளப்பண்ணி ஆழ்வாரவதாரஸ்தலமான திருக்குருகூரென்னுந் திருநகரியிலே பிரதிஷ்டை செய்து, அந்தத் திவ்விய மூர்த்திக்கு நித்திய நைமித்திக உத்ஸவங்களையெல்லாம் சிறப்புற நடத்திக் கொண்டு வந்தார். அத்திருவிழாக்களில், 'வேதந்தமிழ்செய்தமாறர் வந்தார்,' 'திருமாலுக்குஉரிய தெய்வப் புலவர் வந்தார்', 'அளவிலாஞானத்து ஆசிரியர் வந்தார்' என இவை முதலாக அநேகவிருதுகளைக் கூறித் திருச்சின்னம் ஒலிமுழங்குதலைக் கேள்வியுற்றவளவிலே, மதுரைச் சங்கத்தாரது தூண்டுதலால் அவர்கள் மாணாக்கர்கள் வந்து எதிரிட்டு 'உங்கள் ஆழ்வார் பந்தரேயன்றிப் பகவானல்லரே: அவர் சங்கமேறிய புலவரோ? அவர் பாடிய திருவாய்மொழி முதலியன சங்கமேறிய செய்யுளல்லவே: அவரை வேதந்தமிழ்செய்தவ ரென்று சிலாகிப்பது தகுதியோ?' என்று பல குதர்க்கம் பேசி விருதுகளைத் தடுத்திட்டனர்; அதற்கு மதுரகவிகள் மனம்பொறுது வருந்தி 'இவர்கட்குக் கர்வபங்கமாம்படி தேவரீர் செய்தருளவேண்டும்' என்று ஆழ்வாரையே பிரார்த்திக்க, அவர் ஒரு கிழப்பிராமணவடிவத்தோடு வந்து திருவாய்மொழியில், "கண்ணன்கழலிணை, நண்

http://archive.org

னும்மனமுடையீர், என்னூர் திருநாமம், திண்ணம்நாரணமே" என்ற பாசுரத்தின் முதலடியை ஒரு சிற்றேட்டில் எழுதிக் கொண்டுபோய்ச் சங்கப்பலகையில் வைத்திட்டால் அவர்கள் செருக்கு அடங்கும் என்று கூறியருளினர்; அங்ஙியமனத்தின் படியே சடகோபபக்தர், கண்ணன்கழலிணையை யெழுதிய ஏட்டை யெடுத்துப்போய் வைத்திட்ட மாத்திரத்தில், சங்கப்புலவர்கள் ஏறியிருந்த பலகை பொற்றாமரைப் பொய்கையில் மூழ்கித் தன் மேலிருந்த புலவர்களையெல்லாம் நீரில்வீழ்த்தி உடனே எழுந்து தன்மீதுவைத்த சிறுமுறியை மாத்திரம் ஏந்திக்கொண்டு மிதந்தது; அப்பொழுது நீரில்விழுந்து அமிழ்ந்து தடுமாறி எழுந்து மெல்ல நீந்திக் கரை சேர்ந்த சங்கப்புலவர்கள், சகலவேதசாஸ்திரங்களை யும் பிறர்கற்பியாமல் தாமேயுணர்ந்த பகவதம்சமான ஆழ்வா ருடைய தெய்விகபாண்டித்தியத்தை யுணர்ந்து இறுமாப்பு ஒழிந்து, தாம் முன்பு அபசாரப்பட்டதற்கு அநுதாபமுற்று, அதனைக்ஷமிக்கும்பொருட்டு அவரது மகிமைதங்கியபிரபாவத்தைக் குறித்துத் தோத்திரமாகத் தனித்தனி ஒவ்வொருபாடல்பாடி வெளியிடுபவரானார்கள்; அங்ஙனம் வெளியிடுகையில், அப்பாடல் கள் யாவும் "சேமங் குருகையே செய்ய திருப்பாற்கடலோ, நாமம் பராங்குசமோ நாரணமோ—தாமம், துளவோ வகுளமோ தோளி ரண்டோ நான்கு, முளவோ பெருமானுனக்கு" என்ற இப்பாடல் வடிவாகச் சிறிதும் வேற்றுமையின்றி ஒற்றுமைப்பட்டிருக்கக் கண்டு அவர்களனைவரும் 'இதுஎன்ன அற்புதம்! இதுவும் ஆழ் வாரது தெய்வத்திருவருளே' என்று அதிசயப்பட்டு, "ஈயாடு வதோ கருடற்கெதிரே இரவிக்கெதிர் மின்மினி யாடுவதோ, நாயோடுவதோ வுறுமிப்புலிமுன் நரிகேசரி முன் நடையாடுவதோ, பேயாடுவதோ வழகூர்வசிமுன் பெருமான்வகுளாபரணன்னருள் கூர்ந், தோவாதுரையாயிரமாமறையின் னொருசொற்பொறுமோ வுலகிற்கவியே" என்பது முதலாகச் சிற்சிலகவிகள்பாடிப் புகழ்ந்து அன்று முதல் ஆழ்வார்க்கு விருதுகூறல் முதலிய சகல வைபவங்களையும் முன்னினும் பலமடங்கு மிகுதியாக நடப்பித்து வந்தார்கள் என்பதாம்.

ஆழ்வார் பிறந்தபொழுதே தொடங்கி அழுதல் பால்குடித் தல் முதலிய லோகவியாபாரம் ஒன்றுமின்றி உலகநடைக்கு மாறாக இருந்ததனால், இவர்க்கு 'மாறன்' என்று திருநாமமாயிற்று; வலியவினைகட்கு மாறாக இருத்தலாலும், அந்நியமதஸ்தர்களை அடக்கி அவர்கட்குச் சத்துருவாயிருத்தலாலும், பாண்டியநாட்டில் தலைமையாகத்தோன்றியதனாலும் வந்த பெயரென்றலு முண்டு. கம்பநாட்டுப்புலமையன் - கம்பநாட்டில் தோன்றிய புலவன்; "கம்பநாட்டாழ்வான்கவி," "தெய்வப்புலமைக்கம்பநாட்டாழ் வார்," "கம்பநாடன்," "கம்பநாடுடையவள்ளல்" என்பனவுங் காண்க. இவர், ஆழ்வார்கள் பன்னிருவரி லொருவரல்லராயினும், அவர்கள்போலப் பக்தியிற் சிறந்தவரென்பது பற்றி, ஆழ்வார் என்று வழங்கப்பட்டனர். இப்பெயரால் மற்றுஞ்சிலபக்தர்களை வழங்குவதை, பரதாழ்வான் சத்துருக்கனாழ்வான் பிரகலாதாழ் வான் கஜேந்திராழ்வான் சுதர்சநாழ்வான் கூரத்தாழ்வான் வில்லி

http://acharya.org

புத்தூராழ்வார் முதலிய பெயர்களினுங் காண்க. அன்றியும், நம்மாழ்வார்விஷயமாக 'கண்ணிநுண்சிறுத்தாம்பு' என்ற பதிற்றந்தாதியைப் பாடிய மதுரகவிகளை 'மதுரகவியாழ்வார்' என்றல்போல, நம்மாழ்வார்விஷயமாக 'சடகோபரந்தாதி' என்னும் நூற்றந்தாதியைப் பாடிய கம்பநாட்டரையும் 'கம்பநாட்டாழ்வார்' என்று சொல்லத்தகும்; "மன்றேபுகழுந்திருவழுந்தூர்வள்ளல்மாறனை முன், சென்றேமதுரகவிப்பெருமான் தென்தமிழ்த்தொடையில், ஒன்றேபதிகமுரைத்தவன்பொன்னடியுற்றுநின்முன், என்றே பதிகம்பதிகமதாக விசைத்தனனே" என இந்நூலினிறுதியில் வருஞ் சிறப்புப்பாயிரச்செய்யுள்கொண்டும், மதுரகவியாழ்வாரும் கம்பநாட்டாழ்வாரும் ஒருபுடையொப்புமையுடையராத லுணர்க. மற்றும், ஸ்ரீராமபக்தியை மிகுதியாகவுடைமைபற்றிப் பரதன் 'பரதாழ்வான்' என்று வழங்கப்படுதல்போல, ஸ்ரீராமபக்தியை மிகுதியாகவுடைய கம்பநாடரும் 'கம்பநாட்டாழ்வார்' என்று வழங்கப்படுதற்கு ஏற்றவராவர். இனி, வாழ்வான் என்று எடுத்து, நிலவுலகத்துச் சிறந்த வாழ்வையுடையவ ரென்றலும் ஒன்று.

'தேவ' என்ற வடமொழி, தமிழில் 'தே' என்று சிதைந்து வழங்கும்; இதனைத் தமிழ்மொழியே யென்பாருமுளர். 'தே' என்ற ஓரெழுத்தொருமொழியின்மேல், 'இல்' என்ற ஏழனுருபு சேரும்போது, இடையில் வகரவுடம்படு மெய்பெற்று 'தேவில்' என்று நின்றது; "ஏழன் இவ்விருமையும்" என்றார் நன்னூலார். திருவாய்மொழி - மேன்மையான வாய்மொழிகளாலாகிய பிரபந்தம்; அடையடுத்த கருவியாகுபெயர். நாவிற்சிறந்தமாறன் - 'திருநாவீறுடையபிரான்' என்று ஆழ்வார்க்கு ஒரு திருநாமமிருத்தலுங் காண்க. நாவலவன் - கவிபாடுதல் பிரசங்கஞ்செய்தல் முதலிய நாவின்வல்லமை யுடையவன். புலமை - கல்வித்தேர்ச்சி, அதாவது - பலவேறுவகைப்பட்ட நூலுணர்ச்சிகளை யெல்லாம் ஒருங்கே கொண்ட பேரறிவுடைமை; பாண்டித்தியம்: அதனை யுடையவன், புலமையன்.

இக்கவி, அபியுக்தரி லொருவர் செய்தது. இது, வைஷ்ணவ சம்பிரதாயத்தில் '**தனியன்**' எனப்படும். (நூலினுள் அடங்காது தனியே பாயிரமாய் நிற்றல்பற்றியது, அப்பெயர்: 'அன்' விகுதி - உயர்வுப்பொருளது.) அடுத்த மூன்றுசெய்யுள்களும் இவ்வாறே. (1)

2. **ஆரணத்தின்சிரமீதுறைசோதியையந்தமிழாற்**
பாரணஞ்செய்தவனைக்குருகூரனைப்பற்பலவா
நாரணனுமெனவேத்தித்தொழக்கவிநல்குகொடைக்
காரணனைக்கம்பனைநினைவாமுட்களிப்புறவே.

(இ - ள்.) ஆரணத்தின் சிரம்மீது - வேதமுடியிலே, உறை - பொருந்திய, சோதியை - பரஞ்சோதிஸ்வரூபியான ஸ்ரீமந்நாராயணனை, அம் தமிழால் - அழகிய தமிழ்ப்பாசுரங்களினால், பாரணம் செய்தவனை - பாடியநுபவித்தவரான, குருகூரனை - திருக்குரு

http://acharya.org

கூரில் அவதரித்தவராகிய நம்மாழ்வாரை, பல் பல ஆ - பலபல வகையாக, காரணன் ஆம் என ஏத்தி தொழ - அந்த நாராயண மூர்த்தியே யாவரென்று துதித்து (அனைவரும்) வணங்கும்படி, கவி நல்கு - கவிபாடிய, கொடை கார் அனையனை - அருட்கொடையினால் மேகத்தைப்போல்பவராகிய, கம்பனை - கம்பநாட்டாழ்வாரை, உள் களிப்பு உற - மனத்தில் ஆனந்தம் உண்டாகி மிகுமாறு, நினைவாம் - (எப்பொழுதும்) சிந்திக்கக்கடவோம், (யாம்);

வேதத்தின்பிரிவு இரண்டனுள், யாகம்முதலிய கிரியைகளைக் குறிப்பதான கர்மகாண்டமெனப்படுகிற பூர்வபாகம் தவிர, பகவானைக்குறித்ததாய் உபநிஷத் என்றும் வேதாந்தம் என்றும் பெயர்சொல்லப்படுகிற பிரமகாண்டமாகிய உத்தரபாகம், 'ஆரணத்தின்சிரம்' எனப்பட்டது. அவ்வுபநிஷத்துக்களில் நன்குபிரதிபாதிக்கப்படுகிறவனும், சூரியன் முதலிய சுடர்களின் ஒளியெல்லாவற்றினும் மேம்பட்ட ஒளிவடிவமாயுள்ளவனுமான கடவுளென்பார் 'ஆரணத்தின் சிரமீதுறைசோதி' என்றார்; "வேதாந்தவிழுப்பொருளின் மேலிருந்த விளக்கு" என்றார் பெரியாழ்வாரும். 'தமிழ்' என்பது-இங்கு, அப்பாஷையிலாகிய செய்யுள்கட்கு ஆகுபெயர். அவற்றிற்கு அழகு - சுருங்கச் சொல்லல் முதலியன. "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம், கண்ணனெம்பெருமான்" என்னும்படி, ஆழ்வார்எம்பெருமானைத்தியானித்துக் கவிபாடித்துதித்து ஆனந்தமனுபவித்தலையே தமக்குத் தாரகபோஷக போக்கியங்களாகக் கொண்டு வளர்ந்தவராதலால், "சோதியையந்தமிழாற் பாரணஞ்செய்தவன்" என்றார். இத்தொடர்க்கு - எம்பெருமானைத் தாம்பாடும் இனியபாடல்களாகிய அமிருதத்தைக் காட்டு திருப்தி செய்வித்தவரென்றும் பொருள் கொள்ளலாம். குருகூரன் - திருவவதார ஸ்தலத்தினால் வந்தபெயர்; குருகூர் - நூற்றெட்டுத்திருமால்திருப்பதிகளுட் பாண்டியநாட்டுத் திருப்பதி பதினெட்டில் ஒன்று. செய்தவனை, குருகூரனை என்ற விசேஷணம் விசேஷ்யம் என்ற இரண்டிலும் வேற்றுமையுருபு விரித்தது, வடமொழிநடை: காரணனை, கம்பனை என்றவிடத்தும் இது காண்க. பற்பலவா - ஆழ்வாரைச் சிறப்பித்தும், திருவாய்மொழியைச் சிறப்பித்தும், அதுகற்றோரைச் சிறப்பித்தும், தலைவன்கூற்றாகச் சிறப்பித்தும், தலைவிகூற்றாகச்சிறப்பித்தும், தாய்கூற்றாகச்சிறப்பித்தும், தோழிகூற்றாகச் சிறப்பித்தும் பிறவகைகளாற் சிறப்பித்தும் இப்படி பலபடிகளாக என்க.

ஆழ்வாரைப் பகவானுடைய அம்சமென்று பாத்மபுராணம் கூறுகின்றதற்கு ஏற்ப, 'காரணனும்' எனப்பட்டது; "நாராயணாவடியேனுடுந்தமிழ்வேதபாராயணா சடகோபா" என்பர் பிள்ளைப்பெருமாளையங்காரும். 'அணவுபவன்' என்றது, 'அணன்' என்று விகாரப்பட்டு நின்றது; 'அந்தணர்' என்பதற்கு - ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'அந்தத்தை அணவுபவர்' என்று விரித்துக் காரணப்பொருளுரைத்தது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. கொடைக்காரணன் - "கைம்மாறுவேண்டா கடப்பாடு மாரிமாட்டு, என்னாற்றுங் கொல்லோவுலகு" என்றபடி மேகம்போலப் பிரதியுபகாரத்தை

http://acharya.org

விரும்பாமல் வரையாது கொடுக்கும் ஞானவண்மையை யுடையவ னென்க; "காரணக்கொடையான் கம்பன்" என்ற கம்பராமாயணச் சிறப்புப்பாயிரமுங் காண்க: இனி, கொடைக்காரணன் என்பதற்கு-கொடைக்குக் காரணமானவன் [அதாவது - கொடையைச் செய்பவன்] என்று பொருள்கொள்ளுதலும் ஒன்று. 'நினைவாம்' என்ற தன்மைப்பன்மை, உலகத்தாரை உளப்படுத்தியது. 'கம்பனைந் நினைவாம்' என விரித்தல்விகாரம்பெற்ற பாடமும் உண்டு; அது, ஓசையத்துக்குச் சிறக்கும். (2)

3. நஞ்சடகோபனைப்பாடினையோவென்றுநம்பெருமாள்
விஞ்சியவாதரத்தாற்கேட்பக்கம்பன்விரைந்துரைத்த
செஞ்சொலந்தாதிகலித்துறைநூறுந்தெரியும்வண்ண
நெஞ்சடியேற்கருள்வேதந்தமிழ்செய்தநின்மலனே.

(இ - ள்.) வேதம் தமிழ் செய்த நின்மலனே - வேதங்களைத் தமிழ்த்திவ்வியப்பிரபந்தங்களாக அருளிச்செய்த குற்றமற்ற ஸ்வாமி!—நம் சடகோபனை பாடினையோ என்று -'நம்-ஆழ்வாரைத் துதித்துப் பிரபந்தம் பாடினையோ?' என்று, நம் பெருமாள் விஞ்சிய ஆதரத்தால் கேட்ப - ஸ்ரீரங்கநாதன் மிக்க அன்புகொண்டு வினவியருள, (அதனை யநுசரித்து), கம்பன் விரைந்து உரைத்த - கம்பர் விரைவாகப்பாடின, செம் சொல் அந்தாதி கலித்துறை நூறும் - செந்தமிழ்ச் சொற்களாலான அந்தாதிப்பிரபந்தத்திலுள்ள நூறுகட்டளைக் கலித்துறைகளையும், தெரியும் வண்ணம் - அறிந்து கொள்ளும்படி, அடியேற்கு நெஞ்சு அருள் - தாசனான எனக்கு மனப்பரிபாகத்தை அளித்தருள்வாயாக; (எ - று.)

என்று அபியுக்த ரொருவர் ஆழ்வாரைப் பிரார்த்திக்கிற வகையாக இந்நூற்குப் பாயிரம்பாடின ரென்க; அடுத்தசெய்யுளும் இத்தன்மைத்தே:"எங்கள்கதியே இராமாநுசமுனியே,சங்கை கெடுத்தாண்ட தவராசா - பொங்குபுகழ், மங்கையர்கோ னீந்த மறையாயிரமனைத்துந், தங்குமனம் நீ எனக்குத்தா" என்ற பெரிய திருமொழித்தனியனும் இவ்வகை வாய்பாடு அமைய இருத்தல் காண்க.

நம்சடகோபனைப்பாடினையோ வென்று நம்பெருமாள் விஞ்சிய ஆதரத்தாற்கேட்ட விவரம், கம்பர்வரலாற்றிற் கூறப்பட்டது. சடகோபர் நம்பெருமாளால் 'நம்-ஆழ்வார்' என்று அபிமானித்து விசேஷகடாக்ஷஞ் செய்யப்பட்டு மற்றையாழ்வார்களனைவரினும் உயர்வுபெற்றதனால், 'நம்மாழ்வார்' என்று பெயர்பெற்றனர்; 'நம்பெருமாள்' என்ற பெயரும் உயர்ச்சியை விளக்கும்; "நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை, யென்பரவரவர்தம் ஏற்றத்தால்" என்ற உபதேசரத்தினமாலையைக் காண்க.பெருமாள் = பெருமாள்: பெருமையுடையவன்; இதில், பெருமையென்ற பகுதி ஈற்று ஐகாரம் மாத்திரம் கெட்டு 'பெரும்' என நின்றது; 'ஆன்' என்ற ஆண்பால்விகுதி 'ஆள்' என ஈறுதிரிந்தது: 'ஆள்' என்ற பெண்பால் விகுதியே சிறுபான்மை ஆண்பாலுக்கு வந்ததென்றலுமொன்று: அன்றி, பெருமையை ஆள்பவனெனக் கொண்டால்,

http://acharya.org

'ஆள்' என்ற **வினைப்பகுதி கருத்தாப்பொருள்விகுதி** புணர்ந்து கெட்டதென வேண்டும். 'வேதம்' என்பது - (அறியவேண்டுமவைகளையெல்லாம்) அறிவிப்பதுஎன்று காரணப்பொருள்படும். 'விரைந்துஉரைத்த' என்றதனால், இவ்வந்தாதி ஆசுகவியாகப் பாடப்பட்டதென்பது போதரும். அடியேன் - அடிமையென்னும் பண்பினடியாப் பிறந்த தன்மையொருமைக் குறிப்பு வினையாலணையும்பெயர்.

இப்பொழுதைக்குச் சற்றேறக்குறைய 460 - வருடங்கட்கு முன்புஇருந்த ஸ்ரீபிள்ளைலோகாரியசீயர் தாமியற்றிய உபதேசரத்தினமாலைவியாக்யாநத்தில் மேற்காட்டிய "நம்பெருமாள் நம்மாழ்வார்" என்றதொடக்கத்துப்பாசுரத்தின்கீழ் இச்செய்யுட்பகுதியையெடுத்து மேற்கோள்காட்டியுள்ளதனால், இத்தனியன் அக்காலத்திலேயேபிரசித்தமாகஇருந்ததென்றுஅறியலாம். (3)

4. **நாதனரங்கனயந்துரையென்ன நற்கம்பனுன்றன்**
பாதம்பரவியபைந்தமிழ் நூறும்பரிவுடனே
யோதும்படியெனக்குள்ளந்தனையருளோதரிய
வேதந்தமிழ்செய்தமெய்ப்பொருளேயிதென் விண்ணப்பமே.

(இ - ள்.) ஓது அரிய-ஓதியுணர்தற்கு அரியனவான, வேதம்-வேதங்களின் ஸாரார்த்தங்களை, தமிழ்செய்த - தமிழ்த் திவ்வியப் பிரபந்தங்களாக அருளிச்செய்த, மெய்பொருளே - உண்மையான பரம்பொருளே!—நாதன் அரங்கன் - ஸ்ரீரங்கநாதன், நயந்து - விரும்பி, உரை என்ன - '(நம்சடகோபனைப்)பாடு' என்று நியமித்தருள, நல் கம்பன் - சிறந்த கம்பநாட்டாழ்வார், உன்தன் பாதம் பரவிய-உன்னுடையதிருவடிகளைத் துதித்த, பைந் தமிழ் நூறும் - பசுந்தமிழ்ச்சொற்களால் தொடுத்த நூறுபாசுரங்களையும், பரிவுடனே ஓதும்படி - அன்போடு கற்றுஉணரும்படி, எனக்கு உள்ளந்தனை அருள் - அடியேனுக்கு மனப்பரிபாகத்தை அளித்தருள்வாய்: இது என் விண்ணப்பமே - இதுவே (உன்பக்கல்) அடியேன் செய்யும் விஜ்ஞாபநம்; (எ - று.)

"சொல்லின்தொகைகொண் டுனதடிப்போதுக்குத் தொண்டுசெய்யும், நல்லன்பரேத்துமுன்நாமமெல்லா மென்றன்நாவினுள்ளே, அல்லும் பகலு மமரும்படிநல்கு அறுசமயம், வெல்லும்பரம விராமாநுச விதென்விண்ணப்பமே" என்ற இராமாநுசநூற்றந்தாதித்தனியன் இவ்வகைவாய்பாடு அமைய இருத்தல் காண்க.

நாதன்அரங்கன்-யாவர்க்குந்தலைவனும் ஸ்ரீரங்கத்திற்கோயில்கொண்டு எழுந்தருளியிருப்பவனுமான நம்பெருமான். நற்கம்பன்-ஞானத்திலும் குணஞ்செயல்களிலுஞ் சிறந்த கம்பன். செந்தமிழை 'பைந்தமிழ்' என்றல், ஒருவகைக்கவிமரபு. தமிழுக்குப் பசுமை - இனிமையுமாம். ஆழ்வார் பகவானது அம்சமாதலால், அவரை 'மெய்ப்பொருளே' என்று விளித்தார். விண்ணப்பம் - விஜ்ஞாபநம் என்ற வடசொல்லின் சிதைவு. (4)

http://acharya.org

சடகோபரந்தாதி.

நூல்.

1. வேதத்தின்முன்செல்கமெய்யுணர்ந்தோர்விரிஞ்சன்முதலோர்
கோதற்றஞானக்கொழுந்தின்முன்செல்ககுணங்கடந்த
போதக்கடலெங்கடென்குருகூர்ப்புனிதன்கவியோர்
பாதத்தின்முன்செல்லுமேதொல்லைமூலப்பரஞ்சுடரே.

(இ - ள்.) தொல்லை - பழமையானதாயும், மூலம் - (எல்லாவற்றிற்கும்)மூலகாரணமாயும், பரம்-(எல்லாவற்றிற்கும்)மேலானதாயுமுள்ள, சுடர் - ஜ்யோதிஸ்வரூபமாய் விளங்குகிற ஸ்ரீமந்நாராயணன்,—வேதத்தின் முன் செல்க - வேதங்களைக்கடந்து சென்றாலுஞ் செல்லட்டும்: மெய் உணர்ந்தோர் - தத்துவங்களையாராய்ந்து அறிபவர்களான முனிவர்களும், விரிஞ்சன் முதலோர் - பிரமன்முதலான தேவர்களுமாகிய அனைவருடைய, கோது அற்ற ஞானம் கொழுந்தின் முன் - குற்றமற்ற ஞானத்தின்முடிவைக் கடந்து, செல்க-சென்றாலுஞ்செல்லட்டும்; குணம் கடந்த போதம் கடல் - எண்ணளவுகடந்த ஞானம் நிறைந்த கடலாகிய, எங்கள் தென் குருகூர் புனிதன் - அழகிய திருக்குருகூரில் அவதரித்த பரிசுத்தமூர்த்தியான நம்ஆழ்வார் அருளிச் செய்த, கவி - பாசுரத்தினது, ஓர் பாதத்தின் முன் - ஓர் அடியைக் கடந்து, செல்லுமே - செல்லமாட்டுவனோ? [செல்லமாட்டான் என்றபடி]; (எ - று.)

ஸ்ரீமந்நாராயணன் சடகோபருடைய கவியின் ஒருபாதத்தைக் கடக்கமாட்டான் என்பதற்குத் திருஷ்டாந்தமாக, கீழ் "தேவிற் சிறந்த" என்ற பாயிரச்செய்யுளி னுரையிற் காட்டிய "கண்ணன் கழலிணை" என்ற அடியைப்பற்றிய வரலாற்றைக் கூறுவர். ஆழ்வாரருளிச்செய்த திருவாய்மொழி முதலிய திவ்வியப்பிரபந்தங்களி லுள்ள ஒவ்வொருசெய்யுளின் ஒவ்வோர் அடியும் ஸ்ரீமந்நாராயண னுடைய திவ்யஸ்வரூபத்தை ஐயந்திரிபற நன்குஉணர்ந்து தெளிவாக வெளியிடுதலால், அப்பரமன் அதனைக்கடந்துசெல்லமாட்டாது அதனுள்ளே அடங்கிநிற்பன் என்பதாம். பரமாத்மஸ்வரூபத்தைமுற்றுமுணர்ந்து தெரிவித்தலில் ஆழ்வார்க்குஉள்ளஞானாதிசயத்தை விளக்கியபடியாம். அந்தத் திவ்வியஞானத்தின் வரம்பின்மை விளங்கவே, 'குணங்கடந்த போதம்' என்றார். எண்ணிலாக்காட்சி [அநந்தஞானம்] என்றபடி. குணம்-எண்கூட்டிப் பெருக்குதல். போதக்கடல் - நீர்நிறைந்த கடல்போல ஞானம் நிறைந்த கடல் என்க. இனி, 'குணம்கடந்த' என்பதற்கு - கருணை முதலிய சாத்துவிககுணங்களின் முடிவெல்லையில்நின்ற வென்று உரைப்பினும் அமையும்; "குணமென்னுங்குன்றேறி நின்றார்" என்றாற்போல. அருள், ஐம்பொறியடக்கல், தவம், பொறுமை, மெய்யுணர்வு, மேன்மை, மௌனம், வாய்மை என்ற எட்டும்

http://acharya.org

சாத்துவிககுண மெனப்படும். இனி, 'குணங்கடந்த' என்பதற்கு - காமம் கோபம் முதலிய இழிகுணங்க ளில்லாத என்று உரைப்பாரு முளர்; பரமாத்மாவை 'சீர்க்குணன்' என்றாற்போல. குணங்கள் தந்த என்று பதம்பிரித்து, (எம்பெருமானுடைய அடியவர்க்கெளிமைமுதலிய) திருக்கல்யாணகுணங்களைச் சொல்லிவெளியிட்டுதவிய என்றலும் ஒன்று. 'புனிதன்கவியோர்பாதம்' என்றது, திருவாய்மொழியின் முதற்பாசுரத்தின் முதலடியான "உயர்வறவுயர்நலமுடையவன் யவனவன்" என்றதை என்பர் ஒருசாரார்; அதிலே பரப்பிரஹ்மஸ்வரூபம் அடங்கியிருத்தல் காண்க.

பரமாத்மாவினுடைய ஸ்வரூபத்தை நாடிச்சொல்லிக்கொண்டே சென்றவேதம் அதன்முடிவு தனக்கு எட்டாமையால் மீண்டதென்பது, அவ்வேதஞ்சொல்வதனாலேயே தெரிகிறது; ஆகவே, 'வேதத்தின்முன்செல்க' என்றது அமையும்: கோயில்களில் உத்ஸவங்கண்டருளுகிறபொழுது எம்பெருமான் நடுவேயெழுந்தருள, வடமொழிவேதம் அவனை எட்டமாட்டாது நாணித்தொடர்ந்துசெல்லுதற்கு அறிகுறியாக எம்பெருமானுக்குப்பின்னே பாராயணஞ்செய்யப்பட்டுவருதலும், தமிழ்வேதமாகிய திவ்வியப்பிரபந்தம் அவனதுசொரூபத்தை யுணர்ந்து முன்செல்லுதல் தோன்ற முன்னே ஓதப்படுதலுங்காண்க; "தொடர்ந்தாரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூதுநடந்தான்" என்ற சிலப்பதிகாரத்தையும், "கடந்த ஞானியர் கடவுளர் காண்கலாக்கழலிணை சிவப்பேறத், தொடர்ந்த நான்மறை பின்செலப் பன்னகதுவசன்மாநகர்க்குத்தூது, நடந்த நாயகன்," "உரலும் வேதமுந் தொடர," "சுரருடனே, முனிவர்களுங் கருதிநான்முகனுந், தேடுகின்றபதஞ்சிவப்பத் திருநாடுபெறத் தூதுசெல்ல" என்ற வில்லிபுத்தூரார் பாரதத்தையும் நோக்குக. முன் - இடமுன். இனி, வேதத்தின்முன்செல்க என்பதற்கு - வேதத்தினது முதன்மை கழிக என்று உரைப்பாரு முளர்; பிறவற்றிற்கும் இவ்வாறே. மெய்யுணர்ந்தோர் - பிறப்புவீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களாலன்றி உண்மையால் ஆராய்ந்து உணர்பவர். திருமாலின் திருநாபிக்கமலமலரினின்று தோன்றியவன் படைத்தற்கடவுளாதலால், விரிஞ்சனை முதலாகக் கூறினார். "பத்துடையடியவர்க்கெளியவன் பிறர்களுக்கரியவித்தகன்" ஆதலாலும், "தனக்கும் தன் தன்மையறிவரியான்" ஆதலாலும், மெய்யுணர்ந்தோர் விரிஞ்சன் முதலோர் கோதற்றஞானக்கொழுந்தின்முன் செல்வன்; "ஆரேயறிவார் அனைத்துலகுமுண்டுமிழ்ந்த,பேராழியான்தன் பெருமையைக்-கார்செறிந்த,கண்டத்தானெண்கண்ணான் காணான்" என்று திருமழிசையாழ்வார் அருளிச்செய்தமையுங்காண்க. "ஓதியோதியுணருந்தொறுமுணர்ச்சியுதவும், வேதம்வேதியர் விரிஞ்சன்முதலோர்தெரிகிலா, ஆதிதேவரவரெம்மறிவினுக்கறிவரோ" என்ற இராமாயணத்திலும். மெய்யுணர்ந்தோர் என்பதை விரிஞ்சன்முதலோர்க்கு அடைமொழியாக்கினும் அமையும். தொல்லை - அநாதி. தொல்லை மூலம் - ஆதிமூலம்.

தென்குருகூர் - தென்னாடாகிய பாண்டியநாட்டிலுள்ள குருகூர் என்னுமூர். செல்லுமே, ஏ - எதிர்மறை. 'செல்லுமோர்' என்றும் பாடமுண்டு.

http://acharya.org

எல்லாநூல்களும் மங்கலமொழி முதல்வகுத்துக்கூறவேண்டுவது மரபாதலால், 'வேதம்' என்று தொடங்கினர். (1)

2. சுடரிரண்டேபண்டுமூன்றாயினதுகடீர்ந்துலகந்
திடரிரண்டாய்வரும்பேரிருள்சீப்பனவெம்பிறப்பை
யடரிரண்டாமலர்த்தாளுடையான்குருகைக்கரசன்
படரிருங்கீர்த்திப்பிரான்றிருவாய்மொழிப்பாவொடுமே.

(இ - ள்.) சுடர் - ஒளிகள், பண்டு - முன்பு, இரண்டே - இரண்டேயிருந்தன; (பின்பு),—துகள் தீர்ந்து - குற்றமில்லாமல், உலகத்து இடர் இரண்டு ஆய் வரும் பேர் இருள் சீப்பன - உலகத்தில் இருவகைப்பட்ட துன்பங்களாய்வருகிற பெரியஇருளை நீக்குபவையான, எம் பிறப்பை அடர் இரண்டு ஆம் மலர் தாள் உடையான் குருகைக்கு அரசன் படர் இருங் கீர்த்தி பிரான் திருவாய்மொழி பாவொடும் - எமது பிறவித்துன்பங்களையழிக்கின்ற தாமரைமலர்போன்ற இரண்டு திருவடிகளை யுடையவரும் திருக்குருகூர்க்குத்தலைவரும் பரவிய மிக்ககீர்த்தியையுடைய பெருமானுமாகிய நம்ஆழ்வாருடைய திருவாய்மொழிப்பிரபந்தத்தின் பாசுரங்களோடு (கூடி), மூன்று ஆயின - மூன்றாய்விட்டன; (எ - று.)

சுடர் பண்டுஇரண்டே: (பின்பு) பேரிருள் சீப்பனவான திருவாய்மொழிப்பாவொடும் மூன்றாயின என்க. சூரியன் சந்திரன் என்ற இரண்டு சோதிகளையும் 'இருசுடர்' என்றும், அவற்றோடு அக்கினியையுங்கூட்டி 'முச்சுடர்' என்றும் உலகத்திற் சாதாரணமாக வழங்குவார்கள்; அங்ஙனம் ஸாமாந்யமாகக்கூறப்படும் பொருளன்று, இங்குக் குறிக்கப்பட்டது. இங்கு, விசேஷமாக 'சுடர் இரண்டே பண்டு' என்றது - இராமபிரானையுங் கண்ணபிரானையும் குறித்தது. "பல்லாயிரமிருள்கீறிய பகலோனென வொளிரும், வில்லாளன்" என்பதுமுதலிய இடங்களில் இராமனைச் சூரியனென்றமை காண்க. 'உலகங்களாகிய தாமரைகளெல்லாம் மலரும்பொருட்டுத் தேவகியாகிய கிழக்குச்சந்தியில் ஸ்ரீமந்நாராயணனாகிய சூரியன் உதித்தருளினன்' என்ற ஸ்ரீவிஷ்ணுபுராணம் முதலியவற்றில் கிருஷ்ணன் சூரியனெனப்பட்டுள்ளான். இவர்களை முறையே 'ராமதிவாகரன்' என்றும், 'அச்யுதபாநு' என்றுங் கூறுதல், பெருவழக்கு. இவர்களைச் சூரியனென்றதற்குக் காரணம்-உலகத்திற் பயங்கரமாய்ப் பரவிய கரிய பெரியவடிவமுடைய இராக்கதர் முதலிய துஷ்டர்களாகிய இருளை அறத்தொலைத்துச் சிஷ்டர்களுடைய முககமலங்களை மலர்த்தி விளங்குதல். 'பண்டு' என்றது - திரேதாயுக துவாபரயுகங்களி லென்றபடி. 'பண்டு' என்றதற்கு எதிராக, 'பின்பு' என்று வருவித்தது, கலியுகத்தைக் குறிக்கும். துவாபரயுகாந்தத்திலே கண்ணன் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளியவுடன் கலியுகம்பிறந்த நாற்பத்துமூன்றாநாளில் ஆழ்வார் அவதரித்து முப்பத்தைந்து வருஷம் இவ்வுலகத்தில் வாழ்ந்திருந்தன ரென்று உணர்க. திருவாய்மொழிப் பாடல்களை மூன்றுவதுசுடராகச் சேர்த்ததற்குக் காரணம், 'உலகத்திடரிரண்டாய்வரும் பேரிருள் சீப்பன' என்ற அடைமொழி

http://acharya.org

னால் விளங்கும். ("வாய்ந்தவளவயல்சூழ் தண்வளங்குருகூர்ச் சடகோபன், நேர்ந்த ஓராயிரத்திப்பத்து அருவினைநீறுசெய்யுமே," "வல்வினை தீர்க்குங்கண்ணனை வண்குருகூர்ச்சடகோபன், சொல் வினையாற் சொன்னபாட லாயிரத்துள்ளிவைபத்தும், நல்வினை யென்றுகற்பார்கள் நலனிடைவைகுந்தம் நண்ணித், தொல்வினை தீர வெல்லாரும் தொழுதெழவீற்றிருப்பாரே," "காரிமாறன் சடகோபன் சொல்லாயிரத்திப்பத்தால், வேரிமாறாதபூ மேலிருப் பாள்வினை தீர்க்குமே," "சடகோபன்சொல்லாயிரத்துளிப்பத்தும், கண்டுபாடவல்லார் வினைபோம்" என்று பதிகங்களிற் பயன்கூறிய படி) திருவாய்மொழிப்பாசுரங்கள் தம்மை ஓதியவரதுவினை களைத் தீர்ப்பனவாதல் காண்க. அச்சந்தருதலால், வினை 'இருள்' எனப்பட்டது.

'இடரிரண்டு' என்றது - நல்வினை தீவினைகளை; நல்வினையும் பிறத்தற்கு ஏதுவாதலால், அதனையும் தீவினையோடொப்ப 'இடர்' என்றே கூறினார். இங்கு 'நல்வினை' என்றது, அழியுந்தன்மை யனவான சுவர்க்கவின்பம் முதலிய காமியங்களைத் தருவனவாகிய யாகம்முதலியவற்றின் பயனை. இவை முக்திக்கு நேரேகாரண மாகிய தத்துவஞானத்தை யுண்டாக்காமைமாத்திரமேயன்றித் தீவினைபோல அது நிகழவொட்டாமல் தடைசெய்து நிற்றலு முடையனவாம், ஆதலால், இந்நல்வினை தீவினை இரண்டும் ஒருவ னுக்கு ஞானத்தைத்தடுத்துப் பந்தமுறுத்துவதிற்பொன்விலங்கும் இருப்புவிலங்கும்போலத் தம்முள் ஒப்பனவாமென்க. ஆனது பற்றியே, பிறரும், "இருள்சேரிருவினையுஞ் சேரா விறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார்மாட்டு" என்றார். இங்கு "சுட ரிரண்டேபண்டு" என்று அவ்வடமொழியொன்றுங்கொடாமற்கூறி மூன்றாவதுசுடரெனப்படுகிற திருவாய்மொழிப்பாவிற்கு 'துகள் தீர்ந்து உலகத்து இடர் இரண்டாய்வரும் பேரிருள் சீப்பன' என்ற அடைமொழி கொடுத்ததனால், அச்சுடரிரண்டினும் இச்சுடர்க்கு விசேடங் கூறியவாறும். 'ஆதித்யராமதிவாகர அச்யுதபாநுக் களுக்குப் போகாத உள்ளிருள் நீங்கி, சோஷியாத பிறவிக் கடல் வற்றி, விகஸியாத போதிற்கமலம் மலர்ந்தது வகுளபூஷண பாஸ்கரோதயத்திலே" என்னும் ஆசார்யஹ்ருதயவாக்கியம் நோக்கத்தக்கது. சூரியன் முதலிய முச்சுடர் கள் நீக்கமாட்டாத இருள் என்றற்கு, 'பேரிருள்' என்றார்; அங்ஙனங் கூறியது, ராமதிவாகர அச்யுதபாநுக்களுக்கும் நீக்குதற்கு அரியது என்றவாறுமாம். ராமகிருஷ்ணாதி அவதாரங்கள் உல கத்தை நல்வழிப்படுத்துதலிற் பயன்பட்டவிதம் போதாதென்று அதன்பின் எம்பெருமான் பிரபஞ்சத்தவரைப் பிறவிப்பெருங்கடலி னின்று கரையேற்றிக் கைப்பற்றுதற்கு ஆழ்வார்களை அவதரிப் பித்தான் என்பது, ஐதிஹ்யம். தன்னைச் சரணமடைந்தவர் களுடைய கருமங்களைத் தொலைத்துப் பிறப்பையொழித்து அவர் களை முத்தியிற் சேர்க்குந் திருவடிகளை யுடையா னென்பார், 'எம்பிறப்பையடர் இரண்டாம் மலர்த்தாளுடையான்' என்றார். 'வெம்பிறப்பு' என்று பதம் பிரித்தல் மோனைத்தொடைக்குச் சிறவாது. இரண்டாம் மலர்த்தாள் - உபயதிருவடித்தாமரை. திரு

http://acharya.org

வாய்மொழிப்பிரபந்தமாகிய சூரியனுக்கு அதன் பாடல்கள் ஆயிரத்தையும் ஆயிரங்கிரணமாகக் கருதுக.

'பா' என்ற பால்பகா அஃறிணைப்பெயர் இங்குப் பன்மைப் பொருளதாதலால், அதனை 'சேப்பன' என்ற பலவின்பால் வினையாலணையும் பெயர் கொடுத்து விசேடித்தனர். திருவடிக்குத் தாமரைமலர் உவமை - செம்மை மென்மை அழகுகட்கு. மலர் என்ற பொதுப்பெயர், சிறப்புப்பற்றி, தாமரைமேல் நின்றது. படர்தல் - எங்கும் பரவுதல். (2)

3. பாவொடுக்குந் நுண்ணிசையொடுக்கும்பலவும்பறையு
நாவொடுக்குந்நல்லறிவொடுக்கும்மற்றுநாட்டப்பட்ட
தேவொடுக்கும்பரவாதச்செருவொடுக்குங்குருகூர்ப்
பூவொடுக்கும்மமுதத்திருவாயிரம்போந்தனவே.

(இ-ள்.) குருகூர் பூ ஒடுக்கும் - திருக்குருகூரில் அவதரித்தருளின ஆழ்வாருடைய திருவாய்மலரினுள்ளே (எம்பெருமானால்) நிறைத்துவைக்கப்பட்ட, அமுதம் திரு ஆயிரம் - அமிருதம்போலினிய திருவாய்மொழி ஆயிரஞ்செய்யுள்கள், போந்தன - (அங்குநின்று) வெளிப்பட்டன: (அவை), பா ஒடுக்கும் - இயற்றமிழ்ச் செய்யுளிலக்கணங்களைத் தம்முள் அடக்கிக்கொண்டுள்ளன; நுண் இசை ஒடுக்கும்-நுட்பமான இசைத்தமிழினிலக்கணங்களைத் தம்முள் அடக்கிக்கொண்டுள்ளன; பலவும் பறையும் நா ஒடுக்கும் - பலவிஷயங்களையுங் கூறுகிற நாடகத்தமிழினிலக்கணங்களைத் தம்முள் அடக்கிக்கொண்டுள்ளன; நல் அறிவு ஒடுக்கும் - நல்ல அறிவுகளைத் தம்முள் அடக்கிக்கொண்டுள்ளன; மற்றும் நாட்டப்பட்ட தே ஒடுக்கும் - உலகத்தில் நிலைநிறுத்தப்பட்ட மற்றைத்தெய்வங்களையெல்லாம் ஒடுங்கச்செய்வன; பர வாதம் செரு ஒடுக்கும்-அந்நியமதஸ்தர்களின் வாதப்போர்களை அடங்கச்செய்து விடுவன; (எ - று.)

பா ஒடுக்கும் - "எழுத்துப்பதின்மூன்று இரண்டுஅசை சீர் முப்பது ஏழ் தளை ஐந்து, இழுக்கிலடி தொடைநாற்பதின்மூன்று ஐந்துபா இனம்மூன்று, ஒழுக்கியவண்ணங்கள் நூறு ஒன்பதுஒண் பொருள்கோள் இருமூ, வழுக்கில் விகாரம் வனப்புஎட்டு யாப்புள் வகுத்தனவே" என்று தொகுத்து உணர்த்தப்படும் இயற்றமிழ்ப்பாவினிலக்கணங்கள் பலவற்றையும் தம்முள்ளே சுருங்கக் கொண்டுகாட்டும் என்றபடி. நுண் இசை ஒடுக்கும் - குறிஞ்சி, செருந்தி, இந்தளம், கொல்லி, காமரம், தக்கேசி, பஞ்சமம், கைசிகம், காந்தாரம், பாலையாழ் முதலிய பண்களாகிய இவற்றைத் தம்முள்ளே கொண்டு காட்டுமென்றபடி; "பண்ணிற் பன்னிருநாமப்பாட்டு" என்று திருவாய்மொழியில் வருதலுங் காண்க. 'பலவும்பறையும் நாவொடுக்கும்' என்பதற்கும் இங்ஙனமே கண்டுகொள்க. "எழுத்து அசை சீர் பந்தம் அடி தொடை நிரைநிறை ஓசை தளை இனம் யாப்புப் பாத்துறை பண் இசை தானம் பத்து நூறு ஆயிரம் முதலானசெய் கோலம் இதுக்கும் உண்டு" என்ற ஆசார்யஹ்ருதய வாக்கியமுங்காண்க. செவிகருவியாக நுண்ணிதின் உணரப்படு

http://acharya.org

தலால், இசைக்கு 'நன்' என்ற அடைமொழி கொடுத்தனர். இய
லுக்கும் இசைக்கும் பொதுவாதல்பற்றி நாடகம் 'நா' எனப்பட்
டது; நா = நடு.

'நல்லறிவு ஒடுக்கும்' என்பதற்கு - நல்லஅறிவை அடங்கி
யிருக்கச்செய்யும் என்று உரைப்பாருமுளர். ("நாட்டினான் தெய்வ
மெங்கும் நல்லதோரருள்தன்னாலே", "இறுக்குமிறையிறுத்
துண்ணவெவ்வுலகுக்கும் தன்மூர்த்தி, நிறுத்தினான் தெய்வங்களாக
அத்தெய்வநாயகன்தானே", "வணங்கும்துறைகள் பலபலவாக்கி
மதிவிகற்பால், பிணங்கும்சமயம் பலபலவாக்கி அவையவை
தோறு, அணங்கும் பலபலவாக்கி நின்மூர்த்தி பரப்பிவைத்தாய்"
என்றபடி) எம்பெருமான் தானே, ஸத்வகுணம் மிக்கவராய்த்
தன்னைப் பற்றுமளவுடையரன்றியே யிருக்கும் ரஜோகுணதமோ
குணங்களால் மிக்கவர்க்கு ஏற்றபடி பலதேவதைகளை நியமித்து
வைத்துள்ளானாதலால், 'நாட்டப்பட்ட தே' என்றார். தன்னாசு
னாடாக ஸ்வதந்திரராய்க் கண்டபடி திரிகிறவர்களுக்கு அவரவர்
குணத்துக்கு ஏற்ப ஒவ்வொருதெய்வத்தை அமைத்துக்காட்டி
அதனை வழிபடும்படிசெய்து அவர்களை அடக்கிவைத்தால் அங்ங
னம் ஒருப்பட்டசேதனர்கள் பின்புகாலடைவிலே வேதமுதலிய
நூல்களைக்கொண்டு அச்சிறுதெய்வங்களுக்கும் பரதேவதையான
தனக்குமுள்ள வாசியை யறிந்து தன்பக்கல்வந்துசேர்வார்கள் என்
பது, ஸர்வேசுவரனது திருவுள்ளமென்க. 'நாட்டப்பட்ட' என்ற
சொல்லின் ஆற்றலால், பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணன் அந்த
த்தேவதாந்தரங்களுக்கு அந்தராத்மாவாக நில்லாவிடின் அவர்கள்
கொள்கொம்பு பெறாத கொடிகள்போல அலைந்து நிலைகுலைவ
ரென்பது போதரும். ("பேசநின்ற சிவனுக்கும் பிரமன்றனக்கும்
பிறர்க்கும், நாயகனவனே கபால நன்மோக்கத்துக் கண்டுகொண்
மின்" என்றும் மற்றும்பலவாறும்) திருவாய்மொழிப்பாசுரங்கள்
நாராயணனுடைய பெருமையையும் மற்றைக்கடவுளரின் சிறுமை
யையும் நன்குவெளியிட்டு, கொடி கொள்கொம்பை மூடிப்படர்ந்
திடாதபடி செய்தலால், 'மற்றநாட்டப்பட்டதே வொடுக்கும்'
எனப்பட்டது. ("இலிங்கத்திட்டபுராணத்தீரும் சமணரும் சாக்கி
யரும், வலிந்து வாதுசெய்வீர்களும் மற்றும் நுந்தெய்வமுமாகி நின்
றான்,மலிந்து செந்நெல் கவரிவீசும் திருக்குருகூரதனுட்,பொலிந்து
நின்றபிரான் கண்டீரொன்றும்பொய்யில்லை போற்றுமினே" என்
றும் மற்றும் பலவாறும்) தமது பிரபந்தங்களிற் கூறியதத்துவார்த்
தங்களைக்கொண்டு பிறமதங்களாகிய யானைகளைச் செருக்கடக்கி
அவற்றிற்கு ஆழ்வார் மாவெட்டியென்னுங் கருவிபோன்றவராய்ப்
பராங்குசரென்று ஒருதிருநாமம் பெறுதல் தோன்ற, 'பரவாதச்
செருவொடுக்கும்' என்றார்.

இரட்டுறமொழிதலென்னும் உத்தியால் 'பூ' என்பதை 'பூ'
எனவடமொழியாகவும், 'பூ' எனத் தென்மொழியாகவும் வைத்து
இருபொருளும்ஒருங்கே கொள்ளப்பட்டது. 'குருகூர்ப்பூ' என்றது
- திருக்குருகூரில் தோன்றிய ஆழ்வாரைக்குறித்தது; 'ஸ்வயம்பூ'
என்ற பிரமன்பெயரும், 'ஆத்மபூ' என்ற மன்மதன்பெயரும்,

http://acharya.org

'அக்நிபூ'என்ற முருகன்பெயருங் காண்க. 'பூ' என்ற தமிழ்ச்சொல் - அதுபோன்ற வாயையுணர்த்தும்போது உவமையாகுபெயராம். வடமொழி வேதங்கள்போலவே தமிழ்வேதமாகிய திவ்வியப் பிரபந்தங்களும் அபௌருஷேயமும் நித்தியமுமாமென்பதும், செய்யாமொழியாகிய அவற்றை எம்பெருமான் தானே ஆழ்வார்கள் நாவிலிருந்து பாடிப் பிரகாசிப்பித்தனனென்பதுமாகிய ஆன்றோர்கொள்கைகள், 'குருகூர்ப்பூவொடுக்கும் அமுதத்திருவாயிரம் போந்தன' என்பதில் தோன்றும். "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்றபடி அமிருதம்போலினிய ஆயிரம் பாசுரங்களை யென்பார், 'அமுதத்திருவாயிரம்' என்றார்; உவமைத்தொகை; திருஎன்ற அடைமொழி, மேன்மையைக்குறிக்கும். ஆயிரம் - ஆயிரஞ்செய்யுள்களுக்கு எண்ணலளவாகுபெயர்.

ஒடுக்குந்நூன் ஒடுக்குந்நல், ஒடுக்கும்மற்று, ஒடுக்கும்மமுதம் என்றவற்றின் இடையிலுள்ள நகரமகரவொற்றுக்கள் - விரித்தல் விகாரம். வாதச்செரு - சொற்போர். 'பலவும் பறையும் நா வொடுக்கும்' என்பதற்கு - பலவற்றையும் பிதற்றுவதான (பிறசமயவாதிகளின்) நாக்கை ஒடுங்கச்செய்யு மென்று உரைத்தலும் ஒன்று; 'திருநாவீறுடையபிரான்' என ஒருதிருநாமம் ஆழ்வார்க்கு வழங்குதல் காண்க: வீறு - ஒப்புயர்வற்ற சிறப்பு. நுண்இசை ஒடுக்கும் என்பதற்கு - "முன்னல்யாழ்பயி லுனரம்பின் முதிர்சுவையே," "நுடங்குகேள்வியிசையென்கோ" என்றபடி நுண்ணிதிலுணரத்தக்க கீதம்போலினிய பரம்பொருளைத் தம்முள்ளே கொண்டு காட்டு மென்று உரைப்பாரு முளர். 'மற்றுந் நாட்டப்பட்ட தே வொடுக்கும்' என்பதற்கு - பிறதெய்வங்களையும் தம்முள் அமையவைத்திருக்குமென்று உரைப்பினும் இழுக்காது; ("நக்கபிரானோடயனு மிந்திரனும் முதலாக, ஒக்கவுந்தோற்றிய விசன்மாயன்", "கள்வா எம்மையும் ஏழுலகும் நின்னுள்ளே தோற்றிய இறைவவென்று, வெள்ளேறன் நான்முக னிந்திரன் வானவர், புள்ளூர்திகழல்பணிந்தேத்துவரே," "நளிர்மதிச்சடையனென்கோ நான்முகக்கடவுளென்கோ," "நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்ச், சீரார்சுடர்களிரண்டாய்ச் சிவனாய் அயனாய்," "முனியே நான்முகனே முக்கண்ணப்பா" என்பவை முதலியன காண்க.

'பாவொடுக்கும்' என்றதை, "எழுத்தசைசீரடிசொற்பொருள் யாப்பு, வழுக்கில்வனப்பணிவண்ணம்—இழுக்கின்றி, என்றெவர் செய்தன வெல்லா மியம்பின, இன்றிவ ரின்குறள்வெண்பா" என்றாற்போலக் கொள்க. (3)

4. **தனமாஞ்சிலர்க்குத்தவமாஞ்சிலர்க்குத்தருமநிறை**
கனமாஞ்சிலர்க்கதற்காரணமாஞ்சிலர்க்காரணத்தி
னினமாஞ்சிலர்க்கதற்கெல்லையுமாந்தொல்லையேர்வகுள
வனமாலையெம்பெருமான்குருகூர்மன்னன்வாய்மொழியே.

(இ - ள்.) தொல்லை - பழமையான, ஏர் - அழகிய, வகுளம் வனம் மாலை எம்பெருமான் குருகூர் மன்னன் வாய்மொழி - மகிழ

http://acharya.org

மலர்களினுலாகிய அழகிய மாலையையுடையவரும் எமக்கு இறைவரும் திருக்குருகூர்க்குத் தலைவருமான ஆழ்வாருடைய திருவாய் மலரினின்று வெளிப்பட்ட சொற்களாகிய திருவாய்மொழி முதலிய பிரபந்தங்கள்,—சிலர்க்கு—, தனம் ஆம் - செல்வமாம்; சிலர்க்கு,—தவம் ஆம்—; சிலர்க்கு—, தருமம் நிறை கனம் ஆம் - தருமம் நிறைந்த சிறந்தகாமபுருஷார்த்தமாம்; சிலர்க்கு—, அதற்கு ஆரணம் ஆம் - அந்தக்காமவின்பத்திற்கு உரிய வேதமாம்; சிலர்க்கு—, ஆரணத்தின் இனம் ஆம் - வேதத்தின்வருக்கமாம்; (சிலர்க்கு—,), அதற்கு எல்லையும் ஆம் - அவ்வேதத்தின் முடிவாகிய வேதாந்தமுமாம்: (எ - று.)

சிலர்க்கு - ஒவ்வொன்றை வேண்டுகிற அந்தந்த அதிகாரிகளுக்கு ஏற்பவென்க. ("அறம் பொருள் இன்பம் விடு அடைதல் நூற்பயனே," "அறம்பொருளின்பமும் வீடும் பயக்கும், புறங்கடை நல்லிசையு நாட்டும் - உறுங்கவலொன்று, உற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை,சிற்றுயிர்க்குற்ற துணை" என்றவாறு) கல்வி திரவிய சம்பாதனத்துக்குக் காரணமாகிற வரையில் திருவாய்மொழிமுதலிய பிரபந்தங்களும் பொருளீட்டத்திற்கு ஏதுவாதலால், ('பொருளிலார்க் கிவ்வுலகமில்,' "பொருளுடையான் கண்ணதேபோகம்,' என்பவற்றை மேற்கொண்டு) பொருட்செல்வத்தை வேண்டுகிற சிலர்க்கு, அப்புருஷார்த்தத்தை விளைக்குமென்பார், 'தனமாம் சிலர்க்கு' என்றனரென்பர்; காரணம்,காரியமாக உபசரிக்கப்பட்டது. ("செல்வரை யெல்லாருஞ்செய்வர் சிறப்பு", "தம்கைத்து உடையார்க்கும் எவ்வூரும் ஊர்" என்றபடி) செல்வமுடையார்க்கு எங்கும் உபசாரங்கள் நடத்தல் போலவே, ("கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு", "யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்," சாந்துணையுங்கல்லாதவாறு" என்றபடி) திருவாய்மொழி ஓதினுர்க்கு எங்கும் உபசாரங்கள் நிகழ்தல்பற்றி, பொருட்செல்வம்போலு மென்றபொருளில் 'தனமாம்' என்றனரெனினும் அமையும். செல்வம்போல மிக விரும்பிப் பாதுகாக்கப்படும் பொருளாமென்பது கருத்து. ("அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து, தீதின்றிவந்தபொருள்" என்றபடி) பொருள் அறத்துக்கும் இன்பத்துக்கும் காரணமாகிற சிறப்புடைமைபற்றி முதலிற் கூறப்பட்டது. ("வேண்டிய வேண்டியாங்கெய்தலாற் செய்தவம், ஈண்டுமுயலப்படும்" என்றபடி), தன்னைப்பயின்றவர்க்கு விடுபேறுமுதலாக வேண்டிய பயன்களை வேண்டியபடியே பெறுவிக்கின்ற தவம்போல, இத்திவ்வியப்பிரபந்தமும் தன்னை ஓதினவர்க்கு இம்மைமறுமைவீடுகளில் வேண்டியபயன்களை உண்டாக்குதலால், 'தவமாம் சிலர்க்கு' எனப்பட்டது:(அதனை, "பாதமடைவதன் பாசத்தாலே மற்றவன்பாசங்கள் முற்றவிட்டுக், கோதில்புகழ்க் கண்ணன் தன்னடிமேல் வண்குருகூர்ச்சடகோபன் சொன்ன, தீதிலந்தாதி ஓராயிரத்துள் ளிவையுமோர் பத்திசையொடும் வல்லார், ஆதுமோர் தீதிலராகி இங்குமங்கு மெல்லாமமைவார்கள் தாமே" எனக் காண்க.) ("விளக்குப்புக இருள்மாய்ந்தாங்கு ஒருவன், தவத்தின்முன் நில்லாதாம் பாவம்" என்றபடி) தவம் பாபக்ஷய ஹேதுவாதல்போல, அருளிச்

http://acharya.org

செயலும் ஒதுவாரது தீவினை தீர்தற்கு மூலமாம் என்பதுபற்றி, 'தவமாம்சிலர்க்கு' என்றனரென்றுங் கொள்க. சதுர்வித புருஷார்த்தங்களுள் தர்மபுருஷார்த்தமாம் என்பது 'தவமாம்' என்றதன் தாற்பரியம்.

நான்கு உறுதிப்பொருள்களுள் மூன்றாவதற்கு உள்ள சிறப்புப்பற்றி, அது, 'கனம்' என்ற பெயராற் குறிக்கப்பட்டது; ("சேமநல்வீடும் பொருளுந் தருமமுஞ் சீரியநற், காமமு மென்றிவை நான் கென்பர்" என்ற இராமாநுச நூற்றந்தாதியில் 'சீரிய நற்காமம்' என்றதையும், அதன்வியாக்கியானத்தில் 'சாஸ்திரங்களிலே சிலாகிக்கப்பட்டதாய்ப் போக்யமாய் விஹிதமாய் ஸ்வயம் புருஷார்த்தமான காமம்' என்றதையுங் காண்க.) இங்கு இன்பமென்றது, ("காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்" எனப்படுகிற) உலகவாழ்க்கைச் சிற்றின்பத்தை யன்று; "நான்மறையுங் கண்ணனுக்கே, ஆமதுகாமம் அறம்பொருள் வீடிதற்கென் றுரைத்தான், வாமனன் சீல னிராமாநுச னிந்தமண் மிசையே' என்றபடி) எம்பெருமானைச் சேரவேண்டுமென்று அவன் பக்கலிலே உண்டாகின்ற அபேக்ஷையையே கூறியது. "கோவிந்தா, எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும் உன்றன்னோடு, உற்றோமே யாவோம் உனக்கே நாமாட்செய்வோம், மற்றை நங்காமங்கள் மாற்று" என்றதுங் காண்க. லோகநாயகனுடைய சேர்க்கையை அபேக்ஷிக்கின்ற பேரின்பக் காதல், வேதாந்த நிர்ணயத்தின்படி அன்பு செலுத்தவேண்டிய இடத்தில் அன்பைச் செலுத்தியதாதலால், சிற்றின்பக்காதல்போலன்றி, சகலபாபநிவ்ருத்திக்கும் வீடு பேற்றுக்குமே காரணமாதல்பற்றி, 'தருமம்நிறைகனம்' எனப்பட்டது. பரமாத்மாவினது தலைமையும், ஜீவாத்மாவினது அடிமையும், ஜீவாத்மா பரமாத்மாவுக்கே உரியதாயிருக்கையும், புருஷோத்தமனாகிய எம்பெருமானது பேராண்மைக்குமுன் உலகம் முழுவதும் பெண்தன்மையதாதலும், ஜீவாத்மாவினது ஸ்வாதந்திரியமின்மையும், பாரதந்திரியமும், தாம் எம்பெருமானது சேர்க்கையால் இன்பத்தையும் பிரிவினால் துன்பத்தையும் அடைதலும், அவனையே தாம் கரணங்களெல்லாவற்றாலும் அநுபவித்து ஆனந்தித்தலும் முதலிய காரணங்களால் ஆழ்வார் தம்மைத் தலைமகளாகவும் எம்பெருமானைத் தலைமகனாகவுங்கொண்டு அருளிச்செய்த இன்பச்சுவைமிக்க பாடல்களைக் கருதி, 'தருமநிறை கனமாஞ் சிலர்க்கு' என்றார். "தண்ணீர் காண்பரேல், ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினாய்," "வாராகவாமனனே அரங்கா வட்டநேமி வலவா ராகவா உன்வடிவுகண்டால் மன்மதனும் மடவாராக ஆதரஞ்செய்வன்" என்பவாதலாலும், தண்டகாரணிய வாசிகளான முனிவர்கள் இராமபிரானது சௌந்தரியாதிசயத்தில் ஈடுபட்டுத் தாம் பெண்தன்மையைப் பெறவிரும்பி மற்றொருபிறப்பில் ஆயர்மங்கையராய்க் கண்ணனைக் கூடினரென்பது ஐதிஹ்யமாதலாலும், எம்பெருமானது திவ்விய சௌந்தரியத்தில் ஈடுபட்டு அவனது உத்தமபுருஷத் தன்மையைக் கருதியதனால் அப்பொழுதே அவனைக் கிட்ட வேண்டும்படியான ஆசையைப் பெற்ற ஆழ்வார் அங்ஙனம் அவனைக் கிட்டப்பெறுமையாலே ஆற்றாமைமீதூர்ந்து

http://acharya.org

நளர்ந்து அத்தளர்ச்சியினாலே தாமான தன்மை குலைந்து ஆண் பெண்ணும்படியான நிலைமை தோன்றி ஒருபிராட்டிநிலையை அடைதல் அமையும். அங்ஙனம் நாயகியாகிய நம்மாழ்வார் தலைமகள் வார்த்தை தாய்வார்த்தை தோழிவார்த்தைகளால் தூது விடுதல் இரங்குதல் வெறிவிலக்குதல் காலமயக்கு நலம்பாராட்டு உருவெளிப்பாடு முதலிய பல அகப்பொருளிலக்கணத் துறைகளமையுமாறு பாடிய பாசுரங்கள் காமசாஸ்திரமாதல்பற்றி, 'அதற்கு ஆரணமாம்' என்றார். சிருங்காரரசப்பிரதானமான அகப்பொருட் கிளவித்துறைகளை ஞானநூலாகிய தோத்திரப்பிரபந்தங்களிற் கூறுதற்குக்காரணம் - கடுத்தின்னாதானைக் கட்டிப்பூசிக் கடுத்தின்பிப்பார்போலச் சிற்றின்பம் கூறும்வகையாற் பேரின்பத்தைக் காட்டி நாட்டுதலென்பர். இங்ஙனம் அந்யாபதேசமாகக் கூறிய சிற்றின்பத்துறைச் செய்யுள்கட்கெல்லாம் ஸ்வாபதேசமாகப் பேரின்பத்தின்பாற்படுத்தும் உள்ளுறைபொருள் உண்டென்பதையும் உணர்க.

'ஆரணத்தின் இனமாம்' என்றது - ஆழ்வார் அருளிய நான்குபிரபந்தங்களும் நான்குவேதமாதலால், அவ்வேதங்களின் சித்தாந்தமான உபநிஷத்துக்களின்சாரமான அர்த்தங்கள் ஆழ்வாரருளிச்செயல்களிற் பொதிந்திருத்தல்பற்றி, 'அதற்கு எல்லையுமாம்' எனப்பட்டது; என்றது, "கூறுதல்வல்லாருளரேற் கூடுவர் வைகுந்தமே" என்றபடி திவ்வியபிரபந்தங்கள் மோக்ஷசாதனமாம் என்றவாறு. எனவே, நாற்பயனாகிய நான்கையும் ஆழ்வார் பிரபந்தங்களால் அடையலாமென்பது இச்செய்யுளில் விளக்கப்பட்டதென்க.

"ஆரணங்காணென்பர் அந்தணர் யோகியர் ஆகமத்தின், காரணங்காணென்பர் காமுகர் காமநன்னூலதென்பர், ஏரணங்காணென்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர், சீரணங்காய சிற்றம்பலக்கோவையைச்செப்பிடினே" என்ற திருக்கோவையார்ச் சிறப்புப்பாயிரத்தோடு இதனை ஒப்பிடுக.

தொல்லை, ஏர் என்ற இரண்டும்-வாய்மொழிக்கு அடைமொழி. ஆழ்வார் திருவாய்மலரினின்று வெளிப்பட்ட தமிழ்வேதங்கள் சமஸ்கிருதவேதங்கள் போலவே அநாதியாமென்ற கருத்து அமைய 'தொல்லைவாய்மொழி' எனப்பட்டதென்க. தம் பக்கல் திருவுள்ளமுவந்து திருக்குருகூர்ப் பொலிந்து நின்றபிரான் பிரசாதித்த மகிழமலர்மாலையைத் தரித்ததனால், ஆழ்வார்க்கு, 'வகுளாபரணர்' என்று ஒருதிருநாமம் வழங்கும். "வன்குருகூர் நகரான், நாட்கமழ்மகிழ்மாலை மார்பினன் மாறன் சடகோபன்" என்று ஆழ்வார் தாமே தம்மைக் கூறியிருத்தலுங் காண்க. "தாமந்துளவோ வகுளமோ" என்றபடி ஆழ்வார் ஸ்ரீமந்நாராயணனது அவதாரமே யென்ற ஒற்றுமை விளங்க, மகிழம்பூமாலையாகிய திருத்துழாய்மாலையையுடைய எம்பெருமான் என்றதாகவும் கொள்ளலாம். அன்றியும், வநமாலை என்றதொரு திவ்வியமாலை திருமாலுக்கு உரியதாதலை 'வநமாலி' என்ற அவனது திருநாமத்தினால் உணர்க.

http://acharya.org

'வாய்மொழி' என்று திருவாய்மொழியைக் குறித்தது, மற்றைப் பிரபந்தங்கட்கும் உபலக்ஷணம். (4)

5. மொழிபலவாயினசெப்பம்பிறந்ததுமுத்தியெய்தும்
வழிபலவாயவிட்டொன்றுயதுவழுவாநரகக்
குழிபலவாயினபாழ்பட்டதுகுளிர்நீர்ப்பொருநை
சுழிபலவாயொழுகுங்குருகூரெந்தைதோன்றலினே.

(இ - ள்.) குளிர் நீர் - குளிர்ந்த நீரையுடைய, பொருநை - பொருநையென்னும் மறுபெயருள்ள தாமிரபர்ணிநதி, சுழி பல ஆய் ஒழுகும் - அநேக நீர்ச்சுழிகளோடுகூடிப் பாயப்பெற்ற, குருகூர் - திருக்குருகூரிலே, எந்தை - நம்ஆழ்வார், தோன்றலின் - திருவவதரித்ததனுலே,—மொழி பல ஆயின - பலபாஷைகளுள்ளே, செப்பம் பிறந்தது - (ஆழ்வார் பாசுரம் அருளிச்செய்த பாஷையாகிய தமிழ்ஒன்றுக்கே 'செந்தமிழ்மொழி' என்னும்படி) செவ்வை தோன்றிற்று: முத்தி எய்தும் வழி பல ஆய விட்டு ஒன்று ஆயது-வீடுபெறுவதற்கு உரியவழிகள் பலவானவை நீங்க ஒன்றே முத்திமார்க்கமாய் நின்றது; வழுவா நரகம் குழி பல ஆயின பாழ்பட்டது - தவருத நரகக்குழிகள் பலவாயிருந்தவை பாழாய் விட்டன; (எ - று.)

'மொழிபலவாயின' என்றது சிங்களம் முதலிய பதினெட்டுத் தேசபாஷைக ளாகியவற்றை; அவற்றுள்ளே எம்பெருமானுல் திருவுள்ளமுவந்து கொண்டாடப்பட்டு அவனுக்குமுன்னே பாராயணஞ்செய்யப் பெறுபவை தமிழ்த்திவ்வியப்பிரபந்தங்களே யாதலால், 'இந்தப் பாஷைக்கே செவ்வி உண்டாயிற்று' என்றார். இத்தகையமேம்பாட்டுக்குக் காரணம் மற்றையாழ்வார்களுமாயினும், அவர்களில் அவயவியாகிய நம்மாழ்வாரைக்கூறியதில் அவயவமாகிய மற்றையாழ்வார்களும் அடங்குவர்; (இங்ஙனம் அங்கியும் அங்கமுமாக உருவகப்படுத்துமிடத்து, நம்மாழ்வார்க்கு, பூதத்தாழ்வாரை முடியாகவும், பொய்கை பேயாழ்வார்களைக் கண்களாகவும், பெரியாழ்வாரை முகமாகவும், திருமழிசையாழ்வாரைக் கழுத்தாகவும், குலசேகராழ்வாரையும் திருப்பாணாழ்வாரையும் கைகளாகவும், தொண்டரடிப்பொடியாழ்வாரை மார்பாகவும் திருமங்கை யாழ்வாரை நாபியாகவும், மதுரகவியாழ்வாரைப் பாதமாகவும் உரைப்பது மரபு: இதன்விவரணம் விரிப்பிற் பெருகும். இப்படி உறுப்பியும் உறுப்புமாக நிரூபித்ததற்கு ஏற்ற காரணம், நம்மாழ்வாரது தன்மை; அது எங்ஙன மெனின்:—மற்றை யாழ்வார்கள்போல இவ்வுலக வுணர்ச்சி நடையாடாதிருக்க எம்பிரானருளால் ஒருகால விசேடத்திலே தத்துவஞானம்முதலியன தோன்றப்பெற்று அநுபவித்தவரன்றி, இவர், திருத்துழாய் பரிமளத்துடனே அங்குரிக்குமாறுபோல அவதரிக்கும் பொழுதே இயற்கையில் ஞானபக்திகளை யுடையவராய் அங்ஙனே என்றும் மாருதிருந்தது வென்க.)

வெவ்வேறு மதங்களில் அந்தந்த மதத்துக்கு உரிய தெய்வத்தை வணங்குதல் முதலாகக் கூறப்பட்ட முத்தி மார்க்கங்க

http://acharya.org

ளெல்லாம் பூர்வபக்ஷமாய் மறுக்கப்பட்டுத் தலைகாட்டாது ஒழிய, திருமாலை வழிபடுதலொன்றே முக்திமார்க்கமென்று ஆழ்வார் சித்தாந்தஞ்செய்து நிலைநிறுத்தியிருத்தல்பற்றி, 'முத்தியெய்தும்வழி பலவாய விட்டு ஒன்றாயது' என்றார்; அன்றி, வீடுபேற்றுக்குச் சாதனமாக ஓதப்படுகிற கர்மம் ஞானம் முதலியவற்றை மறுத்து எம்பெருமானைச்சரணமடைதலான பிரபத்தியொன்றே முத்திக்கு நேரான உபாயமென்று நிலைநாட்டியதனால் 'முத்தியெய்தும்வழி பலவாயவிட்டு ஒன்றாயது' என்றதாகவுங் கொள்ளலாம். தீவினை செய்தவர் அடைதல் தவறாதனவும் அவ்வண்ணங் கொடுவினைசெய்து புக்குஅழுந்தியவர் மீளுதற்கு அரியனவுமான நரகபேதங்களென்பார், 'வழுவாநரகக்குழி பலவாயின' என்றார். அந்நரகவகைகள் அநேகம்ஆயிரங்களென்று புராணம் கூறும். 'ஆழ்வாரருளிச் செயலைக் கைப்பற்றி உலகத்தவர் பலருந் திருமாலடியார்களாய்த் தீவினை தவிர்ந்து உய்தலால், 'வழுவாநரகக்குழிபலவாயின பாழ் பட்டது' எனப்பட்டது; "அறிவிலாமனிசரெல்லாம் அரங்கமென்றழைப்பராகில், பொறியில்வாழ் நரகமெல்லாம் புல்லெழுந்தொழியுமன்றே," "காவலிற் புலனைவைத்துக் கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து, நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர் தலைகள்மீதே," "மூவுலகுண்டுமிழ்ந்தமுதல்வ நின்நாமங்கற்ற, ஆவலிப்புடைமை கண்டாய் அரங்கமாநகருளானே," "பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச்சாபம், நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை, கலியுங் கெடுங் கண்டுகொண்மின் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல், மலியப்புகுந்திசைபாடியாடியுழிதரக் கண்டோம்" எனக் காண்க. வெள்ளத்தின்மிகுதியால், சுழி பலவாய் ஓழுகும். 'குருகூர் எந்தை தோன்றலின்' - திருக்குருகூரிலே எம்பெருமானான ஸ்ரீமந்நாராயணன் ஆழ்வாராக அவதரித்ததனால் எனினுமாம்.

'முக்தி' என்ற வடசொல் - பற்றுக்களை விட்டு அடையுமிடமென்று காரணப் பொருள்படும்; வீடு என்ற தமிழ்ச்சொல்லும் இப்பொருளதே. எந்தை - எம்தந்தை: எமது ஆசிரியன், எமது தலைவன், எமது கடவுள். (5)

6. தோன்றாவுபநிடதப்பொருடோன்றலுற்றார்தமக்குஞ்
சான்றாமிவையென்றபோதுமற்றென்பலகாலுந்நம்மின்
மூன்றாயினவுநினைந்தாரணத்தின்மும்மைத்தமிழை
யீன்றான்குருகைப்பிரானெம்பிரான்றனிசைக்கவியே.

(இ - ள்.) பல காலும் தம்மில் மூன்று ஆயினவும் நினைந்து - பல இடங்களிலும் ஒருங்குகூறப்பட்டுத் தமக்குட் சேர்ந்துள்ளனவான ஸ்வரூபம் உபாயம் புருஷார்த்தம் என்ற மூன்றையும் (யாவருமறியவேண்டியவை யென்று) திருவுள்ளத்திற்கொண்டு (அவற்றை வெளியிட்டு), ஆரணத்தின் மும்மை தமிழை ஈன்றான் - வேதங்களின் ஸாரார்த்தம் அமைந்தனவும் 'இயல் இசை நாடகமென்னும் மூன்றுவகைத் தமிழிலக்கணங்க ளமைந்தனவுமான திவ்வியப்பிரபந்தங்களைத் திருவாய்மலர்ந்தருளியவரும், குருகை

http://acharya.org

பிரான்-திருக்குருகூரில் அவதரித்த பரமோபகாரியும், எம்பிரான் தன்-எமக்குத்தலைவருமான நம்ஆழ்வாருடைய, இசை கவி இவை-பண்ணிசையோடு கூடிய இந்தத்திருவாய்மொழி முதலிய பாசுரங்கள், தோன்றா உபநிடதம் பொருள் தோன்றல் உற்றார் தமக்கும் சான்று ஆம்-புலப்படுதற்கு அரிய உபநிஷத்துக்களின் மகாவாக்கியார்த்தங்கள் புலப்படப் பெற்றவர்களான (ஸ்ரீமதுரகவி ஸ்ரீமந்நாதமுனி முதலிய) மகான்களுக்கும் மெய்ப்பொருளின் உண்மை விளங்குதற்கு ஏற்ற சாட்சியாம்: என்ற போது - இங்ஙனமாகிய போது, மற்று என் - இன்னம் இவற்றிற்கு என்ன சிறப்பு வேண்டும்! [மற்றொன்றும் வேண்டா என்றபடி]; (எ - று.)

கடல்கடைந்து அமுதமெடுப்பார்போல, அளவிறந்த வேதங்களின் அந்தமாய் உணர்தற்குஅரியனவா யுள்ள உபநிஷத்துக்களைப் பலபடியால் ஆய்ந்துஉணர்ந்து பரவஸ்துநிர்ணயஞ் செய்யப்புகுவார்க்கு, ஆழ்வாரருளிச்செயல்கள் "கண்ணனல்லால்தெய்வமில்லை", "அத்தெய்வநாயகன்தானே" என்று ஐயந்திரிபறத் தெளியச்சொல்லிப் பரம்பொருளைப் பிடித்துக்காட்டிக் கொடுத்தலால், 'தோன்றாவுபநிடதப்பொருள் தோன்றலுற்றார் தமக்குஞ் சான்றாமிவை' எனப்பட்டது. இப்படி ஸர்வப்ரமாணங்களிலும் மூலப்ரமாணமான சுருதிகளிலும் மேம்பாடு கூறியபின்பு, இதற்கும் மேலாக அருளிச்செயலுக்கு யாதொருசிறப்பும் சொல்லவேண்டுவதில்லை யென்பார், 'என்றபோது மற்றென்' என்றார். 'பலகாலுந் தம்மில்மூன்றாயின' என்றது, சித் அசித் ஈச்வரன் என்ற தத்துவத்திரயத்தைத் தெளிதலுமாம். ஆழ்வாரருளிச்செயல் மும்மைத்தமிழாதல், இம்மூன்றாங் கவியில் விளக்கப்பட்டது. ஆரணத்தின் மும்மைத்தமிழை யின்றாள்—"வான்திகழுஞ்சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல், ஆன்றதமிழ்மறைகள் ஆயிரமும் - ஈன்ற, முதல் தாய் சடகோபன்" எனப் பின்புள்ளார் அருளிச்செய்ததுங் காண்க. இசைக்கவி—"இசை, கூட்டி வண்சடகோபன் சொல்லமை, பாட்டோராயிரம்", "பண்ணிற் பன்னிருநாமப்பாட்டு", "பண்டலையில் சொன்ன தமிழாயிரம்", "செயிரில் சொல்லிசை மாலையாயிரம்", "பண்கொளாயிரம்" என்பன, திருவாய்மொழி.

'மும்மை' என்பது - மூன்றின் தன்மையை யுணர்த்தாமல், மூன்று என்னும் எண்ணையே உணர்த்திற்று: இதில், மை விகுதி - தன்மையையுணர்த்தாமல், தன்மையையுடைய பொருளையே உணர்த்தியதுவும், பகுதிப்பொருள்விகுதி யென்னும் ஸ்வார்த்த பாவதத்திதப்ரத்யயம்: "தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்," இருமைவகை தெரிந்து" என்பவற்றிலும் இது. (6)

7. கவிப்பாவமுதமிசையின்கதியோடுகண்ணனுண்ணக்
குவிப்பான்குருகைப்பிரான்சடகோபன்குமரிகொண்கன்
புவிப்பாவலர்தம்பிரான்திருவாய்மொழிபூசுரர்தஞ்
செவிப்பானுழைந்துபுக்குள்ளத்துளூறிநின்றுதித்திக்குமே.

(இ - ள்.) கவி பா அமுதம் - (தான்பாடும்) பாசுரங்களாகிய பரவிய இனிய உணவை, இசையின் கதியோடு - பண்ணிசை

http://acharya.org

களாகிற கறிவருக்கத்துடனே, கண்ணன் உண்ண குவிப்பான் - திருமால் அமுதுசெய்தருளும்படி மிகுதியாகச் சேர்த்துப் பரிமாறுபவரும், குருகை பிரான் - திருக்குருகூர்க்குத் தலைவரும், சடகோபன் - சடகோபனென்னுந் திருநாமமுடையவரும், குமரி கொண்கன் - குமரியாற்றுக்குத் தலைவரும், புவி பாவலர்தம்பிரான் - உலகத்திலுள்ள கவிசனங்கட்கெல்லாம் தலைவருமான நம் ஆழ்வாருடைய அருளிச்செயலான, திருவாய்மொழி - திருவாய்மொழியென்னுந் திவ்வியபிரபந்தமானது,—பூசுரர்தம் செவிப்பால் நுழைந்து - அந்தணர்களுடைய காதுகளிலே (குருமுகமாகச்) சென்று, உள்ளத்துள்ளே புக்கு - (அவர்களுடைய) மனத்திலே புகுந்து, நின்று - (அங்கு) நிலைபெற்று, தித்திக்கும் - இனிமை விளைக்கும்; (எ - று.)—ஈற்று ஏகாரம் - தேற்றம்.

'கவிப்பாவமுதம் இசையின்கறியொடு கண்ணனுண்ணக் குவிப்பான்' என்றது, உருவகம்; எம்பெருமான் அன்புடன் திருச்செவிசார்த்தித் திருப்தியடையுமாறு இனிய இசைக்கவிபாடுபவனென்றவாறு. "அட்டுக்குவிசோற்றுப்பருப்பதமும் தயிர்வாவியும் செய்அளறும்" என்றாற்போல,'பாவமுதம்' எனப்பட்டது. உணவு உண்பார்க்குக் கறி இன்றியமையாத் துணையாயிருந்து சுவைமிகுத்தல்போலக் கவியமுதுக்கு இசை கறியென்க. அடியவர்க்கு எளியவனான மூர்த்தியென்பார், கண்ணன் என்ற பெயராற் கூறினார். திருவாய்மொழி ஆயிரத்திற்குமேலும் உள்ளதுபற்றி, 'குவிப்பான்' என்றது. குமரியென்னும் நதியையுடைய பாண்டியநாட்டில் தலைமைபெற்று விளங்குகிறவரென்பது, 'குமரிகொண்கன்' என்பதன் கருத்து. நாவில்மாத்திரமே தித்தித்து வாய்வழியாய் வயிற்றினுட் புகுந்து ஜீர்ணிக்கிற தேனும் பாலும் கன்னலும் அமுதும் போலன்றி, திருவாய்மொழியமுதம் செவிவாயிலாக நுழைந்து உள்ளத்தினுள்ளே புக்குநின்று தித்திக்குமென்க; இதில் **வேற்றுமையணி** தொனித்தல் காண்க: இதனை, "சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய" என்றாற்போலக் கொள்க.

இசை இன் கறி என்றுபிரித்து, இசையாகிய இனியகறி யெனினுமாம். கறிக்கப்படுவது கறி யெனக் காரணக்குறி; செயப்படுபொருள் விகுதி புணர்ந்துகெட்டது: கறித்தல் - கடித்துத் தின்னுதல். கண்ணன் - 'க்ருஷ்ணன்' என்ற வடசொல்லின் சிதைவு; அது கருநிறமுடையவ னென்றும், பிறவாறும்பொருள்படும்: இது - திருமாலின் ஓர் அவதாரப்பெயரன்றி, பொதுப்பெயருமாம். பாவலர் - பாடல்பாடவல்லவர்; பா - செய்யுள். பூசுரர் - பூமியில் தேவர்போலச் சிறப்புப்பெற்று விளங்குபவர்; "நிலத்தேவர்" என்றார் ஆழ்வாரும். தலைமைபற்றி,முதல் வருணத்தவர் எடுத்துக் கூறப்பட்டனர்.

"மறைப்பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தாற் கடைந்து, துறைப்பாற்படுத்தித் தமிழாயிரத்தின் சுவையமுதம், கறைப்பாம் பணைப்பள்ளியானன்பரிட்டங் களித்தருந்த, நிறைப்பான் கழலன்றிச் சன்மவிடாய்க்கு நிழலில்லையே" என்ற பிள்ளைப்பெருமாளையங்கார்பாடல் இங்கு நோக்கத்தக்கது. (7)

http://acharya.org

8. தித்திக்குமூலத்தெளியமுதேயுண்டுதெய்வமென்பார்
பத்திக்குமூலம்பனுவற்குமூலம்பவமறுப்பார்
முத்திக்குமூலமுளரிக்கைவாணகைமொய்குழலா
ரத்திக்குமூலங்குருகைப்பிரான்சொன்னவாயிரமே.

(இ - ள்.) குருகை பிரான் சொன்ன ஆயிரம் - திருக்குருகூர்க்கு இறைவரான நம் ஆழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்கள்,—தித்திக்கும் மூலம் தெளி அமுதே-இனிமை விளைக்கின்ற பழமையான தெளிவுகொண்ட அமிருதமென்பது மாத்திரமோ? தெய்வம் உண்டு என்பார் பத்திக்கு மூலம்-தெய்வம் உள்ளது என்கிற ஆஸ்திகர்களுடைய பக்திக்குக் காரணமும், பனுவற்கு மூலம் - மற்றைய பிரபந்தங்கள் பலவற்றிற்கும் முதனூலும், பவம் அறுப்பார் முத்திக்கு மூலம் - பிறப்பையொழிக்க விரும்புபவர்களான முமுக்ஷுக்கள் முக்தியடைவதற்கு முக்கிய சாதனமும், முளரி கை வாள் நகை மொய் குழலார் அத்திக்கு மூலம்-செந்தாமரைமலர் போன்ற கைகளையும் ஒளியுள்ளபற்களையும் அடர்ந்தகூந்தலையுமுடைய மாதர்களின் விஷயமான ஆசையை அறக்கெடுப்பதற்கு ஏதுவுமாம்; (எ - று.)

ஆழ்வாரருளிச்செயலாகிய தென்மொழிவேதம் வடமொழி வேதம்போலவே அநாதியான முதனூலென்பதுபற்றி, அந்த அமுதுக்கு 'மூலம்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. "பழகப் பழகப் பாலும் புளிக்கும்" "அளவுக்குமிஞ்சினால் அம்ருதமும் விஷமாம்" என்ற குற்றங்கள் இந்த ஆராவமுதுக்கு இல்லையென்பது தோன்ற, 'தித்திக்குமூலத் தெளியமுது' என்றனரென்னலாம். அமுதே, ஏ - வினா. பரபக்தி பரஜ்ஞாநம் பரமபக்தி என்பவை யெல்லாம் ஆழ்வாரருளிச்செயல்களில் விளங்க உரைக்கப்பட்டிருத்தலால், 'உண்டுதெய்வமென்பார் பத்திக்குமூலம்' என்றார். 'பனுவற்கு மூலம்' என்றது, பிற்பட்ட ஆழ்வாராதியர்களுடைய பிரபந்தங்கள் நம்மாழ்வாரருளிச்செயல்களைச் சொற்பொருட்கருத்துக்களில் அடியொற்றியிருத்தல்கொண்டு; (இதற்கு உதாரணமாக, நம்மாழ்வார் "வினரிக்குரலன்றில் மென்பெடைமேகின்ற முன்றிற் பெண்ணை, முளரிக்குரம்பை" என்றதைத் திருமங்கையாழ்வார், "முன்றிற்பெண்ணைமேல் முளரிக்கூட்டகத்து, அன்றிலின்குரல்" என்றதும், நம்மாழ்வார் "மணியே முத்தமே யென்றன் மாணிக்கமே" என்றதைத் திருமங்கையாழ்வார் "முத்தினை மணியை மணிமாணிக்கவித்தினை" என்றதும் முதலியன காண்க.) 'பவமறுப்பார் முத்திக்கு மூலம்' என்றதற்குக் காரணம் - வீடுபேற்றிற்கு நல்ல உபாயமான சரணாகதியை விவரித்திருத்தல். (கொண்டபெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் பிறரும், கண்டதோடு பட்டதல்லாற் காதல்மற்றி யாதுமில்லை, எண்டிசையும் கீழும் மேலுமுற்றவும் உண்டபிரான், தொண்டரோமாயுய்யலல்லாலில்லைகண்டீர் துணையே", "துணையும் சார்வுமாகுவார்போற் சுற்றத்தவர் பிறரும், அணையவந்த ஆக்கமுண்டேல் அட்டைகள்போல் சுவைப்பர், கணையொன்றாலே யேழ்மரமுமெய்த எம்கார்முகிலைப், புணையென்றுய்யப் போகிலல்லா லில்லை

http://acharya.org

கண்டீர் பொருளே" என்று உறுத்திக்கூறி), தேகபந்துக்களும் ஸம்பத்பந்துக்களும் ஐஹிக பந்துக்களுமான மனைவி முதலிய ஆபாஸ பந்துக்களின் பாசத்தை விட்டு ஆத்மபந்துவும் ஆபத்பந்துவும் ஸர்வ தேச ஸர்வகாலபந்துவுமான எம்பெருமானைப் பற்றும்படி உணர்த்தியதனால், 'மொய்குழலாஸக்திக்கு மூலம்' எனப்பட்டது. திருவாய்மொழி ஆயிரத்து நூற்றிரண்டு செய்யுள்களாயினும், சொச்சத் தொகையைக் குறிக்காது பெருந்தொகையைமாத்திரமே குறித்து 'ஆயிரம்' என்றார்; எம்பெருமானுடைய ஆயிரத்தெட்டுத் திருநாமங்களை 'ஸஹஸ்ரநாமம்' என்றாற்போல: நூறுபத்திலுமுள்ள நூறுதிருநாமப்பாட்டுகளையும் ஒதுக்குமிடத்து ஆயிரத்திரண்டே யாகு மன்றோ.

பனுவல் - நூல். முளரி-முட்களையுடைய அரியையுடைய தெனக் காரணப்பொருள்படும். அரி=அரை: தண்டின் சுற்றுப் புறம். 'மொய்குழலார்' என்றது, இலக்கணையால், அவர்கள்மீது கொள்ளும் அவாவையுணர்த்தி நிற்றல். கையழகு, பல்வரிசையினழகு, கூந்தலழகு முதலியவற்றைக்கொண்டு பெண்டிர் ஈடுபடுத்த ஆடவர் அவற்றில் ஈடுபடுதல் இயல்பென்பது தோன்ற, அவர்களை 'முளரிக்கை வாணகை மொய்குழலார்' என்று வருணித்தனர். 'மூலம்' என்றசொல் ஒருபொருளிலேயே பலமுறைவந்ததனால், சொற்பொருட்பின்வருநிலையணி. (8)

9. ஆயிரமாமறைக்குமலங்காரமருந்தமிழ்க்குப்
பாயிரநாற்கவிக்குப்படிச்சந்தம்பனுவற்கெல்லாந்
தாயிருநாற்றிசைக்குத்தனித்தீபந்தண்ணங்குருகூர்ச்
சேயிருமாமரபுஞ்செல்வியான்செய்தசெய்யுட்களே.

(இ - ள்.) தண் அம் குருகூர் - குளிர்ச்சியான அழகிய திருக்குருகூரில் அவதரித்த, சேய் - குமாரரும், இரு மா மரபும் செல்வியான் - (தாய்மரபு தந்தைமரபு என்ற) இரண்டு சிறந்தவம்சங்களினும் மேன்மையையுடையவருமான ஆழ்வார், செய்த - அருளிச்செய்த, செய்யுட்கள் - பாசுரங்கள்,—ஆயிரம் மா மறைக்கும் அலங்காரம் - மிகப்பலவாகவுள்ள சிறந்தவேதங்கட்கெல்லாம் அழகுசெய்வனவாம்; அரும் தமிழ்க்கு பாயிரம்-(இன்சுவையினால்) அருமைமிக்க தமிழ்ப்பாஷைக்கு முகவுரையுமாம்; நால் கவிக்கு படிச் சந்தம் - நால்வகைக்கவிகளுக்கும் மாதிரிக்காப்பியமுமாம்; பனுவற்கு எல்லாம் தாய் - எல்லாநூல்களுக்கும் தாயுமாம்; இரு நால்திசைக்கு தனி தீபம்-எட்டுத்திக்குக்கும் ஒப்பற்ற விளக்குமாம்; (எ - று.)

ஆழ்வாரருளிச்செயல்கள், அளவிறந்தவேதங்களிலே எளிதிற் காணவொண்ணாதபடி மறைந்துகிடந்த தத்துவப்பொருள்களையெல்லாம் எடுத்துத்தெளிவுபடச் சொல்லி விளக்கி அவ்வேதங்களின்சிறப்பைப் பிரகாசிப்பித்தலால், 'ஆயிரமாமறைக்கும் அலங்காரம்' எனப்பட்டன. ஆயிரம் சாகைகளாகவுள்ள பெரிய ஸாம வேதமாகிய விருக்ஷம் முழுவதுக்கும் அழகுசெய்வன வென்றும் பொருள்கொள்ளலாம்; திருவாய்மொழி ஸாமவேதத்தின் ஸாரமாத

http://acharya.org

லால். பாயிரம் - முகவுரை, நான்முகம். ("மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்," 'அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போல'த்) திருவாய்மொழி எல்லா நூல்கட்கும் தலைமையாகவைத்து முதலிற் கூறப்பட்டு விளங்குதலால், 'அருந்தமிழ்க்குப் பாயிரம்' என்றார். "ஆயிரமுகத்தானகன்றதாயினும், பாயிரமில்லது பனுவலன்றே" என்றபடி நூற்கு இன்றியமையாச்சிறப்பினதான பாயிரம்போலத் திருவாய்மொழி தமிழ்க்கல்விகேள்விகட்கெல்லாம் இன்றியமையாச் சிறப்பினதென்பதும், 'பருப்பொருட்டாகிய பாயிரங் கேட்டார்க்கு, நுண்பொருட்டாகிய நூல் இனிதுவிளங்கும்' என்றபடி ஒருநூலின்பாயிரம் ஓதினார்க்கு அந்நூல் இனிது விளங்குதல் போலத் திருவாய்மொழியோதினார்க்கு எல்லாநூல்களும் இனிது விளங்குமென்பதுபற்றியும் 'அருந்தமிழ்க்குப் பாயிரம்' என்றதாகவுங்கொள்ளலாம்.

நாற்கவி - ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, விஸ்தாரகவி என்பன. ஆசுகவியாவது - ("மூச்சுவிடுமுன்னே முந்நூறு நானூறும், ஆச்சென்றா லாயிரம்பாட் டாகாதோ," "இம்மென்னுமுன்னே எழுநூறு மெண்ணூறும், அம்மென்றா லாயிரம்பாட்டாகாதோ," "எழுந்தஞாயிறு விழுவதன்முன் கவிபாடின தெழுநூறே", 'சிமிழ்க்கவிராயர்' என்னும்படி) விரைவிற்பாடுங் கவி. மதுரகவி-சொற்பொருள்களின் இனிமையமையப் பாடுங் கவி. சித்திரகவி-பலவகை மிறைக்கவி விசித்திரங்களமையப் பாடுங் கவி. விஸ்தாரகவி - ஒருபொருளையே விரித்துப் பாடுங் கவி. படிச்சந்தம் - மாதிரிக்குக்காட்டும் அழகியவடிவம்; (திருக்கோவையாரில் "கடிச்சந்தயாழ்கற்ற மென்மொழிக்கன்னியனகடைக்குப், படிச்சந்தமாக்கும் படமுளவோ நும்பரிசகத்தே" என்றவிடத்து, பேராசிரியர், 'படிச்சந்தமென்பது - ஒன்றன்வடிவையுடைத்தாய் அதுவென்றே கருதப்படும் இயல்புடையது; படிச்சந்தமென்பது - ப்ரதிச்சந்தமென்னும் வடமொழிச்சிதைவு' என்று உரைப்பர்.) திருவாய்மொழி முதலியன, மதுரகவியாழ்வார் கேட்டுக்கொண்டேவர நம்மாழ்வார் தட்டுத்தடையின்றிச் சொல்லிக்கொண்டே வந்தமையும் எம்பெருமானை யநுபவித்ததனாலான ஆனந்தம் உள்ளடங்காமல் மேல்வழிந்து பிரபந்தரூபமாக வெளிவந்தமையு மாதலால் ஆசுகவிக்கு எடுத்துக்காட்டும், ஆதிதொடங்கி அந்தம்வரையிலும் செவிக்கினியசெஞ்சொல்லாய்த் தெளியமுதாதலால் மதுரகவிக்கு எடுத்துக்காட்டும், கரந்துறைசெய்யுளென்னுஞ் சொல்லணியின் இலக்கணவகையால் பிரணவமகாமந்திரத்தின் மூன்றுஎழுத்துக்களும் திருவாய்மொழியின் முதற்பாட்டின் முதல்மூன்றடிகளிலே அமையும்படி "உயர்வற உயர்நலமுடையவன்யவனவன், மயர்வற மதிநல மருளினன் யவனவன், அயர்வறு மமரர்களதிபதி யவனவன், துயரறு சுடரடி தொழுதெழென் மனனே' 'என்று அருளிச்செய்தது முதலியவற்றால் சித்திரகவிக்கு எடுத்துக்காட்டும், பதினொருபாடல்களையுடைய நூறுபதிகங்களின் வடிவமாகப் பகவத்விஷயம் ஒன்றையே குறித்த ஆயிரங்கவிகளுக்கு மேலாய்ப்

http://acharya.org

பாடியுள்ளதனால் விஸ்தாரகவிக்கு எடுத்துக்காட்டு மாதல் காண்க.

பிற்பட்ட மற்றையாழ்வார்களுடைய பிரபந்தங்கட்கெல்லாம் முதனூலாதலாலும், யாக்கைநிலையாமை செல்வநிலையாமை முதலியவற்றை எடுத்து விளக்கி அறநூலுக்கும், "நம்மெய்வருத்திக் கைசெய்துய்ம்மினோ" என்று பொருள்தேடுமுபாயங்கூறிப் பொருள்நூலுக்கும், களவும் கற்புமாகிய அகப்பொருள் துறைகளைப் பலவாற்றாற்காட்டி இன்பநூலுக்கும், முக்திபெறுமுபாயத்தை யுணர்த்தி வீட்டுநூலுக்கும் ஆதாரமாதலாலும், 'பனுவற்கெல்லாம் தாய்' என்றனர். தாய் - தாய்போலத் தன்னுட்கொண்டு தருமென்றபடி. 'நாற்றிசைக்குத் தனித்தீபம்' என்றது "உலகத்து இடரிரண்டாய்வரும் பேரிருள்சீப்பன" என்றபடி. சூரியசந்திர அக்கினிய ரென்னும்முச்சுடர்க்கும் நீக்கலாகாத அஜ்ஞானமாகிற அகவிருளை அனைவர்க்கும் நீக்குதலா லென்க. 'தனித்தீபம்' என்றது - வெளியிருளை நீக்குகிற சாதாரணமான தீபத்தினும் உள்ளிருளைநீக்குகிற இந்தத் திவ்யப்ரபந்ததீபத்திற்கு உள்ள சிறப்பை உணர்த்துவதோடு, 'புறத்திருளை யொழித்தற்குப் பலசுடர்களுள்ளன: அகத்திருளையழித்தற்கோ இஃதொன்றே உள்ளது' என்ற ஏற்றத்தையுங் காட்டும்; இதனை 'வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்டிங்கள், பொன்னென நீக்கும் புறவிருளைத்- தெள்ளிய, வள்ளுவரின் குறள்வெண்பா வகிலத்தோர், உள்ளிருணீக்கு மொளி," "வையத்துவாழ்வார்க, ளுள்ளிருணீக்குமொளி" என்றாற்போலக் கொள்க.

தன், அம் என்ற அசைமொழிகள் - முறையே குருகூரின் சீர்வள நிலவளங்களை யுணர்த்தும். சேய் - செம்மையுடையவன்; செம்மை - ஞானச்செவ்வி: 'செம்மையென்பது செய்யென விகாரத்தால் நின்ற தென்றுமாம்' என்பர் நச்சினார்க்கினியர். இருமாமரபு- இருமுதுகுரவர்மரபு. இருமாமரபும் செவ்வியான் - இருகுலத்தினும் கோடாத ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயையுடையவன்; இவருடைய திருத்தந்தையாரான காரியாரும் திருத்தாயாரான உடையநங்கையாரும் ஆகிய இருவரும் வம்சபரம்பரையாகத் திருமாலடிக்கே தொண்டுபூண்டொழுகுஞ் சிறந்தகுலத்தவராதலை யறிக; (இவ்வாழ்வார்தாமே "எந்தைதந்தைதந்தைதந்தைதந்தைக்கும்முந்தை" என்று அருளிச் செய்கையாலே ஏழாட்காலும் புறந்தொழாமே குடிகுடியாட்செய்யுந் தொண்டக்குலத்திலே பிறந்து ஏழாட்காலும் பழிப்பிலரா யிருப்பர்; எங்ஙனேயென்னில்:—திருவழுதிவளநாடரென்றொருவர்; அவர்பிள்ளை அறந்தாங்கியார்; அவர் பிள்ளை சக்கரபாணியார்; அவர் பிள்ளை அச்சுதர்; அவர் பிள்ளை செந்தாமரைக்கண்ணர்; அவர்பிள்ளை செங்கண்ணர்; அவர் பிள்ளை பொற்காரியார்: அவர்பிள்ளை காரியார்; அவர்பிள்ளை மாறன். இவர்கள்தாம் இக்கிரமத்திலே ஸந்தாநபரம்பரையாகக் குடியடியராய்ப் பழவடிமையாய் வழிவழிவந்து ஆட்செய்யுந் தொண்டரான இத்திருவம்சத்திலே, பொற்காரியார் என்கிறவர், உலகெல்லாம் வாழும்படி தம்முடையபுத்ரரான காரியாருக்கு விவாஹம்பண்ணுவிப்பதாகத் திருவண்பரிசாரத்திலே காரியாரைக்

http://acharya.org

கொண்டுபோய்த் தமக்குஸமான ஸம்பந்தயோக்யராய் வைஷ்ணவஸந்தாநிகரான திருவாழ்மார்பர் திருமாளிகையிலே எழுந்தருளி அவரைப்பார்த்து 'உம்முடைய புத்ரியாரான உடையநங்கையாரை நம்முடைய புத்ரரான காரியாருக்கு விவாஹம்பண்ணித்தரவேணும்'என்று தமரும் பிறரு மறியப்ரஸங்கித்துக்கேட்க, திருவாழ்மார்பரும் மிகவும்ஸந்துஷ்டராய்க் கொண்டு ஸம்மதித்து, கல்யாணம்கோடித்து' என்ற குருபரம்பராப்ரபாவவாக்யம் இங்கு நோக்கத்தக்கது. "கேசவன் தமர்கீழ்மேலெமரேழெழுபிறப்பும், மாசதிரதுபெற்று நம்முடையவாழ்வு வாய்க்கின்றவா" என்றார் திருவாய்மொழியிலும்.)

செய்யுட்கனென்ற ஒரு பொருளினிடத்து, 'மறைக்குஅலங்காரம்' முதலாகப் பலபொருள்களின்தன்மையை ஆரோபித்துக் கூறியது, **பலபடப்புனைவணி**; கீழ்வந்த "தனமாஞ்சிலாக்கு" என்ற செய்யுளும் இவ்வணியின்பாற்படும்; இதனை வடநூலார் உல்லேகாலங்கார மென்பர். "நெஞ்சுக்கிருள் கடிதீபம் அடங்காநெடும்பிறவி, நஞ்சுக்குநல்லவமுதம் தமிழ் நன்னூற்றுறைகள், அஞ்சுக்கிலக்கியம் ஆரணசாரம் பரசமயப், பஞ்சுக்கனலின் பொறி பரகாலன்பனுவல்களே" என்ற பெரியதிருமொழித் தனியனோடு இச் செய்யுளை ஒப்பிடுக.

ஆயிரம்ஆம் மறை என்று பதம்பிரிப்பினுமாம். 'செய்யுட்களாயிரம்' என்று கூட்டுதலும் ஒன்று.

இச்செய்யுளில் 'பனுவற்கெல்லாம்தாய்' என்றும், கீழ்ச்செய்யுளில் 'பனுவற்குமூலம்' என்றும் கூறியவற்றிற்கு நிதரிசனமாக விநோதரசமஞ்சரியில் வருவதொரு விஷயம்:—'திருவள்ளுவர் குறள்செய்தகாலத்தில், அவரும் ஔவையும் இடைக்காடரும் சந்தித்த சமயத்தில், வள்ளுவரை நோக்கி மற்றைஇருவரும் 'நீர் செய்த நூல் எத்தன்மைத்தாகியது?' என்று வினவ, அவர் 'அகஸ்தியராற் பிரசித்தம் பண்ணப்பட்ட இயல் இசை நாடகம் என முத்திறத்ததாகிய தமிழும், என்னாற்செய்யப்பட்ட குறளும், உடையநங்கையின் திருக்குமாரராகிய சடகோபர் அருளிச்செய்த திருவாய்மொழியின் புத்ரஸ்தானமாகிய வழிநூலாம்' என்னுங் கருத்தை உள்ளவைத்து "குறுமுனிவன் முத்தமிழும் என்குறளும் நங்கை, சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்" என்று சொன்னதையும்; அதுகேட்டு, ஔவை, 'அர்த்தபஞ்சகத்தையும் சதுர்விதபுருஷார்த்தத்தையும் அறப்பால்முதலிய முப்பாலுள் அடக்கி அமைக்கப்பட்ட உண்மைப்பொருளாகிய எவ்வகைப்பட்ட வேதங்களுக்கும் சம்மதமான மேலானபொருளை, குளிர்ச்சிதங்கிய தாமிரபருணிதீரத்திலிருக்குந் திருக்குருகூரிற் காரிமுதலியார்புதல்வராய் அவதரித்த நம்மாழ்வாரது திருவாய்மொழியாகிய திராவிடவேதமென்று சிலர் சொல்லுவார்கள்; நான், அவர்கள் சொல்லை மறுத்து, அக்குறளை, இந்த உலகத்திற்குத் தாயாகிய ஸ்ரீமந்நாராயணனாற் பிரமனுக்கு உபதேசிக்கப்பட்டுவந்த கீர்வாணவேதமென்றே சொல்லுவேன்' என்னுங் கருத்தை உள்ளிட்டு "ஐம்பொருளும் நாற்பொருளும் முப்பொருளிற் பெய்தமைத்த, செம்

http://acharya.org

பொருளை யெம்மறைக்குஞ் சேட்பொருளைக் - தண்குருகூர்ச், செய்மொழிய தென்பர் சிலரி யானிவ்வுலகின், தாய்மொழிய தென்பேன் தலைக்கந்து" என்று சொன்னதையும்; இடைக்காடர் 'திரவிட வேதமாகிய செய்மொழியையும் கீர்வாண வேதமாகிய தாய்மொழியையும் ஆராய்ந்து சொல்லுமிடத்தில், இரண்டும் ஒன்றேயாம். திருவாய்மொழியை யாவரும் சங்கையின்றி வேதமென்றே சொல்லுவார்கள். திருவாய்மொழியைப்போலச் சிறந்தநூல்கள் அநேகம் உண்டு என்று சிலர் குதர்க்கஞ் செய்தாலும், நான், அவர்களை மறுத்து, அவைகளும் இந்தக்குறளும் அத்திருவாய்மொழியினது சாயையா யிருப்பவைக ளென்றே சொல்லுவேன்' என்னுங் கருத்தை யடக்கி, "செய்மொழியோ தாய்மொழியோ செப்பி லிரண்டு மொன்றவ், வாய்மொழியை யாரு மறையென்ப - வாய்மொழிபோ, லாய்மொழிகள் சாலவுளவெனினு மம்மொழியின், சாய்மொழி யென்பேன்யான் தகைக்கந்து" என்று சொன்னதையும் நினையாமற்போனேனே' என்பது. (9)

10. செய்யோடருவிக்குருகைப்பிரான்றிருமாலைநங்கள்
கையோர்கனியெனக்காட்டித்தந்தான்கழற்கேகமலம்
பெய்யோமவன்புகழேத்திப்பிதற்றிப்பித்தாய்த்திரியோ
மையோவறிதுமெல்லேயுபகாரத்தினாற்றலையே.

(இ-ள்.) செய் - வயல்களில், ஓடு - விரைந்துபாய்கின்ற, அருவி - நீர்ப்பெருக்கையுடைய, குருகை - திருக்குருகூரில் அவதரித்த, பிரான் - தலைவரான ஆழ்வார், திருமாலை - ஸ்ரீமந்நாராயணனை, நங்கள் கை ஓர்கனி என காட்டி தந்தான் - நம்முடைய கையிற் கிடைத்ததொரு பழத்தைப்போல (ஸ்வரூபம் நன்குவிளங்கும்படி) காட்டி உபகரித்தருளினர்; (அவன்) கழற்கே - அங்ஙனம் மஹோபகாரஞ்செய்தவருடைய திருவடிகளிலே, கமலம் பெய்யோம் - தாமரைமலர்களை இட்டு அருச்சிக்கின்றோமில்லை! அவன் புகழ் ஏத்தி பிதற்றி பித்து ஆய் திரியோம் - அந்தஆழ்வாருடைய கீர்த்தியை எடுத்துத் துதித்துப் பலகாலுஞ்சொல்லி (அவ்விஷயத்திலே நம்மைப்) பித்தரென்றே (பிறர்சொல்லும்படி) பரவசமாய்த் திரிதலுஞ் செய்திலோம்!! ஐயோ - அந்தோ! உபகாரத்தின் ஆற்றலை என்றோ அறிதும் - (ஆழ்வார்செய்தருளிய) உதவியின்பெருமையை என்றைக்குத்தான் அறிவோம்! (எ - று.)

என்றது, எவ்வாற்றாலும் உணர்தற்கு அரிய பகவானுடைய சொரூபத்தை ஆழ்வார் தெளிவாகவுணர்த்திவிளக்கி எளிதிற் காட்டியருளினமையாகிய பேருதவிக்கு உலகத்தவரனைவரும் கடமைப்பட்டிருக்கவும் பெரும்பாலார் அதனை உணர்ந்து அவர் திறத்தில் வழிபாடுசெய்தலின்றிப் பழுதேபலபகலும் போக்குதலைக்குறித்துக் கழிவிரக்கமாகக் கூறியவாறாம். அவருடைய திருவடிகளில் மலர்களைக்கொண்டு அருச்சனைசெய்தும் அவர்புகழையே எப்பொழுதும்எடுத்துச்சொல்லியும் உய்தல் தவிர, அவர் செய்த பேருதவிக்கு ஏற்றபடி பிரதியுபகாரஞ்செய்யக்கூடிய தொன்று மில்லை யென்பதும் இதிற் போதரும். கையோர்கனி

http://acharya.org

வெனக் காட்டித்தருதல் - கைவசமாம்படி காட்டிக் கொடுத்தல்; ("கையிற்கனியென்னக் கண்ணனைக் காட்டித்தரிலும்," "கையி லங்கு நெல்லிக்கனி," 'கரதலாமலகம்,' 'உயரத்திலேயிருக்கிற மகா பலமானது அடியிலேயிருக்க மடியிலேவிழும்படி கைகண்ட பல மாயிருக்கும்', "கையுறைநெல்லித்தன்மையி னெல்லாங்கரைகண் டாம்" என்பன காண்க.)

வயலை 'செய்' என்பது - கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுட் பன்றி நாட்டில் வழங்குந் திசைச்சொல். 'நன்செய்,' 'புன்செய்' என்ற வழக்குங் காண்க. அருவி - மலைநீர்ப்பெருக்கு; இங்கு, பொதியமலையிலின்று வரும் பொருநையாற்றின்வெள்ளம். 'நங்கள்' என்ற தன்மைப்பன்மை - பிறரையும் உளப்படுத்தியது. கழற்கு =கழலில்: உருபுமயக்கம்; ஏ-பிரிநிலை. பிதற்றுதல் - பேசுதல்; "இயைத்த லிறந்த வியம்பல் புகறல், பிதற்ற லென்றிவை பேசு தலாகும்" என்பது, பிங்கலந்தை. அவரது புகழின்பெருமைக்கு ஏற்றபடி அதனை ஒழுங்காக எடுத்துக்கூறுந் திறமைதானும் எங் கட்கு அரிதென்பது, 'பிதற்றி' என்ற சொல்லின் ஆற்றலால் தோன்றும். பித்துஆய்த்திரிதல் - காண்பவர் பேய்பிடித்தவரென் னும்படி பரவசப்பட்டுப் பலவிடத்துஞ் செல்லுதல். "தேசனைக் காணவிடத்து நெஞ்சாரவே துதித்தல், ஆசானை யெவ்விடத்து மப்படியே," "குரும் ப்ரகாசயேந் நித்யம்" என்றபடி ஆசார்யரு டைய பெருமைகளை ஊரும் நாடும் உலகமும் எல்லாம் அறியும்படி வெளியிடுதல் தகுதியாதல் காண்க; "எண்டிசையுமறிய இயம்பு கேன், ஒண்டமிழ்ச் சடகோபனருளையே" என்று ஸ்ரீமதுரகவியாழ் வார் அருளிச்செய்ததும் உணர்க. "அரங்கனுக்கடியார்களாகிய வருக்கே, பித்தராமவர் பித்தரல்லர்கள் மற்றையார் முற்றும்பித் தரே" என்றபடி பாகவதவிஷயத்திலே பக்தி காரியமான பித்து ஏறித் திரிதல் உரியதாதலால், அது வேண்டப்பட்டது; உரியவிஷ யத்திற் பித்துக்கொண்டவர் பித்தராகார், உரியனவல்லாதவிஷ யங்களிற் பெருவிருப்புக்கொண்டவரே பித்தராவரென்க.

நம்மாழ்வார் செய்தருளின உபகாரத்தின் வைபவத்தைப் பாராட்டி ஸ்ரீமதுரகவிகள் "அருள்கொண்டாடுமடியவரின்புற, அருளினனவ்வருமறையின்பொருள், அருள்கொண்டாயிர மின் தமிழ் பாடினான், அருள்கண்டீரிவ்வுலகினில் மிக்கதே" என்று அருளிச்செய்திருத்தல் நோக்கத்தக்கது. (10)

11. ஆற்றிற்பொதிந்தமணலின்றொகையருமாமறைகள்
வேற்றிற்பொதிந்தபொருள்களெல்லாம்விழுமாக்கமலஞ்
சேற்றிற்பொதியவிழ்க்குங்குருகூரர்செஞ்சொற்பதிக
நூற்றிற்பொதிந்தபொருளொருகூறுநுவல்கிலவே.

(இ - ள்.) ஆற்றில் பொதிந்த மணலின்தொகை - ஒருநதி யிலேபொருந்தின மணல்க ளெத்தனையோ அத்தனையாகவுள்ள [அநந்தங்களென்னும்படி அளவிறந்தனவான], அரு மா மறை கள் வேற்றில் - (ஓதியுணர்தற்கு) அரியனவும் சிறந்தனவும் பல வேறு வகைப்பட்டனவுமாகிய வேதங்களனைத்திலும், பொதிந்த -

http://acharya.org

உள்ளடங்கிய, பொருள்கள் எல்லாம் - சகல அர்த்தங்களும்,— விழு மா கமலம் - சிறந்த பெரிய தாமரைமலர்கள், சேற்றில் பொதி அவிழ்க்கும் - சேறுள்ளவிடங்களிலெல்லாம் கட்டவிழ்த்து மலரப்பெற்ற, குருகூரர் - திருக்குருகூரிலவதரித்தவரான ஆழ்வார் அருளிச்செய்த, செம் சொல் பதிகம் நூற்றில் - செந்தமிழ்ச்சொற்களாலாகிய நூறு திருப்பதிகங்களில், பொதிந்த - நிரம்ப அமைந்த, பொருள் - அருத்தத்தின், ஒரு கூறும் - ஒருபகுதியையாயினும், துவல்இல - சொல்லமாட்டிற்றில; (எ - று.)—ஏ - தேற்றம்.

அளவிறந்த அரிய பெரிய பல வேதங்களிலுமுள்ள பொருள்களெல்லாங்கூடி, திருவாய்மொழி ஆயிரம்பாசுரத்திற் கூறிய ஸாரார்த்தத்தின் ஒரு பகுதியளவுஞ் சொல்லினவல்லவென்பதாம்; என்றது, சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் முதலிய அழகுகளோடு தத்துவப்பொருள்களின்ஸாரங்களை எடுத்துச்சொல்லி விளக்குந்தன்மையில் வடமொழிவேதங்களினும் இத்தென்மொழி வேதம் மிகச்சிறந்ததென்று இதன்வைபவத்தைக் கொண்டாடிக் கூறியவாறு; துதிவகையாகிய இது 'நஹிநிந்தாந்யாய'த்தால் வேதத்தைப் பழித்ததாகாதென்க. 'ஓர் ஆத்மாவுக்கு ஹிதாம்சத்துக்கு ஒருபாட்டே அமையும்படியிறே இவர் பாடிற்று' என்பர் ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை. எண்ணளவைக்கு உட்படாதென்றற்கு, 'ஆற்றிற்பொதிந்த மணலின் தொகை' என்றார். 'மறைகள்வேறு' என்றது - ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்ற நால்வகை வேதங்களை. தாமரைக்குச் சிறப்பு - திருமகளுக்கு வாஸஸ்தானமாதல். அது பங்கஜமாதலால், 'சேற்றிற்பொதியவிழ்க்கும்' எனப்பட்டது. இவ்விசேஷணம், மருதநிலமாகிய குருகூரின் நீர்வளத்தை யுணர்த்தும்; "செய்யதாமரைப் பழனத் தென்னங்குருகூர்ச் சடகோபன்" என்ற திருவாய்மொழியையுங் காண்க. பதிகம் - பத்து அல்லது பதினொரு செய்யுள் கொண்டது; 'தசகம்' எனப்படும்; இதனை 'திருமொழி' என்றல், வைஷ்ணவசம்பிரதாயம். (11)

[இயலிடங்கூறல்.]

12. இலவேயிதழுளவேமுல்லையுள்ளியம்பும்மொழியுஞ்
சிலவேயவைசெழுந்தேனொக்குமேதமிழ்ச்செஞ்சொற்களாற்
பலவேதமுமொழிந்தான்குருகூர்ப்பதுமத்திரண்டு
சலவேல்களுமுளவேயதுகாணென்றனியுயிரே.

(இ - ள்.) தமிழ் செம் சொற்களால் பல வேதமும் மொழிந்தான் - செவ்விய தமிழ்மொழிகளினால் பலவகைவேதங்களின் பொருளையெல்லாம் அருளிச்செய்தவரான ஆழ்வாருடைய (திருவவதார ஸ்தலமாகிய), குருகூர் - திருக்குருகூரிலே, பதுமத்து - ஒரு தாமரைமலரிலே, இதழ் - இதழ்கள், இலவே - இலவமலரே போலும்; (அவ்விதழ்களினுள்ளே), முல்லை உளவே - முல்லையரும்புகள் உள்ளனவே, உள் இயம்பும் மொழியும் சிலவே - அவற்

http://acharya.org

றன்னே பேசப்படும் பேச்சுக்களும் சிலவே (உண்டு): அவை - அந்தச் சின்மொழிகள்தாம், செழுந் தேன் ஒக்குமே - சுவைமிக்க தேனையே போலும்; (மற்றும் அத்தாமரைமலரில்), இரண்டுசலம் வேல்களும் உளவே - அசைகின்ற இரண்டு வேலாயுதங்களும் உள்ளனவே; அது காண் என் தனி உயிரே - (இவை யனைத்தையு முடைய) அவ்வுருவந்தான் எனது தனிப்பட்ட உயிர்போன்ற காதலியென்று (நீ) உணர்வாய்; (எ - று.)

ஓர் உத்தமபுருஷன் பரிவாரத்துடன் வேட்டையாடுதற்குப் புறப்பட்டு வனத்துக்குச் சென்றவனுப் ஓர் உத்தமகன்னிகையும் தோழியருடன் பூக்கொய்துவிளையாடுதற்கென்று பூஞ்சோலையிற் சேர்ந்தவளவிலே, ஒவ்வொரு வியாஜத்தால் தோழியர் பிரிய அக் கன்னிகை அங்குத் தனித்துநின்ற சமயத்தில், ஒவ்வொருவியாஜத் தாற் பரிவாரங்கள் பிரியத் தனிப்பட்டவனுய் அப்புருஷன் அங்கு வந்துசேர, இருவரும் ஊழ்வினைவசத்தால் இங்ஙனந் தற்செயலாய் ஓரிடத்திலே சந்தித்து ஒருவரையொருவர் கண்டு காதல்கொண்டு காந்தர்வவிவாக கிரமத்தாற் கூடி உடனே பிரிவர்; இச்சேர்க்கை, இயற்கைப்புணர்ச்சியென்றும், தெய்வப்புணர்ச்சியென்றும், முன்னுறுபுணர்ச்சி யென்றும் பொருளிலக்கணத்திற் கூறப்படும். இங்ஙனங் கலந்து பிரிந்த தலைமகன் பின்பு தனதுதோழனைத் துணையாகக்கொண்டு மீண்டும் அத்தலைமகளைச் சந்தித்தல், முறைமை; அது, பாங்கற்கூட்ட மெனப்படும். அதற்கு உரிய துறைகள் பலவற்றில், 'இயலிடங்கூறல்' என்ற துறை, இச்செய்யுளிற் கூறியது; அதாவது - முதலிற் கலந்து பிரிந்த தலைமகன், பின்பு தன்னையடுத்துத் தன்மெலிவைக் கண்டு 'நீ இவ்வாறு ஆதற்குக் காரணம் என்னே?' என்று வினவிய பாங்கனுக்கு, 'யான் ஒருத்திவலையிலே அகப்பட்டேன்' என்று உற்றதுகூற, அதுகேட்ட பாங்கன் 'நினது ஒழுக்கம் தக்கதன்று' என்று சிலகூறியபின்பும், தலைமகன் தெளிவுபெறாது வருந்தவே, பாங்கன் இரக்கங்கொண்டு 'நின்னாற் காணப்பட்ட வடிவம் எத்தன்மைத்து? அதனை நீ கண்ட இடம் எது?' என்று இயலும் இடமும் வினவ, அதுகேட்ட தலைமகன் மகிழ்ச்சிகொண்டு 'என்னாற்காணப்பட்ட வடிவுக்கு இயலிவை இடமீது' என்று கூறுதல்.

'இதழ்' என்றது - இங்கு, வாயிதழ்களை. அவற்றிற்கு இலவம்பூ உவமை - செம்மைக்கும், மென்மைக்கும். 'முல்லை' என்றது - அவ்வரும்புகள்போல் வெண்ணிறமான வடிவையுடைய பற்களின் வரிசையை. மொழிக்குத்தேன் உவமை - இனிமையில். கண்டவர் கண்களைக் களிப்பிக்கும் கட்டழகுபற்றி முகம் 'பதுமம்' என்றும், கூரியவடிவும் ஆடவர்நெஞ்சிற்பாய்ந்து அதன்வலிமையைக் கெடுத்து அதனை வருத்துந்திறமும் பற்றிக் கண் 'வேல்' என்றுங் கூறப்பட்டன. இன்றியமையாமையும் மிக்கஅன்புக்குஇடமாதலும் தோன்ற, 'உயிர்' என்றது. தனிஉயிர் - ஒப்பற்ற உயிர் எனினுமாம். கண்களின்பிறழ்ச்சிபற்றி, அதற்கு உபமானமான வேலுக்கு 'சலம்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. சலவேல்என்பதற்கு மாறுபாட்டையுடையவேல் என்று உரைப்பாரு

http://acharya.org

முனர். 'மொழியுஞ் சிலவே' என்றது, மிதமாகப்பேசுபவராத லால்.

முல்லை, பதுமம், வேல் என்பன - உருவகவுயர்வுநவிற்சியால் உபமேயத்தின்மேல் நின்றன. மொழியின் செழுமையைக் கருதி, அதற்கு உவமையாகிய தேனுக்குச் செழுமை அடைமொழியாக்கப் பட்டது. உணர்தற்குஅரிய வைதிக சப்தம்போலன்றி எளிதி லுணரத்தக்கவையான தமிழ்ச்சொற்களினு லென்பார், 'தமிழ்ச் செஞ்சொற்களால்' என்ருர். 'பலவேதமும்மொழிந்தான்'என்றது, அநந்தமானவேதங்களின் அருத்தத்தைத் தொகுத்துச் சுருக்கிக் கூறியருளிய தென்றவாரும். இச்செய்யுளின் முதலடியிற் சொற் போக்கிலை 'இல', 'உள' என்ற மாறுபட்டசொற்கள் அமைதல், முரண்தொடையின் பாற்படும்; "மொழியினும்பொருளினும் முர ணுதல் முரணே" என்ருர், ஆசிரியர் தொல்காப்பியனர். இரண்டு மூன்ருமடிகளில் சில பல என்பனவும், மூன்றுநான்காமடிகளில் இரண்டு தனி என்பனவும் வந்ததையும் தொடைமுர ணென்ன லாம். இச்செய்யுளின் மெய்ப்பாடு - உவகை. பயன் - பாங்கற்கு உணர்த்தல்.

தோத்திரப்பிரபந்தங்களில் அகப்பொருட்கிளவித்துறைகளை இடையிடையே கூறுதல் கவிசமயமாதலை இலக்கியங்கள்கொண்டு உணர்க. அருமறைப் பொருளை அருளினல் தமிழிற்பாடியருளியவ ரான ஆழ்வாருடைய திருமுகமண்டலத்தின் திவ்வியசௌந்தரியத் தையும், ஸூரியஞானவிகாஸத்தையும் திருவாய்மலரின் செவ்வியை யும், அதனகத்தேவிளங்குகின்ற சுத்தமான தந்தபங்திையையும், அங்குநின்றுவெளிவருகிற சுருங்கச்சொல்லல்முதலிய அழகுக ளோடுகூடிய செவ்விய சிஞ்சொற்களையுங் கண்டு அவற்றில் ஈடுபட்ட பாகவதர், தங்கள் ஈடுபாட்டைக் கண்டு உசாவிய அன்பர்கட்கு, அந்த ஆழ்வாருடைய இயல்புகளையும் திருவவதார ஸ்தலத்தையும் அவர் தங்கட்கு இன்றியமையாதவ ரென்ற அரு மையையும் எடுத்துக்கூறுதல், இதற்கு உள்ளுறை பொருளாதலை உய்த்துணர்க; விரிப்பிற் பெருகும். ஸ்வாபதேசத்தில், தலைமகன் - ஆழ்வார், தலைமகள் - பாகவதர். (12)

13\. உயிருருக்குர்புக்குணர்வுருக்கும்முடலத்தினுள்ள
செயிருருக்கொண்டநந்நிங்குருக்குந்திருடித்திருடித்
தயிருருக்குந்நெய்யொடுண்டானடிச்சடகோபன்சந்தோ
டயிருருக்கும்பொருநற்குருகூரெந்தையந்தரியே.

(இ - ள்.) தயிர்-தயிரையும், உருக்கும் நெய்யொடு - உருக்கு தற்குஉரிய வெண்ணெயையும்,திருடி திருடி உண்டான்-(திருவாய்ப் பாடியில்) இடந்தொறும் நாள்தொறும் எப்பொழுதும் மிகுதி யாகக் களவாடி அமுதுசெய்தருளியவனுன திருமாலினது, அடி - திருவடிநிலையாகிய, சடகோபன் - சடகோபனென்னுந் திருநாம முடையவரும், சந்தோடு அயிர் உருக்கும் பொருநல் குருகூர் எந்தை - (பரிமளத்தால்) சந்தனத்தையும் (சுவையினிமையால்)

http://acharya.org

சருக்கரையையுந் தோற்கச்செய்கின்ற பொருநையென்னுந் தாமிரபர்ணிநதி பாயப்பெற்ற திருக்குருகூரில் அவதரித்தவருமான நம்மாழ்வாருடைய, அம் தமிழ் - அழகிய தமிழ்ப்பாசுரங்கள்,— உயிர் உருக்கும் - (ஓதுகிற நம்முடைய) உயிரைப் (பக்திமிகுதியினால்) உருகச்செய்யும்; புக்கு உணர்வு உருக்கும் - உள்ளே பிரவேசித்து (அகத்துஉறுப்பான) மனத்தை (ஆனந்தாதிசயத்தால்) கரையச்செய்யும்; செயிர் உரு கொண்ட நம் உடலத்தின் உள்ள தீங்கு உருக்கும் - குற்றந்தானே புருஷவடிவங்கொண்டாற்போன்ற நமது தேகசம்பந்தத்தாலாகிய (காமம் கோபம் முதலிய) பொல்லாங்குகளைப் போக்கும்; (எ - று.)

உருக்குதல் - உருகச்செய்தல், நெகிழ்ந்துகரைவித்தல், மெலிவித்தல். தீங்கு - தீக்குணம், தீச்செயல்கள். உருக்குஞ்நெய்—'உருக்கும்' என்பது எதிர்காலப்பெயரெச்சமாதலால், இனிமேல் உருக்கப்படும் நெய் எனக்கொண்டு, வெண்ணெயெனப்பட்டது; (சீவகசிந்தாமணியில் "வெம்புஞ்சுடர்" என்பதற்கு - நச்சினார்க்கினியர் 'இளஞாயிறு' எனப் பொருள்கொண்டு,'மேல்வெம்பும் என எதிர்காலம்நோக்கிற்று' என்றமை காண்க.) இனி, உருக்குமென்பதை, காலமுணர்த்தாது தன்மையுணர்த்தியதெனக் கொண்டு, உருக்கும் நெய் - வெண்ணெயுருக்கினநெய் [அதாவது - புத்துருக்குநெய்] என்றுங்கொள்ளலாம். பெருமாள் கிருஷ்ணாவதாரத்திற் கோகுலத்திலே ஆய்ச்சியர்வைத்த பால் தயிர் வெண்ணெய் நெய் முதலியவற்றைக் களவுசெய்துஉண்டமை, பிரசித்தம். ஆழ்வார் எம்பெருமானது திருவடிகளுக்கு மிகவும் அந்தரங்கபக்தராக இருந்ததுபற்றி அப்பெருமானதுபாதுகை 'ஸ்ரீசடகோபன்' என்று இவரது திருநாமத்தை யிட்டு வழங்கப்படுதல் தோன்ற, 'உண்டானடிச்சடகோபன்' என்கு றென்க; "முகில்வண்ணனடியையடைந் தருள்சூடியுய்ந்தவன்" என்றபடி திருமாலின் திருவடிகளைச் சரணமடைந்து அடிமைபூண்ட சடகோபன் எனினுமாம். 'சந்தோடுஅயிர்உருக்கும்' என்பதற்கு - (நீர்ப்பெருக்கு மலையினின்று விசையுடன்வந்து பெருகும்போது) சந்தனமரத்தையும் நுண்மணலையுங் கரையச்செய்துவரு மென்று உரைப்பினுமாம். பொருநை யெனினும், பொருநலெனினும் ஒக்கும். (13)

14\. அந்தமிலாமறையாயிரந்தாழ்ந்தவரும்பொருளைச்
செந்தமிழாகத்திருத்திலனேனிலத்தேவர்களுந்
தந்நம்விழாவுமழுகுமென்னுந்தமிழார்கவியின்
பந்தம்விழாவொழுகுங்குருகூர்வந்தபண்ணவனே.

(இ-ள்.) ஆர் தமிழ் கவியின் - (இலக்கணம்) நிரம்பிய தமிழ்ப்பாடல்கள் (சீர்கேடின்றி ஒழுகுதல்) போல, பந்தம் விழா ஒழுகும் - ஒழுங்காக [முறைமைதவறாமல்] நித்திய நைமித்திக உத்ஸவங்கள் நடக்கப்பெற்ற, குருகூர் - திருக்குருகூரில், வந்த - அவதரித்த, பண்ணவன் - பெரியவரான ஆழ்வார், அந்தம் இலா மறை ஆயிரத்து ஆழ்ந்த அரும் பொருளை - அறிவில்லாதனவும் அநேக ஆயிரம் சாகைகளாகவுள்ளனவுமான வேதங்களின் ஆழ்ந்த அருமையான ஸாரார்த்தத்தை, செம் தமிழ் ஆக திருத்திலனேல் -

http://acharya.org

செவ்விய தமிழ்த்திவ்வியபிரபந்தங்களாகச் சீர்திருத்தி அருளிச்செய்யா திருந்தனராகில், நிலத்தேவர்களும் தம் தம் விழாவும் அழகும் என் ஆம் - அந்தணர்களும் (அவ்வந்தணர்களில்) அவரவர் கொண்டாடிச்செய்யுந் தேவாலய உத்ஸவங்களும் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயும் யாதாய்முடியும்? [சிறிதும்சிறப்புறா என்றபடி.]; (எ - று.)

பூதேவ ரெனப்படுகிற அந்தணர்கட்கு "குருகூர்ச்சடகோபன்சொற், சந்தங்களாயிரத்திவைவல்லார் முனிவரே" என்றபடி ஆழ்வாரருளிச்செயல்களை ஓதினல்மாத்திரமே சிறப்புண்டு என்பதும், கோயில்களில்நிகழும் நித்தியநைமித்திகஉத்ஸவங்களி லெல்லாம் தமிழ்வேதங்களையோதவேண்டுமென்பது ஸ்ரீபாஞ்சராத்திராதிசாஸ்திரசம்மத மென்பதும், "குருகூர்ச்சடகோபன் சொன்ன, குறிகொளாயிரத்துள் இவைபத்தும் திருக்குறுங்குடி யதன்மேல், அறியக்கற்றுவல்லார் வைட்டணவ ராழ்கடல்ஞாலத்துள்ளே" என்றபடி அருளிச்செயலோதினலே ஸ்ரீவைஷ்ணவத்வ பூர்த்தியுண்டா மென்பதும் பற்றி, இங்ஙனங்கூறினர். எம்பெருமானுடைய ஐந்துவகைநிலைகளுள் பரத்வம் வியூகம் விபவம் அந்தர்யாமித்வம்என்ற நான்குக்கும் முறையே வேதம் பாஞ்சராத்திரம் இதிகாசம் ஸ்மிருதி என்பனபோல அர்ச்சாவதாரத்துக்கு ஏற்றது திவ்வியபிரபந்தங்களே யென்பதையும் உணர்க. அஃறிணையிருபாலுக்கும் பொதுவான 'எவன்' என்ற வினாவினைக்குறிப்புப் பெயர், என் என்று விகாரப்பட்டது; ஆகவே, 'நிலத்தேவர்களும் தம்தம்விழாவும் அழகும் என்னாம்' என்ற முடிபு - உயர்திணையும் அஃறிணையும் அடுக்கி, மிகுதிபற்றி, அஃறிணைமுடிக்குஞ் சொல்லைக் கொண்ட திணைவழுவமைதியாம்: தேவர்கள் என உயர்திணைப்பொருள் ஒன்றேயாக, விழாவும் அழகும் என அஃறிணைப் பொருள் இரண்டாதல். இங்கே மிகுதி. அன்றி, 'ஆகும்' என்ற செய்யுமென்முற்றின் விகாரமான 'ஆம்' என்றது "பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற், செல்லாதாகுஞ் செய்யுமென் முற்றே" என்றபடி பலர்பாலுக்கு வாராமை காண்க.

(அந்தமிலாமறையாயிரத் தாழ்ந்த அரும்பொருளைச் செந்தமிழாகத் திருத்திலனேல்—'அல்பச்ருதர்கலக்கின ச்ருதி நன்ஞானத்துறைசேரத் தெளிவுற்று ஆழ்பொருளையறிவித்தது', மேகம் பருகினஸமுத்ராம்புபோலே நாற்கடல்சொல், இவர்வாயன வாய்த் திருந்தினவாறே ஸர்வதாஸர்வோப ஜீவ்யமாமே' என்ற ஆசார்யஹ்ருதயவாக்கியங்கள் நோக்கத்தக்கன.)

முறைகேடின்றித் திருவிழாநடத்தற்கு, தமிழ்க்கவியின் முறைகேடின்மையை உவமைகூறியதனால், இந்நூலாசிரியரது பாஷாபிமானம் விளங்கும். பண்-பெருமை; அதனையுடையவன், பண்ணவன். (14)

15. **பண்ணப்படுவனவும்முளவோமறையென்றுபல்லோ**
ரெண்ணப்படச்சொற்நிகழச்செய்நாவியலோடிசையின்
வண்ணப்படைக்குத்தனித்தலைவேந்தன்மலருருத்த
கண்ணப்படர்படப்பைக்குருகூர்வந்தசொற்கடலே.

http://acharya.org

(இ - ள்.) இயலோடு இசையின்வண்ணம் படைக்கு-இயற்றமிழ்த் துறைவகைகளும் இசைத்தமிழ்த்துறைவகைகளு மாகிய சேனைகட்கு, தனி தலை வேந்தன் - ஒப்பற்ற தலைமைபூண்ட அதிபதியும்,—மலர் உகுத்த சுண்ணம் படர்-பூக்கள்சிந்திய மகரந்தப்பொடிகள் பரவப்பெற்ற, படப்பை - மருதநிலத்துணைராகிய, குருகூர்-திருக்குருகூரில், வந்த-அவதரித்த, சொல் கடல் - சொற்கள் நிறைந்த கடலுமாகிய ஆழ்வார்,—பண்ணைப்படுவன மறையும் உளவோ என்று பல்லோர் எண்ணப்பட - (நூதனமாகச்) செய்யப்படுவனவாகிய வேதங்களும் உண்டோவென்று பலபேராலும் கருதப்படுமாறு, சொல் திகழ-சொற்கள் சிறப்புற்று விளங்க, செய்தான்-(தமிழ்த்திவ்வியப் பிரபந்தங்களை) அருளிச்செய்தனர்;

ஸம்ஸ்கிருதவேதம்போலவே தமிழ்மறையாகிய திவ்வியப்பிரபந்தங்களும் நித்தியமென்பது, ஆன்றோர்கொள்கை. திவ்வியப் பிரபந்தங்களை ஆழ்வார்கள் இயற்றியதாகச்சொல்லுதல் என்னெனின், வடமொழிவேதங்களை அன்னவடிவங்கொண்ட திருமாலினிடம் உபதேசம்பெற்ற பிரமன் தனது வாக்கினால் வெளியிட்டமாத்திரத்தைக்கொண்டு "முன்னம் திசைமுகனைத்தான் படைக்க மற்றவனும், முன்னம்படைத்தனன் நான்மறைகள்" என்று பிரமன் தானே அவற்றைப்படைத்ததாகச் சொல்லுதலும், பின்பு அவ்வடமொழி வேதங்களின் ஒவ்வொருபகுதியை ஒவ்வொருமுனிவர் ஒவ்வொரு சமயத்தில் வெளியிட்டதுகொண்டு அந்தப்பகுதியை அந்தந்தமுனிவரியற்றியதாக அவரவர்பெயரை யிட்டுவழங்குதலும் போலவே, எம்பெருமான் திருவருளால் உணர்த்த ஆழ்வார்கள் திவ்வியபிரபந்தங்களை யுணர்ந்து வெளியிட்ட மாத்திரத்தைக் கொண்டு அவர்கள் செய்ததாகச் சொல்லுதலும் உபசாரவழக்காம் என்பது, சம்பிரதாயம். ஸம்ஸ்கிருத வேதம் அபௌருஷேயமும் நித்தியமுமாய் 'செய்யாமொழி' என்று பிரசித்திபெற்றிருத்தலையும், திருவாய்மொழியில் "குருகூர்ச்சடகோபன், சொல்லப்பட்ட வாயிரம்" என்றாற்போலப் பலவிடங்களில் வருதலையும், அதுவடமொழியும் இதுதென்மொழியுமாய் நின்று சிலவேறுபாடுடையனபோலத் தோன்றினும் உய்த்துணருமிடத்துக் கருத்து வேறுபடாமையையுங் கண்டு, 'பண்ணைப்படுவனவும் உளவோ மறை' என்று பல்லோர் எண்ணுவரென்க; இதனை, "செய்யாமொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த, பொய்யாமொழிக்கும் பொருளொன்றே" என்றாற்போலக் கொள்க.

இயலோடிசையின் வண்ணப்படைக்குத் தனித்தலைவேந்தன்-முத்தமிழ்த் துறைகளை ஒழுங்குபடுத்திநடத்துபவ னென்க. வண்ணம்-விதம். சுண்ணம் - சூர்ணம் என்ற வடசொல்லின் சிதைவு. 'சுண்ணம்படர்' என்பது, சுண்ணப்படர் என்று வலித்தல் பெற்றது. நீர்நிறைந்த கடல்போலச் சொற்கள் நிரம்பிய ஆகரமென்பார், 'சொற்கடல்' என்றார், 'அருட்கடல்' என்றாற்போல: உருவகம். பண்ணைப்படுவனவும், உம் - இறந்தது தழுவிய எச்சம்; செய்யாமொழியாகிய மறையைத் தழுவுதலால். சொற்ற இகழச் செய்தானென்று பதம்பிரித்து, (பகவத்விஷயமான திவ்வியப்,

http://acharya.org

பந்தங்களை s) கூறி (விஷயாந்தரங்களை) இகழ்ப்பன்னிறு னென்று உரைப்பாருமுளர். (15)

16. கடலைக்கலக்கியமுதமரர்க்களித்தான்களித்தார்
குடலைக்கலக்குங்குளிர்சங்கினன்குறையாமறையின்
நிடலைக்கலக்கித்திருவாய்மொழியெனுந்தேனைத்தந்தா
னடலைப்பிறப்பறுத்தென்னையுமாட்கொண்டநாயகனே.

(இ - ள்.) களித்தார் குடலை கலக்கும் - செருக்கிய பகைவர்களுடைய குடலை (அச்சத்தால்) கலங்கச்செய்கின்ற, குளிர் சங்கினன் - குளிர்ந்த சங்கத்தையுடையவனான திருமால், கடலை கலக்கி - திருப்பாற்கடலைக் கலங்கச்செய்து [கடைந்து], அமுது அமரர்க்கு அளித்தான் - (அதனின்று எழுந்த) திவ்யாமிருதத்தை (யெடுத்து)த் தேவர்கட்குக் கொடுத்தருளினான்; (அதுபோல),— அடலை பிறப்பு அறுத்து என்னையும் ஆட்கொண்ட நாயகன் - துன்பத்தைச் செய்கிற பிறப்பையொழித்து என்னையும் அடிமைகொண்டருளின தலைவரான ஆழ்வார், குறையா மறையின் நிடலை கலக்கி - குறைவில்லாத வேதமாகிய (எடுத்தற்கு அரிய) மேட்டை அளவின்மையையொழித்து அளவுடையதாக்கி, திருவாய்மொழி எனும் தேனை தந்தான் - திருவாய்மொழியென்கிற திவ்யபிரபந்தமாகிய தேனை (மனிதர்கட்கு)க் கொடுத்தருளினான்; (எ - று.)

இச்செய்யுளிலுள்ள இரண்டுவாக்கியங்களில், முந்தினது உபமானமும், பிந்தினது உபமேயமுமாய் நிற்க, இடையில் உவமவுருபு இல்லாமையால் **எடுத்துக்காட்டுவமையணி.**

திருப்பாற்கடல்கடைகையில், மந்தரமலையாகியமத்தைச் சுற்றிய வாசுகியென்னும் மகாநாகமாகிய கடைகயிற்றின் வாற்புறத்தைப்பிடித்துக்கொண்ட தேவர்களும் தலைப்புறத்தைப் பிடித்துக்கொண்ட அசுரர்களும் ஆகிய இரு திறத்தாரும் அதனை வலியப்பிடித்து இழுத்துக் கடையவல்ல வலிமையில்லாதவராய் நிற்க, அதுநோக்கி எம்பெருமான் தான் ஒருதிருமேனியைத்தரித்துத் தேவர்கள்பக்கத்திலேயும் வேறொரு திருமேனியைத்தரித்து அசுரர்கள் பக்கத்திலேயும் நின்று பாம்பின் வாலையும் தலையையும் பிடித்து வலமும் இடமுமாக இழுத்துக் கடைந்தருளியபொழுது, அமிருதத்துடன் தேவலோகத்துச்செல்வங்களெல்லாம் வெளிவெழுந்தவளவிலே, அசுரர்கள் அமிருதத்தை வலியக் கவர்ந்து கொள்ளத் தொடங்க, நாராயணமூர்த்தி மோகினிப்பெண்வடிவங்கொண்டு அவ்வடிவழகினால் அசுரர்களை மயக்கி அமிருதத்தைத் தான் கைக்கொண்டு தேவர்கட்கு அதனைப்பகிர்ந்துகொடுத்தனனென்பது, புராணகதை. இவ்வரலாற்றினால், தன்னைச்சரணமடைந்தவரைத் தன் சிரமம் பாராமற் பரிபாலிக்கும் பகவானது கருணை வெளியாம்.

எம்பெருமான் தனது திருவாய்மலரில் வைத்து ஊதுந் திவ்யசங்கமாகிய ஸ்ரீபாஞ்சசன்னியம் தனது பெருமுழக்கத்தினால் பகைவரை அஞ்சி மயங்கி அழியச்செய்து வெற்றிகொள்ளுந் தன்மையதாய், அவ்வழிவுத்தொழிலோடு நிற்காமல் அடியார்கட்கு

http://acharya.org

உற்சாகத்தை விளைத்து எழுப்பவல்ல திவ்விய சக்தியையு முடைமையால், அதற்கு 'களித்தார்குடலைக்கலக்கும்,' 'குளிர்' என்ற இரண்டு அடைமொழிகள் கொடுக்கப்பட்டன. களித்தார் குடலைக் கலக்குஞ் சங்கு - "அருட்கொண்டவன்ன அரங்கர் சங்கோசையில் அண்டமெல்லாம், வெருக்கொண்டிடர்பட மோகித்து வீழ்ந்தனர் வேகமுடன், தருக்கொண்டுபோகப் பொருதே தொடருஞ் சதமகனும், செருக்கொண்ட முப்பத்து முக்கோடித்தேவருஞ் சேனையுமே," "தருணவாளிருபர் மயங்கி வீழ்தர வெண்சங்கமு முழக்கி" என்பனபோல்வன காண்க. இத்தன்மைபற்றியே, சங்கம், திருமாலின் பஞ்சாயுதங்களில் ஒன்றாயிற்று. குளிர் சங்கு—திருமால் ஞானமயமான தன் சங்கத்தினால் துருவனை முகத்திலே பரிசித்தருளின மாத்திரத்தில், அந்த இளங் குமரன் தத்துவஞானம் உதிக்கப்பெற்றவனாய்ப் பகவானைப் பலவாறு துதிசெய்யலாயினனென்பதுங் காண்க. திருமால் திருக்கைகளிலேந்தியுள்ள சங்கம் சக்கரம் முதலியன, பகைவர்கட்கு அச்சத்தையும் அழிவையும் விளைத்தலால் ஆயுதகோடியிலும், அன்போடு தரிசிக்கின்ற அடியார்கட்கு அழகியனவாய்த் தோன்றிக் காட்சிக்கு இனிமைதந்து அலங்காரமாதலால் ஆபரணகோடியிலுஞ் சேருமென்பது சாஸ்திரார்த்த மாதலால், சங்கத்துக்கு 'களித்தார்குடலைக் கலக்கும்,' 'குளிர்' என்ற மாறுபட்ட அடைமொழி இரண்டையும் கொடுத்தமை ஏற்கும். "பெரிய பெருமாளரங்கரவர்கரத்துப், படைக்குங்கமலம் அளிக்கும் மின்னாழிப் படை படைக்கும், துடைக்குங்கதை முத்திமாற்றாது நல்கும் கரி சங்கமே" என்றபடி சங்கம் முத்தியளிக்க வல்லதாதலால், அதனை, 'குளிர்சங்கு' என்றதாகவுங் கொள்ளலாம்.

குறையாமறை - அக்ஷதமானவேதம்; சொற்செறிவு பொருட்பொலிவுகளிற் குறைவில்லாத வேதம் எனினுமாம். மலைச்சிகரம் போன்ற மேட்டிடங்களில் தேன்கூடுகட்டுதல் இயல்பாதலால், மறை 'திடல்' எனப்பட்டது. அறிதற்குஅரிய வேதத்தின் அளவுபடாமையைப் போக்கி அதனை அளவுபடுத்தி அதிலுள்ள பொருட்சாரத்தைத் தமிழ்ப்பிரபந்த மூலமாக அனைவர்க்கும் எளிதிலுணரலாம்படி தந்தருளின ரென்பது, 'குறையாமறையின் திடலைக் கலக்கித் திருவாய்மொழியெனுந் தேனைத் தந்தான்' என்பதன் கருத்து; உருவகம். இனி, மேடுபட்ட [மேலெழுந்துக்காட்டுகிற] வடிவமுடைமைபற்றித் தேன் கூண்டையே 'திடல்' என்றதாக உரைப்பாருமுளர். என்னையும் - ஆட்கொள்ளப்படுதற்குஉரிய குணம் சிறிதுமில்லாத என்னையும் என்று தனது இழிவு தோன்றக் கூறியவாறு; உம் - இழிவுசிறப்பு. திடல்=திடர்; ஈற்றுப்போலி. திருவாய்மொழியை 'தேன்' என்றதும், அதனை அமிருதத்தோடு உவமித்ததும், இனிமைமிகுதிபற்றி. (16)

17. நாய்போற்பிறர்கடைதோறுநுழைந்தவரெச்சிலைச்சிப்
பேய்போற்றிரியும்பிறவியினேனைப்பிறவியெனு
நோய்போமருந்தென்னநூன்றிருவாய்மொழிநோக்குவித்துத்
தாய்போலுதவிசெய்தாய்க்கடியேன்பண்டென்சாதித்ததே.

http://acharya.org

(இ - ள்.) நாய் போல்—, பிறர் கடை தோறும் நுழைந்து - அயலாருடைய வீட்டுவாயில்தோறும் புகுந்து, அவர் எச்சில் நச்சி- அவர்கள் உண்டு கழித்த சேடத்தை விரும்பி, பேய் போல் திரியும்- பேய்போல (ஓய்வின்றிப் பலவிடத்தும் அலைந்து) திரிகிற, பிறவியினேனை - (இழிந்த) பிறப்பையுடையவனை என்னை, பிறவி எனும் நோய் போம் மருந்து என்னும் நுன் திருவாய்மொழி நோக்குவித்து - 'பிறப்பென்கிற நோய் நீங்குதற்குக் காரணமான மருந்து' என்று சொல்லப்படுகிற உமது திருவாய்மொழிப் பிரபந்தத்தை நோக்கும்படி பண்ணி, தாய்போல் உதவி செய்தாய்க்கு-பெற்றதாய் (தன் குழந்தைக்குக் கைம்மாறுகருதாது பலவாற்றாலும் உதவி புரிதல்) போல (என் பக்கல் பூரணகிருபையை வைத்து) உபகரித்தருளிய உமக்கு, அடியேன் பண்டு சாதித்தது என் - தாசனான நான் முன்புசெய்த நன்மை யாதோ? (எ - று.)

உம்பக்கல் அடியேன் செய்த நன்மையொன்றும் இன்றாதலால், நீர் என்பக்கல் நிர்ஹேதுககருணைகொண்டு என்னை ஆட்கொண்டது செய்யாமற்செய்த உதவியாகின்றது; ஆகவே, அதற்கு எதுவும் ஈடாகாது என்பதாம். நாய்போல் அலைதலின்றி ஓய்வுகொண்டு ஓரிடத்திற் சிறிதுபொழுதேனுந் தங்குதற்கு அவகாசமுறாமையோடு செய்தற்கு வேலையுமில்லாததான கடைப்பட்ட நாய்போல என்றபடி. பேய்போல் - எங்குஞ் சுகமுறாமல் அலைகிற சஞ்சமேயான பேய்போல என்க. எஞ்சியது, எச்சில்எனக் காரணக்குறி. பிறவியெனும்நோய் போம் மருந்து என்னுந் திருவாய்மொழி "ஆயிரத்துளிப்பத்தும், உயக்கொண்டு பிறப்பறுக்கும்" என்ற திருவாய்மொழியைக் காண்க. 'நோய்போம் மருந்து' என்றவிடத்து, போம் என்ற பெயரெச்சம் - காரியப்பொருளதாய், காரணப்பெயரைக் கொண்டது. நுன் - இசைச்சொல். திருவாய்மொழி-ஸ்ரீஸூக்தி. செய்தாய்- முன்னிலை யொருமைஇறந்தகாலவினையாலணையும்பெயர். துன்பந் தருதலால், பிறவி 'நோய்' எனப்பட்டது. 'பிறர்கடை தோறு நுழைந்து அவர் எச்சில் நச்சிப் பேய்போல்திரியும் பிறவியினேன்' என்றது - ஆழ்வாருடைய அடியார்களான ஸ்ரீவைஷ்ணவர்களின் எச்சிலை விரும்பி உண்டிருந்தாலும் உய்ந்திருப்பேன், அதுவுஞ் செய்திலேனே என்ற இரக்கக்குறிப்பு.

இங்கு அறிதற்கு ஏற்றதோர் ஐதிஹ்யம் வருமாறு:—'ஒரு காலத்தில் தாமிரபருணிநதியின் வடகரையில் வசித்திருந்த யோகியொருவர் வளர்த்த நாயொன்று, தென்கரையிலுள்ள ஆழ்வார் திருநகரிக்குப் பிரதிதினமும் மத்தியானவேளையிற் போய் வீதியிலிருக்கும் வைஷ்ணவர்களுடைய உச்சிஷ்டத்தைத் தின்று வயிற்றை நிரப்பிக்கொண்டுவருகிற வழக்கப்படி ஒருநாள் போய்த் திரும்பிவர நேரப்பட்டதனால், யோகியானவர் 'நாய் இன்னும்வரவில்லையே' என்று ஆற்றோரத்தில் வந்துபார்க்கும்பொழுது, அந்நாய் நட்டாற்றில் வருகையில் அகஸ்மாத்தாக வெள்ளம்வந்தமையால் நீந்திக் காலோய்ந்துபோய் நீரில் அமிழ்ந்து கிளம்பிற்று; அத்தருணத்தில் அதன்கபாலம் வெடித்து அந்த ரந்திரத்தின்வழியாய் நாயின் ஆத்மாவாகிய சோதியானது எழுந்து அமாவாசையிருளில்

http://acharya.org

அநேகம்நீவட்டிகொளுத்தினதுபோலப் பிரகாசித்ததைப் பிரதியக்ஷமாகப் பார்த்த, 'அசேதனமாகிய நாயும் பெறுதற்கு அரிய பேறு பெற்றதே: இது என்னசாதனத்தை யுடைத்தாயிருந்தது? ஒன்றுமில்லாதிருந்தும், ஆழ்வார் திருநகரியின் உச்சிஷ்டத்தை யுண்டதனாலல்லவோ இப்பாரச் சம்பவித்தது: இது, தாபிகள் யோகிகள் முதலானவர்களுக்கும் சித்திக்கமாட்டாதே!' என்று நினைத்து மனமுருகிக் கண்ணீர்விட்டு அழுது அவர் "வாய்க்குங் குருகைத் திருவீதியெச்சிலை வாரியுண்ட, நாய்க்கும் பரமபதமளித்தாய் அந்தாயொடிந்தப், பேய்க்கு மிடமளித்தாற் பழுதோ பெருமான் மகுடன், சாய்க்கும்படிக்குக் கவிசொல்லு ஞானத்தமிழ்க் கடலே" என்பது முதலாகச் சிலபாடல்களால் ஆழ்வாரை ஸ்தோத்திரித்தனர்' என்பது. (17)

18\. சாதிக்குமேபரதத்துவத்தைச்சமயத்திருக்கைச்
சேதிக்குமேயொன் றுசிந்திக்குமேயதனைத்தெரியப் [யைச்
போதிக்குமேயெங்குமோங்கிப்பொதுநிற்குமெய்யைப்பொய்
சோதிக்குமேயுங்கள்வேதமெங்கோன் றமிழ்ச்சொல்லெனவே.

(இ - ள்.) எம் கோன் தமிழ் சொல் என - எமது தலைவரான நம்மாழ்வாருடைய தமிழ்ப்பிரபந்தம்போல,—உங்கள் வேதம்—, —பரதத்துவத்தை சாதிக்குமே - (எல்லாப்பொருள்கட்கும்) மேலான உண்மைப்பொருளாகிய பரப்ரஹ்மத்தை (உண்டென்று நிலைநிறுத்தி)ச் சாதிக்கமாட்டுமோ? சமயம் திருக்கை சேதிக்குமே- பிறமதங்களின்மாறுபாட்டைக் கண்டித்தொழிக்க மாட்டுமோ? ஒன்று சிந்திக்குமே- யாதாயினுமொருவிஷயத்தை ஆய்ந்து ஓய்ந்து உணரமாட்டுமோ? அதனை தெரிய போதிக்குமே - அங்ஙனமுணர்ந்த பொருளைப் பிறர்க்கு விளங்க உணர்த்தமாட்டுமோ? எங்கும் ஓங்கி பொது நிற்கும் மெய்யை பொய்யை சோதிக்குமோ - எவ்விடத்துஞ்சிறந்து (யாவர்க்கும்) பொதுப்படநிற்கின்ற உண்மையான விஷயத்தையும் (அதற்குமாறாகிய) பொய்யான விஷயத்தையும் பகுத்து ஆராயமாட்டுமோ? [மாட்டாளென்றபடி];

"வேதர்பஹூனிதம்; இதில், ஸம்ஸ்கிருதம் திராவிடம் என்கிற பிரிவு ருகாதிபேதம்போலே. "செந்திறத்த தமிழ்" என்கையாலே, ஆகஸ்தியமும் அநாதி. 'வடமொழிமறை' என்றது, தென்மொழிமறையை நினைத்திறே" என்னும்படி, ருக் யஜுஸ் ஸாமம் அதர்வணம் என்பவை வேதத்தின் பகுப்பாதல்போல ஸம்ஸ்கிருதவேதம் திராவிடவேதம் என்பனவும் வேதத்தின் பகுப்பேயாயிருக்க, அவ்வுண்மையையுணர்ந்து இரண்டும் சமமெனக் கருதாது பக்ஷபாதத்தால் வடமொழிவேதத்தையே சிறந்தபிரமாணமென்று கொண்டாடித் தென்மொழிவேதத்தை அங்ஙனமன்றென்று மறுக்கிற சிற்றறிவாளர்களை நோக்கி, 'நீங்கள் கொண்டாடுகிற வடமொழிவேதத்திலும், நம் ஆழ்வார் அருளிய தென்மொழி வேதம், பரப்ரஹ்மஸ்வரூபத்தையும் மற்றும் பிறப்பு வினை வினைப்பயன் வீடு அதன்காரணம் முதலிய தத்துவப்பொருள்களையும் உள்ளபடி உணர்ந்து பிறர்க்குத் தெளிவாகச்சொல்லி ஸ்வமத

http://acharya.org

ஸ்தாபநம் செய்து பரமதநிரஸநம் பண்ணுவதிற் சிறந்ததாமென்று எதிர்வாதங் கூறியவாறு மென, இச்செய்யுட்குச் சங்கதி கண்டு கொள்க. (18)

19. சொல்லென்கெனோமுழுவேதச்சுருக்கென்கெனோவெவர்க்கு
நெல்லென்கெனோவுண்ணுநீரென்கெனோமறைநேர்நிறுக்குங்
கல்லென்கெனோமுதிர்ஞானக்கனியென்கெனோபுகல
வல்லென்கெனோகுருகூரெம்பிரான்சொன்னமாலையையே.

(இ - ள்.) குருகூர் எம்பிரான் சொன்ன மாலையை - திருக்குருகூரில் அவதரித்த எமதுதலைவரான நம்மாழ்வார் அருளிச்செய்த பாமாலையாகிய திவ்வியபிரபந்தத்தை,—சொல் என்கெனோ - (எல்லாவிலக்கணமுமமைந்த) சொல் என்று சொல்வேனோ? முழு வேதம் சுருக்கு என்கெனோ - வேதம் முழுவதன் சாரசங்கிரகமென்பேனோ? எவர்க்கும் நெல் என்கெனோ - எல்லார்க்கும் (ஜீவனோபாயமான) நெல்என்பேனோ? உண்ணும் நீர் என்கெனோ - (இன்றியமையாததான) பருகுதற்குரிய நீர் என்பேனோ? மறை நேர் நிறுக்கும் கல் என்கெனோ - தராசுதட்டு இரண்டனுள் ஒன்றில் வேதத்தைவைத்து அதற்குச்சமமாக மற்றொன்றில் வைத்துநிறுத்தற்குரிய எடுத்தலளவைக் கல் என்பேனோ? முதிர் ஞானம் கனி என்கெனோ - முதிர்ந்த தத்துவஞானமயமான பழமென்பேனோ? புகல வல் என்கெனோ - (மற்றும் அதன்திறத்தை உள்ளபடி எடுத்துச்) சொல்ல வல்லமை (எனக்குஉள்ளது) என்பேனோ?

'சொல்லென்கெனோ........கனியென்கெனோ' என்றது - இங்ஙனம் பலபடியாக விகற்பித்துக் கூறலாம்படியுள்ளது ஆழ்வாரருளிச்செயல் என்றவாறும்; 'புகல வல் லென்கெனோ' என்றது - அதன் தன்மையை உரியபடி சொல்லவல்லேனல்லேன் யானென்றபடி. 'சொல்லென்கெனோ' என்பதற்கு - எம்பெருமானுடைய புகழென்பேனோ என்று உரைப்பினும் அமையும்; சொல் - புகழாதலை "சொன்மாண் பமைந்த குழூ" எனச் சீவகசிந்தாமணியிலுங் காண்க. மாலை - பெருமானது திருவடிகளிற் சூட்டும் பூமாலை போன்ற பாமாலையென்க. 'சடகோபன்சொல்லமை, பாட்டோராயிரத்திப் பத்தாலடிசூட்டலாகு மந்தாமமே," "மொய்யசொல்லா லிசை மாலைகளேத்தி யுள்ளப்பெற்றேன்," "நாவியலா லிசைமாலைகளேத்தி நண்ணப்பெற்றேன்" என்றார் திருவாய்மொழியிலும். 'எவர்க்கும் நெல்லென்கெனோ' என்றதற்கு - தேகயாத்திரைக்கு நெற்போல ஆத்மயாத்திரைக்கு ஆழ்வாரருளிச்செயல் வேண்டுமென்பது கருத்து. கல் - படிக்கட்டுக்கல். 'உண்' என்பது, பொது வினையாகவும் வழங்கும். (19)

[செலவுணர்த்திச் செவிலியைத் தேற்றல்.]

20. மாலைக்குழலியும்வில்லியுமாறனைவாழ்த்தலர்போம்
பாலைக்கடம்பகலேகடந்தேநிப்பனைமருதத்
தாலைக்கரும்பினரேலென்றுமோசையையஞ்சியம்பொற்
சாலைக்கிளியுறங்காத்திருநாட்டிடஞ்சார்வர்களே.

http://acharya.org

(இ - ள்.) மாலை குழலியும் - மலர்மாலையைச்சூடிய கூந்தலையுடையவளான தலைமகளும், வில்லியும் - கையில்வில்லேந்தியுள்ளவனான தலைமகனும் (ஆகிய இருவரும்),—மாறனை வாழ்த்தலர் போம் பாலை கடம் பகலே கடந்து ஏகி - நம்மாழ்வாரை வாழ்த்தாதவர்கள் செல்லுமிடமான பாலைநிலமாகிய கொடுஞ்சுரத்தை இன்றைப் பகலிலேயே கடந்துசென்று,—பணை மருதத்து - வினைநிலஞ்சூழ்ந்த மருதநிலத்திலே, ஆலை கரும்பின் - கரும்பையாட்டுகிற ஆலையினது, நரேல் என்னும் ஓசையை - நரேல் என்று ஒலிக்கிற ஓசைக்கு, அஞ்சி - பயந்து, அம் பொன் சாலை கிளி உறங்கா - அழகிய பொன்மயமான மாளிகைவெளிகளிலமைக்கப்பட்டுள்ள கூடுகளில் வசிக்கின்ற கிளிகள் நித்திரைகொள்ளாத, திரு நாடு இடம் - சிறந்த (பாண்டிவள) நாட்டின் எல்லையில், சார்வர்கள் - சேர்வார்கள்; (எ - று.)

குழலியும் வில்லியும் கடந்தேகிச் சார்வர்களென்க.

இயற்கைப்புணர்ச்சி, பாங்கற்கூட்டம், பாங்கியிற்கூட்டம் என்பவற்றாற் களவுநெறியில் தலைமகளோடுகலந்த தலைமகன் அங்குப்பழிபரவுதலின் தோழியால் உணர்த்தப்பட்டுத் தலைமகளை உடன்கொண்டு தன்னூர்க்குச் சென்றனனாக, அங்ஙனம் தலைவன் தலைவியை இடைச்சுரநெறியாக உடன்கொண்டு போனமையைத் தோழியாலறிந்த செவிலித்தாய் அச்செய்தியைப் பெற்ற தாய்க்கு உணர்த்தி அவளிடம் அநுமதிபெற்றுத் தலைமகளைத் தேடிச்செல்லுங்காட்டுநெறியிலே, எதிர்வருபவர்களைநோக்கி 'ஓர் இளம்பெண் ஓர் இளமகனுடனே நும்எதிரேவரக் கண்டதுண்டோ?' என்று வினவ, அவ்வினவப்பட்டவர் 'நீ கூறுகின்றவர்களைக் கண்டோம்; அத்தலைவியும் தலைவனும் ஓர் இடுக்கணின்றி இன்னபொழுதில் ஊர்சேர்ந்திருப்பர்' என்றுசொல்லிச் செவிலியைத் தேற்றுதல், இச்செய்யுளிற் குறிக்கப்பட்ட விஷயம். இந்த அகப்பொருட்டுறைச்செய்யுளின் மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - செவிலியை எதிர்வருவார் ஆற்றி மீளச்செய்தல்.

இயற்கையழகுடன் செயற்கையழகையுமுடையவளாதலால், 'மாலைக் குழலி' எனப்பட்டாள். இங்ஙனம் கூந்தலழகுகொண்டு தலைவனை வசீகரித்தவளென்க. கூந்தலிற்சூடியமலர் தானும் வாடியதில்லையென்பது தோன்ற 'மாலைக்குழலி' என்றதனால் அம் மடமங்கை வழிச்செலவினாற் சிறிதும்வருத்த முற்றில ளென்று குறிப்பாக உணர்த்திச் செவிலியை ஆற்றியவாறுமாம். 'வில்லி' என்றது - தலைவன் வில்வீரனாதலாற் கையிலேந்திய வில்லைக்கொண்டு அம்புஎய்து இக்கானகத்திலெதிர்ப்பட்ட கொடுவிலங்குகளை அழித்து இடையூறின்றிச் செல்கின்றன னென்ற குறிப்பு. மாறனைவாழ்த்தாதவர்கள் நாடு முதலிய நல்இடங்களை நீங்கிப் பாலைவனம்புகுவரெனவே, ஆழ்வாரின் அருமையைப் பாராட்டி அவர்பக்கல் அன்புபூணுதவர்கள் மறுமைப்பயனேயன்றி இம்மைப்பயனையும் இழப்பரென்பது போதரும். 'கடந்துஏகி' என்றது - கடத்தற்கு அரியதனை எளிதிற்கடந்தன ரென்றவாறு. பணைமருதம்என்பதுமுதலாக, தலைவியுந் தலைவனுஞ்சென்றுசேரும்

http://acharya.org

நாட்டின்வளத்தை விளக்கி, அப்பதி வழிநடைவருத்தத்தை இனிதுதணிக்குந்தன்மையதென்று உணர்த்திச் செவிலியை ஆற்றியவாறும். பணை - வயல். மருதம் - நாடும், நாடுசார்ந்த இடமும். ஆலையிற் கரும்பாட்டும்போது உண்டாகிற ஈரோசையென்னும் ஓசையைப் புனையின்குரலென்று எண்ணி அஞ்சிக் கிளிகள் உறங்காவென்க; இங்கு மயக்கவணி தொனிக்கும்.

கரேல் எனல்-ஒலிக்குறிப்பு. மாறனைவாழ்த்தும் விதம் - "மேதினியில் வைகாசிவிசாகத்தோன் வாழியே வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்தான் வாழியே, ஆதிகுரு வாய்ப்புவியிலவதரித்தான்வாழியே அனவரதஞ் சேனையர்கோனடிதொழுவோன் வாழியே, நாதனுக்கு நாலாயிரமளித்தான்வாழியே நம்மதுரகவி வணங்குமநாவிறன் வாழியே, மாதவன் பொற்பாதுகையாய்வளர்ந்தருள்வோன் வாழியே மகிழ்மாறன் சடகோபன் வையகத்தில் வாழியே" எனக் காண்க.

எம்பெருமானுடைய திருவடித்தாமரைமலர்களை முடிமேற்கொண்டு வணங்கி அந்தப் பிரணாமத்தின் அமைதியால் அப்பெருமானைத் தம்வசப்படுத்தியவரும், தம்மைப்போன்ற அடியார்கட்கு நேரும் இடையூறுகளைத் தீர்த்து அவர்களைப்பாதுகாத்தற்கென்றே கையில்வில்லேந்தியுள்ள எம்பெருமானை ஏகாந்தத்திலே தரிசித்து அப்பெருமானைப்பிரிந்து உயிர்வாழமாட்டாதவராய் அவனைவிடாது தொடர்ந்தவருமான ஆழ்வார், இடையூறான கொடிய ஸம்ஸாரத்தைத் தத்வஜ்ஞாநதசையிலேயே கடந்து, நிரதிசயவின்பந்தருவதான அப்பரமனுடைய ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்வர் என்று, அவருடைய ஒழுக்கத்தைக் கண்ட உலகத்தார் அவர் பக்கற் பரிவையுடைய ஞானிகட்குக் கூறுதல், இதற்கு உள்ளுறை பொருளாம். 'திருநாடு' என்பது - பரமபதத்திற்கு ஒரு பெயராதலை யுணர்க. அங்குத் திருமாமணிமண்டபத்திலே அறிவும் ஞானஸங்கோசமு மிலராய் வாழ்கிற இனியனவே பேச மியல்புடையரான நித்தியமுக்தர்கள் ஸர்வாந்தராத்மாவான ஸ்ரீமந்நாராயணனிடத்துப்பொங்கும்பரிவினாலே பெரியாழ்வார்போலஅஞ்சவேண்டாததற்கு அஞ்சி உன்னுறப் பல்லாண்டுபாடுதலும் உணரத்தக்கது. ஸம்ஸாரமருகாந்தாரம் பாகவத பக்திபூர்ணதவர் நிரதற்கு உரிய இடமாதலால், 'மாறனை வாழ்த்தலர் போம் பாலைக்கடம்' எனப்பட்டதென்க. மற்றும் ஸ்வாபதேசார்த்தத்தின்விவரம் சம்பிரதாயம் வல்லார்வாய்க் கேட்டு உணரத்தக்கது. (20)

[பாங்கி நெறியருமைகூறித் தலைமகனை வரவுவிலக்கல்.]

21\. சாரற்குறிஞ்சிதழுவும்பொழிற்றளிர்மெல்லடித்தன்
மூரற்குறிஞ்சிநகைமுகநோக்கற்குநீமுடுகுஞ்
சூரற்குறிஞ்சிநெறிநினைதோறுந்துணுக்கெனுமால்
வாரற்குருகைப்பிரான்றிருவாணைமலையவனே.

(இ - ள்.) மலையவனே - மலைக்குஉரியவனே! சாரல் குறிஞ்சி தழுவும் பொழில - மலைச்சார்பாகிய குறிஞ்சிநிலத்தைச் சார்ந்த

http://acharya.org

சோலையிலே, தளிர் மெல் அடி தன் மூரல் குறிஞ்சி நகை முகம் நோக்கற்கு - தளிர்போன்ற மென்மையான பாதங்களையும் குளிர்ச்சியான [கண்ணுக்குஇனிய] பற்களையும் குறிஞ்சியென்னும் பண்போலினிய சொற்களையும் புன்சிரிப்பையு முடையவளான தலைவியினது முகத்தைப் பார்த்தற்பொருட்டு, நீ முடுகும் - நீ விரைந்து வருவதாகிய, சூரல் குறிஞ்சி நெறி - பிரப்பங்காடுமிக்க மலைவழியை, நினைதோறும் - (நாங்கள்) நினைக்கிறபோதெல்லாம், துணுக்கெனும் - (எங்கள்மனம்) திடுக்கிட்டு அஞ்சுவதாயிருக்கும்; ஆல் - ஆதலால், குருகைபிரான் திரு ஆணை வாரல் - திருக்குருகைக்குத் தலைவரான நம்மாழ்வார்மேலாணை இனி நீ இங்ஙனம் வர வேண்டா; (எ - று.)

இயற்கைப்புணர்ச்சிப்பெற்ற தலைமகன், பின்பு, தலைமகளினது தோழியினுதவியைக்கொண்டு தலைமகளைப் பகலிலும் இரவிலும் களவுநெறியில் ஏகாந்தத்திலே சந்தித்தல், இயல்பு; அது, பகற்குறி இரவுக்குறி எனப்படும். தலைமகனது வேண்டுகோளின்படி ஒருநாளிரவிற் குறிப்பிட்டதொருசோலையிடத்தே அத்தலைமகளையுந் தலைமகனையுஞ் சந்திக்கச்செய்த தோழி, பின்பும், அக்களவொழுக்கத்தையே வேண்டிய தலைமகனுக்கு, அவன்வரும் நெறியினது அருமையையும் அதுகருதித் தாங்கள் அஞ்சுதலையுங் கூறி, 'இனி அங்ஙனம் வரற்பாலையல்லை' என்று விலக்குதல், இச்செய்யுளிற் குறித்த அகப்பொருள் துறை; இது, 'ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி' எனப்படும். (ஆறு - வழி.) 'தலைவன்வரும் வழி, மிகவும்இன்னாது, நீருடையது, கல்லுடையது, ஏற்றிழிவுடையது, கள்ளர் புலி கரடி யானை பாம்பு முதலிய கொடியபிராணிகளையுடையது' என்று கவலுங் கவற்சியாற் சொல்லுவதென்க. இதில், மெய்ப்பாடு - அச்சம். இதன்பயன் - வெளிப்படையாகவந்து மணஞ்செய்துகொள்ளுதலை வற்புறுத்துதல். முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்ற ஐவகை நிலங்களுள் மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சியா மென்பதும், "போக்கெல்லாம்பாலை புணர்தல்நறுங்குறிஞ்சி, ஆக்கஞ்சேரூடலணிமருதம் - நோக்குங்கால், இல்லிருக்கைமுல்லை இரங்கல்நறுநெய்தல்,சொல்லிருக்குமைம்பாற்றுறைக்கு" என்றபடி புணர்ச்சிக்கு உரிய இடம்குறிஞ்சியென்பதும் அறியத்தக்கன. தலைமகன், குறிஞ்சிநிலத்திற்குஉரிய மக்கள் கோலத்தனாய் வந்துள்ளானாதலால், 'மலையவனே' என்று விளிக்கப்பட்டான். மலையவனென்பது - குறிஞ்சிநிலத்தலைவன்பெயர்.

சாரல் - மலையைச்சார்ந்தது, மலைப்பக்கம்; தொழிலாகுபெயர். 'தளிர் மெல்லடித் தன்மூரற் குறிஞ்சிநகை' என்பது - உம்மைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாய், தலைவியையுணர்த்தும். இரண்டாம் அடியில், 'குறிஞ்சி' என்ற பண்ணின் பெயர் - அதுபோலினிய மொழிக்கு உவமையாகுபெயராம். துணுக்கெனல் - அச்சக்குறிப்பு. 'துணுக்கெனும்' என்பதற்கு 'தலைமகள்' என்ற தோன்றுஎழுவாய் வருவித்துஉரைப்பினுமாம். ஆல் - ஆதலால் என்பதன் விகாரம். வாராமையை வற்புறுத்தி

http://acharya.org

'வரைந்துசெல்க' என்பதை யுணர்த்திவாள், 'குருகைப்பிரான்திருவாணை வாரல்' என ஆணையிட்டு மறுத்தாள்.

தமோகுணப்ரசுரமாய் அநேகவித தேகவியாதி மநோவியாதிகளாகிறகொடுவிலங்குமுதலியவற்றையுடையதான ஸம்ஸாரமார்க்கத்திலேயிருந்து நேர்பட்ட இடத்தில் ஆழ்வார்பக்கல் பக்திசெய்தொழுகுகிறபாகவதர்களை நோக்கி 'அன்பர்காள் இனி இக்களவொழுக்கத்தைவிட்டுப் பிரபத்திமார்க்கத்தில் நின்று ஆழ்வார்பக்கல் இடையீடின்றி அநவரதபாவனை செய்தல் வேண்டும்' என்று வற்புறுத்துதல், இதற்கு உள்ளுறைபொருளாம்: விவரம் கேட்டுணர்க. உள்ளுறைபொருளிலே ஆழ்வாரைத் தலைமகளாகக் கொள்ளும்போது சிலவிடத்தில் எம்பெருமானைத் தலைமகனாகவும், சிலவிடத்தில் பாகவதரைத் தலைமகனாகவும், கம்பர் தம்மைத் தலைமகளாகக் கொள்ளும்போது ஆழ்வாரைத் தலைமகனாகவும் இடத்துக்கேற்பக் கொள்க. எம்பெருமான்பக்கலிற்போல "மாயப்பிரானடியார்கள் குழாங்களை - உடன்கூடுவதென்றுகொலோ?" என்று அவனது சம்பந்தம்பெற்ற அடியார்களிடத்தும் ஆழ்வார் மிக்க பக்தி கொண்டு அவர்களையும் தமக்குத் தலைவராகக்கொள்ளுந் தகுதியுடையராதல், ஸ்ரீவைஷ்ணவர்களைக் கிளவித்தலைமகனாகக் கொண்டதற்குக் காரணம்; "உற்றதும் உன்னடியார்க்கடிமை" என்றதுங் காண்க. (21)

22. **மலையாரமுங்கடலாரமும்பன்மாமணிகுயின்ற**
விலையாரமும்விரவுந்திருநாடனைவேலைசுட்ட
சிலையாரமுதினடிச்சடகோபனைச்சென்றிறைஞ்சுந்
தலையாரெவரவரேயெம்மையாளுந்தபோதனரே.

(இ - ள்.) மலை ஆரமும் - பொதியமலையி லுண்டாகிற சந்தனமும், கடல் ஆரமும் - கடலில்தோன்றுகிற முத்துக்களும், பல் மா மணி குயின்ற விலை ஆரமும் - பலவகைப்பட்ட சிறந்த இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற விலை மிக்க ஹாரங்களும், விரவும் - பொருந்திய, திருநாடனை - சிறந்த பாண்டியவளநாட்டிலே அவதரித்தவரும், வேலை சுட்ட சிலை ஆர் அமுதின் அடி சடகோபனை - சமுத்திரத்தை (ஆக்நேயாஸ்திரத்தால்) வேகச்செய்த (கோதண்டமென்னும்) வில்லையேந்திய அருமையான அமிருதம்போன்ற எம்பெருமானது திருவடிநிலையெனப்படுபவருமாகிய ஆழ்வாரை, சென்று இறைஞ்சும் - (திருக்குருகூரிற்) போய் வணங்குகின்ற, தலையார் - தலையையுடையவர், எவர் - எவரோ, அவரே - அவர்தாம், எம்மை ஆளும் தபோதனர் - எம்மை அடிமைகொள்ளுந் தவச்செல்வராவர்; (எ - று.)—ஈற்று ஏகாரம்-தேற்றம்: ஈற்றசையுமாம்.

'சடகோபனைச் சென்றிறைஞ்சுந்தலையாரெவரவரே' என்றது, ஸ்ரீமதுரகவியாழ்வார்முதலான ஸத்புருஷர்களை. 'அவரே எம்மையாளுந்தபோதனர்' என்று, ஆழ்வாரது அடியார்பக்கல் தமக்குள்ள அடிமைப்பக்தியை வெளியிட்டவாறும். 'அமுதினடிச்சடகோபன்' என்பதை, கீழ் 13 - ஆஞ்செய்யுளில் "உண்டானடிச்சட

http://acharya.org

கோபன்" என்றாற்போலக் கொள்க. 'மலையாரமுங் கடலாரமும் பன்மாமணிகுயின்றவிலையாரமும்விரவும்' என்றஅடைமொழி, திருவழுதிவளநாட்டின் வளங்களை யுணர்த்தும். ஆரம்-ஹாரம் என்ற வடசொல்லின் விகாரம்: "சந்தனம் மாலை பூண் ஆத்தி முத்தென, வந்தன வைந்தும் ஆரமாகும்" என்ற திவாகரத்தால், ஆரமென்பதன் பொருளை யுணர்க; "அரைக்கு மாரமு மாரமு மாரமு மணிந்து" என்றார் வில்லிபுத்தூரராரும். "சந்தனப்பொதியத்தடவரை" என்றபடி, சந்தனமரங்களை மிகுதியாகவுடைமையாற் சந்தநாசல மெனப்படுகிற மலயபர்வதம் பாண்டியநாட்டிலுள்ளதனால், மலையாரம் அந்நாட்டுக்குச் சிறந்த உரிப்பொருளாயிற்று. "பூழியர்கோன் தென்னாடு முத்துடைத்து" என்றபடி பாண்டியநாட்டைச் சார்ந்த கடலில் முத்துக்கள் மிகுதியாக உண்டாவது பிரசித்தமாதலால், கடலாரமும் அந்நாட்டுக்கு ஏற்றதாதல் காண்க. 'பன்மாமணிகுயின்ற விலையாரம்'-செல்வவளத்தால் அந்நாட்டுக்குடிகளிடம் அமைவன; ஆரம்-மார்பிலணிவடம்.

வேலைகட்டது, ஸ்ரீராமாவதாரத்தில்; அவ்வரலாறு:— இராவணனாற் கவரப்பட்ட சீதாபிராட்டி இலங்கையிலிருக்கிற செய்தியை அநுமான் சென்று அறிந்துவந்து சொன்னபின்பு இராமபிரான் வாநரசேனையுடனே புறப்பட்டுச் சென்று கடற்கரையையடைந்து, கடல்கடக்க உபாயஞ்சொல்ல வேண்டுமென்று அக்கடலரசனாகிய வருணனைப் பிரார்த்தித்து அங்குத் தருப்பசயனத்திலே படுத்துச் சிலநாளளவும் பிராயோபவேசமாகக்கிடக்க, சமுத்திரராசன் அப்பெருமானது மகிமையை யறியாமல் உபேக்ஷையாயிருக்க, ஸ்ரீராமன் அதுகண்டு கோபங்கொண்டு, அனைவரும் நடந்துசெல்லும்படி கடலை வற்றச்செய்வேனென்று ஆக்நேயாஸ்திரத்தைத் தொடுக்கத்தொடங்கியவளவிலே, அதன் உக்கிரத்தால் தபிக்கப்பட்டு வருணன் அஞ்சி நடுங்கி ஓடிவந்து அப்பெருமானைச் சரணமடைந்து, கடல்வடிவமான தன்மேல் அணைகட்டுதற்கு உடன்பட்டு ஒடுங்கியிருக்க, பின்பு இராமமூர்த்தி வாநரங்களைக்கொண்டு மலைகளாற் சேதுபந்தனஞ் செய்தனன் என்பதாம்.

"கற்றார்பரவு மிராமாநுசனைக் கருதுமுள்ளம், பெற்றாரெவரவரெம்மை நின்றாளும் பெரியவரே" என்ற இராமாநுசநூற்றந்தாதியின் வாய்பாடும் இச்செய்யுளின் வாய்பாடும் ஒருநிகராதல் காண்க. (22)

23. போந்தேறுகவென்றிமையோர்புகலினும்பூந்தொழுவின்
வேந்தேறடர்த்தவன்வீடேபெறினுமெழிற்குருகூர்
நாந்தேறியவறிவன்றிருவாய்மொழிநாளுநல்குந்
தீந்தேறலுண்டுழலுஞ்சிந்தியேயவந்துசித்திக்குமே.

(இ - ள்.) போந்து ஏறுக என்று இமையோர் புகலினும் - 'மேலேயுள்ளதான எங்களுலகத்துக்கு வருவாயாக' என்று இந்திராதிதேவர்கள் வேண்டும்படி (சுவர்க்கம்முதலிய மேம்பட்ட பதவி) கிடைப்பதானாலும்,—பூ தொழுவின் வேந்து ஏறு அடர்த்தவன் வீடே பெறினும் - அழகியதொழுவத்திலே தலைமைபெற்ற

http://acharya.org

எருதுகளை வலியடக்கித் தழுவியவனை திருமாலினது ஸ்ரீவைகுண்டத்தையே பெறுவதாலும்,—எழில் குருகூர் நாம் தேறிய அறிவன் திருவாய்மொழி நாளும் நல்கும் தீம் தேறல் உண்டு உழலும் சித்தியே வந்து சித்திக்கும் - அழகிய திருக்குருகூரில் அவதரித்தவரும் நாமெல்லாம் தேர்ந்து குருவாகக்கொள்ளத்தக்க ஞானியுமான நம்மாழ்வாருடைய திருவாய்மொழிப்பிரபந்தம் தன்னை அநுஸந்திக்கும் பொழுதெல்லாந் தருகிற இனிமையான சொற்பொருளின்பத்தேனை யுட்கொண்டு களித்துத்திரியும் பேறே (எனக்கு) வந்து கைகூடுவதாக: (எ - று.)

இந்திரன் முதலிய இறையவர்பதங்களி லநுபவிக்கப்படுகிற போகங்களிலும் தாமரைக்கண்ணனுலகில் நுகரப்படுகிற நிரதிசயவின்பத்திலும் திருவாய்மொழி யநுஸந்தாநத்தாலாகும் ஆநந்தரஸம் மேம்பட்ட தென்பதையும், அதில் தமக்குள்ள ஆதராதிசயத்தையும் கூறியவாறும்; "தேவுமற்றறியேன் குருகூர்நம்பி, பாவினின்னிசை பாடித்திரிவனே" என்றார் ஸ்ரீமதுரகவிகளும். போந்தேறுக வென்று இமையோர் புகலுதல் - "மாதவன்தமரென்று வாசலில் வானவர், போதுமி னெமதிடம் புகுதுக வென்றலும்" எனக் காண்க. நாங்கள்கொண்டுவந்த விமானத்திலேறி எங்கள் மேலுலகத்திற்குவந்து அங்குச் சிங்காஸநத்திலேறி வீற்றிருக்க வென்று தேவர்கள் கூறினாரென விரித்துரைக்கலாம். தொழு - பசுக்கொட்டில். வெந்து ஏறு - செருக்குக்கொண்ட ஏறு; ராஜஸகுணம்மிக்க ஏறு என்க. ஏறு - பசுவின் ஆண்மைப் பெயர்.

ஏறடர்த்தது, கிருஷ்ணாவதாரத்தில்; அவ்விவரம்:—கண்ணன், நப்பின்னையென்பவளைத் திருமணஞ்செய்துகொள்வதற்கு அவள் தந்தை கன்னியாசுல்கமாகக் குறித்தபடி, யாவர்க்கும் அடங்காத அசுராவிஷ்டமான ஏழு எருதுகளையும் ஏழுதிருவுருக்கொண்டு சென்று வலியடக்கித் தழுவின னென்பதாம்.

அறிவன் - சாஸ்திராப்பியாசத்தாலும் யோகாப்பியாசத்தாலு முண்டாகிற உணர்வுகளினும் பலமடங்கு மேம்பட்ட எம்பிரானருளா லுண்டான மெய்யுணர்வை யுடையவர்; மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர். நாளும் - எந்நாளும். தேறல் - தேன்; தெளிந்தது. (23)

24. **சித்தர்க்கும்வேதச்சிரந்தெரிந்தோர்கட்குஞ்செய்தவர்க்குஞ்**
சுத்தர்க்குமற்றைத்துறைதுறந்தோர்கட்குந்தொண்டுசெய்யும்
பத்தர்க்குஞானப்பகவர்க்குமேயன்றிப்பண்டுசென்ற
முத்தர்க்குமின்னமுதஞ்சடகோபன்மொழித்தொகையே.

(இ - ள்.) சடகோபன் மொழித் தொகை - நம்மாழ்வாரருளிச்செய்த திருவாய்மொழிப் பாசுரங்களின் தொகுதியானது,—சித்தர்க்கும் - (அணிமாமகிமாமுதலிய) யோகசித்திகளைப் பெற்றவர்கட்கும், வேதம் சிரம் தெரிந்தோர்கட்கும் - வேதத்தின் தேர்ந்த பொருண்முடிவாகிய [வேதாந்தமெனப்படும்] உபநிஷத்துக்களை

http://acharya.org

யுணர்ந்தவர்கட்கும், செய் தவர்க்கும் - தவஞ்செய்கிறவர்கட்கும், சுத்தர்க்கும் - (மனம் மொழி மெய் என்னும் திரிகரணங்களின்) தூய்மையுடையவர்கட்கும், மற்றை துறை துறந்தோர்கட்கும் - மற்றொரு மார்க்கமாகிய இல்லறத்திலிருந்து துறவறம்புக்கவர்களான சந்நியாசிகட்கும், தொண்டு செய்யும் பத்தர்க்கும் - (பகவானுக்கும் பாகவதர்க்கும்) அடிமைத்தொழில் செய்கின்ற பக்தியையுடையவர்கட்கும், ஞானம் பகவர்க்குமே அன்றி - தத்துவ ஞானத்தையுடைய பெரியோர்கட்குமேயல்லாமல், பண்டு சென்ற முத்தர்க்கும் - முன்னமே பிறவித்துன்பங்களைக்கடந்து சென்றவர்களான முத்திபெற்றவர்கட்கும், இன் அமுதம் - இனிய அமிருதம் போல இன்சுவை விளைப்பதாம்; (எ - று.)

வேதச்சிரம்-வேதமுடி. செய்தவர் - செய்கிற தவத்தை யுடையவர்: வினைத்தொகை. சுத்தர் - பரிசுத்தாத்மாக்கள். பத்தர்-பக்திநிஷ்டர். ஞானப்பகவர் - ஞானிகள், ஞாநசாரியர். முத்தர்-ஜீவந்முக்தருமாம். இன்னமுதம் - திருப்பாற்கடலினின்று தோன்றியது அமுதம், ஆழ்வார் திருவாய் மலரினின்று தோன்றியது இன்னமுதம் என்க. சித்தர்முதல் முத்தரீறாகச் சொல்லப்பட்ட பலவகை அதிகாரிகளும் கொண்டாடி ஆனந்திக்கதற்கு ஏற்ற சிறப்பு அடங்கப்பெற்றுள்ளது - ஆழ்வாரருளிச்செயல் என்பதாம்.

நிறைந்தமகிமை தைரியம் கீர்த்தி சம்பத்து ஞாநம் வைராக்கியம் என்ற ஆறுக்கும், 'பகம்' என்று பெயர். அதனை யுடையவன், பகவாந்; இவ்வடசொல், தமிழில் 'பகவன்' என்று விகாரப்பட்டு வழங்கும்: பகவர் என்பது, அதன் பன்மையாய் நின்றது. (24)

25\. தொகையுளவாயபனுவற்கெல்லாந்துறைதோறுந்தொட்டாற்
பகையுளவாமற்றும்பற்றுளவாம்பழநான்மறையின்
வகையுளவாகியவாறுளவாம்வந்தவந்திடத்தே
மிகையுளவாங்குருகூரெம்பிரான்றன்விழுத்தமிழ்க்கே.

(இ - ள்.) தொகை உள ஆய பனுவற்கு எல்லாம் - தொகுதியாகவுள்ளனவான மற்றைச் சமயநூல்கட்கெல்லாம், துறை தோறும் தொட்டால் - இடந்தோறும் ஊன்றிநோக்கினால் [அவற்றிலுள்ள பொருள்களிலெல்லாம் ஆராய்ச்சிசெய்தால் என்றபடி], பகை உள ஆம் - ஒருநூலிலேயே முன்னுக்குப்பின் மாறுகொளக்கூறலாகிய விரோதமும் வேதாங்கமான சாஸ்திரங்களோடு தாம் மாறுபடுதலாகிய விரோதமும் உள்ளனவாம்; மற்றும்-இதுவன்றியும், பற்று உள ஆம் பழ நால்மறையின் வகை உள ஆகிய வாறு உள ஆம் - தொடர்ச்சியுள்ளனவாகிய பழமையான நான்குவேதங்களின் வகுப்புக்களிற்கூறிய பொருளோடு (மாறுபடுதலால்) உள்ளனவாகுஞ் சொற்போர்களும் (அச்சமயநூல்கட்கெல்லாம்) உண்டாகும்; குருகூர் எம்பிரான்தன் விழுத் தமிழ்க்கே - திருக்குருகூரிலவதரித்த எமதுதலைவரான நம்ஆழ்வாருடைய சிறந்த தமிழ்த்திவ்வியபிரபந்தங்களிலோவெனில், வந்த வந்த இடத்தே மிகை உள ஆம் - (மாறுபடக்கூறலும் நித்தியமான

http://acharya.org

பொருளோடு எதிர்வாதமும் இல்லாமல்) பார்த்தபார்த்த இடமெல்லாம் விசேஷார்த்தங்களே அமைந்துள்ளனவாம்; (எ - று.)

ஆழ்வாரருளிச்செயல்களானவை, மாறுகோளக்கூறல் முதலிய நூற்குற்றங்களின்றிச் சகலவேதசாஸ்திரங்களுக்குஞ் சம்மதமாய்ச் சிறந்த வேதாந்தப்பொருளையே அறிவுடையாரனைவரும் அங்கீகரிக்குமாறு இடந்தோறும் உணர்த்துதலால், எல்லாச்சமய நூல்களினுஞ் சிறந்தன வென்பதாம்; பற்று சித்தியாதலால் அநாதிகாலமாக இடையீடின்றிக் குருசிஷ்யகிரமத்திலே ஓதியுணரப்பட்டுவருந் தன்மை. இனி, பற்றுடைனவாம் என்பதற்கு - தத்துவப்பொருள்களையுணர்த்துதலில் மிக்கஅபேக்ஷையை யுடையனவான என்றும்பொருள்கொள்ளலாம். (௨௫)

26. விழுப்பாரினியெம்மையார்பிறவித்துயர்மெய்யுறவந்
தழுப்பாதொழிமினருவினைகாளும்மையப்புறத்தே
யிழுப்பானொருவன்வந்தின்றுநின்றனனிளநாகுசங்கங்
கொழுப்பாய்மருதஞ்சுலாங்குருகூரெங்குலக்கொழுந்தே.

(இ - ள்.) அரு வினைகாள்-(போக்குதற்கு) அரிய கருமங்களே! இளநாகு சங்கம் கொழுப்பு ஆய் மருதம் சுலாம் - இளமையான பெண்சங்குகளுடனே ஆண்சங்குகள் மதர்ப்புக்கொண்டு மருதநிலத்திலே எங்கும் திரியப்பெற்ற, குருகூர் - திருக்குருகூரில் அவதரித்த, எம் குலம் கொழுந்து - எங்கள் குலமான வைஷ்ணவ குலத்துக்கெல்லாங் கொழுந்துபோன்றவரான நம்மாழ்வார், உம்மை அப்புறத்தே இழுப்பான் ஒருவன் வந்து-உங்களை இழுத்து அப்புறத்திலே எறியவல்ல ஒருவராய் எழுந்தருளி, இன்று நின்றுன் - இப்பொழுது (எமது உள்ளத்தில்) நின்றருளினர்; இனி எம்மை பிறவி துயர் விழுப்பார் ஆர்-இனிமேல் எம்மைப் பிறப்புத் துன்பத்தில் வீழ்த்தவல்லவர் யாவர்? [எவருமில்லை யென்றபடி]; (ஆகவே), மெய் உற வந்து அழுப்பாது ஒழிமின் - (எமது) உடம்பிலே பொருந்தவந்து வருத்தாமல் நீங்குங்கள்; (எ - று.)

'மெய்யுற' என்பதற்கு - மெய்யாக என்று பொருள்கொண்டு, அழுப்பாதொழிமின் என்பதனோடு இயைப்பினுமாம். உம்மை அப்புறத்தே இழுப்பான்-உங்களை வைஷ்ணவ கோஷ்டியினின்றும் அப்பாலே போகவிடுவதாக ஆட்டைப்பற்றிப் புலி இழுப்பதுபோல இழுத்தெறிய வல்லவரென்க. ஒருவன் - ஒப்பற்ற மகாபுருஷரென்றபடி. நாகு - பெண்மைப்பெயர்; இது சங்கிற்கு உரியதாதலை, "நீர்வாழ்சாதியுள் நந்து நாகே" என்ற தொல்காப்பியங் கொண்டும் உணர்க. நாடும், நாடுசார்ந்த இடமும் - மருதநிலம். கொழு பாய் மருதம் என்று பிரித்து,கலப்பைக்காறு உழுது பாயப்பெற்ற வயல்களிலே யென்று பொருள்கொள்ளினுமாம். சுலாவுதல் - சுற்றிவருதல்.

ஒருமரத்தின் அபிவிருத்திக்கு அதன்கொழுந்து காரணமாதல்போல, தொண்டக்குலத்தின் பெருக்குக்குக் காரணமானவர் நம்மாழ்வார் என்பது, 'எம்குலக்கொழுந்து' என்பதன் கருத்து;

http://acharya.org

'பிரபந்தஜநகூடஸ்தர்' என்று ஆழ்வாரை வழங்குதல் பிரசித்தம்: இங்கே 'கொழுந்து' என்றது, உவமவாகுபெயர்: இராமாநுசநூற்றந்தாதியில் "எங்குலக்கொழுந்து" என்றதன் வியாக்கியானத்தில், 'எம்குலம் - ஸ்ரீவைஷ்ணவகுலம்; அதுக்குக் கொழுந்து என்றது - வ்ருக்ஷமாய்ப் பணைக்கைக்கும் கொடியாய்ப் படர்ந்து பணைக்கைக்கும் மூலம் கொழுந்தாகையாலே, எங்கள்குலத்துக்கெல்லாம் மூலமானவரென்றபடி. கொழுந்து - தலை. அன்றிக்கே, 'எம்குலக் கொழுந்து' என்றது - எங்கள் குலமடங்கலும் ஒருவேராய் அதுக்கு எம்பெருமானார்தாம் கொழுந்தாய்க்கொண்டு, வேருக்கு வெக்கை தட்டினால் கொழுந்து முற்பட வாடுமாபோலே எங்கள் குலத்துக்கு ஒருகுறை வந்தால் முற்படத் தம்முடைய முகம் வாடியிருக்குமவரென்னவுமாம்' என்றது, இங்கும் கொள்ளத்தக்கது.

"பெற்றங்கள்மேய்க்கும் பிரானார் பேணுந் திருக்கோயில் கண்டீர், அற்ற முரைக்கின்றேன் இன்னம் ஆழ்வினைகா ளுமக்கிங் கோர், பற்றில்லைகண்டீர் நடமின்," "திருமாலையல்லது தெய்வமென்றேத்தேன், வருமாறென் நம்மேல் வினை," "கூற்றமுஞ் சாரா கொடுவினையுஞ் சாரா, தீமாற்றமுஞ்சாராவகை யறிந்தேன் - ஆற்றங், கரைக்கிடக்குங்கண்ணன்கடல்கிடக்கும்மாயன், உரைக்கிடக்குமுள்ளத்தெனக்கு" என்ற ஆழ்வாரருளிச்செயல்களைப் பின்பற்றியது இச்செய்யுள் என்னலாம். 'இராமாநுசன் மன்னுமா மலர்த்தா, ளயரே னருவினை யென்னை யெவ்வா றின்றடர்ப் பதுவே" என்று பின்புள்ளார் அருளிச்செய்ததுங் காண்க. (26)

[பிரிவாற்றுதுவருந்துந் தலைவியைக் கண்டு தோழி இரங்கல்.]

27. கொழுந்தோடிலையுமுகையுமெல்லாங்கொய்யுங்கொய்ம்மகிழ்க்
விழுந்தோடுவதோர்சருகும்பெறாள்விறன்மாறனென்று [கீழ்
லழுந்தோடளருமனமுருகுங்குருகூரறையி
லெழுந்தோடவுங்கருத்துண்டுகெட்டேனிவ்விளங்கொடிக்கே.

(இ - ள்.) (இம்மெல்லியலாள்), கொழுந்தோடு இலையும் முகையும் எல்லாம் கொய்யும் - (மகிழமரத்தினது) கொழுந்தும் இலையும் அரும்புமுட்பட எல்லாவற்றையும் தனக்குக் கொண்டு தர வேண்டுவாள்; கொய் மகிழ் கீழ் விழுந்து ஓடுவது ஓர் சருகும் பெறாள் - மலர்கொய்தற்கு உரிய மகிழமரத்தின்கீழ் உதிர்ந்து (காற்றின்விசையினால் எப்புறத்தும்) ஓடுவதான சருகு ஒன்றையாயினும் பெற்றாளில்லை; விறல் மாறன் என்றால் - பெருமையையுடைய மாறன் என்று (தலைமகனதுபெயரைச்) சொன்னால், அழும் - (ஆற்றாமையினால்) அழுவாள்; தோள் தளரும்-தோள்கள் தளரப்பெறுவாள்; மனம் உருகும்-நெஞ்சு உருகப்பெறுவாள்; குருகூர் அறையில்-(அத்தமாறனுடைய ஊராகிய) திருக்குருகூரின் பெயரைச் சொன்னால், இ இளங்கொடிக்கு - இளமையான பூங்கொடிபோன்ற இம்மங்கைக்கு, எழுந்து ஓடவும் கருத்து உண்டு - எழுந்திருந்து (இங்குநின்று அவ்விடத்துக்கு) ஓடிச்செல்லவும் எண்ணமுண்டாகின்றது; கெட்டேன்—! (எ - று.)

http://acharya.org

"தெய்வத்தண்ணந்துழாய்த் தாராயினும் தழையாயினும் தண்கொம்பதாயினும் கீழ், வேராயினும் நின்ற மண்ணாயினுங் கொண்டு வீசுமினே," "சீரரிதாழ்பொழில் மாலிருஞ்சோலையிற் செல்வர் செங்கட், போரரிதாள்புனை தாரரிதாகில் தண்பூந்துளவின், தாரரிதாவுந் தழையரிதாகில் தழைதொடுத்த, நாரரிதாகிற் பிழைப்பரிதா மெங்கள் நன்னுதற்கே" என்றபடி, தலைமகனைப் பிரிந்து அப்பிரிவையாற்றாது வருந்துகிற நிலையில் அவன் தரித்த மகிழமலர்மாலையையாயினும் பெற்றால் அதுகொண்டு ஒருவாறு தணிந்திருக்கலாமென்று கருதிய தலைமகள் அது இடையாமையால் அதுதானே கிடையாவிடினும் அதன் சம்பந்தமுள்ள கொழுந்து இலை முகை என்பவற்றில் ஏதேனும் ஒன்றுவது கிடைக்குமாயின் அதுபற்றுக்கோடாக ஆறியிருக்க நினைத்து அவற்றை வேண்டுகின்ற இயல்பு, "கொழுந்தோடு இலையும் முகையும் எல்லாம் கொய்யும்' எனப்பட்டது. அங்ஙனம் வேண்டியவற்றிலொன்றுங் கிடைத்திலதென்பதேயன்றி அம்மகிழமரத்தின்கீழே உதிர்ந்து கிடக்குஞ் சருகுதானும் கிடைத்திலதென்று இரங்குவாள், 'கொய்ம்மகிழ்க் கீழ் வீழுந் தோடுவதோர் சருகும் பெறுள்' என்றார். இப்பாட்டு பாட்டுடைத் தலைவனே கிளவித்தலைவனுகக் கூறியது. பிரபந்தத்தலைவராகிய ஆழ்வார் 'வகுளாபரணர்' என்று பெயர்பெறும்படி மகிழமலர் மாலையை யுடையராதல் உணர்க. 'கெட்டேன்' என்றது-இரக்கத்தாற் சொல்லுஞ் சொல்.

சருகு-உலர்ந்த இலை. (இவள்) தோள்தளரும், மனம் உருகும்-உயர்திணைதொடர்ந்த அஃறிணைச்சினையின்வினை அவ்வுயர்திணையின் மேலேற்றப்பட்டது; திணைவழுவமைதி. இளங்கொடி - அக்கொடிபோல் மெல்லியவடிவமுடைய பெண்ணுக்கு உவமையாகுபெயர்.

கம்பநாட்டாழ்வார் நம்மாழ்வார் திருவடிகளிலேயே சேர்ந்திருக்கப்பெறாது பிரிந்து வருந்துகிற நிலையில், அவ்வாழ்வாரோடு நேரிலாவது இடையிட்டாவது சம்பந்தம்பெற்று பொருள் யாதாயினுமொன்றை அவருடைய பிரசாதமாகப்பெற்ற ஆறியிருக்கக் கருதி வேண்டுதலையும், அங்ஙனம் ஒன்றும் அவர்க்குக் கிடைத்திடாமையையும், ஆழ்வாருடைய திருநாமத்தைச் சொல்லும் போதெல்லாம் அவர் பக்திபரவசராய் அழுது உடல்சோர்ந்து மனந்தளர் தலையும், அவ்வாழ்வார் எழுந்தருளியிருக்கிற திவ்விய தேசத்திற்கு விரைந்துசென்றுசேர விரும்புதலையும், அன்பர்கள் பாராட்டி, இனி இவர்க்கு என்னாகுமோவென்று இரங்கிக்கூறுதல், இதற்கு உள்ளுறை பொருளாம்; விவரம் கேட்டு உணர்க. (27)

28. கொடியெடுத்துக்கொண்டுநின்றேறனி னிக்கொடுங்கூற்றினுக்கோ
ரடியெடுத்துக்கொண்டேன்பால்வரலாருங்கொலாரணத்தின்
படியெடுத்துக்கொண்டமாறனென்றற்பதுமக்கரங்கண்
முடியெடுத்துக்கொண்டவந்தணர்தாளென்முடியனவே.

(இ - ள்.) 'ஆரணத்தின் படி எடுத்துக்கொண்ட - வேதம் போலவே (ஸாரமான அர்த்தங்களைத்) தேர்ந்தெடுத்துக்கொண்டு கூறிய, மாறன் - மாறனென்னுந் திருநாமமுடையவர், என்றால் -

http://acharya.org

என்று யார்சொன்னாலும், (அவரைக்குறித்து), பதுமம் கரங்கள் முடி எடுத்துக்கொண்ட - தாமரைமலர்போன்ற தமதுகைகளைக் குவித்து அஞ்சலிசெய்து அந்தஅஞ்சலிபந்தத்தைத் தமதுசிரசின் மேற்கொள்ளுந் தன்மையரான, அந்தணர் - ஸ்ரீவைஷ்ணவர்களுடைய, தாள் - திருவடிகள், என் முடி-எனதுசிரமேற் கொள்ளப்படுவனவாம்,' என - என்றுசொல்லி, கொடி எடுத்துக்கொண்டு நின்றேன் - (பாகவதர்க்கு வழித்தொண்டன் யானென்று வெளியிடுமாறு) விருதுக்கொடி பிடித்துக்கொண்டு நின்றேன்; இனி - இங்ஙனம் யான் ஆழ்வாரடியார்க்குத்தொண்டு பூண்டபின்பு, கொடுங் கூற்றினுக்கு ஓர் அடி எடுத்துக்கொண்டு என் பால் வரல் ஆகும் கொல் - (தீவினைக்குஏற்பக்) கொடியதண்டனை செய்பவனான யமனுக்கு என்பக்கல் ஒருகாலடியையாவது எடுத்துவைத்து வருதல் கூடுமோ? [கூடாது என்றபடி]; (எ - று.)

ஆழ்வாரடியார்பக்கல் வழிபாடுபூண்ட ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திருவடியைஎன்முடிக்கு அணியாகக்கொண்டேனாதலால், எனதுதீவினையனைத்தும் தீர்ந்தது; இனி யமன் என்பக்கல் எங்ஙனம் வரமாட்டுவன்? என்று தனதுபெருமிதத்தை வெளியிட்டபடியாம். ஆரணத்தின்படி யெடுத்துக்கொண்ட என்பதற்கு - வேதத்தின்ஸாராம்சத்தை எடுத்துக்கொண்டு திவ்வியபிரபந்தங்களையருளிச்செய்த என்றும், வேதத்துக்குஈடாகப் பிரபந்தமருளிச்செய்த என்றும் உரைத்தலுமொன்று. (28)

29. என்முடியாதெனக்கியாதேயரியதிராவணன்றன்
பொன்முடியாற்கட ரார்த்தவில்லான்பொருநைத்துறைவன்
றன்முடியாலவன் ஞளிணைக்கீழெப்பொருளுந்தழீஇச்
சொன்முடியாலமுதக்கவியாயிரஞ்சூட்டினனே.

(இ - ள்.) இராவணன்தன் பொன் முடியால் கடல் தூர்த்த வில்லான் - இராவணனுடைய ஸ்வர்ணகிரீடத்தைத் தரித்த தலைகளை(ப் பலமுறை துணித்தறுத்தள்ளி அவற்றை)க்கொண்டு (மிக ஆழ்ந்த) கடலையும் நிரம்பியிட்டவனான ஸ்ரீமந்நாராயணனது (அடியவராகிய), பொருநைத் துறைவன் - தாமிரபர்ணி நதிதீரதேசத்திலவதரித்தவரான நம்மாழ்வார்,—அவன் தாள் இணைக்கீழ் - அத்திருமாலினது உபயதிருவடிகளிலே, தன் முடியால் - தமதுசிரிறால் (வணங்கி), சொல் முடியால்-(தமது)சொற்களின் சேர்க்கைகொண்டு, எ பொருளும் தழீஇ - (முத்திபெறுவார்க்கு வேண்டுவனவான) எல்லாப்பொருள்களையும் ஒருங்கு தொகுத்து, அமுதம் கவி ஆயிரம் சூட்டினன் - அமிருதம்போலினிய ஆயிரம்பாசுரங்களை(ப் பாடி அப்பாமாலையை அப்பெருமானுடைய இணையடியிற்) சமர்ப்பித்தனர்; (இப்படிப்பட்ட மகாவைபவமுடைய ஆழ்வாருக்கு யான் அடிமைப்பட்டபின்பு), எனக்கு முடியாது என் - எனக்கு அசாத்தியமானது யாது? (எனக்கு) யாதே அரியது - எனக்குச் சிரம சாத்தியமானதுதான் யாது? [எதுவுமில்லை: வேண்டிய வேண்டிய நற்பயன்களெல்லாம் தவறாது எளிதிற் கைகூடுமென்றபடி;] (எ - று.)

http://acharya.org

இராமபிரான் தனது அம்புகளைக்கொண்டு இராவணனுடைய
பத்துத்தலைகளையும் துணித்து இலங்கையைச் சூழ்ந்துள்ள கடலிலே
தள்ளிவருந்தோறும் அவை அவனுக்குப் பிரமனளித்த வர
பலத்தினால் மீண்டும்முளைத்துவர பின்பு பெருமாள் அவனுமார்
பில் அஸ்திரத்தைப்பிரயோகித்து அவனை வதைத்திட்டன னென்
பது, வரலாறு. வில்லான் பொருநைத்துறைவன் - ஆறும்வேற்று
மைத்தொகை. 'இராவணன்தன்பொன்முடியாற் கடல்தூர்த்த
வில்லான்' என்றதில், அவனது தலைகளின் பருமை தோன்றும்.
திருக்குருகூரென்ற திவ்யதேசத்தி லெழுந்தருளியுள்ள
பொலிந்துநின்றபிரானையே 'இராவணன்றன் பொன்முடியாற்
கடல்தூர்த்த வில்லான்' என்று குறித்ததாகக்கொண்டு, அப்பிரா
னுக்கு உரிய தாமிரபர்ணிநதியினது கரையிலுள்ள ஊரில் அவ
தரித்த ஆழ்வார் என்றது மொன்று. 'எப்பொருளும்' என்றது -
பரப்ரஹ்மஸ்வருபமும், ஜீவாத்மாவினது தன்மையும், பரமாத்
மாவையடையும் உபாயமும், அங்ஙனமடைதலின் பயனும், அச்
சரணகதிக்குப் பகையும் என்று சகலவேதசாஸ்திரங்களிலும் சார
மாகச்சொல்லப்பட்ட அர்த்தபஞ்சகத்தை. 'எனக்கு' என்பது,
மத்திமதீபமாக முன்னும் பின்னும் இயையும். தாளிணைக்கீழ்ச்
சூட்டினனென்க. பொன்முடி என்றது - இங்கு, மூன்றும் வேற்
றுமை யுருபும்பயனும் உடன்தொக்கதொகை. (29)

30\. சூட்டிற்குருகுறங்குங்குருகூர்தொழுதேன்வழுதி
நாட்டிற்பிறந்தவர்க்காளுஞ்செய்தேனென்னைநல்வினையாங்
காட்டிற்புகுதவிட்டுய்யக்கொண்மாறன்கழல்பற்றிப்போய்
வீட்டிற்புகுதற்குமுண்டேகுறைமறைமெய்யெனிலே.

(இ - ள்.) சூட்டில் - நெற்போர்களிலே, குருகு-மருதநிலத்துப்
பறவைகள், உறங்கும் - (யாதொருகவலையுமின்றி) இனிதுதுயிலப்
பெற்ற, குருகூர் - திருக்குருகூரென்கிற ஆழ்வார்திருநகரியை,
தொழுதேன்-சேவிக்கப்பெற்றேன்; வழுதி நாட்டில்பிறந்தவர்க்கு
ஆளும் செய்தேன் - (அந்த ஆழ்வார் திருவவதரிக்கப்பெற்ற நாடா
கிய, பாண்டியநாட்டிற் பிறந்த ஸ்ரீவைஷ்ணவர்கட்கு அடிமைத்
தொழிலையுஞ் செய்யப்பெற்றேன்; மறை மெய் எனில் - வேதம்
சத்தியமாகு மானால்,—என்னை நல் வினை ஆம் காட்டில் புகுத
விட்டு உய்ய கொள் மாறன் கழல் பற்றி போய் வீட்டில் புகுதற்
கும் குறை உண்டே - என்னை நற்செய்கைகளாகிற தவவனத்திலே
செல்லவிட்டு (யான்) ஈடேறுமாறு (என்னை) ஆட்கொண்டருளு
கிற நம்மாழ்வாருடைய திருவடிகளைச் சரணமடைந்தபின்பு
(யான்) ஸ்ரீவைகுண்டத்திற் சென்று சேர்தற்கும் தடையுண்டோ?
[இல்லையே யென்றபடி]; (எ - று.)

ஒருபாகவதரை ஆசாரியராகக்கொண்டு அவர்திருவடிகளிற்
சரண்புகுந்து ஆட்படுதலும், அந்தக்குருவினது திருவவதார
ஸ்தலத்தை வணங்குதலும், அக்குருவானுசாரியாது சம்பந்தத்தைத்
எவ்வாற்றாலாயினும் பெற்றவர்கட்கு அடிமைபூணுதலும், ஆத்மா
உஜ்ஜீவித்துத் தவறாது விடுபெறுதற்குக் காரணமா மென்பது,
சத்தியமான வேதத்தின் சித்தாந்தமாகும் என்று தாற்பரியங்

http://acharya.org

காண்க. சூட்டிற் குருகு உறங்கும்—"போரிடையுறங்கு மன்னம்" என்றார் இராமாயணத்தும். சூடு - நெல்முதலியவற்றி னரிக்குவியல். குருகுஎன்பது - நீர்வாழ்பறவைப் பெயராகவும், பறவைப் பொதுப்பெயராகவும் வழங்கும். வழுதி - பாண்டியன். இங்கு 'நல்வினை' என்றது, பிரபத்திமார்க்கத்துக்கு உரிய செயல்களை. முந்துற இராமாயணமென்னும் சரணாகதிவேதத்தைத் தாம் பாடும்படி செய்வித்தது ஆழ்வார்கருணையென்பார் 'என்னை நல்வினையாங் காட்டிற் புகுதவிட்டு உய்யக்கொள் மாறன்' என்றன ரென்றுங் கொள்ளலாம்; "கற்பா ரிராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ, புற்பாமுதலாப் புல்லெறும்பாதி யொன்றின்றியே, நற்பாலயோத்தியில்வாழுஞ் சராசரம் முற்றவும், நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார்பெற்ற நாட்டுளே" என்று ஆழ்வா ரருளிச்செய்தது, தன்னையடுத்த சராசரங்களையெல்லாம் அன்று வைகுந்தத்து ஏற்றிய இராமபிரானது திவ்யசரித்திரத்தைக் கவிபாடுதற்குத் தூண்டுகோலாதல் காண்க. 'மாறன்கழற்பற்றிக் குருகூர்தொழுதேன் ஆளுஞ்செய்தேன்' என்று முன்பின்னாகமாற்றி அந்வயித்துப் பொருளுரைப்பினும் அமையும். மெய் - யதார்த்தபிரமாணம். வீட்டிற்புகுதற்குமுன்பே குறை—"இம்மையும்சாறித்து வானவர்நாட்டையும், நீகண்டுகொள்ளென்று வீடுந்தரும்" என்றபடி.()

31. மெய்யுமெய்யாயதுபொய்யும்பொய்யாயதுவேறுபடுந்
உய்யுமெய்யாயவுபாயம்வந்துற்றதுறுவினையைக்
கொய்யுமெய்வாள்வலவன்குருகைக்கரசன்புலமை
செய்யுமய்யன்றனக்கேதனித்தாளன்புசெய்தபின்னே.

(இ - ள்.) உறு வினையை - மிக்ககருமங்களை, கொய்யும்-அறுத்தொழிக்கின்ற, மெய் - சத்தியவாக்காகிய, வாள் - வாட்படையின் தொழிலில், வலவன் - வல்லவரும், குருகைக்கு அரசன் - திருக்குருகூர்க்குத்தலைவரும், புலமை செய்யும் அய்யன்றனக்கே - ஸ்வரூப ஞானத்தை (எல்லார்க்கும்) உபதேசிக்கிற ஆசாரியருமாகிய நம்மாழ்வார்க்கே, தனி தாள் அன்பு செய்த பின் - ஒப்பற்ற திருவடிகளில் (யான்) பக்திசெய்தபின்பு,—(எனக்கு), மெய்யும் மெய் ஆயது - உண்மைப்பொருளும் உண்மையாக விளங்கிற்று; பொய்யும் பொய் ஆயது - பொய்ம்மைப்பொருளும் பொய்யாகவே புலப்பட்டது; வேறுபடுத்து - (இங்ஙனம் மெய்பொய்களைப்) பகுத்து உணர்ந்தபின்பு, உய்யும் - (ஆத்மா) உஜ்ஜீவிப்பதற்குஉரிய, மெய் ஆய உபாயம்-உண்மையான உபாயமும், வந்து உற்றது-(எனக்கு) வந்து சித்தித்தது; (எ - று.)

மெய் - பரப்ரஹ்மஸ்வரூபம், ஜீவாத்மஸ்வரூபம் முதலியன. பொய் - உடம்பு, செல்வம், யானெனதென்னுஞ்செருக்கு முதலியன. மெய்யாய - ஸ்வரூபாநுரூபமான, பயன் தவறாத; உபாயம் - சரணாகதி. மூன்றும்அடியில், மெய் - உண்மைப்பொருளுணர்த்துந் திருவாய்மொழி. தனித்து ஆள் அன்பு என்று பதம்பிரித்து, தனியே ஆட்கொள்ளப்படுதற்கு ஏற்ற பக்தி யென்றலும் ஒன்று. மெய் மெய்யாதலும், பொய் பொய்யாதலும், வேறுபடுத்து உய்யும் மெய்யாய உபாயம் வந்துஉறுதலும், ஆழ்வாரருளிச்செயலின் அர்த்தஞானத்தால் இனிது வாய்க்கும். (31)

http://acharya.org

32. செய்யன்கரியனெனத்திருமாலைத்தெரிந்துணர
வய்யங்கரியல்லமாட்டாமறைமதுரக்குருகூ
ரய்யன்கவியல்லவேற்பிறவிக்கடலாழ்வதல்லா
லுய்யும்வகையொன்றும்யான்கண்டிலேனிவ்வுயிர்களுக்கே.

(இ - ள்.) திருமாலை - ஸ்ரீமந்நாராயணனை, செய்யன் கரியன் என தெரிந்து உணர - செந்நிறமுடையவன் அல்லது கருநிறமுடையவன் என்று ஆராய்ந்து அறிதற்கு, வய்யம் கரி அல்ல - உலகத்துஉயிர்கள் ஏற்ற சாக்ஷியாகா; மறை - வேதங்களும், மாட்டா - (அங்ஙனமே பகவானது சொரூபத்தை இன்னபடியென்று அறிதற்கு) வல்லனவல்ல; (ஆகவே), மதுரம் குருகூர் அய்யன் கவி அல்ல எல் - (அவனைத்தெரிந்து சொல்லுதற்கு) இனிமையான திருக்குருகூரிலவதரித்த ஆசாரியரான ஆழ்வாருடைய பாசுரங்கள் உள்ளனவல்லவானால், பிறவி கடல் ஆழ்வது அல்லால் - (உயிர்களெல்லாம்) பிறப்பாகிய கடலில் அழுந்துவதல்லாமல், இ உயிர்களுக்கு உய்யும் வகை ஒன்றும் யான் கண்டிலேன் - இந்தஜீவாத்மாக்களுக்கு உய்வுபெறும் உபாயமொன்றையும் யான் கண்டேனில்லை; (எ - று.)

பரப்ரஹ்மஸ்வரூபத்தை உள்ளபடி உணர்ந்து வெளியிட்டு அதனையடையும் உபாயத்தையுங் கூறி உயிர்களைப் பிறவிக்கடலினின்று முத்திக்கரையேற்றுவது ஆழ்வாரருளிச்செயலேயல்லது யாதொன்றுமில்லையென்பதாம். 'இத்தன்மையனென்று' என்ற பொருளில் 'செய்யன்கரியனென' என்றது, ஒரு சொல்விழுக்காடு. அளவின்மையும், அச்சந்தருதலும், அலைமாறிமாறிவருதலும் பற்றி, பிறவி 'கடல்' எனப்பட்டது. செய்யன் கரியன் என்பதற்கு - வாய் கண் கை கால் என்கிற அவயவங்களிற் செந்நிறமுடையவன் திருமேனியிற் கருநிறமுடையவன் என்று உரைப்பாருமுளர். (32)

33. உயிர்த்தாரையிற்புக்குறுகுறும்பாமொருமூன்றனையுஞ்
செயிர்த்தார்குருகைவந்தார்திருவாய்மொழிசெப்பலுற்றான்
மயிர்த்தாரைகள்பொடிக்குங்கண்கணீர்மல்குமாமறையு
ளயிர்த்தாரயிர்த்தபொருள்வெளியாமெங்களந்தணர்க்கே.

(இ - ள்.) உயிர் தாரையில் புக்கு உறு - உயிர் செல்லுகிற வழியிலே உடன் சென்று கூடுகிற, குறும்பு ஆம் ஒரு மூன்றனையும் - முக்குறும்புகளையும், செயிர்த்தார் - வெறுத்தொழித்தவராகிய, குருகை வந்தார் - திருக்குருகூரிலவதரித்தவரான நம்மாழ்வாருடைய, திருவாய்மொழி - திருவாய்மொழிப் பிரபந்தமாகிய திவ்வியசூக்திகளை, செப்பல் உற்றால் - ஓதியுணரத்தொடங்கினால், —எங்கள் அந்தணர்க்கு - எங்களை ஆட்கொள்ளுதற்கு உரியவர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு,—மயிர் தாரைகள் பொடிக்கும் - (உடம்பிலுள்ள) மயிரொழுங்குகள் சிலிர்ப்புக்கொள்ளும்; கண்கள் நீர் மல்கும் - கண்கள் ஆனந்தக்கண்ணீர் நிறைந்து பெருகப்பெறும்; மா மறையுள் அயிர்த்தார் அயிர்த்த பொருள் வெளி ஆம் - (பொருளுணர்தற்கு அரிய) பெருமையையுடைய வேதங்

http://acharya.org

களின் கருத்துக்களிற் பிறசமயத்தார் சந்தேகித்த அர்த்தங்க ளெல்லாம் நன்கு விளங்கும்; (எ - று.)

முக்குறும்பு - உயர்குடிப்பிறந்தேனென்னுஞ் செருக்கு, கல்வியிற் சிறந்தேனென்னுஞ்செருக்கு, ஒழுக்கத்திற் சிறந்தேனென்னுஞ் செருக்கு என்பனவை. இவை, தன்மையுடையார் அபிமானத்தால் தமது உயிரைப் பகவத் பாகவதர்கட்கு அடிமையொன்று கொண்டு உயர்கதிபுகாது தமக்கே உரியதென்று கொண்டு இழிகதிகளிற் செல்லுதற்குக் காரணமென்பது தோன்ற, 'உயிர்த் தாவரயிற் புக்குறு குறும்பாம் ஒருமூன்று' எனப்பட்டன. அவற்றை ஆழ்வார் வெறுத்திட்டமையை, அவரருளிச்செய்த பிரதமப்ரபந்தமாகிய திருவிருத்தத்தின் முதற்பாசுரத்தில் "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும், இந்நின்றநீர்மை யினி யாமுறாமை" என்றது முதலியனகொண்டு உணர்க. மயிர்த்தாரைகள் பொடித்தல்-உரோமாஞ்சம். பொடித்தல் - புளகித்தல். இதுவும், கண்களில்நீர்மல்குதலும் - உவகையினலாகிற மெய்ப்பாடு. கண்கள் நீர் மல்கும் - இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது; உபசாரவழக்கு. 'எங்கள் அந்தணர்' என்றது - ஸ்ரீமதுரகவிகள், நாதமுனிகள் போல்வாரை. (33)

34. அந்தணர்க்கோ நல்லருந்தவர்க்கோவன் றியோகியராய்
வந்தவர்க்கோமறவாதியர்க்கோமகரக்குழைசேர்
சுந்தரத்தோளனுக்கோவவன்றொண்டர்கட்கோசுடர்தோய்
சந்தனச்சோலைக்குருகைப்பிரான்வந்துசந்தித்ததே.

(இ - ள்.) அந்தணர்க்கோ - வேதியர்கட்காகவோ, நல் அருந்தவர்க்கோ - சிறந்த அருமையான தவத்தைச்செய்கிறவர்கட்காகவோ, அன்றி - அல்லது, யோகியர் ஆய் வந்தவர்க்கோ-யோகாப்பியாசஞ்செய்து வருகிறவர்கட்காகவோ, மறம் வாதியர்க்கோ - பிணக்கர்களாய்ப் பரசமயவாதஞ்செய்கிறவர்கட்காகவோ, மகரம் குழை சேர் சுந்தரம் தோளனுக்கோ-மகரகுண்டலங்கள் தாழ்ந்து தவழப்பெற்ற அழகிய திருத்தோள்களையுடைய ஸ்ரீமந்நாராயணனுக்காகவோ, அவன் தொண்டர்கட்கோ - அப்பெருமானுடைய அடியார்கட்காகவோ, சுடர் தோய் சந்தனம் சோலை குருகை பிரான் வந்து சந்தித்தது - (சந்திரசூரியர் முதலிய) விண்ணொளிகள் தன்மேற் படும்படி (அவற்றையளாவிமிகவுயர்ந்து) வளர்ந்துள்ள சந்தனமரச்சோலையையுடைய திருக்குருகூர்க்குத் தலைவரான நம்மாழ்வார் வந்து அவதரித்தது? (எ - று.)

அந்தணர் அருந்தவர் யோகியர் அவன்தொண்டர் என்பவர்கட்கு வேதத்தினுட்பொருளையும் உயர்ந்ததவத்தின் தன்மையையும் சிறந்தயோகத்தின் நிலைமையையும் அடிமைத்திறத்தையும் அருளிச்செய்து அவர்களை உய்வித்தலானும், பரசமயவாதிகளை வென்று அடக்கித் தம்வசப்படுத்தி நல்வழிப் புகுத்துதலானும், "கற்பகக் காவன நற்பலதோளற்கு" என்றபடி தோளழகையுடைய திருமாலுக்கு அடிமைபூண்டு அவனது மகிமைகளை வெளியிட்டுப் பாசுரம்

http://acharya.org

பாடி அவனது திருவுள்ளத்தை உவப்பித்தலாலும், ஆழ்வாரது திருவவதாரம் அந்தணர் முதலிய அனைவர்க்கும் தனித்தனி ப்ரயோஜநகரமாம் என்ற பொருளை, இங்ஙனம் விகற்பித்துக் கூறும் வாய்பாட்டினாற் பெறவைத்தார். மகரக்குழை - சுறுமீன் வடிவு தோன்றத் தொழிற்செய்யப்பட்ட குண்டலம்; "சுறாவிறக் கொடுங்குழை" என்றார் சிந்தாமணியாரும். 'சுடர்தோய் சந்தனச் சோலை' என்றது - தொடர்புயர்வுநவிற்சியணி; சோலையின் மிக்க உயர்ச்சியை விளக்கும். (34)

35\. சந்தியுஞ்சந்திப்பதமுமவைதம்மிலேதழைக்கும்
பந்தியும்பல்லலங்காரப்பொருளும்பயி லுகிற்பீர்
வந்தியும்வந்திப்பவரைவணங்கும்வகையறிவீர்
சிந்தியுந்தென்குருகூர்தொழுதாட்செய்யுந்தேவரையே.

(இ - ள்.) சந்தியும் - எழுத்துப்புணர்ச்சியிலக்கணத்திலும், சந்தி பதமும் - அங்ஙனம்புணர்தற்குஉரியபதங்களி னிலக்கணத்திலும், அவைதம்மிலே தழைக்கும் பந்தியும் - அச்சொற்களிலே மிக்குவிளங்குகிற பொருளிலக்கண வகைகளிலும், பல் அலங்காரம் பொருளும் - பலவகை அணியிலக்கணவிஷயங்களிலும், பயிலுகிற்பீர் - பழகுகிற இலக்கணப்புலவர்காள்! தென் குருகூர் தொழுது ஆள் செய்யும் தேவரை - (ஆழ்வாருடைய திருவவதார ஸ்தலமான) அழகிய திருக்குருகூரைச் சேவித்து (ஆழ்வார்பக்கல்) அடிமைசெய்கிற பூதேவர்களாகிய அந்தணர்களை, வந்தியும் - நமஸ்கரியுங்கள்; வந்திப்பவரை வணங்கும் வகை அறிவீர் - (அந்த ஆழ்வாரடியார்களை) வணங்குகிற ஸ்ரீவைஷ்ணவர்களை வணங்கும் விதத்தை அறிவீர்கள்; சிந்தியும் - (அவர்களைத்) தியானமுஞ் செய்யுங்கள்; (எ - று.)

"கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க வதற்குத் தக" என்றபடி கல்விக்குத்தக்க ஒழுக்கம் இல்லாதவழிக் கல்வி பயனிலதாதலாலும், சப்தசாஸ்திரம் முதலியன வேதாந்தசாஸ்திரத்திற்கு அங்கமாக உபயோகித்தற்கு உரியனவேயன்றித் தனியே தாம் வீடுபேறளிக்குந்தரமுடையன வல்ல வாதலாலும், அந்தந்நூற் பயிற்சியுடையாரை விளித்து 'நீங்கள் ஆழ்வாரடியார்களை வணங்கியும் அவரடியார்களை வணங்கியும் உய்யீர்கள்' என்று உணர்த்தியபடியாம். 'சந்தி' என்றது-மற்றைஎழுத்திலக்கணங்கட்கும் உபலக்ஷணம். பல் அலங்காரம் - சொல்லணி பொருளணிகள். எழுத்துச் சொற் பொருள் யாப்பு அணி என்னும் ஐவகையிலக்கணத்தில் நான்கைக் கூறியதில், அங்கானின்றுமாகிற செய்யுளின் இலக்கணம் தானே அடங்கும். சந்திஎன்றதில், சொற்களின் சேர்க்கையென யாப்பையும் அடக்குதலும் ஒன்று. 'பல் அலங்காரப்பொருள்' என்பதில் பொருளிலக்கணம் அணியிலக்கணம் என்ற இரண்டையும் அடக்கி, 'அவைதம்மிலே தழைக்கும் பந்தி' என்பதில் சந்தியும் சந்திப்பதமும் என்றவற்றுலமைகிற யாப்பிலக்கணவகைகளை யமைப்பாருமுளர். (35)

http://acharya.org

[பாங்கி வெறிவிலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடுநிற்றல்.]

36. தேவரையேறியமூதறிவாட்டியைச்சீரழித்தீர்
பூவரையேறியகோதையுள்ளம்புகுந்தாரெவரென்
றேவரையேறிமொழிகின்றபோதியம்பிற்றிறைவர்
மூவரையோகுருகூரரையோசொல்லுமுந்துறவே.

(இ - ள்.) தேவரை ஏறிய மூதறிவாட்டியை சீர் அழித்தீர் - தெய்வஆவேசங்கொண்ட முதிர்ந்த அறிவுடையளான கட்டுவிச்சியைச் சீர்கெடுத்துவிட்டீர்கள், (நீங்கள்); பூ வரை ஏறிய கோதை உள்ளம் புகுந்தார் எவர் என்று ஏவரை ஏறி மொழிகின்ற போது - மலர்கள் அளவாகச் சூட்டப்பெற்றுள்ள கூந்தலையுடைய இவ்விள மங்கையினது மனத்திற் புக்கு இவளைவருத்துபவர் யார் என்று நீங்கள் வினவியதைக்குறித்து (அக்கட்டுவிச்சி) நமதுஉறையுளினெல்லையில் ஏறிவந்து விடைகூறுகிறபொழுது, இயம்பிற்று - சொன்னது, இறைவர் மூவரையோ - திரிமூர்த்திகளையோ? (அன்றி), குருகூரரையோ - திருக்குருகூர்நம்பியையோ? முந்துற சொல்லும் - என்முன்னே சொல்லுங்கள்; (எ - று.)

கட்டுவிச்சி சொன்னது இறைவர்மூவரையன்று குருகூரரையே யென்பது, இவள்கொண்டுகூறுஞ் சித்தாந்தம். களவொழுக்கத்தால் தலைமகனைக்கூடிய தலைமகன் பின்பு அவளை வெளிப்படையாக மணஞ்செய்துகொள்ளும் பொருட்டுப் பொருள்தேடிவருதற்காக அவளைப்பிரிந்துசென்று வரவுகுறித்தகாலத்தில் வாராது சிறிது நீட்டிக்க, அங்ஙனமிற் பிரிவாற்றாது மிகவருந்திய தலைமகளைச்செவிலித்தாய்மார் எதிர்ப்பட்டு அவளதுவடிவுவேறுபாட்டை நோக்கி 'இவள் இங்ஙனம் மெலிதற்குக் காரணம் என்னோ?' என்று கவலைப்பட்டுக் கட்டுவிச்சியைக் குறிகேட்க, அவளும் விடேறிவந்து தன் மரபின்படி ஆராய்ந்து இவள்பக்கல் ஆவேசித்தவர் குருகூர்நம்பியொழியத் திரிமூர்த்திகளுமல்லரென்று சிலகூற, அதுகேட்டசெவிலித்தாயர், அக்கட்டுவிச்சிவார்த்தையில்வந்த 'குருகூர்நம்பி' என்ற பெயர்க்கும், அதற்கு அடைமொழியாகவும் அதன்பரியாயநாமங்களாகவும் வந்த விசாகன் சேய் ஆறுமுகன் வேள் இளையான் அழகியான் கடவுண்மைந்தன் ஆரான் கலையுணர்புலவன் குமுகன் கங்கைகந்தனன் சுவாமி மேலவர்க்கிறைவன் என்பன போன்ற சொற்களுக்கும் முருகக்கடவுளென்று பொருள் செய்துகொண்டு, அதற்கு ஏற்ப, வேலனெனப்படுகிற வெறியாட்டாளனை யழைப்பித்து அவனைக்கொண்டு, முருகக்கடவுளினாவேசத்திற்குப் பரிகாரமாக வெறியாடுவிக்க முயல, அதனையறிந்த தலைமகள் தனக்குத் தலைமகனால் நேர்ந்த நோயை இவையில்லாத பிறர் தீர்க்கத்தொடங்குதல்குறித்து மிகவருந்தித் தோழியை வேண்ட, அவளது துன்பத்தின் மெய்க்காரணத்தையறிந்த தோழி அச்சமயத்திற் செவிலியரைநோக்கிச் சிலகூறி வெறிவிலக்கித் தலைவியினது துன்பத்தின் உண்மைக்காரணத்தை யுணர்த்துகிற துறை, இது. இதன்மெய்ப்பாடு - பெருமிதத்தைச்சார்ந்த நகை; பயன் - அறத்தொடுநிற்றல். கட்டுவிச்சிகூறிய சொற்களின் உண்மைப்பொருளை யுணராது அவற்றிற்கெல்லாம் பிறிது பொருள்கொண்டு அதற்கு

http://acharya.org

ஏற்படுமயலுதல், அக்கட்டுவிச்சி இவளதுநோயின் காரணத்தை உள்ளபடி உணர்த்திலளென்று பிறர்கருதுதற்கு இடமாகி அவளது அறிவின்பெருமையைக் கெடுத்ததாக முடிதலால், 'சோழித்திர்' என்றாள். அவள் அங்ஙனம் தவர்பொருள்படக் கூறினளென்று கொண்டது, அகத்தமிழிலக்கணத்திற்கு ஏற்பவென்று உணர்க. தேவரையேறிய = தேவரேறிய; ஐ - அசை. தெய்வமுன்னிலையாகக் கொண்டு குறிபார்த்து அத்தெய்வத்தின் வெளிப்பாட்டால் உண்மையையுணர்ந்து உரைக்குந் தகுதியுடையா ளாதலால், 'மூதறிவாட்டி' என்று சிறப்பித்துக் கூறப்பட்டாள்.

மூதறிவு - பேரறிவு. முதுமையை அறிவாட்டிக்கு அடைமொழியாக்கினால், பிராயம்முதிர்ந்தவென்று பொருளாம். பூவரையேறிய கோதை - பூக்களுக்கு எல்லையான கூந்தலெனினுமாம்; ("பூவரம்பாயகோதைப் பொன்னனார்" என்ற சிந்தாமணியைக் காண்க.) அர் - பகுதிப்பொருள்விகுதியென்றும், ஐ - அசையென்றுங் கொண்டு, பூவரையேறியகோதை-பூவேறியகோதையெனினும்அமையும்; (சிந்தாமணியில் "பூவர்சோலை"என்றவிடத்து நச்சினார்க்கினியர், 'பூவர், அர் - பகுதிப்பொருள் விகுதி' என்றமை காண்க.) கோதை - பெண்ணுக்குச் சினையாகுபெயர். 'வரையேறி' என்றதை, சிறியதிருமடலில் "கட்டுவிச்சி கட்டேறி" என்றார்போலக் கொள்ளலாம். இறைவர் - தலைவர். 'இறைவர்மூவர்' என்றது, தொகைக்குறிப்பு.

நம்மாழ்வாரது சாந்நித்தியத்தைப் பெறாமல் வருந்துகிற கம்பநாடரது துயரத்தைக்கண்ட ஞானிகள், அவர்பக்கலுள்ள பரிவாலுண்டான கலக்கத்தால், அதன்காரணத்தை உணர்ந்தவருணர்த்தவுமுணராமல் மயங்கி இதர தேவதாவேசமென்று எண்ணித் தேவதாந்தரபஜனத்தாலாவது, இவரது ஆற்றாமையைத் தணிப்பிக்கலாமோவென்று தொடங்கிய நிலையில், அக்கம்பநாடரது தன்மையையுணர்ந்த அன்பர்கள் அம்முயற்சியை விலக்கி உண்மைக் காரணத்தை யுணர்த்தும் வார்த்தை, இதற்கு உள்ளுறைபொருளாம். 'தேவரையேறிய மூதறிவாட்டி'-தெய்வவுணர்வுடைய பெரியோர். 'பூவரையேறியகோதை' - ஆழ்வாரது திருவடித்தாமரைமலரை முடிக்குஅணியாகச் சூடுபவர். 'உள்ளம் புகுந்தார்' - அவரது மனத்தில் என்றும் நீங்காது குடிகொண்டுள்ளவர். 'இயம்பிற்று இறையவர் மூவரையோ குருகூரரையோ' - "தேவுமற்றறியேன் குருகூர்நம்பி, பாவினின்னிசைபாடித்திரிவனே" என்ற மதுரகவியாழ்வார்போலக் கம்பநாட்டாழ்வாரும் வேறொரு தெய்வத்தினிடத்தில் பற்றுவைத்திடாமல் நம்மாழ்வார் பக்கலிலேயே பூரணபக்திகொண்டவரென்க; வேதவிதிப்படி ஆசாரியனையே தெய்வமாகக்கொண்டவரென்றபடி. பிறவும் கேட்டுணர்க; விரிப்பிற் பெருகும்.

இனி, இச்செய்யுட்கு வேறுதுறையமைத்துப் பொருள்கூறுவராயினும், பொருந்துமாயிற் கொள்க. (36)

http://acharya.org

37\. துறவாதவர்க்குந்துறந்தவர்க்குஞ்சொல்லவேசுரக்கு
மறவாவவையிங்கோராயிரநிற்கவந்தோசிலர்போய்
மறவாதியர்சொன்னவாசகமாமலட்டாவைப்பற்றி
கறவாக்கிடப்பரங்கென்பெறவோதங்கள்கைவலிப்பே.

(இ - ள்.) துறவாதவர்க்கும் - இல்லறத்தார்க்கும், துறந்தவர்க்கும் - துறவறத்தார்க்கும், சொல்லவே சுரக்கும் - ஓதுமளவிலேயே (அறம்பொருளின்பம்வீடென்னும் நால்வகைப்பால்களையும்) மேன்மேற்சுரக்கு தருகிற, அறம் ஆ அவை ஓர் ஆயிரம் - பரமதர்மருபமான ஓராயிரம்பசுக்கள் [ஸ்ரீவைஷ்ணவ சிகாமணியான நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்கள்], இங்கு நிற்க - இவ்வுலகத்திலே சிறப்புற்றுநிற்க,— அந்தோ - ஐயோ! சிலர்—, போய் - (இவற்றைவிட்டுச்) சென்று, மறம் வாதியர் சொன்ன வாசகம் ஆம் மலடு ஆவை பற்றி - மாறுபாடுடைய வாதங்களைச் செய்பவர் சொன்ன வாசகமாகிய மலட்டுப்பசுவைப் பயன்தருவதாகக் கொண்டு, கறவா கிடப்பர் - கறந்து கொள்ள முயல்வர்: அங்கு- அந்தமலட்டுப்பசுவினிடத்து, தங்கள் கை வலிப்பு - அவர்கள் கை நோகப்பெறுவது, என் பெறவோ - யாதுபயனை யடையவோ? [அதில் ஒன்றும் பெறப்படுவதில்லை யென்றபடி]; (எ - று.)

துறந்தவர் - புறமாகிய செல்வத்தினிடத்தும் அகமாகிய உடம்பினிடத்தும் உள்ள பற்றை, அவற்றின் நிலையாமையை நோக்கி விட்டவர்; இதன் எதிர்மொழி, துறவாதவர். 'அவை' என்பதை, பகுதிப்பொருள் விகுதியென்றாவது, முதல்வேற்றுமைச் சொல்லுருபென்றாவது, அசையென்றாவது கொள்க. அந்தோ - இரக்கக்குறிப்பிடைச்சொல்; இதனைச் சிங்கனாட்டில் வழங்குந் திசைச்சொல்லென்பர்: 'ஹந்த' என்ற வடசொல்லின் சிதைவு என்னலாம். 'மறவாதியர் சொன்னவாசகம்' என்பதற்கு - "தர்க்கச் சமணரும் சாக்கியப்பேய்களும் தாழ்சடையோன், சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும் நான்மறையு, நிற்கக் குறும்புசெய் நீசரும்" முதலாகத் தாமசபுத்தியால் விபரீதார்த்தங்களைக்கற்பித்து வாதிக்கிற பரசமயத்தார்கள் சொன்ன வாக்கியங்களென்று பொதுப்பட உரை. வலிப்பு - கடுப்பு. இங்கே, கறத்தல் - உறுதிப்பொருள்களாகிய சுவைப் பயனைப்பெறமுயலுதல். கைவலிப்பு - வீண் சிரமம் என்றபடி. சிலர் என்பெறவோ மலட்டாவைப் பற்றிக்கறவாக்கிடப்பர்: அங்கு (அவர்கட்குத்) தங்கள் கைவலிப்பே (சித்திப்பது) என்று இயைத்தும் உரைக்கலாம்.

[இப்பொழுதைக்கு 90 - வருஷத்துக்குமுன்பு இச்சடகோபரந்தாதிக்குத் திரிசிரபுரம் மகாவித்வான் கோவிந்தபிள்ளையவர்கள் செய்த உரையில், இச்செய்யுளின்கீழ், 'ஆழ்வார்திருவாய்மொழி இருக்க, வேறொன்றையும்பற்றலாயிருக்கின்றதே: இது என்ன பேதைமை என்கிறது!', 'அங்கவாசகமாகிய பசு, சிஷ்யனாகிய கன்றைப் பெருமையால், 'மலட்டுப்பசு'என்றது. "திருவாய்மொழி கற்ற, நாதமுனி உய்யக்கொண்டார் இராமர் நல் ஆளவந்தார், ஏதமில்வண்மைப்பராங்குசதாசர் எதித்தலைவர்" என்பதுபோல்,

http://acharya.org

அவ்வாசகத்துக்குக் குருபரம்பரை இல்லாமையைக்கொண்டு, 'மலட்டுப்பசு' என்றார்; ஆனால், 'மாணிக்கவாசகன் சொற்படி அம்பலவாணன் கையெழுத்து' என்கிற பிரசித்தம் உண்டே யென்றால், அந்த அம்பலவாணனை நாதமுனிகளைப்போலப் பிறருக்கு உபதேசிக்கவில்லையென்று கருத்து. எழுதின மதுரகவிகள் சொன்ன 'கண்ணி நுண்சிறுத்தாம்பு' போல ஒருவரும் ஆசாரிய நிஷ்டைகூடி ஒன்றுஞ் சொல்லாமையாலும், மலட்டுப்பசு வென்னக் குறையில்லை' என்ற வாக்கியங்கள் காணப்படுகின்றன.] (37)

[மடலூரத்துணிந்த தலைமகளின் வழியொழுகித் தோழி இரங்கல்.]

38\. *கைதலைப்பெய்தரும்பூசலிட்டுக்கவியாலுலகை*
யுய்தலைச்செய்ததும்பொய்யென்றுமோசென்றவ்வூரறிய
வைதலைத்தேசுதுமோகுருகூரென்னுமாறறியாப்
பைதலைக்கோதுகட்டிட்டேட்டிலேற்றியபண்பனையே.

(இ - ள்.) குருகூர் என்னும் ஆறு அறியா - '(தலைமகனதுஊர்) குருகூர்' என்று வாயினாற்சொல்லும் விதத்தையும் அறியாதிருந்த, பைதலை - இளமையுடைய இம்மகளை, கோது உகட்டிட்டு ஏட்டில் ஏற்றிய - முறைகேடு தலைக்கேறிப் பனைமடற்குதிரையின்மே லேறுமாறுசெய்த, பண்பனை - குணத்தையுடையவனை தலைமகனை, சென்று - (அவனதுஊர்க்கு யாம்) சென்று, கை தலை பெய்து - கைகளைத் தலைமேல்வைத்துக்கொண்டு, அரும்பூசல் இட்டு - (பொறுத்தற்கு) அரிய பேராரவாரத்தைச்செய்து, கவியால் உலகை உய்தலை செய்ததும் பொய் என்றுமோ - (அக்குருகூர்நம்பி) தான் பாடியபாடல்களைக்கொண்டு உலகத்துஉயிர்களைத் துன்பந்தீர்ந்து வாழுமாறு செய்தனனென்பதையும் பொய்யென்றுசொல்லி முறை யிடுவோமோ? அவ்வூர் அறிய வைது அலைத்து ஏசுதுமோ - அவ்வூரி லுள்ளாரனைவரும் அறியும்படி நிந்தித்துக்கலக்கம்விளைத்துப் பழிப்போமோ? (எ - று.)

தலைமகனும் தலைமகளும் கொடுப்பாரும் அடுப்பாருமின்றித் தமது விருப்பத்தின்படி களவுப்புணர்ச்சி புணர்ந்து, பிரிந்த பின்பு அவ்வாற்றாமை விஞ்சி அதனால் நாணம்முதலியன அழிந்து, இவர் களுள் ஒருவர் மற்றொருவரது வடிவத்தையும் ஊரையும் பெயரை யும், தமது ஊரையும் பெயரையும் ஒருபடத்திலெழுதி அச்சித்திர படத்தைக் கையிற்கொண்டு பனைமடலினால் ஒருகுதிரையுருச்செய் வித்து அதன்மேல் தாம் ஏறி அதனைப் பிறராலிழுப்பித்து வீதி வழியே பலருங்கூடும் பொதுவிடங்களிலெல்லாஞ் செல்லுத லுண்டு; இது-மடலூர்தலெனவும், மடன்மாவேறுத லெனவும் படும். இதற்குப் பயன் - இவரது இக்கடுந்தொழிலைக்கண்டு அதனாற் பெருவேட்கையையுணர்ந்து உறவினராயினும் அரசரா யினும் கூட்டுவிக்கக் கூடுதலாம். 'இம்மடற்றிறம்' ஆடவர்க்கே பெரும்பாலும் உரியது; அளவுக்குவிஞ்சின ஆசையின்மிகுதி யால் மகளிர்க்கும் சிறுபான்மை வரும். அன்றியும், மடலூர்தல் ஆடவர்க்கே உரியதென்றும், மடலூர்வே னென்று சொல்லுதல்

http://acharya.org

இரு பாலார்க்கும் உரியதென்றும் உணர்க. இங்குக் கூறிய இது, தலைவியின் மடற்றிறம். மடலேறத்துணிந்த தலைமகளின் வருத்தங் கண்ட தோழி, அவனை வழியொழுகி ஆற்றுவிக்க வேண்டுஞ் சமயமாதலால், தானும் அவனோடு வருந்தமுற்றுக் கூறிய வார்த்தை, இச்செய்யுளிற் குறிக்கப்பட்ட விஷயம்.

கைதலைப்பெய்தல்,முறைப்பாட்டுக்கு உரியது; "இறையோடுயரிருகையு மெடுத்தென்னுற முறையோ முறையோ வென" என்னர்பிறரும். பூசல்-பேரொலி. 'கவியால் உலகை உய்தலைச்செய்தது' என்பதற்கு-(முன்பு இராமாவதாரத்தில்) வானரங்களினுதவியைக் கொண்டு (துஷ்டநிக்கிரகஞ்செய்து) உலகத்தை உய்வித்தமை யென்றும் பொருள் கொள்ளலாம்; ஆழ்வார் திருமாலின் அம்சமுடையவ ராதலால். ஊர் - இடவாகுபெயர். பைதல் - இளமைப் பெயராதலை "சிறுகிளிப்பைதலே" என்ற திருவாய்மொழியிலுங் காண்க. கோகு உகட்டுதல் என்பது - "கும்பிடுநட்டமிட்டாடிக் கோகுகட்டுண்டுழலாதார்" எனத் திருவாய்மொழியிலும் இப்பொருளில் வந்துள்ளது; கோகு - அடைவுகேடு: உகட்டுதல்-தலை மண்டையிடுதல், மேலிடுதல். 'ஏடு' என்றது - இலக்கணையால், பனைமடலினாலாகிய குதிரையைக் குறித்தது. பண்பிலாதானைப் பண்பனென்றது, இகழ்ச்சிக்குறிப்பாகிய எதிர்மறையிலக்கணையுமாம்.

ஆழ்வாரதுஸாந்நித்தியத்தை எவ்வாற்றாலாயினும் பெறுதற்கு விரைந்து முயல்கிற கம்பநாடர்பக்கல் பரிவுகொண்ட அன்பர்கள் இப்படி பரம பக்தி தலையெடுத்த அடியவர்க்கு ஆழ்வார் உடனே ஸாந்நித்தியந் தந்தருளாது காலநீட்டித்தலைக் குறித்துக் குறைகூறும்வகையாற் கம்பநாடரை ஆற்றுதல், இதற்கு உள்ளுறைபொருளாம்; விவரம் உய்த்துணர்க. கம்பநாடர்க்கு முதலிலே பக்தியையுண்டாக்கி அதனை அபிவிருத்தியாம்படி செய்து அவரைப் பிரபந்தம்பாடும்படி செய்வித்தது ஆழ்வாரது திருவருளே யென்பது, 'குருகூரென்னுமாறறியாப் பைதலைக் கோகுகட்டிட்டேட்டிலேற்றிய பண்பன்' என்றதனாற்போதரும். கைதலைப்பெய்தல் - தலைமேற்கைவைத்து வணங்குதலுமாம். (38)

39. பண்ணுந்தமிழுந்தவஞ்செய்தனபழநான்மறையு
மண்ணும்விசும்புந்தவஞ்செய்தனமகிழ்மாறன்செய்யு
ளெண்ணுந்தகைமைக்குரியமெய்யோகியர்ஞானமென்னுங்
கண்ணும்மனமுஞ்செவியுந்தவஞ்செய்தகாலத்திலே.

(இ - ள்.) மகிழ் - மகிழமலர்மாலையையுடைய, மாறன் - நம்மாழ்வார் அருளிச்செய்த, செய்யுள் - பாசுரங்களை, எண்ணும் - சிந்தனை செய்வதாகிய, தகைமைக்கு - பெருமைக்கு, உரிய - ஏற்ற, மெய் யோகியர் - உண்மையான ஞானபக்தியோகங்களையுடையவர்களுடைய, ஞானம் என்னும் கண்ணும் - அறிவாகிய அகக்கண்ணும், மனமும்—, செவியும் - காதுகளும், தவஞ்செய்த காலத்திலே—,—பண்ணும் - (குறிஞ்சிமுதலிய) பண்களும், தமிழும் - தமிழ்ப்பாஷையும், தவம் செய்தன—; பழ நால் மறையும்-பழமை

http://acharya.org

யான நான்கு வேதங்களும், 'மண்ணும் - பூலோகமும், விசும்பும் - மேலுலகமும், தவம் செய்தன—; (எ - று.)

ஆழ்வார் அவதரித்துத் திருவாய்மொழி முதலியன பாடியதற்குக் காரணம், பண் முதலியன செய்த தவமென்பதாம். வடமொழிமுதலிய மற்றைப் பாஷைகளிலன்றித் தமிழிலே பண்வகைகளமைய ஆழ்வார் பாசுரம்பாடப்பெற்றமை அப்பண்ணும் தமிழும்மிக்கசிறப்புப்பெறுதற்குக் காரணமாதலால், 'அவை தவஞ் செய்தன' என்றனரென்க. தொன்று தொட்டு உள்ள நான்கு வேதங்களும் வடமொழியிலே உணர்தற்கு அரிய மறைபொருளவாயிருந்து எளிதிற்பயன்படாமற் போதலாகிய குறைதீர அறிதற்கு எளிய தென்மொழியில் ஆழ்வாரால் அருளிச்செய்யப் பெற்று அனைவர்க்கும் பயன்படும்படியாயினமை கருதி, "பழநான்மறை தவஞ்செய்தன" என்றார். நிலவுலகத்தார் அந்தத்தமிழ் வேதங்களை ஓதியுணர்ந்தும் ஆழ்வாரை வழிபட்டும் இம்மை மறுமைவீட்டின்பங்களில் வேண்டியவேண்டியவற்றைப் பெறுதல், 'மண் தவஞ்செய்தது' என்றதற்குக் காரணம். ஆழ்வார் எம்பெருமான்பக்கல்கொண்ட பரமபக்தியால் அர்ச்சிராதிமார்க்கமாகப் பரமபதத்துக்கு எழுந்தருளும்போது இடையிலுள்ள உலகங்களிலிருக்கிற தேவரிஷிகணங்களெல்லாம் அவரை எதிர்கொண்டு 'போதுமின் எமது இடம் புகுதுக" என்று சொல்லி வரவேற்று வணங்கித் துதித்து வழிபட்டு வழிவிட்டுப் பேறு பெற்றவரானதனால், 'விசும்பு தவஞ்செய்தது' எனப்பட்டது, மண், விசும்பு - மண்ணுலகத்தார்க்கும், விண்ணுலகத்தார்க்கும் இடவாகுபெயர். ஆழ்வார் அவதரிக்கும்படி மண்ணுலகமும், அவர் தன்வழியாக மேற்செல்லும்படி விண்ணுலகமும் தவஞ்செய்தனவென்றுங் கொள்ளலாம். 'விசும்பு' என்றது, எல்லாவுலகங்களினும் மேம்பட்டு மேலிடத்திலுள்ளதான பரமபதத்தையுங் குறிக்கும்; ஞானக்கனிந்நலங்கொண்ட ஆழ்வார் திருநாடலங்கரித்தனரென்றும்படி தன்பக்கல் எழுந்தருளப்பெற்றமை அந்த ஸ்ரீவைகுண்டத்திற்கும் தவப்பயனென்க.

மகிழ் • என்ற மரத்தின்பெயர், அதன்மலர்களினாலாகிய மாலைக்கு இருமடியாகுபெயராம். 'மகிழ்மாறன் - (திரிகரணத்தாலும் எப்பொழுதும் பகவானை அநுபவித்தலினால்) மகிழ்ச்சிகொண்டுள்ள மாறனெனினுமாம். 'மாறன்செய்யுளென்னுந்தகைமைக்கு உரிய மெய்யோகியர்' என்றது, 'குருகூர் நம்பி, பாவினின்னிசை பாடித்திரிவனே" என்று ஆழ்வாரருளிச்செயலை வேண்டிப்பெற்று அதில்ஈடுபட்ட ஸ்ரீமதுரகவிகள் ஸ்ரீமந்நாதமுனிகள் முதலானவர்களை. அவர்கள் ஆழ்வார்பக்கல் தம்உணர்வைச்செலுத்தி மனத்தையொடுக்கி அவரைவழிபட்டு அவர்வாயினால் திவ்வியபிரபந்தங்களருளிச் செய்யக்கேட்டுக் கிருதார்த்தரானதனால், 'யோகியர்ஞானமென்னுங் கண்ணும் மனமும் செவியும் தவஞ்செய்தகாலத்திலே' என்றார். 'மாறன்செய்யும்' என்றவிடத்துத் தொக்குநின்ற ஆறும் வேற்றுமையுருபு, செய்யுட்கிழமைப்பொருளது: "கபிலரகவல்" என்றவிடத்துப் போல. (39)

http://acharya.org

40. காலத்திலேகுருகூர்புக்குக்கைக்கொண்மினோகடைநா
ளாலத்திலேதுயின்றோர்கொண்டவையிரண்டாயமைந்த
கோலத்திலேமுளைத்துக்கொழுந்தோடிக்குணங்கடந்த
மூலத்திலேசெல்லமூட்டியஞானத்தெம்மூர்த்தியையே.

(இ - ள்.) கடை நாள் - கற்பாந்தகாலத்திலே, ஆலத்திலே துயின்றோர் - ஆலிலையிலே யோகநித்திரை செய்தருள்பவரான எம்பெருமான், கொண்ட - (கருமவசத்தினாலன்றி இச்சையினால்) எடுத்துக்கொள்கிற, ஐ இரண்டு ஆய் அமைந்த கோலத்திலே - பத்துத்திருவவதாரங்களிலே, முளைத்து - அடிக்கொண்டு, கொழுந்தோடி - கொழுந்துவிட்டு வளர்ந்து, குணம் கடந்த மூலத்திலே செல்ல மூட்டிய - இயிகுணங்களைக்கடந்த ஆதிமூலப்பொருளாகிய அந்தஸ்ரீமந்நாராயணன்பக்கலிலே (பலரும்) செல்லுமாறு (தமதுபிரபந்தமுகமாகப் பலர்க்கும்) ஆதரத்தை யுண்டாக்கி யருளிய, ஞானத்து - தத்துவஞானத்தையுடைய, எம் மூர்த்தியை - எமது ஆசாரியமூர்த்தியான நம்மாழ்வாரை, காலத்திலே குருகூர் புக்கு கைக்கொண்மினோ - (பழுதேபலபகலும் போக்காது) இப்பொழுதேதிருக்குருகூர்க்குச்சென்று சரண்புக்கு உய்யுங்கள்;

'ஆழ்வாரவதரித்தருளின காலம் முந்திப்போயிற்றே, இக்காலத்து என்செய்யலாம்?' என்பாரை, நாதமுனிகள்போல ஆழ்வார்திருநகரியிலேநீர்சென்று ஆழ்வாரது அர்ச்சாவிக்கிரகத்தைப் பற்றி வழிபட்டு உய்வுபெறுங்கள் என்று உபதேசிக்கிறார். "சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச்சேவித்து" என்றாற்போல, 'காலத்திலேபுக்குக் கைக்கொண்மின்' என்றார். ஆல் என்ற மரத்தின்பெயர், முதலாகுபெயராய், அதன்இலையைக் குறித்தது.

ஆலத்திலே துயின்றகதை:—பிரமன்முதலான சகலதேவர்களுமுட்பட யாவும்அழிந்துபோகின்ற கற்பாந்தகாலத்திலே ஸ்ரீமகாவிஷ்ணு அண்டங்களையெல்லாம் தன்வயிற்றில்வைத்து அடக்கிக்கொண்டு ஏகார்ணவமான மகாபிரளயசமுத்திரத்திற் சிறுகுழந்தைவடிவமாய் ஆதிசேஷாம்சமான ஆலிலையின்மீது பள்ளிகொண்டு யோகநித்திரைசெய்கின்றனனென்பதாம்.

அப்பெருமான் துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனத்தின்பொருட்டுக் கற்பந்தோறும் உரியசமயங்களிற் கொள்ளுகிற மத்ஸ்யம் கூர்மம் வராகம் நரசிங்கம் வாமநன் பரசுராமன் தசரதராமன் பலராமன் கிருஷ்ணன் கல்கி என்ற தசாவதாரங்களின் ஸாரம் ஆழ்வார் என்பது, தேர்ந்தபொருள். ஐயிரண்டு-பண்புத்தொகை. மூட்டியஞானத்து - ஞானத்தைமூட்டிய எனினுமாம். எம்ஞானமூர்த்தி என்றுங் கொள்ளலாம். ஞானமாவது-முக்தியுணர்வு.(40)

41. மூர்த்தத்தினையிம்முழுவேழுலகுமுழுகுகின்ற
தீர்த்தத்தினைச்செய்யவேதத்தினைத்திருமால்பெருமை
பார்த்தற்கருளியபாரதத்தைப்பணித்தானுநின்ற
வார்த்தைக்குருகைப்பிரானுங்கண்டானம்மறைப்பொருளே.

http://acharya.org

(இ - ள்.) மூர்த்தத்தினை - ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தையும், இமுழு ஏழ் உலகும் முழுகுகின்ற தீர்த்தத்தினை - ஏழுவகைப் பட்ட இந்தஉலகங்களெல்லாம் அடங்குமிடமும் ஸ்வயம்பரிசுத்த முமான பரப்ரஹ்மத்தினது தன்மையையும், செய்ய வேதத்தினை - செவ்வியையுடைய வேதங்களையும், திருமால் பெருமை பார்த்தற்கு அருளிய பாரதத்தை-ஸ்ரீமந்நாராயணனாகிய ஸ்ரீகிருஷ்ணன் சிறந்த உண்மைப்பொருளை (அருச்சுனனுக்கு) உபதேசிக்கப்பெற்ற [ஸ்ரீபகவத்கீதை தன்னில் அடங்கப்பெற்ற] மகாபாரதத்தையும், பணித்தானும் - சொல்லியருளியவனான ஸ்ரீவேதவியாசபகவானும், நின்ற வார்த்தை குருகைபிரானும் - நிலைபெற்ற திருவாய்மொழி யாகிய திவ்விய ஸூக்தியையுடைய நம்மாழ்வாரும், (ஆகிய இரு வருமே), அ மறை பொருள் கண்டான் - அப்படிப்பட்ட [உணர் தற்குஅரிய] இரகசியமான வேதங்களின் சாரார்த்தங்களை அறிந்தவர்கள்; (எ - று.)

இவ்விருவருமே உள்ளபடியுணர்வாரில் தலைவராயினு ரென்ற படி. "கத்தம்போற் கேடு மூளநாருஞ் சாக்காடும், வித்தகர்க் கல்லா லரிது" என்றவிடத்தில் 'அரிது' என்பதனைத் தனித்தனி கூட்டியுரைத்தல்போல, இங்கு 'கண்டான்' என்பதையும் 'பணித் தானுங் கண்டான், குருகைப்பிரானுங் கண்டான்' என்று தனித் தனி கூட்டி முடிக்க. 'கண்டார்' என்று பன்மையான பாடம் ஓது வாருமுளர். வியாசமாமுனிவர் ஜீவாத்மபரமாத்ம ஸ்வரூபங்களை வரையறுத்து உணர்த்துகிற வேதாந்த ஸூத்திரங்களைச் செய்து வெளியிட்டதும், வேதங்களை நான்காகவகுத்து ஓதுவித்ததும், பஞ்சமவேதமான மகாபாரதத்தைச் செய்து உபதேசித்ததும் பற்றி, 'மூர்த்தத்தினை......பணித்தான்' என்றார். முழுவேழுலகு - ஈரேழுலகமாகிய பிரபஞ்சம். பார்த்தன் - வடமொழித் தத்தி தாந்தநாமம்; பிருதையின்மகன்: பிருதை-குந்தி. நின்ற வார்த்தை-நிலைபெற்ற புகழுமாம். (41)

[பொருள்வயிற்பிரியுந் தலைவனுக்குத் தோழி தலைவியின் ஆற்ருமை கூறல்.]

42. பொருளைச்சுவையென் றுபோவதெங்கேகுருகூர்ப்புனித
னருளைச்சுமந்தவன்கண்ணின்கடைதிறந்தாறுபட்டுக்
குருளைச்சுமந்துவெளிபரந்தோட்டருங்கொள்ளைவெள்ள
மருளைச்சுடர்மணித்தேரையத்தோவந்துறைக்கின்றதே.

(இ - ள்.) குருகூர் புனிதன் அருளை சுமந்தவள் - திருக்குரு கூர்க்குத் தலைவனும் பரிசுத்தனுமான தலைமகனது கருணையை மிகுதியாகப்பெற்றவளான தலைமகளினது, கண்ணின் கடை - கண்களின் நுனியிடத்தை, திறந்து - திறந்து அவ்வழியாகவெளிப் பட்டு, ஆறு பட்டு - ஓர்ஆருகி, குருளை சுமந்து வெளி பரந்து ஓட்டரும் - (பலவகை) விலங்கின்குட்டிகளை இழுத்து மேற் கொண்டு வெளியானநிலமெங்கும் பரவி ஓடுவதான, கொள்ளை வெள்ளம் - மிகுதியாகிய (கண்ணீர்ப்) பெருக்கானது, உருளை

http://acharya.org

சுடர் மணி தேரை - சக்கரங்கள்பூண்டதும் ஒளிவீசும்இரத்தினங்கள் பதித்ததுமான (தலைமகனது) தேரை, அந்தோ - ஐயோ,— வந்து உதைக்கின்றதே - வந்துமோதுகின்றதே! (இங்ஙனமாக), பொருளை சுவை என்று போவது எங்கே - (தலைமகன்) செல்வத்தை இனியதென்றுஎண்ணி (அதன்பொருட்டு இவளைப் பிரிந்து) செல்வது எவ்வாறோ! (எ - று.)

தலைவன் தலைவியை மணஞ்செய்து கொண்டதன்பின்பு பிரியும் பிரிவு, ஆறுவகைப்படும்; ஓதற்பிரிவு, காவற்பிரிவு, பகைதணிவினைப்பிரிவு, வேந்தற்குற்றுழிப்பிரிவு, பொருள்வயிற்பிரிவு, பரத்தையிற்பிரிவு என: அவற்றில், இங்கு எடுத்துக்கொண்டது, பொருள்வயிற்பிரிவு; அதாவது - பொருளீட்டுதல் காரணமாகப் பிரியும்பிரிவு: தாதை முதாதை முதலிய தன்முன்னோரால் படைக்கப்பட்ட பொருள்கொண்டு இல்லறஞ்செய்தால் அதனால்வரும் பயன் அவர்க்குஆம்அத்துணையல்லது தனக்குஆகாமையால் தனது பொருள் கொண்டு இல்லறஞ்செய்தற்காகப் பொருள்தேடுதற்பொருட்டுச் செல்வம் நிறைந்த தலைமகன் பிரிந்துசெல்வனென்க; அங்ஙனம்பிரியக்கருதிய தலைவன் தனதுபிரிவைத் தானேதலைவிக்கு உரைத்த லரிதென்று கருதித் தோழியைநோக்கி, 'நீ அவட்கு உணர்த்துமாற்று உணர்த்து' என்றுசொல்ல, அங்ஙனம் தோழி உணர்த்தியவளவிலே, அதுகேட்டதலைவி மிகவருந்தி ஆற்றாது கண்ணுங் கண்ணீருமாய் மிகுதியாகப்புலம்ப, அவ்வருத்தங்கண்ட தோழி தலைவனிடம் வந்து அத்தலைவியின் பிரிவாற்றாநிலைமையைக் கூறுதல், இச்செய்யுளிற் குறிக்கப்பட்ட விஷயம். மெய்ப்பாடு - இளிவரலைச்சார்ந்த பெருமிதம்; பயன் - தலைமகளைச் செலவழுங்குவித்தல்; விரைந்துமீண்டுவரக்குறிப்பித்தலுமாம்.

'குருகூர்ப்புனிதனருளைச் சுமந்தவள்' என்றது, முன்னிலைப் படர்க்கை. 'குருகூர்ப்புனிதன் போவதெங்கே' என்றுகூட்டி, அதனையும் அங்ஙனம் வந்த திணைவழுவமைதியெனக்கொள்ளலாம். இனி, 'புனிதன்' என்றதை இயல்பாகிய அண்மைவிளியெனினும் அமையும்; (திருக்கோவையாரிலே பொருள்வயிற்பிரிவில் ஆற்றாமை கூறலென்னுந் துறைக்கு இலக்கியமான செய்யுளில் 'மலர்க் கண்கள் முத்தம்வளர்க்கும், தேனக்கதார்மன்ன னென்னோ வினிச் சென்றுதேர்பொருளே" என்றவிடத்து, பேராசிரியர் 'மன்ன னென்பது, சண்டு முன்னிலைக்கண் வந்தது; இயல்புவிளி யென் பாரு முனர்' என்றமை காண்க.) தலைவனது தலையளியை நிரம்பப் பெற்றவள் என்பது, 'புனிதனருளைச் சுமந்தவள்' என்றதன் பொருள். 'கண்ணின்கடை திறந்து ஆறுபட்டுக் குருளைச்சுமந்து வெளிபரந்து ஓட்டருங் கொள்ளை வெள்ளம்' என்றதும், 'தேரை வந்து உதைக்கின்றது' என்றதும் - அதிசயோக்திவகையாற் கண்ணீர்ப்பெருக்கின் மிகுதியை வருணித்தவாறாம். ஆறுபட்டு - நதி போன்று. ("பணைமுகக்களியானை பன்மாக்களோடு அணிவகுத்தென சர்த்து" என்றபடி) யாற்றுவெள்ளம் தான்வருகிற மலை காடு முதலிய வழிகளி லுள்ள விலங்குகளை இழுத்துவரு மியல்பைக் கண்ணீர்பெருக்கைச் சிறப்பிக்கும் அடைமொழியாக்கி,

http://acharya.org

'குருளைச்சுமந்துவெளிபரந்து ஒட்டருங்கொள்ளைவெள்ளம்' எனப் பட்டது.

'குருளை' என்ற இளமைப்பெயர் - நாய்முதலியவற்றின் குட்டிக்கு உரிய தாதலை "நாயே பன்றி புலி முயல் நான்கும், ஆயுங்காலைக் குருளையென்ப", "நரியும் அற்றே நாடினர் கொளினே" என்ற தொல்காப்பியச் சூத்திரங்களாலுணர்க. இரண்டாம்வேற்றுமைத்தொகையாதலால் 'குருளைசுமந்து' என வரற்பாலது, எதுகைநயம்நோக்கி 'குருளைச்சுமந்து' என விரித்தலென்னுஞ் செய்யுள்விகாரம் பெற்றது. 'ஒட்டார்தரும்' என்பது, 'ஒட்டரும்' என்று விகாரப்பட்டது; "ஒட்டர்தேதிரா நீ யாரென" என்ற கம்பராமாயணத்திலும், "உள்ளமுருகியென்கொங்கையோட்டந்து பாய்ந்திடுகின்ற" என்ற பெரியார் திருமொழியிலும் 'ஒட்டந்து' என்பது, 'ஓட்டந்து' என்று விகாரப்பட்டுவந்தமை காண்க.) உருள்வது உருளை யெனக் காரணக்குறி. பொருளைச்சுவையென்ற- "வறியார் இருமையறியார்," "இல்லார் இருமையும்நல்ல எய்தார்," "அறனீனும் இன்பமுமீனும் திறனறிந்து, தீதின்றிவந்த பொருள்," பொருளாலிரண்டும்பெறலாகும்" என்று பொருளின் இன்றியமையாமையையும் பயன்களையும் பாராட்டி அதனிடத்து விருப்பம்வைத்து என்றபடி. 'உருளைச்சுடர்மணித்தேரைவந்து உதைக்கின்றது' என்றதன் உட்கோள், பிரயாணத்துக்குத் தடை செய்கின்றதென்பது.

கம்பநாடர்பக்கல் கருணைகொண்டு அவர்க்குக் காட்சிதந்த ஆழ்வார் அங்ஙனமே ஸதாஸாந்நித்தியந்தராமற் பரம்பொருளை நாடித் திவ்வியதேசயாத்திராபேக்ஷையுடையராய் நின்ற நிலையில் அப்பிரிவை ஆற்றாது வருந்திய கம்பநாடரது நிலையை அன்பர்கள் ஆழ்வார்பக்கல் விண்ணப்பஞ்செய்தல், இதற்கு உள்ளுறை பொருள்; விவரம் தேர்ந்துணர்க. (42)

[மருங்கணைதல்.]

43\. வந்தடிக்கொண்டனகொங்கைகண்மாறன்குருகைவஞ்சி
கொந்தடிக்கொண்டகுழலுங்கலையுங்குலைந்தலையப்
பந்தடிக்குந்தொறுநெஞ்சம்பறையடிக்கின்றதென்றுற்
செந்நடித்தன்னமருங்கிற்குண்டோநிற்குஞ்சிக்கனவே.

(இ - ள்.) மாறன் குருகை வஞ்சி-சடகோபருடைய திருக்குருகூரிலேயுள்ள வஞ்சிக்கொடிபோல் மெல்லிய இந்த இளமாதினிடத்து, கொங்கைகள் வந்து அடிக்கொண்டன - தனங்கள் மங்கைப்பருவந்தோன்றவர்தெழுந்து மார்பினிடமெல்லாம் தம்மிடமாகக் கொண்டன; (இங்ஙனம் தனபாரம் மிக்கதனுல்), கொந்து அடிக்கொண்ட குழலும் கலையும் குலைந்து அலைய பந்து அடிக்கும் தொறும் நெஞ்சம் பறை அடிக்கின்றது - பூங்கொத்துக்கள் நிரம்பச்சூட்டப்பெற்ற கூந்தற்பாரமும் உடுத்தஆடையும் நிலைகுலைந்து சோருமாறு (இம்மெல்லியலாள்) பந்தடிக்கும்பொழுதெல்லாம்

http://acharya.org

(இவளிடைக்கு என்னாகுமோ வென்று) என்மனம் பறையடிக்கின்றதுபோலப் படபடவென்று துடிதுடிக்கின்றது; என்றால்—, செம் தடித்து அன்ன மருங்கிற்கு இற்றும் இக்கனவு உண்டோ - செவ்விய மின்னலைப்போன்ற இவளிடைக்கு (இப்பாரங்களைச் சுமந்து துவளாது) நிற்கும் வன்மை உளதாமோ? (எ - று.)

இயற்கைப்புணர்ச்சி பாங்கற்கூட்டம் இவற்றின்பின்னர்ப் பாங்கியிற் கூட்டத்தால் இரவுக்குறியிலே தலைவன் தலைவியைத் தனியிடத்திற் சந்தித்துச் சிலஅன்புமொழிபேசும்போது அவள் பெருநாணினளாதலால் அவன்முன் நிற்கமாட்டாது நாணித் தலைவணங்கி வருந்தாநிற்க, தலைவன் தனது மிக்கஆதரவினால் அவ்வருத்தந் தணிப்பான்போன்று முலையொடு முனிந்து அவளிறுமருங்குல் தாங்கி நெருங்கித் தழுவுபவனாய் அவளது இடையின் மென்மையையும் தனபாரத்தையும்பற்றிக் கவன்று உரைக்கிற வியாஜத்தால் தன்காதன்மிகுதி புலப்படச்சொல்லும் சிலவார்த்தை, இச்செய்யுளிற்குறித்த பொருள். மெய்ப்பாடு-உவகை; பயன்-தலைமகளைச்சார்தல். தலைமகள் அவ்வகை நின்றமை கண்ட தலைமகன் இவ்வகைசொல்லிச் சார்ந்தா னென்பது. இத்துறை - தஞ்சைவாணன்கோவையில் 'வாடிடை நோக்கி வருந்தினன்போல, ஆடமைத்தோளியை யார்வமோடணைதல்' என்ற பெயராற் குறிக்கப்பட்டுள்ளது; மெய்தொட்டுப்பயிறலும் இத்தன்மைத்தே.

'மாறன்குருகைவஞ்சி' என்றது-முன்னிலைப்படர்க்கை. வஞ்சி - உவமையாகுபெயர். கொங்கு=கொத்து: இதனை மெலித்தல் விகார மென்னலாம். நெஞ்சம் பறையடிக்கின்றது - "இருவர்மா மனமும் பறையறைந்தயர்வுடன்நடுங்க" என்ற வில்லிபுத்தூரார் பாரதங் காண்க. செம் தடித்து - செந்நிறமான மின்னல் எனினுமாம்.

ஆழ்வார்பக்கல் ஆதரத்தால் அவரருகில் வந்த பாகவதர், அவரது பக்தி வளர்ச்சியையும் பிரணயம் முதலிய முயற்சிகள் நிலைகுலையும்படி நேர்கிற பிரபஞ்சபோகங்களுக்கு அவர் உரியரல்லாமையையும் அவரது வைராக்யத்தின் முதிர்ச்சியையும் பாராட்டிக்கூறும் வார்த்தை, இதற்கு உள்ளுறை பொருள். ஸ்வாபதேசத்தில், கொங்கை - பக்தி; பகவத்பாகவதரைச் சேர்ந்து அநுபவித்தற்கு உபகரணமானதென்க. வந்து அடிக்கொள்ளுதல், அதன் முதிர்ச்சி; அதாவது - பேற்றுக்குச்சாதனமான பரமபக்தியாகப் பரிணமித்தல். கொத்தாடிக்கொண்ட குழல்-விதிமுறைப்படி செய்யும் பிரணயம். கலை-"மாதற்றத்தான் மூத்துறும்" என்றபடி அரையில் ஆடையை இறுக உடுத்துக்கொண்டு மூர்த்துற்றுச்செய்யும் முயற்சி. இவைகுலையும்படி பந்தடித்தல் - பிரபஞ்சபோகங்களை தன்வசப்படுத்துவதாக மோதுதல். அதற்கு அவருரியரல்லரென்பது, 'நெஞ்சம் பறையடிக்கின்றது' என்றதனால் விளக்கப்பட்டது. சுற்றடி - பக்திகாரியமான வைராக்கியத்தின் முதிர்ச்சியைத் தோற்றுவிக்கிறது; 'இடையழுகென்பது, ஒன்றும்பொருத வைராக்கியத்தை' என்பர் அழகிய மணவாளசீயர்: அன்றி, வேறொன்றான் தொடர்ச்சி யுண்டானால் இடையே கெடும்படியான இடையறுத

http://acharya.org

அன்பின் மேன்மையைச் சொல்லியதுமாம்: விவரம், விரிப்பிற் பெருகும்; கேட்டுணர்க.

இனி, இச்செய்யுட்குத் துறையும் பொருளும் உள்ளுறை பொருளும் பிறவாறு உரைக்கவுங்கூடும். கல்வியிற்பெரியராய கம்பர் இயற்றிய கம்பசூத்திர மெனத்தக்க அருஞ்செய்யுள்களின் ஆழ்பொருள்களை நுண்ணிதாக உரைப்பான்புகின் வரம்பின்றிப் பெருகுமென்பது, வெளிப்படை. (43)

44. கனவாயினவுந்துரியமுமாயவையுங்கடந்து
மனவாசகங்களைவீசியமாறனைமாமறையை
வினவாதுணர்ந்தவிரகனைவெவ்வினையைத்தொலைத்த
சினவாரணத்தைக்குருகைக்கரசனைச்சேர்ந்தனமே.

(இ - ள்.) கனவு ஆயினவும் - சொப்பனாவஸ்தையின் வகைகளையும், துரியமும் - துரியாவஸ்தையையும், ஆயவையும்- மற்றும் அவற்றிற்கு இனமான ஜாக்ராவஸ்தை ஸுஷுப்தியவஸ்தை என்றவைகளையும், கடந்து—, மன வாசகங்களை வீசிய - மனோவாக்குகளைக்கடந்த, மாறனை - மாறனென்னுந் திருநாமமுடையவரும், மா மறையை வினவாது உணர்ந்த விரகனை - சிறந்தவேதங்களை (எவரிடத்தும்) கேளாமல் (தாமே எம்பெருமானருளால்) அறிந்த ஞானவிசேஷத்தையுடையவரும், வெவ்வினையைதொலைத்த சினம் வாரணத்தை - கொடியகருமமாகிய கட்டுத்தறியை முறித்தொழித்த கோபமுடைய யானை போன்றவரும், குருகைக்கு அரசனை - திருக்குருகூர்க்குத் தலைவருமான நம்மாழ்வாரை, சேர்ந்தனம் - சரணமடைந்தோம்; (எ - று.)

'ஆழ்வார் திருவடிகளே சரணம்' என்றபடி, அநாதிகாலமாய் எண்ணிறந்த பலபிறப்புக்கள்தோறும் மாறிமாறித் திரிந்த நாம் இன்று ஆழ்வாரைச் சேர்ந்து உய்யப்பெற்றோம் என்ற ஆகர்தாதிசயத்தாலும், ஆழ்வார் செய்தருளிய உபகாரங்களையுணர்ந்து அவரைவணங்கிக் கடமைசெலுத்தினேமென்ற மகிழ்ச்சியினாலும், இங்ஙனங் கூறினர். ஜாக்ரம், ஸ்வப்நம், ஸுஷுப்தி, துர்யம், துர்யாதீதம் என்று அவஸ்தை ஐந்து வகைப்படும். ஜாக்ரம் - விழிப்புநிலை. ஸ்வப்நம் - கனாநிலை. ஸுஷுப்தி - மனமொடுக்கம்: அயர்ந்த தூக்கம். துர்யம் - உயிரொடுக்கம், சமாதி, ஆத்மா தன்னைத் தான் காணுதல். துர்யாதீதம் - ஜீவாத்மா ஒடுங்கிப் பரமாத்மாவைத் தரிசித்து ஆனந்தத்திலமூழ்ந்தி நிற்கும் நிலை. மதபேதத்தால் இவற்றைப் பிறவாறு உரைத்தலும் உண்டு. அவற்றையெல்லாம் பரந்த நூல்களிற் கண்டுகொள்க. 'கனவாயினவுந்துரியமுமாயவையுங் கடந்து' என்றது - ஜாக்ரம் ஸ்வப்நம் ஸுஷுப்தி துரியம் என்ற நான்கு நிலைகளையுங் கடந்த துரியாதீத நிலையிலே நின்று என்றபடி. 'மனவாசகங்களை வீசிய' என்றது - மனமும் சொல்லும் பிறபல விஷயங்களிற் செல்லுந் தன்மையைப் போக்கி அவற்றை எம்பெருமான் பக்கலிலேயே உபயோகித்த என்றபடி; அகக்கரணத்தையும் புறக்கரணத்தையும் வென்ற என்க. 'வெவ்வினையைத் தொலைத்த சினவாரணம்' என்றதில் 'சடகோ

http://acharya.org

பன்' என்ற திருநாமத்தின் பொருள் தோன்றும். களவாயினவும் துர்யமும் ஆய் அவையும் கடந்து என்று பிரித்து, எல்லா நிலைமைகளிலும் பரப்ரஹ்மமயனாய் என்று உரைத்தலும் ஒன்று. மாமறையை வினவாது உணர்ந்த விரகன் - மயர்வறமதிநலம் அருளப் பெற்றவர். ளைவாசகங்கள் - பன்மை விகுதி பெற்ற அஃறிணையும்மைத்தொகை. துர்யம் அல்லது துரீயம் - வடசொல்: நான்காவது நிலை என்று பொருள்; இதற்கு மேம்பட்டது துர்யாதீதமென்க. (44)

45. *சேராதனவுளவோபெருஞ்செல்வர்க்குவேதஞ்செப்பும்*
பேராயிரந்திண்பெரும்புயமாயிரம்பெய்துளவந்
தாரார்முடியாயிரங்குருகூர்ச்சடகோபன்சொன்ன
வாராவமுதங்கவியாயிரமவ்வரியினுக்கே.

(இ - ள்.) அ அரியினுக்கு - அந்த ஸ்ரீமந்நாராயணனுக்கு,— வேதம் செப்பும் பேர் ஆயிரம் - வேதங்கள் கூறிய திருநாமங்கள் ஆயிரமாம்; திண்பெரும் புயம் ஆயிரம் - வலிய பெரிய தோள்கள் ஆயிரமாம்; பெய் துளவந்தார் ஆர் முடி ஆயிரம் - சாத்திய திருத்துழாய்மாலை பொருந்திய திருமுடிகள் ஆயிரமாம்;(இப்படி எல்லாம் ஆயிரமாகவே அமையப் பெற்றுள்ள எம்பெருமானுக்கு), குருகூர் சடகோபன் சொன்ன ஆரா அமுதம் கவி ஆயிரம் - திருக்குருகூரில் அவதரித்த நம்மாழ்வார் பாடிய தெவிட்டாத அமிருதம் போன்ற பாசுரங்கள் ஆயிரமும் அமைந்தன; பெருஞ் செல்வர்க்கு சேராதன உளவோ - மிக்க செல்வமுடையார்க்கு மற்றுஞ்சேராதபொருள்களும் உண்டோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)

பேர் புயம் முடி என்பவற்றை ஆயிரமாயிரமாகவுடைய எம்பெருமானுக்கு ஆழ்வாரருளிச்செய்த திருவாய்மொழிப்பாசுரம் ஆயிரமும் வாய்த்தன வென்ற சிறப்புப்பொருளை, பெருஞ்செல்வர்க்கே மென்மேற் பொருள் சேருமென்ற பொதுப்பொருள்கொண்டு விளக்கியதனால், **வேற்றுப்பொருள்வைப்பணி.** பேர் ஆயிரம்-ஸஹஸ்ரநாமம். "புரமாயிரம் திருக்கண்மலராயிரம் புண்டரிகக், கரமாயிரம் கழற்கான்மலராயிரம் கண்ணிமுடிச், சிரமாயிரம் திருநாமமுமாயிரம் செய்யகைபி, லரமாயிரங் கொண்ட திண்டிறலாழியரங்கருக்கே" என்ற திருவரங்கத்துமாலைச்செய்யுள் இங்குஉணரத்தக்கது. இங்கே 'ஆயிரம்' என்பது, அளவில்லாத தென்னும் பொருளது; அங்ஙனங்கொள்ளாவிடின், புயமாயிரமும், முடியாயிரமும் சேராவாம். ஆகவே, அளவற்ற கைமுதலிய சகலஅங்கங்களையுமுடையவ னென்பதாம்: அபரிமிதமாய் அற்புதமாயிருக்கிற மகாஞானமும் மகாசக்தியுமுள்ளவன் எம்பெருமான்என்பது தேர்ந்தபொருள். பெருமான் சகல இந்திரியங்களாலேயாதல் ஓர் இந்திரியத்தாலேயாதல் திருமேனியாலேயாதல் திவ்யாத்ம ஸ்வரூபத்தாலேயாதல் எல்லாவற்றையும் எப்போதும் எல்லாவிதத்திலும் அறிகின்றவனும் செய்கின்றவனுமாயிருக்கின்றானென்பது முக்கியமானகருத்து. இங்ஙனமேயன்றி, அநேகம்திருமுடிகள் திருக்கைகள் திருக்கண்கள் திருவடிகள் முதலான அவயவங்களாற் செறிந்

http://acharya.org

திருக்கின்றான் பகவானென்பது கருத்தன்று. அளவில்லாத கண் முதலியவற்றை யுடையவன் எப்படி அளவில்லாத காட்சி முதலானவற்றை யுடையவனாயிருப்பனோ அப்படியே பகவானும் என்று எடுத்துக்காட்டினபடியாம். மற்றும், விசுவரூபங்காட்டுகிற சமயங்களில் மாத்திரம் எம்பெருமான் பல அவயவங்களைக் கொள்ளுதலு முண்டு. இங்குச்சிலர் உலகமெல்லாம் பகவானுடைய சொரூபமாதலாலே உலகத்திலுள்ளோருடைய முடி புயம் முதலியவையெல்லாம் அவனுடையவையாமெனக் கருத்துக்கூறுவர்; அது பலவிதத்திலும் பொருந்தாதென அறிக. இது, திவ்யாத்மஸ்வரூபம் கூறியபடி. ஆரா அமுதம் - உண்ண உண்ணத் தெவிட்டாத [போதுமென்னுந் திருப்தியை யுண்டாக்காத] அமுதம். (45)

[தோழி இரங்கல்.]

46\. *அரிவளை பொன்மகிழாயிழைக்கேயுங்கொலந்திவந்து*
முரிவளைமுத்துஞ்சினையுமயங்கமுறைசெறுத்து
வரிவளையும்மன்னமுந்தம்மிலேவழக்காடவலம்
புரிவளையூடறுக்குங்குருகூரெம்புரவலனே.

(இ - ள்.) முரி வளை முத்தும் - பெரியசங்கினாற் பெறப்பட்ட முத்தும், சினையும்- (அன்னப்பறவையின்ற) முட்டையும், மயங்க- (நீர்த்துறையிலே) கலந்து மாறுபடினவாக, (அவற்றைக்குறித்து), வரி வளையும் அன்னமும் - உட்சுழியையுடைய சங்கும் அன்னப் பறவையும், முறை செறுத்து தம்மிலே வழக்கு ஆட - (ஒன்றன் பொருளை மற்றொன்று தனதென்று மயங்குதலால்) நீதிமுறை கடந்து தமக்குளே [ஒன்றோடொன்று] வழக்கிட, வலம்புரிவளை ஊடு அறுக்கும் - வலம்புரிச்சங்கு சென்று நடுநின்று அவற்றின் போரை விலக்குதற்கிடமான, குருகூர் - திருக்குருகூரில் தோன்றிய, எம் புரவலன் - எமது தலைவன், அந்தி வந்து - (இன்றை) மாலைப்பொழுதில் மீண்டுவந்து, அரி வளை பொன் மகிழ் - வண்டுகள் சூழ்ந்து மொய்க்கப்பெற்ற அழகிய தனது மகிழம்பூமாலையை, ஆயிழைக்கு ஈயும் கொல் - தேர்ந்தெடுத்தணிந்த ஆபரணங்களையுடையவளான இம்மடமங்கைக்குக் கொடுத்தருள்வனோ? (எ - று.)

மணந்து பிரிந்த தலைவனது பிரிவை யாற்றாது வருந்திய தலைவியின் நிலைமை கண்டு தோழி இங்ஙனம் இரங்கிக்கூறினளென்க. பிரிந்த நிலையிலே தலைவி தலைவனது மலர்மாலையைப் பெற்றாயினும் மகிழக்கருதியதனைக் குறித்து, 'மகிழ் ஈயுங்கொல்' என்றது. இது, தனதுமாலை இவளுடம்பிற்படும்படி கலவியின்பத்தைத் தந்தருள்வனோ வென்ற குறிப்புமாம்; இடக்கரடக்கலின்பாற்படும்; அன்றி, ஒளியையுடைய வளையையும் பொன்போல விரும்பப்படுகிற அருமையான மகிழ்ச்சியையுந் தருவனோ வென்றலு மொன்று; பிரிந்தகாலத்திலே கைவளைகழலுமாறு தலைவிக்கு நேர்ந்த உடல் மெலிவு மீண்டுவந்து கலந்தவளவிலே தணிதலால் அவ்வளை கழலாதவாறு மகிழ்ச்சியால் உடல்பூரிக்கச்செய்வனோ வென்பது தாற்பரியம். அரி வளை - (தான்) கவர்ந்த வளை எனினுமாம்; ஹரித்தல்-கவர்தல்: தன்பிரிவு தலைவியினுடலை மெலிவித்து வளைகழலுமாறு செய்தது பற்றி 'அரிவளை' என்றதெனக்

http://acharya.org

கொள்க. பொன்மகிழ் - பொன்னிறமான மகிழமலர் என்றும் பொருள் படும். ஆயிழை-தலைவனுக்கு மகிழ்ச்சிவிளைத்தற்பொருட்டுச் சிறந்த அணிகலங்களைத் தெரிந்தெடுத்து அணிந்து தலைவன் குறித்தகாலத்திலே மீண்டுவருவதை எதிர்நோக்கி நிற்கின்றவளென்றபடி. 'அந்திவந்து' என்றதைப்பிந்தின அடிகளில் வரும் நாட்டுவர்ணனையோடு சேர்த்து, மகிழ் சயுங்கொல் - மகிழமலர் மாலையை (இலட்குத் தாரகமாக)க் கொடுத்தனுப்புவனோ வென்று பொருள் கொள்வாருமுளர்; அவர் 'அந்திவந்து' என்பதற்கு - அந்திப்பொழுது வந்ததனாலென்று உரைப்பர்.

சங்கீன்ற முத்தும், அன்னப்பறவையீன்ற முட்டையும் வடிவொப்புமையுடைமையால், அவற்றை மாறாடிச் சங்கும் அன்னமும் வழக்கிட்டன வென்க; **மயக்கவணியின்** பாற்படும்; வழக்காவது - ஒருபொருளைத் தனித் தனியே எனது எனது என்றிருப்பார் அதுகாரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருளின் மேல் தொடர்வது; வியவகாரம். சங்கும்அன்னமும் போராடி நிற்கையில் இவ்விரண்டும் மதிக்கத்தக்க பெரிய வெண்மையான வடிவமுடைய வலம்புரிச்சங்கு அவை அஞ்சி அகலும்படி அவற்றின் நடுவிற் சென்றதையே, மத்தியஸ்தனாய்நின்று வழக்குத்தீர்த்ததாகக் குறித்தார். வலம்புரி - வலப்பக்கமாக உட்சுழிந்திருக்கும் உத்தம சங்கம். சங்குகளில் இதற்கு உள்ள தலைமையை "இப்பியாயிரமே சூழ்ந்தஇடம்புரியென்றுகூறும், ஒப்பில்சங்காயிரஞ்சூழ்தரும் வலம்புரி யென்றேறும்" என்ற நிகண்டினாலும் உணர்க. எம்புரவலன் - எம்மைப்பாதுகாத்தலில் வல்லவன். தலைவிக்கும் தனக்குமுள்ள ஒற்றுமையால், தோழி, 'எம்புரவலன்' என்றாள்; தலைவியைப் பாதுகாத்தலையே தன்னையும் பாதுகாத்தலாகக் கருதுந் தன்மையள்.

ஆயிழை - வினைத்தொகை யன்மொழி. அந்தி - ஸந்த்யா; இரவோடு பகல்கூடும் பொழுதாகிய காலைச்சந்திக்கும் பகலோடு இரவு கூடும் பொழுதாகிய மாலைச்சந்திக்கும் பொதுவான இச்சொல், இங்கு, சிறப்பாய், மாலைப் பொழுதை யுணர்த்திற்று. அது பிரிந்தார்க்கு வருத்தத்தை மிகுவிக்குங் காலமும் பிரிந்து வெளிச்சென்ற ஆடவர் மீண்டுவருவதற்கு உரிய காலமுமாதல் பற்றி, 'அந்தி வந்து சயுங்கொல்' என அக்காலத்தில் வருதல் வேண்டப்பட்டது. மூரி-மூரிஎன்பதன் விகாரம்; இதனை முத்துக்குக்கூட்டி 'பெரிய முத்து' எனக் கொள்ளுதல் ஏற்கும். சங்கிற்கு 'வளை' என்பது, உட்சுழிந் திருத்தல்பற்றிவந்த காரணக்குறி. செறுத்தல் - அழித்தல்; எங்கேனும் தடுமாற்றத்தினாற் குழப்பமுண்டானால் அதனை அங்குச்சென்றுநின்று தீர்க்குந் தன்மையனை தலைவனென்பது, நாட்டுவளங்காட்டவந்த அடைமொழியினாற்போந்த பொருள்; இங்ஙனம் கூறினது, ஆறுவகைப்பிரிவினுள் இது பகைதணிவினைப்பிரி வென்பதைக் காட்டும். அஃதாவது—'இருவர் அரசர் தம்மிற்பொருப என்றவிடத்து அவரைச்சந்து செய்வித்தற்குப்பிரியும் பிரிவு. தூதுவர்போலச் சந்துசெய்வித்தற்குப் பிரியுமென்பதன்று: இருவர் அரசர் நாளைப்பொருதும் இன்றுபொருதுமென்றிருந்த நிலைமைக்கண் தான் அருளரசனாகலின் இம்மக்களும்

http://acharya.org

இவ்விலங்குகளு மெல்லாம் பட இவ்விரண்டு குலத்திற்கும் ஏதம் நிகழும்: அதனால் இப்போரொழிப்பனென்று இருவரையும் இரந்து சந்துசெய்வித்தலு மொன்று; அல்லதூஉம், தேவரும் அசுரரும் அமர்செய்த காலத்துத் தேவர்களையும் அசுரர்களையும் ஒருவீர் ஒருவீர் மிக்காரை ஒறுப்பல் யானெனப் பாண்டியன் மாகீர்த்தி சந்துசெய்வித்தது போல், இருவரின் மிக்குச் செய்தீரை யொறுப்பலென்று சந்துசெய்வித்தலு மொன்று: இருவரையும் ஒறுக்குந் துணை ஆற்றலுடையனுகலா னென்பது; அஃதே யென்னின் தன் அகத்து இருந்துவிட அமையாதோ? அன்ன ஆற்றலனுகலான், தான் செல்லவேண்டுமோ? எனின்,—செல்ல வேண்டும்: என்னை காரணமெனின், காதலரைப்பிரிந்து ஒருகருமமுடிப்ப அதனின்மிக்க ஆள்வினையில்லை யென்பது; ஆதலாற் பிரிந்தே சந்துசெய்விக்கு மென்பது' என்ற இறையனுரகப்பொருளுரை வாக்கியங்களைக் காண்க. சங்கும், அதிற் சிறந்த சாதியான வலம்புரியும், தாமரையைவிரும்புந் தன்மையதான அன்னப்பறவையும், நீர்வளஞ்சிறந்த விடத்திலேயே பயிலும்.

நியானநிலையில் நின்ற கம்பநாடரது அகக்கண்ணுக்கு ஆழ்வார் புலனாகி மறைந்தவளவிலே அவரது ஸதாஸாந்நித்தியத்தை யபேக்ஷித்துப் பிரிவாற்றாமையால் வருந்துகிற கம்பநாடருடைய துயரத்தை நோக்கிய அன்பர்கள் 'ராஜஸதாமஸ காரியங்களைப் போக்கிச் சாத்துவிககாரியத்தையே நிலைநிறுத்துபவரும் திவ்விய தேசத்திலவதரித்து அங்கேயே வாசஞ்செய்பவரும் அடியார்களைப் பாதுகாத்தலையே தமக்கு ஸ்வரூபமாக வுடையவருமான நம்மாழ்வார் இக்கம்பநாடர்க்கு உரிய சமயத்தில் வந்து தமது இனிமையைத் தந்து தலையளிசெய்யவேணுமென்று ஆதரத்தோடு கூறிய வார்த்தை, இதற்கு உள்ளுறைபொருள். அரிவளை பொன் மகிழ்—ஸாரக்ராஹிகள் மிகவிரும்பி விடாது சூழப்பெறுவதான தமது காட்சியின்பம்: ஆயிழை=ஆழ்வார் திருவுள்ளத்தை மகிழ்விக்கும்படியான சற்குணபூர்த்தியுடையவர்; நல்லோர்க்கு நற்குணமே ஆபரணமாம். அந்திவருதல்—உரியசமயத்தில் உபேக்ஷியாதுவருதல். (இது, தொகுத்துச்சுட்டல்; வகுத்து உணர்ந்துகொள்க.) (46)

[தலைவி கடலைநோக்கித் தேர்வழிதூர லென்றல்.]

47. புரைதுடைத்துப்பெரும்பொய்யுந்துடைத்துப்பிறர்புகலு
முரைதுடைத்தங்குள்ளவூசறுடைத்தெம்முறுபிறவித் [நைக்
துரைதுடைத்தாட்கொண்டதொண்டர்பிரான்றுறைநீர்ப்பொரு
கரைதுடைக்குங்கடலேதுடைபோலன்பர்காற்சுவடே.

(இ-ள்.) புரை துடைத்து-(ஐம்பொறிகளாலுண்டாகிற) குற்றங்களைப் போக்கி, பெரும் பொய்யும் துடைத்து - (அவற்றிற்கெல்லாம் மூலகாரணமாகிற) பெரும்பொய்யாகிய மகாமாயையையும் போக்கி, பிறர் புகலும் உரை துடைத்து - பரசமயத்தார் சொல்லும் வாதங்களைப் பொருந்தாமை காட்டிக் கழித்து, அங்கு

http://acharya.org

உள்ள ஊசல் துடைத்து - அவ்வாறு பரதத்துவ நிர்ணயஞ்செய்கிற விஷயத்திலுண்டாகிற தடுமாற்றத்தையுந்தீர்த்து, எம் உறு பிறவி துயர் துடைத்து ஆட்கொண்ட - (விசேஷத்தால்) எமக்கு நேரும் பிறவித்துன்பத்தின் விரைவைத்தடுத்து எம்மைஅடிமை கொண்டருளிய, தொண்டர் பிரான் - (திருமாலின்) மெய்யடியார்கட்குத் தலைவரான நம் ஆழ்வார்க்கு உரிய, துறை - திருமஞ்சனத் துறைமுகத்தையுடைய, நீர் பொருநை - நீரான்மிக்க தாமிரபர்ணி நதி, கரை துடைக்கும் - (கடலைநோக்கித் தான் பெருவெள்ளமாக வரும் விசையினுற்) கரையை உடைக்கப்பெற்ற, கடலே—! அன்பர் கால் சுவடு - (என்பக்கல் தலையளிசெய்து சென்ற) காதலரது தேர்க்கால் சென்ற வழியை, துடையேல்-அழித்திடாதே; (எ-று.)

களவினுல் தலைமகளைப் புணர்ந்துநின்ற தலைமகன், அதனுல் ஊரெங்கும் பழிபரவுதலை யறிந்து, அப்பழிதூற்ற லடங்குமாறு அவளைச் சிலநாள்பிரிந்திருக்கக் கருதி, அதனை அவட்குக் கூறுமலே தான் பிரிதலை அவள் அறிந்தால் வருந்துவளென்று அவளறியாதபடியும் ஊரார றியாதபடியும் அவள்முகங் காண்கின்ற பொழுது தான் போகமாட்டாமையாலும் இருளிலேபிரிந்து செல்ல, பின்பு அப்பிரிவையறிந்து ஆற்ருது வருந்துகின்ற தலைமகள், அவனது தேர்ச்சக்கரஞ்சென்ற சுவட்டை நோக்கி அவன் மீண்டுவருமளவும் அதனையே தனது உயிர்க்குப் பற்றுக்கோடாகப் பாவித்துப் பார்த்துக்கொண்டிருக்கையில், அங்ஙனம் பிரிந்திருந்து இரங்குமிடம் கடற்கரையாகிய நெய்தல்நிலமாதலாலே அத்தேர்க்கால் சுவட்டைக் கடலின் அலை வீசிவந்து அழிக்கப்புக அழித்திடாதேயென்று அதனை வணங்கிவேண்டியது, இது. திணை - நெய்தல். மெய்ப்பாடு - அழுகை; பயன் - அயர்வுயிர்த்தல். உள்ளதெல்லாங்கொடுத்து உஞ்சவிருத்திபண்ணி ஜீவிப்பார்போலத் தலைவரைப்போகவிட்டு அவர்போனவழியைப்பார்த்து ஆறியிருக்கிறேன், இதனை அழித்திடாதே என்று வேண்டினளென்க. அன்பர் தேர்க்காற்சுவடு, 'அன்பர் காற்சுவடு' எனப்பட்டது; நடந்து சென்றதாகக் கொண்டு, அவரது அடிச்சுவடு என்றலுமொன்று.

ஆழ்வார் தாம் பஞ்சேந்திரியநிக்கிரகஞ்செய்து மகாமாயையையும் ஒழித்தவராயிருந்ததோடு திவ்யப்பிரபந்தங்களிலே தாம் அருளிச்செய்த உபதேசத்தால் ஐம்பொறிகளின் கொடுமையையும் மகாமாயையின் பொல்லாங்கையும் எடுத்துக்கூறி அடியார்களும் அவற்றை ஒழிக்குமாறு செய்தமை தோன்ற 'புரைதுடைத்துப் பெரும்பொய்யுந் துடைத்து' எனப்பட்டது. ஆழ்வார் பிறர்புகலும் உரைதுடைத்தமை - அவரது 'பராங்குசன்' என்ற திருநாமத்தினாலும், திவ்யப்பிரபந்தங்களினாலும் விளங்கும். அவர் தடுமாற்றத்துக்கு இடமின்றிப் பரதத்வநிர்ணயஞ் செய்தமையை, அவரது அருளிச் செயல்களிற் காண்க. 'எம்' என்ற பன்மை - அவர்க்கு அடிமைப்பட்ட அனைத்துயிரையும் உளப்படுத்தும். ஆழ்வாருளால் அடியார்களுடைய கருமங்களுட் சஞ்சிதமும் ஆகாமியமும் அப்பொழுதே அறத்தொலையப் பின்புநின்ற பிராரப்த கருமமும்

http://acharya.org

சார்பின்றி வலிகுறைந்து அப்பிறப்பின் முடிவோடு ஒழிதலால் அவ்வுயிர்கள் தவறுதலிடுபெறுதல், 'எம்பிறவித்துயர் துடைத்து ஆட்கொண்ட' என்றதனாற் புலனும். ஆழ்வார்களனைவரினும் நம்மாழ்வார் அவயவியென்னும்படி தலைவராதலால், 'தொண்டர்பிரான்' எனப்பட்டனர். கரை - கடற்கரை. தாமிரபர்ணிநதி சென்று கடலிற்சேருஞ் சங்கமத்துறையிற் கடல் அலைமோதியெதிர்த்தலால், அந்நதியின்கரையை உடைக்குமென்றுங் கொள்ளலாம்.

கம்பநாடர், ஆழ்வாரைப் பிரிந்து வருந்துகிற நிலையில், அவர்பக்கல் தமதுமனோரதத்தை இடைவிடாதுசெலுத்தி அதனுலேனும் ஒருவாறு ஆறியிருக்கலாமென்று நினைக்கும்போது, அம்மனோரதப்போக்கை இடையிற் குலையாதிருக்கவேணுமென்று ஸம்ஸாரமாகிற கடலை நோக்கிப் பிரார்த்தித்துக் கூறுதல், இதற்கு உள்ளுறைபொருள். பின்புள்ளாரும் மனோரதத்தை "உள்ளமான தேர்" என்பது காண்க. அன்பர்கால்சுவடு - ஆழ்வாரது திருவடிபட்ட சுவடுமாம். ஸம்ஸாரத்தை 'கடல்' என்றது, பல துன்பங்களை மேன்மேல்தந்து அகப்பட்டவர் ஆழ்ந்திடும்படி பரவுந்தன்மையதாதலாலும், அளத்தற்கு அரிய பரப்புடைமையாலுமென்க. ஸம்ஸாரமாவது - எம்பெருமானது லீலாவிபூதி: ஆழ்வார்பக்கல் ஈடுபட்ட தமக்குத் தீங்கு செய்திடாமைப் பொருட்டு அந்தலீலாவிபூதிக்கு உள்ள ஆழ்வார்சம்பந்தத்தையெடுத்துக் காட்டி உறவு கொண்டாடியபடி. (இது, சுருக்கம்; பெருக்கம் ஆய்ந்துணர்க.) (47)

[செவிலித்தாய் நற்றாய்க்கு இருவர் காதலு முரைத்தல்.]

48. சுவடிறக்கத்தொடராசைக்களிற்றைத்தொடர்ந்திரண்டு
கவடிறக்கட்டியபாசந்தனைக்கண்பரிந்துசங்கக்
குவடிறக்குத்தியமாறப்பெயர்க்கொலையானைநங்கா
யிவடிறத்தொன்றும்படரந்திவானமிருள்கின்றதே.

(இ - ள்.) நங்காய் - மகளிரிற் சிறந்தவளே!—இரண்டு கவடு இற - (தனக்கு முன்னும் பின்னும் உள்ளனவாய்த் தன்னைக்கட்டுதற்கு ஆதாரமான) மரத்தறிகளிரண்டும் ஒடிய, கட்டிய பாசம் தனை கண்பரிந்து - தன்னைக்கட்டிய கால்விலங்காகிய சங்கிலியின் பொருத்துவாயைத் துணித்திட்டு, சுவடு இறக்க தொடர் ஆசை களிற்றை தொடர்ந்து-(மதசலம் பெருகுகிற) அடையாளம் மிகுதியாகத் தொடர்ந்திருக்கப்பெற்ற திக்கஜத்தை (நாடிச் சென்று) அதனோடு போர்தொடர்ந்து, சங்கம் குவடு இற குத்திய - அழகிய மலைச்சிகரங்களை ஒடியுமாறு (தந்தங்களினாற்) குத்திய, மாறன் பெயர் கொலை யானை - மாறனென்னும்பெயரையுடைய கொல்லுதல்வல்ல யானையானது, படர் அந்தி வானம் இருள்கின்றதே - (பிரிந்தார்க்குத்) துன்பத்தைச் செய்கின்ற சாயங்காலத்தில் ஆகாயம் இருளடைகிறவளவிலே, இவள் திறத்து ஒன்றும்-இவள் பக்கல் (தவறு) வந்து சேர்ந்திடும்; (எ - று.)

தலைவன் களவுப்புணர்ச்சிநேர்ந்த தலைவியை வெளிப்படையாக மணஞ்செய்துகொண்டபின்பு வந்த மணமகனைக்கண்ட

http://acharya.org

செவிலி மகிழ்வோடு சென்று அந்தலைவி தலைவன் என்னுமிருவரும் ஒருவர்மேலொருவர் மிக்ககாதலுடையராயிருக்கிற நிலைமையை நற்றாய்க்குச் சொல்லுதல், இச்செய்யுளிற் கூறப்பட்ட பொருள். தலைவன் காவற்பிரிவு வேந்தற்குற்றுழிப்பிரிவு என்றவகைகளில் ராஜகாரியத்தால் தலைவியைப்பிரிந்து நெடுந்தூரஞ் சென்றாலும் சூரியாஸ்தமனசமயத்திற்குள் தொழில்முடித்துத் தவறாது வந்து சேர்வன்; ஓரிரவேனும் புறத்துத்தங்கான் என்று, தலைவனது காதலை அறிவித்தாள். அங்ஙனங் காதல்செய்தற்கு ஏற்றபடி தலைவி ஒழுகுகின்றன ளென்பதும், தலைவன் அந்தி நேரத்தில் வாராதிருப்பின் இவள் பொறுத்திரா ளென்பதும், அவன் வரவையே எதிர்பார்த்து நிற்கின்றன ளென்பதும் தொனித்தலால், தலைவியின்காதல் குறிப்பாக உணர்த்தப்பட்டதென்க. மெய்ப்பாடு - உவகை. பயன் - மகிழ்தல்.

தலைவனை 'யானை' என்றதனால், 'கவடிறக்க' என்பது முதலாக யானைக்கு ஏற்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. கொலையானை - மதயானையென்றபடி; "யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்" என்றார் பிறரும். தலைவனைக் கொலையானை யென்றது, பகைவெல்லுந்திறமும் மிக்கவலிமையும் கம்பீரமான அழகியநடையுமுடைமைபற்றி. கவடு - கட்டுத்தறி. தன்னைக் கட்டிய தூண்களையும் விலங்குகளையும் முறித்துச்செல்லுதல் மதயானையினியல்பாதலால், 'இரண்டு கவடிறக் கட்டிய பாசத்தனைக் கன்பரிந்து' எனப்பட்டது; "தொடர்பிணி வெளின்முதன் முருக்கித்தோன்றியது, அடலருங் கடாக்களிற் றசனிவேகமே" என்ற சிந்தாமணியையுங்காண்க: (தொடர்பிணிவெளில்முதல்முருக்கி - காலிற்சங்கிலிபிணித்த மரத்தையுங் கம்பத்தையும் அடியிலே முறித்து.) "தூணும் விலங்கும் முறிப்பது" என்றார் பாரதத்தும். வேறொருயானையினது மதநீரின் மணம் வீசினால் அதனையுணர்ந்தவளவிலே அது பொறாது ஓடிச்சென்று அந்த யானையை எதிர்த்துப்பொருதலாகிய மதயானையினியல்பின்படி, இத்தயானை தனது வலிமைக்கு ஏற்பத் திசையானையைத்தொடர்ந்து பொருததென்பாள், 'கவடிறக்கத்தொடர் ஆசைக்களிற்றைத் தொடர்ந்து' என்றாள். மலைச்சிகரத்தைக் கூரியதந்தங்களாற் குத்திமுறிக்கின்ற மதயானையினியல்பை, 'சங்கக்குலவடிறக்குத்திய' என்றார்.

உபமானமாகிய யானைக்குக் கொடுத்த அடைமொழித்தொடர்க்கு, உபமேயமாகிய மாறனென்ற தலைவனுக்கு ஏற்பவும் பொருளமைத்தல், தகுதி. சிறந்தவீரனானதலைவன் திக்குவிசயஞ் செய்பவனுத் திக்குக்களுள்ள வளவுஞ்சென்று போர் தொடர்ந்து மீளுதல் இயல்பாதலால், கவடிறக்கத் தொடராசைக்களிற்றைத் தொடர்தல் தலைவனுக்கு அமையும். 'இரண்டு கவடு இறக் கட்டிய பாசத்தனைக் கன்பரிந்து' என்பதற்கு - உட்பகையும் புறப்பகையுமாகிய வஞ்சகவர்க்கமிரண்டும் அழிய (அவற்றைத் தொலைத்தலில்) தன்மனத்தைப்பிணிக்கின்ற பாசபந்தம்போன்ற கண்ணோட்டத்தை யொழித்து என்று பொருள் காண்க. உட்பகை - வழிபறிப்பவர் கள்ளர் கோள்சொல்பவர்

http://acharya.org

முதலிய மனிதர்களும், பன்றி புலி கரடி முதலிய மிருகங்களும். கவடு - கபடம்: வடசொல்விகாரம். பாசம் - கயிறு. தளை - கட்டு. பரிதல்-அறுத்தல். 'சங்கக்குவடிறக் குத்திய' என்பதன் பொருள்- மலைபோல அழித்தற்கு அரிய பெரிய சேனைத்தொகுதி அழியுமாறு அதனைத்தாக்கிய என்பது. சங்கம் - படையில் ஓர்தொகை; ஸங்கம் - கூட்டமுமாம். எனவே, சிலேடையை அங்கமாகக் கொண்டு வந்த **உருவகவணி**யாம்.

'நங்காய்' என்றது, செவிலித்தாய் நற்றாயை முன்னிலைப் படுத்தியது; நங்கை யென்பதன் ஈறுதிரிந்த விளி. படர் - சிந்தை. இருள்கின்றது - நிகழ்காலத்தொழிற்பெயர். ஈற்றுஏகாரம் - தேற்றம்; விரைவுமாம். படர் அந்தி வானம் - அந்திப்பொழுதிற் பரவுகிற செவ்வானமுமாம்.

கம்பநாடர்பக்கல் மிக்க ஆதரத்தையுடைய பேரறிவாளரை நோக்கி, அவர்பக்கல் அன்புள்ள ஞானிகள், 'இவர்க்கு ஆழ்வார் உரியகாலத்திலே தவறாது ஸாந்நித்தியந் தந்தருள்வர்' என்றுகூறி மகிழ்வுவிளைத்தல், இதற்கு உள்ளுறைபொருள். ஆழ்வாரைக் கொலையானை யென்றது, பரசமயவாதிகளை நிரஸநம்பண்ண வல்லவரென்பதுபற்றி. பின்புள்ளார் "இராமநுசமுனி வேழம்" என்றதும், அங்கு வ்யாக்கியானத்தில் 'கஜமாகஉத்ப்ரேக்ஷிக்கிறது, விபக்ஷிகளைச் சித்ரவதம் பண்ணவும் தாம்பரிக்ரஹித்தவர்களைப் பட்டாபிஷேகயோக்யராம்படி பண்ணவும் வல்லவராகையாலே' என்றதுங் காண்க. இந்த யானைக்கு மதம் - ப்ரஹ்மாநந்தம். கவடு இறக்கத் தொடர் ஆசைக்களிற்றைத் தொடர்ந்து - (எவ்வளவு வெறுத்து ஒழித்தாலும்) நெடுங்காலப் பழக்கத்தால் ஒழிதலின்றி மிகத்தொடரும் தன்மையதான அவாவாகிய யானையை ஊக்கங்கொண்டு பொருதழித்து; "அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்" என்ற திருவாய்மொழியையுங் காண்க. இரண்டு கவடு இற - அகங்காரம் மமகாரம் என்னும் இரண்டும் ஒழிய; இவை, பற்றென்னு மொன்றின் பகுப்பாதலால், 'கவடு' எனப் பட்டன; கவடு - இருகிளையாகக் கிளைத்த மரக்கொம்பு. கட்டிய பாசத்தளைக் கல்பரிந்து - உயிரைப் பிறப்பிலே கட்டுப்படுத்துகிற பிரபஞ்சபாசபந்தத்தின் தொடர்பை அறத்தொலைத்து. சங்கக் குவடு இறக் குத்திய - சங்கப்புலவர் கூட்டமாகிய மலை நிலை கெடும்படி அதனை அடர்த்த; ஆழ்வாரருளிச்செயலின் பிரபாவத்தாற் சங்கப்புலவர்கள் கருவபங்கமடைந்து தாழ்ந்தமை முன் கூறப்பட்டது. நங்காய்-ஆத்மகுணங்களிற் சிறந்தவரே! என்று விளித்தபடி. படர்அந்திவானம் இருள்கின்றதே ஒன்றும்-பலவகைச் சிந்தையையுண்டாக்குகிற ரஜோகுண தமோ குணங்கள் ஒன்றன்மேலொன்றாகத் தலையெடுத்து மோகாந்தகாரத்தை விளைத்திடாதபடி வந்து ஸாந்நித்தியந் தந்தருள்வரென்க. தொடர் ஆசைக் களிற்றை - பற்றுகின்ற ஆசையாகிய மற்றொரு யானையை, கவடு இறக்கத் தொடர்ந்து - இருந்த இடம் தெரியாதுபோக எதிர்த்து அடர்த்து என்று உரைப்பாருமுளர். (இது, சங்கிரகம்; விஸ்தாரங் கண்டுகொள்க.)

http://acharya.org

இச்செய்யுளைப் பிறிதுதுறையின் பாற்படுத்தி உரையிடவுங் கூடும். (48)

49. இருளாய்ப்பரந்தவுலகங்களைவிளக்கும்மிரவி
பொருளாய்ப்பரந்தது தான்பொதுநிற்றலின்மற்றதுபோல்
மருளாய்ப்பரந்தமயக்கத்துயக்கற்றமாறனெங்கோ
னருளாற்சமயமெல்லாம்பர னுண்டென்றறிவுற்றதே.

(இ - ள்.) இருள் ஆய் பரந்த - இருள் மிக்குப் பரவப்பெற்ற, உலகங்களை - பிலவுலகத்தின் பகுதிகளையெல்லாம், விளக்கும் - (இருளொழித்து) விளங்கச் செய்கின்ற, இரவி - சூரியமண்டலம், பொதுநிற்றலின் - (எல்லாவுயிர்கட்கும் பொதுப்பட உதவிசெய்து) நிற்றலால், பொருள் ஆய் பரந்தது - (உலகமுழுவதும்) காணப் படும் பொருளாய் விளங்கிற்று; அதுபோல் - அதுபோலவே,— மருள் ஆய் பரந்த மயக்கம் துயக்கு அற்ற மாறன் எம் கோன் அருளால் - (பலரும்) மருளும்படி பரவுகிற மாயையினலாகுஞ் சோர்வு இல்லாத மாறனென்னுந் திருநாமமுடைய நம்மாழ்வாரது கருணையினால், சமயம் எல்லாம் பரன் உண்டு என்று அறிவுற்றது- எல்லாமதங்களும் பரமாத்மாவாகிய ஸ்ரீமந்நாராயணன் உள னென்று அறிந்துகொண்டன; (எ - று.)—ஈற்று ஏகாரம்-தேற்றம். தான், மற்று - அசைகள்.

புறவிருளையொழிக்கிற சூரியன்போலவே அகவிருளையொழிக் கிற ஆழ்வாரும் எல்லார்க்கும் உபகாரக ரென்பதாம். ஆகவே, அவர்பக்கல் அனைவரும் அன்பு செய்யக் கடமைப்பட்டவரென்பது போதரும். உவமையணி. ஆய் - ஆக்கமடைந்து, அபிவிருத்தியாகி. விளக்கும் மிரவி - விரித்தல். 'பரந்தது' என்பதற்கு, 'உலகம்' என்ற தோன்று எழுவாய் வருவிக்க. துயக்கு - கலக்கம். இரவி தான் பொதுநிற்றலின் எல்லாவுயிர்கட்கும் இன்றியமையாது வேண்டுந் தலைமைப்பொருளாய்ப் பிரசித்திபெற்றது; அதுபோ லவே, வருளபூஷணபாஸ்கரரும் எல்லாச்சமயத்தார்க்கும் எம்பெரு மானுண்மையை யுணர்த்தி யுதவியதனால் தலைமைபெற்றனரென்று கருத்துக்கொள்ளுதலும் ஒன்று. இருளொழித்து உலகத்தை விளங்கச் செய்தற்குச் சூரியன்போல, மாயையை யொழித்துப் பரமாத்மாவை விளங்கச்செய்தற்கு ஆழ்வாரென்று தாற்பரியங் கொள்ளினும் தவறாகாது. (49)

50. அறிவேயுனைத்தொழுதேன்மற்றையாகமவாதியரைச்
செறிவேனெனவொன் றுசிந்தைசெய்யாதுசெய்தாரையில்லா
நெறிவேதநின்றநிலையுணர்ந்தோன்குருகூர்நிலத்தைப்
பிரிவேனெனவுமெண்ணுதென்னைவீடுபெறுத்தினையே.

(இ - ள்.) அறிவே - (எனது) உணர்வே!—மற்றை ஆகம வாதியரை செறிவேன் என ஒன்று சிந்தை செய்யாது - (வேத மிருக்க அதனைவிட்டு அதற்கு) மாறான ஆகமங்களைப் பிரமாண மாகக்கொண்டு துர்வாதஞ் செய்பவராகிய புறச்சமயத்தாரைச் சேர்வேனென்று நினைத்தலை யொன்றையுங் கொள்ளாமல், செய்

http://acharya.org

தாரை இல்லா நெறி வேதம் நின்ற நிலை உணர்ந்தோன் குருகூர் நிலத்தை பிரிவேன் எனவும் எண்ணேது - தன்னைச் செய்தவரேவரையும் உடையதல்லாததும் சன்மார்க்கத்தையே போதிப்பதுமாகிற வேதத்தி லூன்றிநின்ற பரதத்துவநிலையை யறிந்தவராகிய ஆழ்வாருடைய திருவவதாரஸ்தலமான திருக்குருகூரென்னுந் திவ்யதேசத்தை விட்டுப்பிரிவேனென்று எண்ணுதலுஞ் செய்யாமல், என்னை வீடு பெறுத்தினையே - (நீ) என்னை முத்திபெறும்படி செய்தாயே: (அந்தமகோபகாரத்துக்காக), உனை தொழுதேன் - உன்னை (நான்) நமஸ்கரித்தேன்; (எ - று.)

"நெஞ்சமே நல்லை நல்லை யுன்னைப்பெற்று, லென்செய்யோ மினியென்ன குறைவினம்" என்று ஆழ்வார் தம்நெஞ்சை விளித்துக் கொண்டாடியதுங் காண்க. வேதம் அபௌருஷேய மாதலால், 'செய்தாரையில்லா' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. பிரி பிரி என்ற இரண்டு வினைகளும் உளவென்றுபது, பிரிஎன்பது எதுகைநோக்கிப் பிறியெனத் திரித்துக் கொள்ளப்பட்டதென்றுவது கொள்க. அறிவு தீவழிச்செல்லாது நல்வழிச்சென்று உதவுதலே ஆன்மா விடுபெறுதற்குக் காரணமாதலால், இங்ஙனம் கொண்டாடப்பட்டது. பகவத்பாகவதர் உகந்தருளின நிலங்களிலே பிரவணனாதல், உயர்கதிபெறுதற்கு உரிய உபாயமென்பது போதரும். (50)

51. பெரும்பாக்கியமுள்ளபோதும்பிழைப்புமுண்டேபிறர்பால்
வெறும்பாக்கிளத்திமெலிகின்றவென்னைவினைகொடுபோ
யெறும்பாக்கியநமியேனையமரர்க்குமேறவிட்டான்
குறும்பாக்கியமுப்பகைதவிர்த்தாண்டகுருகைமன்னே.

(இ - ள்.) பெரும் பாக்கியம் உள்ள போதும் - மிக்கநன்மை பெறும்படியான அதிருஷ்டம் இருக்கிறபோதும், பிழைப்பும் உண்டே - (அந்நன்மை மிகுதிநேராமல்) தவறுதலு முண்டோ? [இல்லையென்றபடி]; (அது எங்ஙனமெனின்—), பிறர்பால்-அயலார்மீது, வெறும் பா கிளத்தி - பயனில்லாத பாடல்களைப் பாடிக்கொண்டு, மெலிகின்ற - இரிந்து இளைக்கின்றவனும், வினை கொடு போய் எறும்பு ஆக்கிய-தீவினைகளால் வலிய இழுத்துக் கொண்டு சென்று எறும்புபோல எளிமையடையும்படி செய்யப்பட்டவனும், நமியேனை-வேறுகதியற்றவனுமாகிய, என்னை—, குறும்பு ஆக்கிய முப் பகை தவிர்த்து ஆண்ட - தீமைகள் செய்யும்படியான மூன்று வகைப் பகைகளையும் போக்கி அடிமைகொண்ட, குருகை மன் - திருக்குருகூரில் திருவவதரித்த தலைவரான நம்மாழ்வார், அமரர்க்கும் ஏற விட்டான் - தேவர்களைக் காட்டிலும் மேலான நிலையையடையும்படி செய்தருளிவிட்டனர்: (எ - று.)

இங்ஙனம், தாம்பெற்றபேற்றை மனத்திற்கொண்டாடி அதன் நிறைவினால் வாய்விட்டுக்கூறலாயின ரென்க. முந்தின வாக்கியம் பொதுப்பொருளாயும், பிந்தினவாக்கியம் சிறப்புப் பொருளாயும் நின்று ஒன்றையொன்று சாதித்தலால், **வேற்றுப் பொருள்வைப்பணி.** "அருள்பெறுவாரடியார் தம் மடியனேற்காழி

http://acharya.org

யான், அருள் தருவானமைகின்றான் அதுநமதுவிதிவகையே" என்ற திருவாய்மொழியை அடியொற்றி 'பெரும்பாக்கியம்உடைன போதும்" எனப்பட்டது. 'பிறர்' என்றதில், தேவதாந்தரங்களும் அடங்கும். இறைமைக்குணங்களிலராயினாரை அவையுடையரெனப்புகழ்ந்து கூறுகிற பாடல்கள் பொருள்சேராவாதலால், 'பொருள்பா' எனப்பட்டன; அக்குணங்களை முற்றவுமுடைய எம்பெருமானது புகழையும் அப்பெருமானடியார்களது புகழையும் கூறும் பாடல்களே பொருள்சேர்ந்தபாடல்களாம்: "மாரியனைய கைமால்வரையொக்குந் திண்டோளென்று, பாரிலோர்பற்றையைப் பச்சைப்பசும்பொய்கள் பேசவே" என்ற திருவாய்மொழியையுங் காண்க. தம்வசமின்றிக் கருமவசப்பட்டுத்திரிந்த தமது எளிமை தோன்ற, "வினைகொடுபோய் எறும்பாக்கிய தமியேனை' என்றார்; "இருபாடெரிகொள்ளியினுள் ளெறும்பேபோல், உருகாநிற்கு மென்னுள்ளம்" என்றார் திருமங்கையாழ்வாரும். சிறுமைக்கு எறும்பையெடுத்துக்காட்டுதல் இயல்பு; 'ப்ரஹ்மாதி பிபீலிகாந்தம்' என்பர். முப் பகை - காமம், வெகுளி மயக்கம் என்பன. குறும்பாகிய முப்பகை - வித்யாமதம், குலமதம், சீலமதம் என்னும் முக்குறும்பாகிய பகையென்றுங் கொள்ளலாம்; "வெஞ்சமுக்குறும்பாங்குழியைக் கடக்கும் நங்கூரத்தாழ்வான்" என்றவிடத்துப்போல. அமரர்க்கும் ஏறவிட்டான் - முத்திபெறலாம்படி செய்தருளினரென்றபடி.

மன் = மன்னன்; பண்பாகுபெயர். 'அமரர்க்கும் ஏறவிட்டான்' என்றதனை, திருவிருத்தத்தில் "விண்ணுளாரினுஞ் சீரியரே" என்றதனோடு ஒப்பிடுக; அங்கு, பரமபதத்திலுள்ளவர்களினுஞ் சிறப்புடையராவரென்று பொருள் கொண்டு, இடைவிடாது பகவதநுபவமே செய்யுமிடமான அந்தமுத்தியுலகத்திலன்றி அதற்கு விரோதியான ஸம்ஸாரத்திலிருந்துகொண்டே அங்ஙனம் நித்யாநுபவஞ்செய்பவரை நித்யசூரிகளினுஞ் சீரியரென்னத் தட்டில்லையென்ற கருத்து உரைப்பர் ஆன்றோர்: அதுவும் இங்குப் பொருந்தும். அமரர்க்கும் = அமரரினும்: உருபுமயக்கம். (51)

52. குருகூர்நகரெம்பிரானடியாரொடுங்கூடியன்புற்
றொருகூரையிலுறைவார்க்குமுண்டேயெம்மையுள்ளுஞ்சுற்று
மிருகூர்வினையுமறுத்திறப்பார்க்குமியற்கையன்று
சருகூரருகிலையலையலார்க்குமரியதன்றே.

(இ - ள்.) எம்மை - ஜீவாத்மாக்களாகிய நம்மை, உள்ளும் சுற்றும் - (புறத்தேயன்றி) அகத்தும் சூழ்ந்துள்ள, இரு கூர் வினையும் - மிகுதியான (புண்ணியம் பாவம் என்னும்) இருவகைக் கருமங்களையும், அறுத்து - துணித்து, இறப்பார்க்கும் - (அவ்வினை மரம்) வேரோடு அழியும்படி செய்யும்படியான, இயற்கை - தன்மையானது,—குருகூர் நகர் - திருக்குருகூரென்னுந் திருநகரியிலே திருவவதரித்த, எம் பிரான் - எமது தலைவரான நம்மாழ்வாருடைய, அடியாரொடும் - அடியார்களுடனே, கூடி - சேர்க்கை கொண்டு, அன்பு உற்று - (அவர்கள்பக்கல்) அன்புகொண்டு, ஒரு கூரையில் உறைவார்க்கும் - (அவர்களுடன்) ஒருமனையிலே

http://acharya.org

வசிப்பவர்களுக்கும், உண்டே - உள்ளதேயாம்; (மற்றும்), அ ஊர் அருகு ஊர் அருகில் அயல் அயலார்க்கும் - அத்திருக்குருகூர்க்குச் சமீபத்தி லுள்ள ஊர்களின் பக்கத்து ஊர்களுக்கு அடுத்த வேறு ஊர்களி லுள்ளவர்களுக்கும், அரியது அன்று - (இருவினையையும் வேரோடு இறச்செய்யும் இயற்கை) அருமையானதன்று; (எ - று.) —உண்டே, அன்றே என்ற ஏகாரம் இரண்டும் - தேற்றம்.

நிமனங்கெடுத்து நன்மனங்கொடுத்தலும், வானேறவழிதருதலும் எம்பெருமான்செயல்களல்லவோ? அவற்றை ஆழ்வார்செயலாகக் கிழ்ச்செய்யுளிற்கூறியது பொருந்துமோ? என்ன, 'அந்த எம்பெருமானது திருவவதாரமான நம்மாழ்வாருடைய அடியாரடியார்களுக்கும் அவரோடு நேரிலேனும் இடைவிட்டேனும் சம்பந்தமுடையார்களுக்கும் அந்தப் பகவத்கடாக்ஷம் கைகூடியதேயாம்' என்றவாறுகும் இது.

'எம்பிரான்' என்றது - எம்பெருமானே நம்மாழ்வார் என்றவாறு. 'எம்பிரானடியார்' என்றது - ஸ்ரீமதுரகவிகள், நாதமுனிகள், பராங்குசதாஸர் போல்வாரை. 'அன்புஉற்று' என்றதில், அவர்கள்பக்கல் தாம் அன்புகொள்ளுதலேயன்றி அவர்களுடைய அன்புக்குத் தாம் இலக்காதலும் அடங்கும். 'இன்புற்று' என்ற பாடத்துக்கு - அங்கவ்வேரர்சகவாசத்தாலாகும் ஆனந்த மடைந்து என்று பொருள். ஒருகூரையிலுறைதல் - 'தொண்டக்குடி' என்றபடி ஒருகுடியில் வாழ்தல். கூரை - வீட்டின்மேற்புறத்து வேயப்படுவது; இது, இங்கு இலக்கணையாய், வீட்டைக் குறிக்கும். எல்லாவுயிர்களையுங் கூட்டி, 'எம்மை' என்றார்: உளப்பாட்டுத் தன்மைப்பன்மை. உடம்புடன்கூடிவாழும்போதும் அதனைவிட்டு நீங்கியபோதும் உயிரைக் கருமம் விடாததொடர்தலால், 'உன்றுஞ் சுற்றும் வினை' எனப்பட்டது. நல்வினையும் பிறத்தற்கு ஏதுவாதலால், இருவினையுங் கூறினார்; "இருள்சேரிருவினையுஞ் சேரா" என்றார் திருவள்ளுவனாரும். 'கூர் வினை' என்றதில், சஞ்சிதம் பிராரப்தம் ஆகாம்யம் என்று மூன்றுவகைக் கருமங்களும் அடங்கும். 'குருகூரருகுஊர்' என்றது, திருக்குருகூரெனப்படும் ஆழ்வார்திருநகரிக்கு அருகிலுள்ள ஸ்ரீவைகுண்டம் முதலிய நவதிருப்பதிகளை. 'அவ்வூரருகில் அயல்' என்றது, திருவழுதிவளநாடுமுழுவதிலுமுள்ள எல்லாவூர்களையும். 'அதனயலார்' என்றது, எல்லாநாடுகளிலும் உள்ளாரையும். எங்கு இருந்தாலும் ஆழ்வார்சம்பந்தமுடையாரானுர் உய்வுபெறுவரென்றபடி.

கூர் - உரிச்சொல். இயற்கை - இயல்பு. இறப்பார்க்கும் என்றவிடத்து, பார்த்தல்-செய்தலென்ற பொருளில் வந்தது; ('காண்' என்ற வினை 'செய்' என்ற பொருளில் வருதலைப் பலவிடத்துங் காண்க.) (52)

[தலைவன்பிரிந்தநிலையில் ஆற்றாத தலைவி இரங்கிக்கூறல்.]

53. அன்றுதவன் றிலையும்மன் றுவித்தென்னை யன்னையுடன்
பின்றுதவண்ண மெல்லாம்பின் றுவித்துப் பிறைக்கொழுந்தை
யொன்றுதவண்ண முபாயமியற்றிய தூழ்வினையை
வென்றான் குருகைப்பிரான்மகிழேயன் றிவேறில்லையே.

http://acharya.org

(இ - ள்.) அன்றாத அன்றிலையும் அன்றுவித்து - (எவரோடும்) பகை கொள்ளாத அன்றிலென்னும்பறவையையும் (இப்பொழுது என்னோடு) பகைகொள்ளும்படிசெய்து, என்னை—, அன்னையுடன் பின்றாத வண்ணம் எல்லாம் பின்றுவித்து - (எனது) செவிலித்தாயுடனே மாறுபடத்தகாத வகையெல்லாம் மாறுபடும்படி செய்து, பிறை கொழுந்தை - இளஞ் சந்திரனை, ஒன்றாத வண்ணம்-(என்னோடு) வேறுபாடுகொள்ளும்படி, உபாயம் இயற்றியது - சூழ்ச்சிசெய்தது, (யாதோவெனில்—),—ஊழ்வினையை வென்றான் - விதியை வென்றிட்டவராகிய, குருகை பிரான்-திருக்குருகூரில் அவதரித்த தலைவரான நம்மாழ்வாருடைய, மகிழே அன்றி - மகிழம்பூமாலையே யல்லாமல், வேறு இல்லை-வேறொன்றுமில்லை; (எ - று.)—ஈற்று ஏகாரம் - தேற்றம்.

இயற்கைப்புணர்ச்சிமுதலியவகைகளால் தலைவியைக் களவிற் கூடிநின்ற தலைவன் அங்குப் பழியெழுந்ததென்று தோழியால் விலக்கப்பட்டபின்னர் அப்பழியடங்கச் சிலநாள் ஒருவழிப்பிரிந்துறைத லுண்டு; அது, ஒருவழித் தணத்த லெனப்படும். அன்றி, களவுப்புணர்ச்சிபெற்ற தலைமகன் தோழியால் வரைவுமுடுக்கப்பட்டுத் தலைமகளை வரைந்துகொள்ளுதற்கு வேண்டிய பொருள் தேடுதற்பொருட்டும் பிரிவன்; அது, வரைபொருட்பிரித லெனப்படும். அங்ஙனம் தலைமகன் பிரிந்த சமயங்களில், அப்பிரிவை யாற்றாத தலைவி, நெஞ்சொடுகூறலாகத் தன்னிலேதான் இரங்குதலும், மனமொத்த தன்உயிர்த்தோழியோடு இரங்குதலுஞ் செய்வள். இங்ஙனம் இச்செய்யுட்குத் துறைப்போக்கு உணர்க.

அன்றிற்பறவை, எப்பொழுதும் ஆணும்பெண்ணுமாகிய இரட்டையாகியே நிற்கும். கணப்பொழுது ஒன்றையொன்று விட்டுப்பிரிந்தாலும் அத்துயரத்தைப்பொறாமல் ஒன்றையொன்று இரண்டு மூன்று தரம் கத்திக்கூவி அதன்பின்பும் தன் துணையைக் கூடாவிடின் உடனே இறந்துபடும். ("எரிதகைந்தன்னசெந்தலையன்றில், பிரியின்வாழாது" என்றதுங் காண்க. இதனை வடநூலார் 'க்ரௌஞ்சம்' என்பர். தமிழில் 'குருகு' எனவும்படும்.) எப்பொழுதும் இணையாகவுள்ள அந்த அன்றிற்பறவையும், அது இரவிலே பார்வை குறைந்து துணையையிழந்து நலிந்து எழுந்து பறந்து வருந்துவதும், அந்நலிவால் அது கூவுகிற குரலும் காமோத்தீபகமாய்க் காமுகரைவருத்து மென்பது, கவிமரபு. அங்ஙனம் அன்றிற்பறவை பிரிந்தநிலையிலுள்ள தனக்கு வருத்தத்தை விளைத்தலே, இங்கு 'அன்றாதஅன்றிலையும்அன்றுவித்து' என்று குறிக்கப்பட்டது. அன்றுதல்-பகைத்தல்; "அன்றிய வாணனாயிரந்தோளுந் துணியவன்றாழிதொட்டானை" எனப் பெரியதிருமொழியிலுங் காண்க.

இங்கு 'அன்னை' என்றது, செவிலித்தாயை. தலைமகள் இளமையிலேயே ஒருதலைமகனிடத்து வேட்கைமிஞ்சி அவனுடன் கொள்ளுங் காதற்குறிகளைக் குறிப்பாகவுணர்ந்த செவிலித்தாய் கோபித்து 'இவள் பிஞ்சிலேபழுத்துவிட்டாள்' என்பது முதலாகச் சில சிறுபுன்சொற்கள் சொல்லி நிர்ப்பந்திக்க, அவற்றைக்

http://acharya.org

குறித்துத் தலைமகள் தான் "அன்னையென் செய்யிலென் ஊர் என் சொல்லிலென் தோழிமீர்" என்றாற்போல வெறுப்புக்கொள்ள வேண்டுதலால், 'அன்னையுடன் பின்றாக வண்ணமெல்லாம் பின்று வித்து' என்றாள். மாலைப்பொழுதிலே விளங்குகிற பிறைச் சந்திரன் காமோத்தீபகப் பொருள்களி லொன்றாய்ப் பிரிந்தவரை வருத்துதல்பற்றி, பிறைக்கொழுந்தை 'ஒன்றாதவண்ணம்' எனப் பட்டது. ஒன்றாமை - பொருந்தாமை. ஆழ்வார், தாம் எம்பெரு மான் திருவடிகளில் சரண்புகுந்து பெற்ற திருவருளால் தவறுவலி யினவான வினைகளனைத்தையும் வேரோடு களைந்திட்டன ராத லால், 'ஊழ்வினையை வென்றான்' எனப்பட்டனர். தலைவனைப் பிரிந்த நிலையில், தலைவி, அவனது சம்பந்தம்பெற்ற மலர்மாலை யாயினும் தான் பெற்று ஆறியிருக்க அவாவியதனால், 'குருகைப் பிரான் மகிழேயன்றி வேறில்லை' எனப்பட்டது.

முதலிரண்டடிகளில் 'அன்றாத' 'அன்றுவித்து' எனவும், 'பின்றாத' 'பின்றுவித்து' எனவும் வந்த இடங்களில் தொடைமுரண் காண்க. 'கொழுந்து' என்றது - இளமையின்மேலது. இனி, நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்வதென்பது பற்றி, 'பிறைக்கொழுந்து' எனப்பட்டது. இயற்றியது - பெயர்.

நம்மாழ்வார் சிற்சிலசமயங்களிற் கம்பநாடரது அகக்கண் ணுக்குப் புலனாகி மறைய, அவ்வளவிலே திருப்திப்படாமல் ஸதா ஸாந்நித்தியத்தில் அபேக்ஷையாற் பிரிவாற்றாது வருந்துகிற கம்பநாடர், வேறுபலர்க்கு இன்பந்தருகிற பிரபஞ்சவிஷயங்கள் பலவும் தமக்குப் பிரியப்படாதபடி தம்மைச் செய்தது விதியை வென்றவரான ஆழ்வாருடைய காட்சியின்மை யென்று இரங்கிக் கூறுதல், இதற்கு உள்ளுறைபொருள். விவரம் கேட்டுணர்க. (53)

54. வேறேநமக்கிவனன்புடைமெய்யடியானென்றுள்ளந்
தேறேனெனலதுதேறத்தகுஞ்செந்தமிழ்ப்புலவர்க்
கேறேயெதிகளுக்கின்னமுதேயெறிநீர்ப்பொருநை
யாறேதொடர்குருகூர்மறையோர்பெற்றவாணிப்பொன்னே.

(இ - ள்.) செம் தமிழ் புலவர்க்கு ஏறே - செவ்விய தமிழ்ப் பாஷையில் தேர்ந்த பண்டிதர்களுட் சிங்கம்போன்றவனே! எதிக ளுக்கு இன் அமுதே - முற்றத்துறந்த முனிவர்களுக்கு இனிமை யான அமிருதம் போன்றவனே! எறி நீர் பொருநை ஆறே தொடர் குருகூர்-அலைவீசுகின்ற நீர்ப்பெருக்கையுடைய பொருநை யாறென்னுந் தாமிரபர்ணிநதி இடையறாது பாயப்பெற்ற திருக் குருகூரில் திருவவதரித்த, மறையோர் பெற்ற ஆணிப்பொன்னே- வைதிகர்கள் பெரும்பேறாகப்பெற்ற மாற்றுயர்ந்த அரும்பொன் போன்றவனே!—இவன் நமக்கு வேறே அன்பு உடை மெய் அடியான் என்று உள்ளம் தேறேன் எனல் - இவன் நம்பக்கல் பொதுப்படவன்றிச் சிறப்பாக அன்புள்ள உண்மையடியாவன் என்று (என்னைக்குறித்து) மனப்பூர்வமாக நம்பமாட்டேனென்று கொள்ளாதே; அது தேறத்தகும் - அங்ஙனம் மெய்யடியவனாக

http://acharya.org

(என்னை நீ) நம்பத்தகும்; (எ - று.)—குருகூர் ஆணிப்பொன் என இனையும்.

ஆதிதொடங்கி நான் உனக்கு ஆட்பட்டு உய்வுபெறாது பழுதே பலபகலும்போக்கிப் பலவேறுவகையாகத் திரிந்தமைபற்றி, என்னை இப்பொழுது நின்பக்கல் அஸாதாரணமான நிஜபக்தியை யுடைய மெய்யன்ப னென்று துணியேனென மனங்கொள்ள லாகாது; "அன்றுநான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" என்றபடி இப்பொழுது நான் உண்மை யன்புடைய மெய்யடியவ னென்பது சத்தியம் என்று ஆழ்வாரைக்குறித்துத் தமது உண்மை நிலையை விண்ணப்பஞ் செய்தவாறும். நமக்கு இவன் வேறே என்று எடுத்து, நமக்கு இவன் புறம்பானவனே என்று உரைத்தலு மொன்று.

"அரசருளேறு" என்றாற்போல, 'செந்தமிழ்ப்புலவர்க்கு ஏறு' என்றார். ஏறுபோல்பவனை ஏறென்றது, உபசாரவழக்கு. அமுது, பொன் என்பனவும் இவ்வாறே. தனது பலபராக்கிரமங்களால் மிருகங்களுள் அரசாய்ச் சிறக்கிற சிங்கம்போல, தமது தெய்வப் புலமையால் செந்தமிழ்ப்புலவர்களுள் தலைமைபூண்டு விளங்கு கிறவர் ஆழ்வார் என்க. சிங்கம் காளை முதலிய சிலசொற்கள், சிறப்பை யுணர்த்துவனவாய் ஆடவர்க்கு வழங்கும். யதி என்ற வடமொழி - ஜிதேந்திரியனென்று பொருள்படும்: பொறிகளை யெல்லாம் அடக்கியவன். அவ்வடசொல், தமிழில் 'எதி' என விகாரப்பட்டது; எதிகளுக்கு இன்அமுது - ஐம்பொறிவென்ற முனிவர்களுக்கு அமிருதம்போலினியவர் என்க. ஆணிப்பொன் - மாற்றறிதற்குக்கொள்ளும் உயர்தரப்பொன்; இதற்குமேலே மாற்றில்லை யென்னும்படியான சிறந்தபொன் என்றும் உரைப்பர். மறையோர்பெற்ற ஆணிப்பொன் - அந்தணர்கள் விரும்பிப் பாராட்டப்பெற்றவர் என்க. மற்றையடியார்களுடைய ஞான அநுஷ்டானங்களின் தரத்தையும், மற்றைப்புலவரியற்றிய கவிக ளின் தரத்தையும் அறிதற்கு அந்தணர்களால் நிதர்சநமாகக் கொள்ளப்படுபவ ரென்றுங் கோள்க. வணிகர்பெறும் ஆணிப் பொன் அது; இவரோ மறையோர்பெற்றஆணிப்பொன் என்ற வாறு. தேறத்தகும் - ஒருவகை வியங்கோள். (54)

55\. பொன்னையுரைப்பதப்பொன்னுடன்றேபுலமைக்கொருவ
ருன்னையுரைத்துரைத்தற்குளரோவுயர்நாற்கவியும்
பின்னையுரைக்கப்பெறுவநல்லாற்பெருந்தண்குருகூர்த்
தென்னையுரைக்குமியற்குமிசைக்குஞ்சிகாமணியே.

(இ - ள்.) பெருந் தண் குருகூர் - மகிமையுள்ளதும் நீர்வளத் தாற் குளிர்ந்ததுமான திருக்குருகூரிலே திருவவதரித்த, தென்னை உரைக்கும் இயற்கும் இசைக்கும் சிகாமணியே - தமிழ்ப்பாஷைக் கும் அதன்பகுதிகளான இயற்றமிழுக்கும் இசைத்தமிழுக்கும் தலையிலணியும் இரத்தினாபரணம்போல அனைவரும் தலைமேற்

http://acharya.org

கொண்டு கொண்டாடப்பெற்றவனே!—பொன்னை உரைப்பது அ பொன்னெடு அன்றே - (மாற்றறியுமாறு) பொன்னை (உரை கல்லில்) உரைத்துப்பார்ப்பது அதற்குச்சிறிதுமேல்தோகவுள்ள பொன்னுடன் வைத்து உரைத்தன்றோ? (அங்ஙனம் நோக்கப்புகுமிடத்து), உயர் நால் கவியும் பின்னை உரைக்க பெறுவது அல்லால்- சிறந்த நால்வகைக் கவிகளைவரும் கடைசித்தரமாகச் சொல்லத் தகுவதே யல்லாமல், புலமைக்கு உன்னை உரைத்து உரைத்தற்கு ஒருவர் உளரோ - கல்வித்திறத்தில் உன்னைச்சொல்லி உனக்கு ஈடாக மற்றுஞ்சொல்வதற்கு வேறொருவர் இருக்கின்றனரோ? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)—குருகூர்ச்சிகாமணி என இயையும்.

கீழ்ச்செய்யுளில் 'செந்தமிழ்ப்புலவர்க்கேறே' என்றும், 'மறையோர் பெற்ற ஆணிப்பொன்னே' என்றும் கூறியதற்கு ஒருசார் விவரணமாகின்றது, இச்செய்யுள். மாற்றுவகையொவ்வொன்றிலும் சரியான மாற்றுள்ள உரையாணிப்பொன்னை உரைகல்லில் உரைத்து அதற்குச் சிறிதேற்றத்தாழ்வாகவுள்ளபொன்னின் உரையை அதனுடனொப்புநோக்கிப் பொன்னின் தரத்தையறிவது இயல்பு. அங்ஙனம் செந்தமிழ்க்கவித்திறத்தில் உன்னைச் சொல்லி மற்றும் உன்னெடுசிறிதுமுன்பின்னக ஒப்புமையுடையவரென்று காட்டப்பெறும்படி ஒருவருமில்லை; சிறந்தவரெனப்படுகிற நால்வகைக்கவிகளெல்லாரும் உன்னைநோக்குமிடத்து மிகவும் இழிவானதரத்தில் நிற்றலால் என்பது, இதன்கருத்து. அன்றே - தேற்றம். உளரோ, ஓ - எதிர்மறை.

பரதகண்டத்திலே தென்பகுதியில் வழங்கும் பாஷையாதலால், தமிழுக்குத் தென்மொழி, தென்சொல், தென்கலை என்பனபோல, 'தென்னுரை' என்றும் ஒரு பெயருண்டு. அதனை "அன்னநடையாரலரேச வாடவர்மேல், மன்னுமடலூராரென்பதோர்வாசகமும், தென்னுரையிற் கேட்டறிவதுண்டு" எனப் பெரியதிருமடலிலுங் காண்க. அப்பெயர், எதுகைநயத்தின் பொருட்டு இடையில் ஐகாரச்சாரியைபெய்து, 'தென்னையுரை' எனப்பட்டது. இனி, ஐ - அழகிய, தென்உரை - தென்மொழியென்றலும் ஒன்று. "குருகையர்கோன் யாழினிசைவேதத்தியல்" என்றபடி நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி முதலிய திவ்யப்பிரபந்தங்களில் இயற்றமிழ்ப் பொலிவும் இசைத்தமிழ்ப் பொலிவும் மிக்குவிளங்குதலால், அவை தனியே பாராட்டியெடுத்துக் கூறப்பட்டனவென்க. இனி, தென்ஐ என்பதற்கும் தென்னாட்டுக்குத்தலைவனுயுள்ளவனே! என்றும், அழகிய கடவுளே! என்றும், அண்மைவிளியாகப் பொருள்கொள்ளவுங் கூடும்; அன்றி, தென்னை உரைக்கும் என்பதை இயற்கும் இசைக்கும் அடைமொழியாக்கி, அழகாகவும் வியக்கத்தக்கபடியுஞ் சொல்லப்படுகிற இயற்றமிழ்க்கும் இசைத்தமிழ்க்கும் என்னவும் அமையும். 'குருகூரென்னை' என்ற பாடம், குருகூரில் அவதரித்த எனது இறைவனே யென்று பொருள்படும்; என்ஐ=நம்ஆழ்வார்.

http://acharya.org

[மகட்பாற்காஞ்சி.]

56. மணித்தாரரசன்றன் னோலையைத் தூதுவன்வாய்வழியே
திணித்தாசழியச் சிதைநின்றலையையெந் தீவினையைத்
துணித்தான் குருகைப்பிரான் றமிழாற் சுருதிப்பொருளைப் [யையே.
பணித்தான் பணியன்றெனிற்கொள்ளுங்கொள்ளுமெம்பாவை

(இ - ள்.) எம் தீ வினையை துணித்தான் - எம்முடைய கொடிய கருமங்களைப் போக்கியருளியவரும், சுருதி பொருளை தமிழால் பணித்தான் - வேதங்களின் பொருளைத் தமிழ்ப்பாடல் களினாற் பாடியருளியவரும் ஆகிய, குருகை பிரான் - திருக்குருகூரில் அவதரித்த தலைவரான நம்மாழ்வாருடைய, பணி அன்று எனில் - கட்டளையன்றாயின்,—மணி தார் அரசன்தன் ஓலையை - அழகிய மாலையைத் தரித்த அவ்வரசனது திருமுகத்தை, தூதுவன் வாய் வழியே திணித்து - (அதனைக்கொண்டுவந்த) தூதனது வாயி னுள்ளே புகுத்தி அவ்வாயை நன்றாக அடைத்து, ஆசு அறிய தலையை சிதையின் - ('பெண்ணைக்கொடு' என்றுகேட்ட) குற்றந் தீருமாறு (அத்தூதனது) தலையைத் துணித்திடுங்கள்; எம் பாவையை கொள்ளும் கொள்ளும் - (எம்குருகைப்பிரானன்றி மற் றோரரசன்) எமது பெண்ணைக் கொள்வான் போலும்! கொள்வான் போலும்!! (எ - று.)

மகட்பாற்காஞ்சியென்பது-புறப்பொருள் திணை பன்னிரண்டனுள் காஞ்சித்திணைக்கு உரிய பலதுறைகளில் ஒன்று. அதாவது - நின்மகளை எனக்குத்தருக வென்றுசொல்லும் அரசனோடு மாறு படுவது; "ஏந்திழையாட் டருகென்னும் வேந்தனொடு வேறுநின் றன்று—அளியகழல்வேந்த ரம்மாவரிவை, யெளியளென் றெள்ளி யுரைப்பிற் - குளியாவோ, பண்போற் கிளவியிப் பல்வளையாள் வாண்முகத்த,கண்போற்பகழிகடிது" என்ற புறப்பொருள் வெண் பாமாலையைக் காண்க. "பேரவந்ததூத செல்லரித்தவோலை செல் லுமோ பெருவரங்களருளரங்கர் பின்னைகேள்வர் தாளிலே, பாசம் வைத்த மறவர்பெண்ணை நேசம்வைத்து முன்னமே பட்டமன்னர் பட்டதெங்கள் பதிபுகுந்து பாரடா, வாசலுக்கிடும்படல் கவித்து வந்தசிவிகை மா மகுட கோடி நிரையாக்கவைத்த காது நாழியும், விசுசாமரங் குடிற்றொடுத்தகற்றை சுற்றிலும் வேலியிட்டதவர் களிட்ட வில்லும் வாளும் வேலுமே" என்றாற்போலக் கலம்பகங் களில் மறவர்வார்த்தையாக வரும் 'மறம்' என்னுந் துறை இதன் இனமாம். குருகைப்பிரானுக்கே உரிமைபூண்பவளான தமது மகளை மணம்பேசும்படி ஓர் அரசனால் ஓலைகொடுத்து அனுப்பப் பட்ட தூதன் அவ்வரசன்கட்டளைப்படி தம்பக்கல்வந்து ஓலை கொடுத்துச் சிலவார்த்தை கூறி மணம்பேசுவானாக, அம்மகட்கு உரியார் மிகக்கோபங்கொண்டு அந்த மணப்பேச்சைமறுத்து அவ் வரசனைக்குறித்துப் பரிகசித்து அத்தூதனை நன்றாகத்தண்டிக்கு மாறு தமதுபரிசனங்களை நோக்கிச் கட்டளை கூறினரென்க.

'குருகைப்பிரான்பணி யன்றெனின்......தலையைச்சிதையின்' என்றதனால் இத்தூதன்கொணர்ந்த ஓலை எமதுமகளைக்கொள்ளு

http://acharya.org

தற்கு ஏற்ற குடிப்பிறப்பு முதலிய சிறப்புக்களையுடைய குருகைப்பிரானது கட்டளையடங்கியதாயின் ஏற்றுக்கொள்ளுங்கள்; அதுவன்றி, மற்றோரரசனதாயின் அதுகொண்டுவந்த இத்தூதனைத் தண்டியுங்க ளென்றவாறும். அம்மகட்பேச்சுக்குத்தாம் இணங்காததேயன்றி அப்பேச்சைக்கேட்டதுமாத்திரத்திலும் விருப்பங்கொள்ளாமையால், அத்தூதன் மேன்மேற்பேசாதபடி முதலில் அவன் வாயில் அவ்வோலையை அடையுங்க ளென்பார், 'ஓலையைத் தூதுவன்வாய்வழியே திணித்து' என்றார்; அவ்வோலையைச் சிதைத்தலும் செய்யவேண்டுமென்க. ஆசு - குற்றம்; இங்குக் குருகைப்பிரானுக்கு அடிமையென்பது பிரசித்தமாயிருந்தும் மகட்பேச வந்தது குற்றம். அவ்வரசன் எமதுமகளை ஒருகாலும் ஒருபடியாலும் கொள்ளா னென்பார், இகழ்ச்சிக்குறிப்பாக 'கொள்ளுங் கொள்ளும் எம்பாவையை' என்றார்; அடுக்கு - இகழ்ச்சியை விளக்கும்.

"கண்டுகொண்டென்னைக் காரிமாறப்பிரான், பண்டைவல் வினைபாற்றி யருளினான்" என்றபடி அடிமைபூண்டஎமது அருவினையைத் தீர்த்தருளியவரும், "அவ்வருமறையின்பொருள் அருள்கொண்டு ஆயிரமின்தமிழ்பாடினான்" என்றபடி அறிதற்கரிய மறைப்பொருளை அனைவரும் எளிதில் அறிந்துய்யுமாறு தமிழிற்பாடியருளியவருமாகிய நம்மாழ்வார்க்கே அடிமை பூண்ட எமதுஉயிர் பிறிதொரு கடவுளர்க்கேனும் மானிடர்க்கேனும் உரிமை பூணாது என்று, அங்ஙனம் பிறர்க்கு ஆட்படுத்த முயல்வாரை நோக்கிக் கம்பநாடர் கடிந்துகூறும் வார்த்தை, இதற்கு உள்ளுறைபொருள். விவரம் கண்டு கொள்க.

மணித்தார் - இரத்தினஹாரமுமாம். பாவை - சித்திரப்பிரதிமை போல அழகியவள், கண்மணிப்பாவைபோல் அருமையானவள், கொல்லிப்பாவைபோலப் பிறர் மோகித்துஅழிதற்குக் காரணமாகுபவள்: உவமையாகுபெயர். "எல்லாம் வெகுண்டார் முன் தோன்றாக்கெடும்" ஆதலால், "இரவல ரிளையவ ரேத்து நாவலர், விரவியதூதுவர் விருத்தர் வேதியர், அரிவையர் வெஞ்சமரஞ்சவோர் பெருங், குரவ ரென்றிவர்களைக் கோறல் பாவமே" என்ற நீதியைக் கோபாவேசத்தால் மறந்து இங்ஙனம் 'தூதுவன் தலையைச் சிதைமின்' என்று கொடியகட்டளை கூறினரென்க. (56)

57. பாவைத்திருவாய்மொழிப்பழத்தைப்பசுங்கற்பகத்தின்
பூவைப்பொருகடற்போதாவமுதைப்பொருள்சுரக்குங்
கோவைப்பணித்தவெங்கோவையல்லாவென்னைக்குற்றங்கண்
ணுவைப்பதிப்பினுநல்லரன்றேமற்றைநாவலரே. [டென்

(இ - ள்.) பழத்தை - (மிக்கஇனிமையாற் கனிந்த) பழம் போன்றதும், பசுங் கற்பகத்தின் பூவை - (வேண்டுவார் வேண்டும் பயன்களைத்தரும் ஆற்றலினாலும் அனைவரும் விரும்பித் தலைமேற் கொள்ளப்பெறுஞ் சிறப்பினாலும்) பசுமையான கற்பகவிருக்ஷத்தின் மலர்போன்றதும், பொரு கடல் போதா அமுதை - (உண்ண உண்ணத் தெவிட்டாமையால்) அலைமோதும் பாற்கடலினின்று

http://acharya.org

தோன்றுதற்கோர் ஆராவமுதம்போன்றதும், பொருள் சுரக்கும் கோனை - நற்பொருளாகிய பாலை மேன்மேற்சுரக்கும் காமதேநு போன்றதும் ஆகிய, திருவாய்மொழி பாவை - திருவாய்மொழி யென்னும் (தொடர்நிலைச்) செய்யுளை, பணித்த - திருவாய்மலர்ந் தருளிய, எம் கோவை - எமது இறைவரான நம்மாழ்வாரை, அல்லா-அல்லாது பிறரை முன்பு பாராட்டிப் புகழ்ந்து கவிபாடிய, என்னை—, குற்றம் கண்டு - (முன்னமே இவரைப்பாடாத) குற்ற முடையனாகவுணர்ந்து, மற்றை நாவலர் என் நாவை பறிப்பினும் - (அக்குற்றத்துக்குஏற்றதண்டனையாக) மற்றைப்புலவர்கள் எனது நாக்கைப் பிடுங்கிவிட்டாலும், நல்லர் அன்றே - நல்லவரல்லரோ? [நல்லவரேயாவர் என்றபடி]; (எ - று.)

பழமும் கற்பகமலரும் அமுதமும் பசுவும் போன்ற திருவாய் மொழியென்னுந் திவ்வியப்பிரபந்தத்தைப் பாடி உலகுக்கு உபகரித்தவரும், எல்லாவுயிர்கட்குந் தலைவருமாகிய நம்மாழ் வாரது மகிமையை உணர்ந்து அவரையேபாடுவது கடவதாயிருக்க, அதுசெய்யாது இதுவரை யான் பிறரைப் பொருள்செய்து கொண் டாடிப்பாடிய குற்றத்திற்காகத் தக்கபுலவர்கள் என்னை நாவைப் பறித்திட்டாலும் தகு மென்பதாம். பழுதேபலபகலும்போயின வென்று அஞ்சி அதுகுறித்து அநுதாபங்கொண்டு அக்கழிவிரக்கத் தாற் கூறியது இது. குற்றஞ்செய்தவர் இம்மையிலேயே தக்க வரால் தக்கதண்டனை பெறுவராயின், அவ்வளவோடு, அத்தீவினை தீர்ந்திடுதல்பற்றி அவ்வினைப்பயனால் மறுமையில் நரகமடையா ரென்பது நூல்துணிபாதலால், அங்ஙனம் தமக்குநன்மைசெய் வாரை 'நல்லரன்றே' என்றார். அன்றே - தேற்றம். அன்று ஓ என்ற இரண்டுஎதிர்மறை, ஒருங்குதொடர்ந்து உடன்பாட்டுப் பொருளை உணர்த்தித் தேற்றக்கருத்தை விளக்கினவென்க.

பா - இங்கு, பாடல்களினாலாகிய பிரபந்தத்துக்குக் கருவி யாகுபெயர். பாடலுக்குஉரிய இலக்கணங்களெல்லாம் நன்கு அமைந்த பாடலென்பார் 'பா' என்று சிறப்பித்துக் கூறினரெனக் கொள்ளலாம். 'கற்பகத்தின்பூ' என்றதை, "என்றும்புலராதி யாணர்நாட்செல்லுகினும், நின்றலர்ந்துதேன்பிலிற்றுநீர்மைய தாய்க்—குன்றாத, செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத்திருமலர் போல், மன்புலவன் வள்ளுவன் வாய்ச்சொல்" என்ற திருவள்ளுவ மாலையோடு ஒப்பிடுக. 'பொருகடற்போதாவமுது' என்றது, இல்பொருளுவமை. 'பழகப்பழகப் பாலும் புளிக்கும்' என்ற தன்மை இத்திருவாய்மொழிப ழத்துக்கு இல்லையென்க. மிகுதியாக அலையெறியுமாறு கடையப்பட்ட திருப்பாற்கடலினின்று தோன்றிய அமிருதம் சிலகாலமளவும் மரணமில்லாத தெய்வப் பிறப்பின் சிற்றின்ப வாழ்க்கையையே தரவல்லதாம்; இத்திருவாய் மொழியமுதமோ எக்காலும்அழியாத முத்தியுலகத்துப் பேரின்ப வாழ்க்கையைத் தருவதாதலால், இதனை 'பொருகடற்போதா வமுது' எனவேண்டிற்று. "துறவாதவர்க்குந் துறந்தவர்க்குஞ் சொல்லே சுரக்கும், அறவாவினையிங் கொராயிரநிற்கவந்தோ சிலர்போய், மறவாதிரர்சொன்ன வாசகமாமலட்டாவைப் பற்றிக், கறவாக்கிடப்ப ரென்பெறலோ தங்கள் கைவலிப்பே" என்று

http://acharya.org

மேல்வருத்துக் காட்டியதனைத் தொகுத்துச்சுட்டி 'பொருள் சுரக்குங்கோ' என்றார்; கோ - வடசொல். 'கோவைப்பணித்த வெங்கோவை' என்றவிடத்து மடக்கு என்னுஞ் சொல்லணி காண்க. கோ - அரசனை புணர்த்தும்போது, தமிழ்மொழி. நாவலர் - கலாம், பிரசங்கம், போதனை முதலிய நாவின்வன்மையுடையவர். (57)

58. நாவலந்தீவிற்கவிகளெல்லாஞ்சிலநாள்கழியப்
பூவலந்தீவதுபோல்வவல்லாற்குருகூர்ப்புலவன்
கேவலந்தீங்கறுப்பான்கவிபோலெங்கும்போய்க்கொழுமிக்
கூவலந்தீம்புனலுங்கொள்ளுமேவெள்ளங்கோளிழைத்தே.

(இ-ள்.) அம் நாவல் தீவில்-அழகிய ஜம்பூத்வீபத்தில், கவிகள் எல்லாம்-(பிறர்பாடிய)பாடல்களெல்லாம், சில நாள் கழிய-சில நாள்கழிகிறவளவிலே, பூ வலம் தீவது போல்வ அல்லால்-மலரினது (மணம் மென்மைமுதலிய) சிறப்புக் கெட்டழிவதுபோலத் தாம் கெட்டிடுமே யல்லாமல்,—தீங்கு கேவலம் அறுப்பான் குருகூர் புலவன் கவி போல் -(அடியார்களுடைய)தீவினைகளை எளிதில் தீர்த்தருள்பவரும் திருக்குருகூரில் அவதரித்த சிறந்த புலவருமாகிய நம்மாழ்வாருடைய திருவாய்மொழிப் பாசுரங்கள்போல, —எங்கும் போய் கொழுமி-எவ்விடத்தும் போய்ப் பரவி, வெள்ளம் கோள் இழைத்து-வெள்ளத்தையொத்தல்செய்து [வெள்ளம் போல்வதாய் என்றபடி], கூவல் அம் தீம் புனலும் கொள்ளுமே-கிணற்றிலுள்ள அழகிய இனிய நீரையும் கொள்ளமாட்டுமோ? [மாட்டா என்றபடி]; (எ - று.)

மணமும் பொலிவுமுடையனவாய்ப் பூத்த மலர்கள் விரைவில் அச்சிறப்புநிலைகுலையப்பெற்று வாடியழிதல்போல, உலகத்திற் பிறர்பாடும் பாடல்களெல்லாம் அப்பொழுது சிறந்தனவாகக் காணப்பட்டாலும் என்றும் அழிவின்றி நிலைத்து நிற்கமாட்டா; ஆழ்வார் பாசுரங்களோ அங்ஙனமன்றி என்றும் அழியாது எங்கும் போய்ப் பரவிப் பெருவெள்ளம்போல்வனவாகிக் கிணற்றகத்து நீர்போல் அகத்துநின்ற அந்தரியாமியான பரமாத்மாவின் சொரூபத்தையும் தன்மேல் விளங்கும்படிகொண்டு வெளிக்காட்டுமென்பதாம். 'கிணற்றுநீரை வெள்ளங் கொள்ளாது' என்ற பொதுவழக்குக்குச் சிறப்பாக இத்திருவாய்மொழி வெள்ளம் எத்துணையாழ்பொருளையும் தன்னிலேபுலப்படுத்துமென்க.

இந்தப்பூமியின் நடுவிலுள்ள மகாமேருமலையை யடுத்துத் தெற்கிலுள்ள கந்தமாதனகிரியின்மேல், பதினோராயிரம் யோசனையளவுள்ளதாய்ப் பிரகாசிக்கிறதொரு நாவல்மரம் இருக்கின்றது; அதனையுடைமைபற்றி, இந்தப்பூமிக்கு ஜம்பூத்வீபமென்கிற பெயர் உண்டாயிற்று என்று புராணம் கூறும். அது, தமிழில் நாவல்தீவு எனப்பட்டது. நாவலந்தீவு, கூவலந்தீம்புனல் என்ற விடங்களில், அம் - சாரியையெனினுமாம். தீவு - த்வீபமென்ற வடசொல்லின் சிதைவு. கேவலம் தீங்கு அறுப்பான் - இழிவான குற்றங்களைப் போக்குபவன் எனினுமாம். தீங்கு கேவலம் அறுப்பான்-தீமைகளை

http://acharya.org

யெல்லாம் போக்குபவ னென்னவும் அமையும். கூபம் என்ற வட சொல்லின் விகாரமான கூவம் என்பது கூவல்என ஈறுதிரிந்தது. மற்றைப்புனலைக் கொள்வதேயன்றி யென்ற பொருளை யுணர்த்தலால், கூவலந்தீம்புனலும் என்ற உம்மை - இறந்தது தழுவிய எச்சம். கோள் - கொள்ளுதல்; கொள் என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர்: இது, இங்கு உவமவாசகமாய் நின்றது; கம்பராமாயணத்தில் "வாள்கொண்டகண்ணார்" என்றவிடத்திலும், கலித்தொகையில் "யாழ்கொண்டவிமிழிசை" என்றவிடத்திலும் 'கொண்ட' என்பது உவமவாசகமாய் நிற்றல்காண்க. இனி, 'வெள்ளங்கோளிழைத்து' என்பதற்கு - பிரளயவெள்ளத்துக்குப் பழிமொழிவிளைத்து என்று பொருள் செய்து, அனைத்தையும் அழிப்பதென்று பிரசித்தமான பிரளயவெள்ளத்திலும் தாம் அழியாதனவாய் அக்காலத்திலும் நிலைபெற்று என்று கருத்துக் கொள்ளுதலும் ஒன்று. (58)

59. *இழைத்தாரொருவருமில்லாமறைகளையின்றமிழாற்*
குழைத்தார்குருகையிற்கூட்டங்கொண்டார்குமரித்துறைவர்
மழைத்தார்தடக்கைகளாலென்னைவானின்வரம்பிடைநின்
றழைத்தாரறிவுந்தந்தாரங்கும்போயவர்க்காட்செய்வனே.

(இ - ள்.) இழைத்தார் ஒருவரும் இல்லா மறைகளை - தம்மைச் செய்தவர் யாருமில்லாத [நித்தியமான] வேதங்களை, இன் தமிழால் குழைத்தார் - இனிய தமிழ்ப்பாஷையினால் இயற்றித் தளிர்க்கச்செய்தவரும், குருகையில் கூட்டம் கொண்டார் - திருக்குருகூரில் தாம்சேர்தல்செய்தவரும் [குருகூரில் அவதரித்தவரும் என்றபடி], குமரி துறைவர் - கன்னியாகுமரி யென்னும் தீர்த்தத்துக்கு உரியவரும் ஆகிய நம்மாழ்வார், வானின் வரம்பு இடை நின்று - பரமபதத்தின் எல்லையில் நின்றுகொண்டு, மழைத்து ஆர் தட கைகளால் என்னை அழைத்தார் - மேகத்தின் தன்மை பொருந்திய பெரியகைகளினால் என்னை (அவ்விடத்துக்கு வாவென்று) அழைத்தார்; அறிவும் தந்தார் - (அங்ஙனம் அழைத்தது மாத்திரமல்லாமல் அவ்விடத்துக்கு யான் செல்லுதற்கு உரிய) தத்துவஞானத்தையும் (எனக்குத்) தந்தருளினார்; (ஆதலால்), அங்கும் போய் அவர்க்கு ஆள் செய்வன் - (யான்) அவ்விடத்தும் சென்று அந்த ஆழ்வார்க்கு அடிமைசெய்வேன்; (எ - று.)—ஈற்று ஏகாரம் - தேற்றம்.

தம்மை முத்திபெறும் விருப்பமுடையவராம்படியும், அது பெறுதற்கு ஏற்ற ஞானநலமுடையவராம்படியும் அருள்செய்த பரமாசாரியராகிய நம்மாழ்வார்பக்கல் தமக்குஉள்ள ஈடுபாட்டினால், பரமபதத்திலும் எம்பெருமானுக்கு நேரில் அடிமைசெய்யாது அவனடியார்களிற்சிறந்தவரான அவ்வாழ்வார்க்கே அடிமை செய்ய விரும்பினர் கம்பநாடரென்க.

வேதம் ஒருவராலுஞ்செய்யப்படாது பரப்பிரஹ்மம்போலவே நித்தியமாய் முக்காலத்திலும் ஒருபடிப்படநின்று அபௌருஷேய

http://acharya.org

மென்றும் செய்யாமொழியென்றும் பெயர்பெறுதலால், 'இழைத்தாரொருவருமில்லா மறைகள்' எனப்பட்டன. காரணமான வடமொழியினின்று செவிக்கினிய செஞ்சொல்லான தமிழிற் கொணர்ந்து நயப்படுத்தினவரென்பார் 'மறைகளையின் றமிழாற் குழைத்தார்' என்றார். குருகையிற்கூட்டங்கொண்டார் என்பதற்கு - திருக்குருகூரிலே ஸ்ரீமதுரகவிகள் முதலிய அடியார்களுடைய குழாத்தை உடன்கொண்டு வாழ்ந்தவரென்று உரைத்தலும் அமையும். பாண்டியநாடு கன்னியாகுமரியென்னும் நதியையுடைத்தாயிருந்ததனால், பாண்டியனுக்கு 'குமரித்துறைவன்' என்றும், 'கன்னித்துறைவன்' என்றும் பெயர்கள் வழங்கும். கன்னியாகுமரியென்னுந் துறைமுகத்தையுடைய கடற்கரைக்குத் தலைவனென்றும் இப்பெயர்கட்குக் காரணப்பொருள் கூறலாம். துறைவனென்பது, நெய்தனிலத்தலைவன்பெயர். ஆழ்வார் பாண்டிய நாட்டில் தலைமைபெற்று அந்நாட்டுக்கு அரசர்போல விளங்கியதனால், அப்பெயராற் குறிக்கப்பட்டவர். "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோ வுலகு," "ஆறுவறமுதலா மந்நான்கு - மேனோருக்கு, ஊழினுரைத்தார்க்கு மோண்ணீர் முகிலுக்கும், வாழியுலகென்னாற்று மற்று" என்றபடி கைம்மாறுகருதாது வேண்டுவார்வேண்டுவனகொடுக்குங் கைகளென்பார், 'மழைத்தார்கைகள்' என்றார்; அவரதுவள்ளன்மை கைகளின் மேலேற்றிக் கூறப்பட்டது. இங்கு அர்ச்சாவிக்கிரகரூபியாய் நின்ற ஆழ்வார்க்கு அடிமைசெய்ததேயன்றி அங்கு முத்தராய் சிறந்த நிலையிலும் அவர்க்குத் தொண்டுசெய்வேன் என்றவாறு. (59)

60. ஆட்செய்யலாவதெல்லாஞ்செய்தடியடைந்தேனதன்றித்
தாட்செய்யதாமரையென்றலையேற்றனன்றண்குருகூர்
நாட்செய்யபூந்தொடைமாறனென்றேனினிநாட்குறித்துக்
கோட்செய்யலாவதுண்டேயென்றனுருயிர்கூற்றினுக்கே.

(இ - ள்.) ஆள் செய்யலாவது எல்லாம் செய்து-அடிமையாக செய்யக்கூடிய தொழில்களையெல்லாம் செய்து, அடி அடைந்தேன்- (நம்மாழ்வாருடைய) திருவடிகளைச் சரணமடைந்தேன்; அது அன்றி - அதுவல்லாமலும், தாள் செய்ய தாமரை என் தலை ஏற்றனன் - (அவ்வாழ்வாருடைய) திருவடிகளாகிய செந்தாமரை மலர்களை என்தலையிற் குடிக்கொண்டேன்; (மற்றும்), தண் குருகூர் - குளிர்ச்சியான திருக்குருகூரில் அவதரித்த, நாள் செய்ய பூ தொடை - அன்றைநாளிற்பூத்தலையும் செவ்வியுள்ளவையுமான (மகிழ) மலர்களாலாகிய மாலையைத் தரித்த, மாறன்-மாறனென்னுந் திருநாமமுடையவன், என்றேன் - என்று (அவ்வாழ்வாருடைய திருநாமத்தையும் வைபவத்தையும் திருவவதாரஸ்தலத்தையும்) பாராட்டிக்கூறினேன்; இனி-இங்ஙனம் யான் ஆழ்வாரைச் சரணமடைந்து வழிபட்டு பத்தியாபின்பு, என்தன் ஆர் உயிர் - எனது அருமையான உயிரை, நாள் குறித்து கூற்றினுக்கு கோள் செய்யலாவது - உடம்பினின்று நீங்குங்காலத்தைக் குறிப்பிட்டு (அச்சமயத்தில்) யமன் (வந்து குற்றவாளியெனப் பிடித்துக்) காட்டி

http://acharya.org

வருத்தஞ்செய்யும் நிலை, உண்டே - உண்டாகுமோ? [உண்டாகாது என்றபடி]; (எ - று.)

நான் ஆழ்வார் திருவடிகளைச் சரணமாக அடைந்து அவற்றைத் தலைமேற்கொண்டு அவரது திருப்புகழைப் பாடித் திரிகரணங்களாலும் பலவாறு அடிமைசெய்யலானேனாதலால், இனி எனது வாழ்நாள் முடியுமெல்லையைக் குறிக்கொண்டு நோக்கி அந்த அந்திமகாலத்தில் என் உயிரை நலிவு செய்வது யானுக்கு இயலுமோ? என்பதாம். "உடலுருகி வாய்திறந்து மடுத்துன்னை நிறைத்துக்கொண்டேன், கொடுமைசெய்யுங் கூற்றமும் என்கோலாடி குறுகப்பெறா" என்ற பெரியாழ்வார் திருமொழி இங்கு நோக்கத்தக்கது. முன்னும் "கொடியெடுத்துக்கொண்டுநின்றேனினிக்கொடுங்கூற்றினுக்கோ, ரடியெடுத்துக்கொண்டேன்பால் வரலாகுங்கொல்" என்றார். மகாபாகவதோத்தமராகிய ஆழ்வாரை வழிபட்டபொழுதே தீவினையனைத்தும் தீர்ந்திட்டதனால் பாவிகளைத் தண்டிப்பவனான யமன் எனது உயிர்க்கு ஊறு செய்யமாட்டானென்பது கருத்து. ஆழ்வார் பிறந்தபொழுதே தொடங்கி அழுதல் பால்குடித்தல் முதலிய லோகவியாபாரமொன்றுமின்றி உலக நடைக்கு மாறாக இருந்ததனால், இவர்க்கு மாறன் என்று திருநாமமாயிற்று; வலியவினைகட்கு மாறாகவிருத்தலாலும், அன்யமதஸ்தர்களை அடக்கி அவர்கட்குச் சத்துருவாயிருத்தலாலும், பாண்டியநாட்டில் தலைமையாகத் தோன்றியதனாலும் வந்த பெயரென்றலு முண்டு. (60

[தலைவனைப்பிரிந்த தலைவி தென்றற்கு வருந்தியிரங்கல்.]

61. கூறப்படாமறையின்பொருள்கூறிக்குவலயத்தோர்
மாறப்படாவினைமாற்றியமாறன்மகிழலங்க
லூறப்படாநின்றபோதமுதாகுமதன்றிநஞ்சந்
தேறப்படாதுகெட்டேன்மன்றனுறுந்தண்டென்றலையே.

(இ - ள்.) கூறப்படா மறையின் பொருள் கூறி-(எவராலுஞ்) சொல்லப்படாத [எவர்க்குஞ்சொல்லமுடியாத] வேதங்களின் அர்த்தங்களை (அனைவரும் எளிதில் அறியலாம்படி தமிழினாற்) பாடியுணர்த்தி, குவலயத்தோர் மாறப்படா வினை மாற்றிய - நிலவுலகத்திலுள்ளாரது நீக்கவொண்ணாத அருவினைகளை நீக்கியருளிய, மாறன் - நம்மாழ்வார் தரித்த, மகிழ்அலங்கல் - மகிழம்பூமாலை, நாறப்படாநின்ற போது - மணம்வீசப்பெறுகின்றகாலத்தில், அமுது ஆகும்-(தென்றற்காற்று) அமிருதம்போ லினியதாம்; அது அன்றி - அம்மகிழம்பூமாலை மணம்வீசப்பெறுதபோது, நஞ்சம் - விஷம்போலக் கொடுமைசெய்வதாம்; (ஆகவே), மன்றல் நாறும் தண் தென்றலை - வாசனைவீசுகிற குளிர்ந்த தென்றற்காற்றை, தேறப்படாது - நம்பத்தகாது; கெட்டேன்—! (எ - று.)

'கெட்டேன்' என்றது, மிக்கஇரக்கத்தாற்கூறும் வார்த்தை; "கேளாராயர்குலத்தவ ரிப்பழி கெட்டேன் வாழ்வில்லை" எனப் பெரியாழ்வார் திருமொழியிலுங் காண்க.

http://acharya.org

கந்தவஹனென்றும் கந்தவாஹனென்றும் பெயர்பெறுமாறு மணத்தைக்கொண்டு வீசு மியல்பினதும் பொதுப்பட எல்லாவுயிர்கட்கும் குளிர்ச்சியைச் செய்யுந்தன்மையதுமான தென்றற்காற்றானது எனதுதலைவர் சாத்திக்கொண்டுள்ளமகிழம்பூமாலையின்மேற் பட்டு அதன் நறுமணத்தைக்கொண்டு என்மேல் வீசும்போது அவரைப்பிரிந்திருக்கிற எனக்கு அமிருதம்போல இன்பத்தைத் தருகின்றது; அதுதானே அங்குப் படாமல் அந்நறுமணங்கொணராது வெறுமையாய் வீசும்போது எனக்கு விஷம் போல மிக்க வருத்தத்தைச் செய்கின்றது; ஆதலால், தென்றற்காற்றைப் பொதுப்பட இனியதென்று நம்பக்கூடவில்லையென்று, தலைவனைப்பிரிந்து அப்பிரிவுத் துயரையாற்றாத தலைவி தென்றல்வரவுக்கு ஒருசார் வருந்தி யிரங்கிக் கூறிய வார்த்தை இது; திருவிருத்தத்தில் "மால்வரை மைக், கிளர்ந்துமதிதரக்கின்டெடுத்தான் முடிசூடுதுழாய், மலர்ந்தண் சிறுபசுந்தென்றலந்தோ வந்துலாகின்றதே" என்றது, தலைவனது திருத்துழாய்மாலையிற் பட்ட தென்றல்வரத் தலைவி மகிழ்ந்துரைத்த வார்த்தையாதல் காண்க. தலைவனுடம்போடு சம்பந்தப்பட்ட பொருள் தன்னுடம்பின்மீது வந்து படுகிறபோது பிரிவாற்றாமைத்துயரை ஒருவாறு தணிவித்து மகிழ்ச்சியைவிளைக்குமென்க. துணைவரோடு கூடியுள்ளார்க்கு இன்பஞ்செய்யுந் தென்றல், அவரைப்பிரிந்தார்க்குத் துன்பஞ்செய்யுமென்றல் வெளிப்படை; "தென்றலுந் தீயினிற்கொடிதாம்" என்றார் திருமங்கையாழ்வாரும். "தென்றற்கும்..................அயர்ந்தா, ளென்றன்னமேயென்னைக் குமாரற்கியம்பு" என்பது, இரத்தினச் சுருக்கம்.

குவலயம் - பூமண்டலம். மாறன் என்ற பெயர்க்கு ஒருகாரணப்பொருள் கற்பிப்பார்போல, 'குவலயத்தோர் மாறப்படாவினை மாற்றிய மாறன்' என்றார்; "தொல்லைவல்வினைக்கோர்மாறன்" என்பர் பின்னைப்பெருமாளையங்காரும். வினை - கருமம். தம்பக்கல் திருவுள்ளமுவந்து திருக்குருகூர்ப்பொலிந்துநின்றபிரான் பிரசாதித்த மகிழமலர்மாலையைத் தரித்தலால், நம்மாழ்வார்க்கு வகுளாபரணரென்று ஒருதிருநாமம் வழங்கும். "வண்குருகூர் நகரான்-நாட்கமழ்மகிழ்மாலை மார்பினன் மாறன் சடகோபன்" என்று ஆழ்வார் தாமே தம்மைக்கூறியிருத்தலுங் காண்க. தென்றல் - தென்றிசையிலிருந்து வருங் காற்று.

தமது ஞானக்கண்ணுக்கு ஆழ்வார் புலனாகி மறைந்தவளவிலே அவரது ஸதாஸாந்நித்தியத்தைப்பெறும் விருப்பினால்வருந்துகிற கம்பநாடர், லௌகிகபதார்த்தங்கள் அவரது சம்பந்தத்தையுடையனவாம்போது தமக்கு மகிழ்ச்சியையும், அவரது சம்பந்தமுடையன வாகாதபோது தமக்கு வருத்தத்தையுந் தரு மியல்பையெடுத்துக்கூறி ஆற்றுதல். இதற்கு உள்ளுறைபொருள். விவரம் நோக்கிக்கொள்க. (61)

62. தென்றலைத்தோன்றுமுபநிடதத்தையென்றீவினையை
நின்றலைத்தோன்றுநியாயநெறியைநிறைகுருகூர்

http://acharya.org

மன்றலைத்தோன்றுமதுரகவியைமனத்துள்வைப்பா
ரென்றலைத்தோன்றெம்பிராக்களென்னாவுக்குரியவரே.

(இ - ள்) தென்தலை தோன்றும் உபநிடதத்தை - தென் திசையிடத்தே உண்டாகிய வேதாந்தமும், என் தீ வினையை நின்று அலைத்து ஒன்றும் [ஒன்றும்] நியாயம் நெறியை - எனது கொடிய கருமங்களை உறுதியாகப் போக்கிப் பொருந்திய நீதிமார்க்கமுடையனவுமாகிய, நிறை குருகூர் மன் தலை தோன்றும் மதுர கவியை -(எல்லாவளங்களும்) நிறைந்த திருக்குருகூரில் அவதரித்த தலைவராகிய நம்மாழ்வார்பக்கல் உண்டான இனியபாசுரங்களை, மனத்துள் வைப்பார் -(ஓதியுணர்ந்து) தம்மனத்தில் வைத்துக்கொள்பவர்கள், என் தலை தோன்று எம் பிராக்கள் - எனது சிரசின்மேற் கொள்ளப்பட்டு விளங்கும் எமது தலைவராவர்; என் நாவுக்கு உரியவர் எனது நாவினால் துதிக்கப்படுதற்கும் உரியவராவர்; (எ - று.)

ஸம்ஸ்கிருதபாஷை ஆதியில் வடதிசையிலே மிக்கு வழங்கியதனால், அதற்கு வடமொழி யென்று பெயராயிற்று. தமிழ்ப்பாஷை இப்பரத கண்டத்தில் தென்பகுதியாகிய குணகடல் குமரி குடகம் வேங்கடம் என்னும் நான்கெல்லையிலுட்பட்ட தேசத்தில் வழங்குதலால், தென்மொழி யெனப்படும். ஞானகாண்ட மெனப்படுகிற உபநிஷத்துக்கள், வடமொழிவேதத்தின் ஒருகூறு. அவ்வடமொழி வேதாந்தத்தின் பொருள்களையே ஆழ்வார் பாடிய பிரபந்தங்கள் தென்மொழியினவாதலால், 'தென்தலைத்தோன்றுமுபநிடதம்' எனப்பட்டன. ஒன்றும் என்பது, ஒன்றும் என நீட்டல்விகாரம்பெற்றது. ஆழ்வார் அருளிச்செய்த பிரபந்தங்களெல்லாம் சன்மார்க்கத்தையே உணர்த்துவனவும் ஆதரத்தோடு தம்மை ஓதியுணர்வாரது கொடிய கருமங்களைப் போக்கி அவர்கட்கு நற்கதி தருவனவு மாதலால், 'என் தீவினையை நின்று அலைத்துஒன்றும் நியாயநெறி' என்றார். மன் தலை - மன்னனிடத்து; தலை - ஏழனுருபு. மதுரகவி - சொல்லினிமையும் பொருளினிமையுமுடைய பாடல். பிராக்கள் = பிரான்கள்; பிராக்கள் என வழங்குதலு முண்டு; "அப்பனைப், பெருமைபிதற்றவல்லாரைப் பிதற்றுமவர்கண்டீர், வருமையுமிம்மையு நம்மையளிக்கும் பிராக்களே" என்பது, திருவாய்மொழி. ஆழ்வாரருளிச்செயல்களைப் பாராயணஞ்செய்பவர் யாவர் தலைமேற்கொண்டு வணங்கித் துதிக்கத்தக்கவராவரென்று அந்த அடியாரடியார்பக்கல் தமக்குஉள்ள ஈடுபாட்டை வெளியிட்டார். அலைத்துநின்று என மாறினுமாம். ()

63. உரிக்கின்றகோடலினுந்துகந்தம்மெனவொன்றுமின்றி
விரிக்குந்தொறும்வெறும்பாழாய்விடும்பிறர்புன்கவிமெய்
தெரிக்கின்றகோச்சடகோபன்றன்றெய்வக்கவிபுவியிற்
சுரிக்கின்றநுண்மணலூற்றொக்குந்தொண்டச்சுரத்தலினே.

(இ-ள்.) பிறர் புல் கவி - அயலார்பாடுகிற புல்லிய பாடல்கள், —உரிக்கின்ற கோடலின் உந்து கந்தம் என - உரிக்கப்படுகின்ற வெண்காந்தளின்பெரிய கிழங்குபோல, விரிக்கும் தொறும்ஒன்றும் இன்றி வெறும் பாழ் ஆய்விடும் - வகுத்து நோக்கநோக்கச் சாரமொன்றுமில்லாமல் மிகவும்பயனற்றனவாய்ப்போய்விடும்; மெய்

http://acharya.org

தெரிக்கின்ற கோ-உண்மைப்பொருளை யுணர்த்துகிற தலைவரான, சடகோபன்தன்-நம்மாழ்வாருடைய, தெய்வம் கவி-தெய்வத்தன்மையுள்ள பாடல்களோ, தோண்ட சுரத்தலின் - ஆழ்ந்துநோக்க நோக்க மேன்மேல் நற்பொருள் இடையறாது வெளிப்படுதலால், புவியில் சுரிக்கின்ற நுண் மணல் ஊற்று ஒக்கும் - பூமியிலே அருவுகின்ற நுண்ணிய மணற்பாங்கிலுள்ள நீரூற்றைப் போன்றிருக்கும்; (எ - று.)

வெண்காந்தட்கிழங்கு உருவத்திற் பெரிதாயிருந்தாலும் உரித்துக் கொண்டு செல்லச்செல்ல உள்ளீடொன்றும் இலதாதல் போல, பிறர்பாடும் புன்கவிகள் மேல்நோக்கில் ஓசை குறையாதிருப்பினும் பொருள் வகுத்து நோக்கிக்கொண்டு ஆழ்ந்துசெல்லச் செல்ல உள்ளே ஒன்றும் சாரமில்லாமல் பயனற்று நிற்கும் என்பது, முந்திய வாக்கியத்தின் கருத்து; "கோட்டுரிபோல் ஆராயின் ஏதுமிலையாதி" என்ற கம்பராமாயணத்திலும் இவ்வுவமை விளங்கக் காண்க. வெறும்பாழ் - சத்தருக்யம்; இங்கே பொருட்சிறப்புச் சிறிதுமின்மை. நுண்மணற்பாங்கிலத்தி லுள்ள ஊற்றுத் தோண்டத் தோண்ட மேன்மேல் நீர்சுரக்குமாறுபோல நம்மாழ்வாருடைய திவ்விய கவிகள் ஆழ்ந்து நோக்கநோக்க மேன்மேற் பொருள்சுரந்து கொண்டிருக்கும் என்பது, பிந்திய வாக்கியத்தின் கருத்து; "மணற்கிளைக்க நீரூறும் மைந்தர்கள் வாய்வைத்து, உணச் சுரக்கும் தாய்முலை யொண்பால்-பிணக்கிலா, வாய்மொழி வள்ளுவர் முப்பால் மதிப்புலவோர்க்கு, ஆய்தொறு ஊறும் அறிவு" என்ற திருவள்ளுவமாலையும், "தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக், கற்றனைத்து ஊறும் அறிவு" என்ற திருக்குறளும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன. இரண்டும்-**உவமையணி.** இங்ஙனம், பிறர்புன்கவிக்கும் ஆழ்வார் தெய்வக்கவிக்கும் உள்ள மிக்க ஏற்றத்தாழ்வை உபமான பூர்வமாக நன்கு எடுத்துக்காட்டியவாறாம். மெய்தெரிக்கின்ற கோ - வேதசாஸ்திரங்கள் கொண்டு ஆய்ந்து அறிந்துணரத்தக்க தத்துவார்த்தங்களைச் செந்தமிழ்ப் பாடல்கள் கொண்டு விளங்க உணர்த்தி அவ்வப்பொருளின் உண்மை நிலையை யாவரும் எளிதில் அறியும்படி செய்தருளிய பெரியோன்.

உந்துதல் - செழித்துவளர்தல். கந்தம் - கிழங்கு: வடசொல். தெரிக்கின்ற - தெரிகின்ற என்பதன் பிறவினை. (63)

64\. **சுரக்குந்திருவும்வறுமையுந்தீருந்தொடக்குவிட்டுக்**
கரக்குமிருவினைமேன்மையுங்காணுங்கயல்குதிப்பத்
திரக்குங்கழைநெடுந்தாளிற்றொடுத்தசெந்தேனுடைந்து
பரக்கும்பழனவயற்குருகூர்வளம்பதியினே.

(இ - ள்.) திரக்கும் - உறுதிபெற்ற [நன்கு வளர்ந்து முதிர்ந்த], நெடு - நீண்ட, கழை தாளில் - கருப்பந்தண்டிலே, தொடுத்த - கட்டிய, செம் தேன் - சிவந்ததேனையுடைய கூடுகள், கயல் குதிப்ப உடைந்து - (அருகிலுள்ள) கயல்மீன்கள் துள்ளி விழும்போது அலைபடுதலால் உடைபட, பரக்கும் - (அத்தேவிறால்களினின்று தேன்) பரவிப்பாயப்பெற்ற, வயல் - கழனிகளை

http://acharya.org

யுடைய, பழனம் - மருதநிலஞ் சூழ்ந்த, குருகூர் - (நம்மாழ்வார் திருவவதாரஸ்தலமான) திருக்குருகூரினது, வளம் - மகிமையை, பாடுமின் - கவிபாடித் துதியுங்கள்; (அங்ஙனம் பாடினீராயின் உங்களுக்கு), திருவும் சுரக்கும் - செல்வமும் மேன்மேற்பெருகும்; வறுமையும் தீரும் - தரித்திரமும் நீங்கும்; இரு வினை - (நல்வினை தீவினை யென்னும்) இருவினைகளும், தொடக்கு விட்டு கரக்கும் - தொடர்ச்சிநீங்கி இருந்தஇடம் தெரியாதபடி அழிந்திடும்; மேன்மையும் காணும் - எல்லாமேன்மைகளும் உண்டாகும்; (எ - று.)

என்று உலகத்தார்க்கு நல்லறிவு உணர்த்தியவாறும். தொடக்கு - கட்டு, பந்தம். கரத்தல் - மறைதல். மேன்மையும் காணும் என்பதற்கு - உயர்கதியாகிய பரமபதமும் வாய்க்கு மெனினும் அமையும். 'கயல்குதிப்ப......வயல்' என்றது, ஆழ்வார்திருநகரியின் நிலவள நீர்வளச்சிறப்பை விளக்கியது. திரக்கும் - ஸ்திரமென்ற வடசொல்லின் விகாரமான திரம் என்ற பெயரின்மேற் பிறந்த பெயரெச்சம். சிந்தாமணியில் "கணைநிலைக்கரும்பு" என்றாற்போல 'திரக்குங்கழை' எனப்பட்டது. கழைத்தாள் என்பதை வடநூலார் 'இக்ஷு தண்டம்' என்பதுபோலக்கொள்க. கரும்பில் தேனிறால் தொடுத்தலை "கரும்பின்மேற்றொடுத்த தேன்" எனச் சிந்தாமணியிலுங் காண்க. இனி, கழை என்பதற்கு - மூங்கிலென்று பொருள்கொள்ளுதல் மருதநிலவருணனைக்குச் சிறவாமையுணர்க. தேன் - தேனடைக்குத் தானியாகுபெயர். உடைந்த = உடைய: எச்சத்திரிபு. (64)

65. பாடுங்கறங்குஞ்சிறைவண்டுபாடப்பைந்தாட்குவளைத்
தோடுங்கறங்குங்குருகைப்பிரானிச்சுழல்பிறவி
யோடுங்கறங்கன்னவாழ்க்கையைநீக்கியுணர்வுதவி
வீடுந்திறந்துதந்தானையெந்நான்றும்விடகிலமே.

(இ - ள்.) சுழல் - சுழன்றுவருகிற [கருமவசத்தால் மாறி மாறிவரும் இயல்பினதான], இ பிறவியோடும் - இந்தப்பிறப்புடனே, கறங்கு அன்ன வாழ்க்கையை - காற்றாடிபோன்ற [சிறிது பொழுதேனும் ஒருநிலையில்லாது சுழன்று அலைகிற] இப்பிரபஞ்ச வாழ்வை, நீக்கி - (அடியார்களுக்குப்) போக்கி, உணர்வு உதவி - நன்ஞானத்தை அளித்து, வீடும் திறந்து தந்தான் - பரமபதத்தையும் கதவுதிறந்து தந்தருளியவரும்,—பாடும் கறங்கும் சிறை வண்டு பாட - இசைபாடிக்கொண்டு சுழன்று மொய்க்கு மியல்பினவான சிறைவளத்தையுடைய வண்டுகள் ரீங்காரஞ்செய்து கொண்டு நெருங்கிமொய்த்து மோதுதலால், பைந் தாள் குவளை தோடும் கறங்கும் - பசுமையான நாளத்தையுடைய குவளையென்னும் நீர்ப்பூங்கொடிமலரின் இதழ்களும் ஒருநிலை நில்லாது சுழலப்பெற்ற, குருகை - திருக்குருகூரில் அவதரித்த, பிரானை - உபகாரகருமாகிய நம்மாழ்வாரை, எ நான்றும் விடகிலம் - எந்நாளும் விட மாட்டோம், (யாம்); (எ- று.)

நிலவள நீர்வளம் மிக்க திருக்குருகூரில் அவதரித்துத் தம்மைச்சரண மடைந்தவர்களுடைய மாறிமாறிப்பலபிறப்பும் பிறந்

http://acharya.org

திறந்து வருந்துந் துன்பத்தைத் தீர்த்து அவர்கட்குத் தத்துவஞா னோபதேசமுகத்தால் விடுபேறு வாய்க்கும்படி அருள்செய்த வரான நம்மாழ்வாரை எந்நாளும் விடமாட்டோ மாமென்று தமது துணிவை வெளியிட்டவாறும்.

பாடுங் கறங்கும் வண்டு - பெயரெச்சங்கள் அடுக்கி ஒருபெய ரைக் கொண்டன. இனி, பாடும் - பக்கமுழுவதும் என்றலும் ஒன்று. தான் - தண்டு. (65)

[தலைவனைப்பிரிந்த நிலையில் மாலைப்பொழுதுக்கும் இருளுக்கும் ஆற்றாத தலைவியின் துயர்கண்ட தோழி இரங்கல்]

66. *விடவந்தகாரவெம்பாலிற்பராங்குசர்மெல்லியலுக்*
கிடர்வந்ததாலென்றிரங்கிப்புணர்ந்திலரின்னுயிரை
படவந்தகாலன்கொலோவறியேனின்றிவ்வந்திவந்து
படவந்தகாரப்பெரும்புகையோடிப்பரக்கின்றதே.

(இ - ள்.) விடம் அந்தகாரம் - (கருநிறத்தாலும் கொடுமை யாலும்) விஷம்போன்ற இருளையுடைய, வெம் பாலில் - கொடிய (இரவாகிய காலப்) பகுதியில், பர அங்குசர் - பகைவராகிய யானை களை அடக்கி யாளுதற்கு மாவெட்டிபோன்றவராகிய [பலபராக் கிரமங்கள் மிக்க] தலைவர், மெல் இயலுக்கு இடர் வந்தது ஆல் என்று இரங்கி புணர்ந்திலர் - மெல்லியதன்மையையுடையவளான இத்தலைவிக்கு விரகவேதனை நேர்ந்ததேயென்று மனமிரங்கிவந்து கூடினாரில்லை; இன்று - இப்பொழுது, இ அந்தி வந்து பட - இந்த அந்திமாலைப்பொழுதாகிய பெருந்தீ வந்துசேர, அந்தகாரம் பெரும் புகை ஓடி பரக்கின்றதே - இருளாகிய பெரும்புகை எங்கும் விரைந்துசென்று பரவுகின்றதே! (இது), இன் உயிரை அட வந்த காலன் கொல் ஓ - (இத்தலைவியின்) இனிய உயிரை(ச் சமயம்பார்த்து)க் கொல்லவந்த யமன்தானோ? அறியேன் - அறிகின்றேனில்லை; (எ - று.)

மெல்லியல் - இங்கே, விரகவேதனையைப் பொறுக்கும் ஆற்ற லில்லாதவள் என்றபடி. காலன் - பிராணிகளின் ஆயுளைக் கணக் கிடுபவனென்று காரணப்பொருள்படும் வடசொல். 'அந்தகாரப் பெரும்புகை' என்பதை நோக்கி, செவ்வானத்தோடு கூடிய மாலைப்பொழுது செந்தீயாகக் கொள்ளப்பட்டது. "காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலைமலரு மிந்நோய்" என்றபடி சேர்க் கைக்கு உரிய காலமாகிய இரவின்தொடக்கமான மாலைப் பொழுதும், அதன்சம்பந்தமான இருளும் பிரிந்தார்க்கு அத்துயரை மிகுவிக்குமென்க.

உரியகாலத்தில் ஆழ்வாரது நித்யாநுபவம் தமக்குக் கிடைக்கவில்லையேயென்று மோகாந்தகாரத்திலே மிகவருந்தும் கம்பநாடரது நிலைமையை நோக்கின அன்பர்கள் இரங்கிக்கூறும் வார்த்தை, இதற்கு உள்ளுறை பொருள்; விரிப்பிற்பெருகும். மிகக்களித்துக் கொழுத்துச் செருக்கித்திரிந்து எதிர்த்து வாதப் போர்க்குவரும் பிறமதத்தவராகிய மதயானைகளைத் தமது

http://acharya.org

பிரபந்தங்களிற் கூறிய தத்துவார்த்தங்களினால் அடக்கிக் கீழ்ப்படுத்தித் தம்வசத்தில்வைத்தாட்டத் திறமுடையராய் அவற்றிற்குமாவெட்டியென்னுங் கருவிபோ லிருத்தலால், நம்மாழ்வார்க்கு, பராங்குசரென்று திருநாமமாயிற்று. பர அங்குசர் என்று பிரியும்: வடமொழிப்புணர்ச்சி, தீர்க்கசந்தி: பரர்-அயலார்; அங்குசர் - மாவெட்டி, தோட்டி. (66)

[உடன்போக்கில் தலைவன் தலைவிக்குத் தன்நகரணிமைகூறல்.]

67\. பரவாதுகேட்டினிப்பையநடசுருதிப்பசுக்கள்
கரவாதவற்றைச்சுரப்பித்தவைசொரியும்பொருட்பால்
கரவாதுதவியமாறன்கவியனையாயினியோர்
சரவாதமிப்புறமப்புறங்காணத்தடம்பணையே.

(இ - ள்.) சுருதி பசுக்கள் கரவாதவற்றை-எளிதிற் பொருள் புலப்படாத வேதங்களாகிய பால்சுரவாத பசுக்களை, சுரப்பித்து - அப்பொருளாகிய பாலை எளிதிற்சுரக்கும்படி செய்து, அவை சொரியும் பொருள் பால் - அவ்வேதப்பசுக்கள் மிகுதியாகப் பொழிகிற தத்துவப்பொருளாகிய பாலை, கரவாது உதவிய - லோபஞ்செய்யாது (தமது பிரபந்தங்களின் மூலமாக அனைவர்க்குங்) கொடுத்தருளிய, மாறன் - நம்மாழ்வாருடைய, கவி - பாசுரங்களை, அனையாய் - ஒத்துச் சிறப்பையும் இனிமையையுமுடைய மங்கையே—இனி இப்புறம் - இனி (எனது ஊர்க்கு) இப்பாற்செல்ல வேண்டிய இடம், ஓர் சர வாதம் - ஓர் அம்புவிழ்ச்சியளவுதான்; அப் புறம் - அதற்கு அப்பால், அ தட பணையே காண் - முன்பு நான்சொல்லியிருக்கிற எனது ஊரின் எல்லையாகிய பெரிய மருதநிலமே காண்; (ஆகவே), இனி—, பரவாது-விரைவுகொள்ளாமல், கேட்டு - (யான் சொல்லும் வார்த்தையைக்) கேட்டுக்கொண்டு, பைய நட - மெல்ல நடப்பாய்: (எ - று.)

இயற்கைப்புணர்ச்சி பாங்கற்கூட்டம் பாங்கியிற்கூட்டம் என்பவற்றாற் களவுநெறியில் தலைமகளோடு கலந்த தலைமகன் அங்குப் பழிபரவுதலின் தோழியால் உணர்த்தப்பட்டுத் தலைமகளை உடன்கொண்டு தன்னூர்க்குச் செல்லுதல் உண்டு; அது அகப்பொருளிலக்கணத்தில் 'உடன்போக்கு' எனப்படும். இங்ஙனம் தலைவன் தலைவியை இடையிலுள்ள பாலைநிலவழியாக உடன்கொண்டுபோதல்பற்றி, உடன்போக்கு, பாலைத்திணையின்பாற்படும்; "போக்கெல்லாம் பாலை புணர்தல் நறுங்குறிஞ்சி, ஆக்கஞ்சேரூடல் அணிமருதம் - நோக்குங்கால், இல்லிருக்கை முல்லை இரங்கல் நறுநெய்தல், சொல்லிருக்கும் ஐம்பால்தொகை" என்பது காண்க. அவ்வாறு தலைமகளை உடன்கொண்டு இடைச்சுரநெறி கடந்து தன்னூர்க்குச்செல்கின்ற தலைமகன் அவளுக்குவழி நடையிளைப்புத்துன்பம் தோன்றாதிருத்தற்பொருட்டுத் தனதுநகரினணிமையைக்கூறுதல், இப்பாட்டிற்குறித்த விஷயம் இத்துறையை, 'புணர்ந்து உடன்போன தலைமகன் நடந்துஇளைத்த தலைவியைக்குறித்து இடந்தலைப்பெய்தமை சொன்ன பாசுரம்' என்பர் அழகியமணவாளசீயர். இதன் மெய்ப்பாடு, பெருமிதம்.

http://acharya.org

பயன், இடமணித்தென்று தேற்றுதல். பாலைவனத்து நடந்து செல்கிற ஸ்ரீராமலக்ஷ்மணர்க்கு விசுவாமித்திரமகாமுனிவன் உபதேசித்த பலை அதிபலை என்னும் மந்திரவித்தைகள் போல, இத்தலைவன்வார்த்தை தலைவிக்குத் தாபந்தணிக்கு மென்க. தலைமகளும் தலைமகனும் தாம் ஒருவர்க்கொருவர் தனிநிழலாயிருக்கையாலே இவர்கட்கு இந்நிலத்தின்கொடுமையாலுண்டாகும் இளைப்பு இல்லையேயாகிலும், பொழுதுபோக்குக்காகத் தலைவன் தலைவியை நோக்கி இங்ஙனங் கூறுவனென்றலும் உண்டு. 'மாறன் கவியனையாய்' என்றது—"மண்டுகளாடி வைகுந்த மன்னன்", "அரிகேசரி தென்புனல் நாடனையாய்", "பல்லுருத்தோன்பழனம் மன்னபல்வலை" என்றாற்போலப் பாட்டுடைத்தலைவனது சம்பந்தமுடைய பொருளை உவமையாகக்கூறி அவ்வகையால் தலைவியைச் சிறப்பித்தது. 'தடம் பணை' என்றது, அவ்விடம் இவ்வழிநடை வருத்தத்தை இனிது தணிக்குந் தன்மையது என்றவாறு.

'சுருதிப்பசுக்கள் சுரவாதவற்றைச் சுரப்பித்து அவைசொரியும் பொருட்பால் கரவாதுஉதவிய மாறன்' என்றது, **உருவகம்.** **கரவாது** - ஒளிக்காமல்; இங்கு, வடமொழிவேதம்போல மறைபொருளினவாகவன்றி யென்றபடி: "எய்தற்கரியமறைகளை யாயிரமின்றமிழால் செய்தற்கு உலகில்வருஞ் சடகோபன்" என்றார் பெரியாரும். கரவாதுஉதவிய மாறன் என ஆழ்வாரது வள்ளன்மையை விடுபட்டுக் கூறியவாறு. சுருதிப்பசுக்கள் சுரவாதவற்றைச் சுரப்பித்து - பிறர்க்குஅரிய வேதங்களின் ஆழ்பொருள்களை ஆழ்வார்தாம் எளிதிற்கண்டு என்றபடி. 'மாறன்கவியனையாய்' என்றது, **உவமையணி.** ஶரபாதம் என்ற வடமொழித்தொடர், சரவாதமென விகாரப்பட்டதென்க; சரபாதம் = சரபாதஸ்தாநம்; எய்தஅம்பு விழுந் தூர மென்பது பொருள்.

கொடிய சமுசார மார்க்கத்தைக் கடத்தித் தம்மடியாரைத் தாம்வாழுமிடமான பரமபதத்துக்கு அழைத்துச்செல்லும் ஆழ்வார் அவர்க்கு அந்தப்பேரின்பப்பதியின் அணிமையைக் கூறுதல், இதற்கு உள்ளுறைபொருள். "சரணமாகுந்தனதாளடைந்தார்க்கெல்லாம்,மரணமானால் வைகுந்தங்கொடுக்கும்பிரான்" என்பவாதலால், இப்பிறப்பின் முடிவிலே முத்திசித்திக்கு மென்று, சேய்மை கருதி வருந்தும் அவரை அணிமைகூறித் தேற்றியவாறும். விவரம் நுண்ணிதின் உணர்க. (67)

[பிரிவாற்றாது வருந்துந் தலைவி கார்கண்டு கலங்குதல்.]

68. ***தடம்பணைத்தண்பொருநைக்குருகூர்தகைவருள***
வடம்பணைக்கொங்கையில்வைக்கின்றிலர்மற்றைமாலையெல்லா
முடம்பணைக்குந்தொறும்வெந்துருமைந்துவெம்பாம்புமிழ்ந்த
விடம்பணைக்கொண்டனவேபனிதோய்ந்திடுமேகங்களே.

(இ - ள்.) தட பணை - அகன்ற வயல்களையுடையதும், தண் - (நீர்வளத்தால்) குளிர்ச்சியானதும், பொருநை - தாமிரபர்ணிநதி பாயப்பெற்றதுமான, குருகூர் - திருக்குருகூரில் அவதரித்தவ

http://acharya.org

ராகிய நம்மாழ்வாருடைய, தகை வகுளவடம் - அழகிய மகிழம்பூமாலையை, பணை கொங்கையில் வைக்கின்றிலர் - (பாங்கிமார் கொணர்ந்து) பருத்த என் கொங்கைகளில் வைக்கின்றாரில்லை; மற்றை மாலை எல்லாம் - (அதுவன்றி) மற்ற மாலைகள் யாவும், உடம்பு அணைக்கும் தோறும் வெந்து உகும் - என் உடம்பிற் சேர்க்குந்தோறும் (மேற்கொண்ட விரகதாபத்தால்) வெந்து பொடியாய் உதிர்ந்துவிடும்; (இந்நிலையில்), பனி தோய்ந்திடும் மேகங்கள் - நீர்த்துளி நிறைந்த மேகங்களோ, ஐந்து வெம் பாம்பு உமிழ்ந்த விடம் பணைக்கொண்டனவே - கொடிய ஐந்துபாம்புகள் ஒருங்கு உமிழ்ந்த விஷங்கள் திரண்டனவேயாம்; (எ - று.) —ஏ - சற்றசை.

(திருவிருத்தத்தில் 31 - ஆம் பாசுரத்தில் நான்காமடியாகிய "மிசைமின்மிளிரியபோவான் வழிக்கொண்ட மேகங்களே" என்றவிடத்தும் மேகங்கள் என்பது - முதல்வேற்றுமையும், ஏகாரம் - சற்றசையுமேயாதலும், மேகங்களே என விளியாகாமையும் காண்க. ஏகாரவிற்றதாதல், கட்டளைக்கலித்துறையிலக்கணம்.) தலைவன் பொருளீட்டுதற்குப் பிரிந்துசென்றபோது கார்காலத்தே மீண்டுவருவதாகக் காலங்குறித்துச் சென்றபடி அக்காலம்வந்தவளவிலும் வரக்காணாமையாலே பிரிவாற்றாது வருந்துந் தலைவிக்கு மேகங்கள் அவ்வருத்தத்தை மிகுவித்தலால் அவள் அவற்றைப் பலநாகங்கள் ஒருங்குஉமிழ்ந்த விஷங்களே இங்ஙனந் திரண்டுவந்தனவென்று பழித்துரைத்தாளென்க. தலைவனைப்பிரிந்ததனாலாகிய தாபத்தால் தலைவி வருந்தும்போது பாங்கிமார் அத்தாபத்துக்குக்காரணம் இன்னதென்று ஆய்ந்து உள்ளபடி யுணராமல் தாபசாந்தியாகச் சீதோபசாரஞ் செய்பவராய்க் குளிர்ந்தமலர்மாலைகள்பலவற்றைக் கொணர்ந்து இவளுடம்பிற்பெய்ய, "வாங்கினை முலைக்குவையில் வைத்தனள்" என்றவாறு அவை இத்தாபத்தைத் தணிக்க மாட்டாது காமோத்தீபகமாய் இவ்வெப்பத்தை மிகுவித்து அதனால் தாம் தீந்து கரிந்து ஒழிதலால், 'மற்றை மாலையெல்லாம் உடம்பணைக்குந்தோறும் வெந்துகும்' என்றாள். "கண்ணன்கழல்துழாய் பொன்செய்பூண் மென்முலைக்கென்று மெலியுமே" என்றபடி, தலைவனைப் பிரிந்து வருந்தும் நிலையில் அத்தலைவன் சாத்திய மாலை கிடைக்கப்பெற்றால் அதனை அவனாகவே பாவித்து உடம்பில் ஒற்றிக்கொண்டு அவனைத் தழுவி யணைத்தவன் போன்று மகிழ்வுறக்கருதினளாதலால், அந்தத் தகுதியான பரிகாரத்தை உணர்ந்து செய்திடாததற்காகப் பாங்கியரை நொந்துரைப்பாள், 'குருகூரர் தகைவகுளவடம்பணைக்கொங்கையில் வைக்கின்றிலர்' என்றாள். 'தடம்பணைத்தண்பொருநைக்குருகூரர்' என்றது, எவ்வகைத்தாபத்தையுந் தணிக்கவல்ல நாட்டுவளமுடையவரென்ற குறிப்பு. தகை - அழகு; பெருமையுமாம். வகுளம் - வடசொல். ஐந்துஎன்றது, அநேக மென்றவாறு; திருவேங்கடத்தந்தாதியில் "இற்றைநீடிரவொன்றுஅஞ்சகம்பத்தை விளைக்கும்" என்றவிடத்தும் 'அஞ்சு' என்பது இங்ஙனமாதல் காண்க. ஐந்துவெம்பாம்பு - கொடிய ஐந்துதலை நாகமெனினுமாம்; இப்பொருளில் ஐந்து - எண்ணளவையாகுபெயர். பணைக்கொள்ளுதல் - பருமைகொள்ளுதல், திரளுதல்.

http://acharya.org

நெற்றிலைசமயங்களில் தமது ஞானக்கண்ணுக்கு இலக்கான ஆழ்வார் மறைந்த வளவிலே அவரது இடைவிடில்லாச்சேர்க்கை யில்லாவிருல் வருந்துகிற கம்பநாடர் தமக்கு அவ்வாழ்வார் உரிய காலத்தில் வந்து காட்சிதந்து தம்மை அவர்பக்கல் சேர்த்துக் கொள்ளாது விளம்பித்தலாலே, அந்த நற்காலத்துக்குச் சூசக மாகிற பொருள்கள் தமது வருத்தத்தை மிகுவித்தலைக்குறித்து இரங்கிக்கூறும் வார்த்தை, இதற்கு உள்ளுறைபொருள். அப்படிப் பட்ட சமயத்தில் ஆழ்வாரது பிரசாதமான மகிழமலர்மாலை கிடைக்கப்பெற்ருல் அது ஆறுதலாகுமேயன்றி மற்று எதுவும் இத்துயர்க்குப் பரிகாரமாகா தென்க. "உடுத்துக்களைந்த நின் பீதகவாடையுடுத்துக் கலத்ததுண்டு, தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன சூடு மித்தொண்டர்களோம்" என்றபடி பகவத்ப்ரஸா தத்தையே விரும்பிப்பெற்று ஸ்வரூபம் சிறப்பெறும் ஆழ்வார்கள் போல, நம்மாழ்வார் சூடிக்களைந்த மாலையையே அவர்ப்ரஸாதமாக ஏற்று மகிழுமியல்பினர் கம்பநாட்டாழ்வா ரென்க.

இங்ஙனம் திருமாலடியார்க்கு ஆட்பட்டவர்க்குத் தேவதாந்த ரங்களின் நிர்மால்யம் வெறுப்புக்கிடமாயினமையும் இதிற் போதரும். பிறவும் உய்த்துணர்க. இனி, இச்செய்யுளில், முதல் வாக்கியத்துக்கு - (அன்பர்கள்) ஆழ்வாருடைய போக்யதையையே [மிக்க இனிமையையே] எனது பரிபூர்ண பக்திக்கு விஷயமாக்கு கின்ருரில்லை யென்றார், இரண்டாம்வாக்கியத்துக்கு - மற்றை யினிமைகளெல்லாம் என்சொருபத்துக்குச் சேராவென்றும், மூன் ரும்வாக்கியத்துக்கு - கைம்மாறுகருதாது கருணைமழைசொரிந்து உலகத்துக்கு உபகாரியாகிற ஆழ்வார்க்குப் போலியான மேகங்கள் இந்நிலையில் எனக்கு வருத்தத்தைமிகுவிக்கின்ற வென்றும் (இது, போலிகண்டு அழிதல்) உள்ளுறைபொருள்கொள்ளவும் அமையும். (68)

[பொருள்வயிற்பிரிந்து சென்று மீளுந் தலைமகன் முகிலொடு கூறல்.]

69. மேகத்தையாற்றிற்கண்டேனென்றெண்ணுதுமெய்யன் குருகூ
பாகத்தையாற்றுஞ்சொல்லாளைக்கண்ணீரின் றுளிபரந்த [ர்ப்
மோகத்தையாற்றிக்கொண்டேகண்டமாற்றமொழிந்துசிந்தைச்
சோகத்தையாற்றிக்கொண்டேதுளிதூவத்தொடங்குகவே.

(இ - ள்.) மேகத்தை ஆற்றில் கண்டேன் என்று எண்ணுது - மேகங்களாகிய உங்களை இடைவழியிலே கண்டு செய்திகூறினே னென்று (இதனை ஓர் இழிவாக நீங்கள்) நினையாமல்,—மெய்யன் குருகூர் பாகத்தை ஆற்றும் சொல்லாளை - உண்மைப்பொருளையே உணர்த்துபவரான நம்மாழ்வாரது திருக்குருகூரின் பகுதியை யொத்த [மிக இனிய] சொற்களையுடையவளான என்காதலியை, கண் நீரின் துளி பரந்த மோகத்தை ஆற்றிக்கொண்டே - கண்ணீர்த் துளிபெருகுமாறு விஞ்சியுள்ள மோகத்தைத் தணிவித்துக் கொண்டே, (நீங்கள் சமீபிப்பவர்களாய்), கண்ட மாற்றம்

http://acharya.org

மொழிந்து சிந்தை சோகத்தை ஆற்றிக்கொண்டே-(நீங்கள்வருகிற வழியில் யான்மீண்டுவருதலைக்) கண்ட செய்தியைச் சொல்லி அவள் மனத்திலுண்டான விரகவேதனையைச் சாந்தப்படுத்திக் கொண்டே, துளி தூவ தொடங்குக - மழைத்துளி பெய்யத் தொடங்குவீர்களாக; (எ - று.)

ஆறுவகைப் பிரிவினுள் பொருள்வயிற்பிரிவாவது - முன்னோரால் ஈட்டப்பட்ட பொருள்கொண்டு இல்லறஞ்செய்தால் அதனால்வரும் பயன் அவர்க்கு ஆவதல்லது தமக்கு ஆகாமையால், தமது பொருள்கொண்டு இல்லறஞ் செய்தற்காகப் பொருள் தேடுதற்பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து தேசாந்தரஞ் செல்லுதல்; அங்ஙனம் பொருள்தேடப் பிரிந்துசெல்லுந் தலைவன் கார்காலத்தே மீண்டுவருவதாகக் காலங்குறித்துச் செல்வன். கற்பொடுபொருந்திக் கணவன்சொல்தவறாத தலைவி அவ்வார்த்தையை நம்பி அக்காலவரவை எதிர்நோக்கிக்கொண்டு அதுவரை பிரிவுத் துயரை ஒருவாறு பொறுத்து இல்லத்து இருப்பள். "இல்லிருக்கை முல்லை" என்பவாதலால், அங்ஙனம் இருத்தலும், இருத்தல் நிமித்தமும் - அகப்பொருளில் முல்லைத்திணையாம். அவ்வாறு பிரிந்துசென்ற தலைவன் பொருளீட்டிக்கொண்டு கார்காலத்தின் வரவைக் கண்டு இரங்கி விரைந்துமீண்டுவருகிறபோது விரைவாக முந்துற்றுச்செல்லும் மேகங்களை நோக்கி இவை தலைவியிருக்கிற விடத்தே என்னின் முற்பட்டுச் செல்லுமாயின் அதுகண்டு அவள் குறித்தகாலத்தில் என்வரவுகாணாத்துயரால் இறந்துபடக்கூடுமே யென்று அஞ்சி அம்மேகங்களை நோக்கி 'நீங்கள் முற்பட்டுச் சென்றீராயின் யான் சொல்தவறாது விரைந்து மீண்டுவருவதை நீங்கள் கண்ட செய்தியை அவட்குச்சொல்லி அவள்துயரை யாற்றிப் பின்பு உங்கள் காரியமாகிய மழைபெய்தலைத் தொடங்குவீராக' என்று அவற்றை வேண்டுதல், இச்செய்யுளிற்குறித்த விஷயம். மெய்ப்பாடு - அச்சம். பயன் - இவ்வார்த்தை செவிப்படப் பெற்ற பாகன் தேரை விரையச்செலுத்துதல்.

என்காரியமாக உங்களை நீங்களுள்ள விடத்திற்குப் பிரயத்தன பூர்வமாகவந்து கண்டு என்குறைகூறினேனில்லை யென்றும், தற்செயலாக வழியிலே சந்தித்தவிடத்துக் காரியஞ்சொன்னே னென்றும் நீங்கள் என்மீது குறைகருதலாகா தென்பான், 'மேகத்தையாற்றிற்கண்டே னென்றெண்ணுது' என்றான். 'மேகத்தை' என்றது, முன்னிலைப்படர்க்கை; சிந்தாமணியில் "எம்பியை யீண்டுப்பெற்றேன்" என்றவிடத்து 'எம்பியை' என்பதுபோல. 'மெய்யன் குருகூர்ப்பாகத்தையாற்றுஞ் சொல்லாள்' என்றது, பாட்டுடைத்தலைவனது சம்பந்தமுடைய பொருளை உவமைகூறி அம்முகத்தால் தலைவியைச் சிறப்பித்தது. ஆழ்வார் அவதாரஸ்தலமான திருக்குருகூர் முழுவதுமேயன்றி அதில் ஒவ்வொரு பகுதியுமே மிக இனிய தாகுதலால், அங்ஙனம் முழுவதும் இனியளாதலேயன்றி ஒவ்வோருறுப்புமே இனியளாகிற தலைவி யென்றுங் கருத்து அமைய 'மெய்யன்குருகூர்ப் பாகத்தை யாற்றுஞ் சொல்லாள்' என்றான்; இதனை - "தெய்வம்

http://acharya.org

பணிகழுமலொன்தில்லைச் சிற்றம்பலமனையாள்" என்றாற்போலக் கொள்க; இனி, பூமியை 'பூதலம்' என்றல்போல, குருகூரை 'குருகூர்ப்பாகம்' என்றதாகவுங் கொள்ளலாம். மோகமும், சோகமும் - மன்மதாவஸ்தைகள் ஐந்திற் சேர்ந்தவை; அவையாவன - சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம் என்பன. இவற்றில் சுப்பிரயோகம் - சொல்லும், நினைவும்; விப்பிரயோகம் - வெய்துயிர்த்திரங்கல்; சோகம் - வெதும்பும், துய்ப்பனவெறுத்திட்டலும்; மோகம் - அழுங்கலும், மொழிபலபிதற்றலும்; மரணம் - அயர்ப்பும், மயக்கமும். ஐந்தாம் அவத்தையாகிய மரணம் நேர்தற்கு முன்பு நான்காமவத்தையாகிய மோகத்தை நீங்கள் நற்செய்தி கூறுதலால் முதலில் தணித்து, மூன்றாமவத்தையாகிய சோகத்தையும் தணிக்கத்தொடங்குவீராக என்றான். அதற்குள் யான் வந்து முதலிரண்டு அவத்தைகளை ஆற்றவேனென்பது, உட்கோள். நீங்கள் முன்செல்வீராயின் "பருவமெடுத்தது வந்திலர் காதலரென்று வம்பொர, ஒருவமடப்பிடியே உயங்கேல் உயங்காதவன்னம், பொருபகை செற்ற பொற்றேரேறி யேந்தர்பொருள் முடித்து, வருவதுரைப்பமுன்னேவந்ததா லிம்மழைமுகிலே" என்று கண்டார்கூறும்படி என்வரவுரைக்குந் தூதாவீர் என்று வேண்டியவாறும்.

இரண்டாமடியில், ஆற்றும் என்பது - உவமவாசகம். சொல்லானே மோகத்தை ஆற்றிக்கொண்டு-இரண்டு செயப்படுபொருள்வந்த வினை. 'வார்த்தா' என்ற வடமொழி செய்தியையும் அதைக்குறிக்கும் பேச்சையும் உணர்த்துதல்போல, 'மாற்றம்' என்ற தென்மொழி - சொல்லையும் அதனாற்குறிக்கப்படும் செய்தியையும் உணர்த்தும். மெய்யன் - யதார்த்தவாதி, தத்துவஸ்வரூபி.

கற்பகாடர்பக்கல் பூர்ணகிருபைவைத்து அதனால் உரிய காலத்திலே அவர்க்குக் காட்சிதந்து பேறளிக்குமாறு திருவுள்ளங்கொண்ட ஆழ்வார் அதற்குமுன்னமே விரைந்து வருந்துகின்ற அவரை உறுதிகூறித்தேற்றுமாறு, திவ்யதேசயாத்ராபரராய்ச் செல்லும் சில பாகவதரை நோக்கிக் கூறுதல், இதற்கு உள்ளுறை பொருள். இங்ஙனம் கூறுதற்குக் காரணம், மிக்க கருணை யென்க. கைம்மாறு கருதாது பரோபகாரத்திற்காகவே நல்லநீரைச் சுமந்து கொண்டு உடம்பு வருந்தச்சென்று ஆங்காங்குப்பெய்து எல்லாவுயிர்களையும் பாதுகாத்தல், மேகங்களின் இயல்பு; "ஆதியந்த மனந்தமற்புதமான வானவர்தம்பிரான், பாதமாமலர்சூடும் பத்தியிலாத பாவிகளுய்ந்திடத், தீதில்நன்னெறி காட்டியெங்குந்திரிந்தரங்கனெம்மானுக்கே, காதல்செய்தொண்டர்" என்றபடி இவ்வுலகத்தில் அனைவரையும் உய்வித்தற்பொருட்டு மெய்வருத்தம் பாராமல் எங்குந்திரிந்து குணரஸபூர்த்திகொண்டு நல்லொழுக்கங் காட்டிக் கைம்மாறு கருதாது உதவும் இயல்பினர் பாகவதர் ஆதலால், மேகங்களைப் பாகவதர்களாகச் சொல்லத் தட்டில்லை. எம்பெருமானோடொக்கும்வடிவு இரண்டிடத்தும் உண்டு. கண்ணீர்த்துளிபரந்த மோகமும், சிந்தைச்சோகமும், மதனவத்தையிலொப்பப் பந்தியவத்தையிலும் நிகழும். துளிதூவுதல் =

http://acharya.org

தாபம் ஆறுமாறு மெதுவாக இன்சொற்பேசுதல்; மற்றும் இங்ஙனங் கண்டுகொள்க. (69)

[மதங்கு.]

70. தொடங்குகின் றாணடஞ்சொல் லுகின்றேன் குருகூரர்த்தொழா
மடங்குகின் றாண்மண்டலஞ்சுற் றியாடுகின் றாண்மதங்கி
விடங்குகண்டார்பிழைப்பார்சவையீர்விரைந்தேகுமிந்தப்
படங்குவிண்டாற்பின்னைப்போகவொண் ணாதும்பதிகளுக்கே.

(இ - ள்.) சவையீர் - சபையிலுள்ளவர்களே! சொல்லுகின்றேன் - (யான் உங்கட்கு ஓர் உறுதி) கூறுகின்றேன்; (கேளுங்கள்): மதங்கி - ஆடல் பாடல்வல்ல ஓர் இளமங்கை, நடம் தொடங்குகின்றாள் - கூத்தாடத் தொடங்குகிறாள்; குருகூரர் தொழா மடங்குகின்றாள் - திருக்குருகூரில் அவதரித்தவரான நம்மாழ்வாரைத் (தொடக்கத்திலே) தொழுது (நிரையினுள்ளே) திரும்பிச்செல்லுகிறாள்; மண்டலம் சுற்றி ஆடுகின்றாள் - மண்டலமாகச்சுழன்று (அங்கிருந்தபடியே) கூத்தாடுகின்றாள்; விடங்கு கண்டு பிழைப்பார் ஆர் - (இந்த மதங்கியின்) அழகைக் கண்டால் (காதல்நோயால் மரணவேதனைப்படாது) பிழைப்பவர் எவர்? [எவருமில்லையென்றபடி]; இந்த படங்கு விண்டால் பின்னை உம் பதிகளுக்கு போக ஒண்ணாது - இந்தத்திரையை வாங்கிவிட்டாலோ (அவளைக் கண்ட) பின்பு (மோகித்துவீழ்வதேயன்றி உங்களால்) உங்களூர்க்குப் போகமுடியாது; (ஆதலால்), விரைந்து ஏகும் - (அத்திரை வாங்குதற்கு முன்னே) விரைவாக அப்பாற் போய்விடுங்கள்.

மதங்கு என்பது - கலம்பகத்துக்கு முக்கியமான உறுப்புக்கள் பதினெட்டனுள் ஒன்று; இதனை மதங்கமென்றும், மதங்கியாரென்றும் வழங்குவர். இரண்டுகைகளிலும் வாளையெடுத்துச் சுழற்றிக்கொண்டு தானும் சுழன்று ஆடுவாளோ ரிளமாதின் அழகுமிகுதியை ஒருவன் பாராட்டிக் கூறுவதாகச் செய்யுள்செய்வது, இதன் இலக்கணம். அங்ஙனம் ஆடுபவள், மதங்கியெனப்படுவள். மற்றும் கலம்பகவுறுப்பினுள் புயவகுப்பு மறம் முதலிய சிலவும் அந்தாதிப்பிரபந்தங்களில் அருமையாகக் கூறப்படுதல் காண்க. "போதமெனக்கெளிதானார் போதவனுக்கரிதானார், நாகரங்கர்திருத்தாள் நாடியரங்கில் நடக்கில், ஓதுமதங்கிநடித்தால் உள்ளமதங்கியிரக்காம், வேதமறைந்திடவல்லீர் விரையமறைந்து விடீரே" என்ற திருவரங்கக்கலம்பகத்து மதங்குச்செய்யுள் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. அரங்கிற்புகுந்து ஆடுவார் தொடக்கத்தில் தமது வழிபடுகடவுளைத் தொழுதல் இயல்பு. மண்டலம் சுற்றுதல் - பிரமரியென்னுங் கூத்துவிகற்பம்.

ஞானங்கனிந்து நலங்கொண்ட கம்பநாடரது பக்தியதிசயத்தை யுணர்ந்த பாகவதர், அவர் ஆழ்வாரைத் தொழுதலையும், "கும்பிடுநட்டமிட்டெழுந்தாடிப்பாடியிறைஞ்சி" என்றபடி பக்திபரவசப்பட்டுக் கூத்தாடுதலையும் உலகத்தார்க்கு எடுத்துக்காட்டி, 'இவரது நலத்தைக் கண்டால் தப்ப விரகில்லை' என்றும், 'ஞானக்

http://acharya.org

கண்ணின் காட்சியை மறைக்கும் திரிபுணர்வாகிய திரை அகல இவரது சொரூபத்தை உள்ளபடி கண்டவர் இவர்பக்கல் ஈடுபடுவதேயன்றி இவரைவிட்டு முன்பு தாம் விரும்பிய பிரபஞ்ச விஷயங்களிற்செல்ல இயலாது' என்றும் பாராட்டிக்கூறுதல், இதற்குஉள்ளுறைபொருள். அகலம் உரைத்துக்கொள்க. (70)

71. பதியந்தமிழென்னநான்மறையென்னவிப்பார்புரக்கு
மதியந்தமிலொளிமாலைகளென்னமறைத்தமிழி
னதியந்தருங்கவியாயிரஞ்செய்தளித்தானமுதம்
பொதியந்தருநதியங்குருகூரெந்தைபூசுரர்க்கே.

(இ - ள்.) பொதியம் தரு - பொதியமலையினாற் கொடுக்கப்பட்ட [பொதியமலையிலிருந்து தோன்றிவருகிற], நதி - தாமிரபர்ணிநதி பாயப்பெற்ற, அம் - அழகிய, குருகூர் - திருக்குருகூரில் திருவவதரித்த, எந்தை - எமது தலைவராகிய நம்மாழ்வார்,—தமிழ் பதியம் என்ன - (மேல்நோக்கிமேலே காண்பவர்கள்) தமிழ்ப்பதிகங்களென்று சொல்லும்படியும், நால் மறை என்ன-(ஆழ்ந்துபொருள் நோக்குபவர்) நான்குவேதங்களென்று சொல்லும்படியும், இ பார் புரக்கும் மதி அந்தம் இல் ஒளி மாலைகள் என்ன - (பயனைநோக்கி ஈடுபடுபவர்)இந்நிலவுலகத்தை நல்வழிப்படுத்திப் பாதுகாப்பனவும் வரம்பிலாஞானமாகிய ஒளியை வெளிப்படுத்துவனவுமான ஆரங்களென்று சொல்லும்படியும், மறை தமிழின் அதிஅம் தரும் கவி ஆயிரம்செய்து - வேதங்கட்கும் தமிழ்ப்பாஷைக்கும் மிக்க அழகைத் தருகிற திருவாய்மொழியாயிரம் பாடல்களைப் பாடி, பூசுரர்க்கு அமுதம் அளித்தான் - பூதேவரெனப்படுகிற அந்தணர்களுக்கு அந்த இன்கவிகளாகிய அமிருதத்தைக் கொடுத்தருளினார்;

திருமால் வானுலகத்தில் வாழுந் தேவர்க்கு அமிருதமளித்தாற்போல, அத்திருமாலடியாரிற் சிறந்தவராகிய நம்மாழ்வார் நிலவுலகத்துவாழுந்தேவரெனப்படுகிற அந்தணர்க்குத் திருவாய்மொழியாகிய அமிருதத்தை அளித்தன ரென்க; "மறைப்பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தாற் கடைந்து, துறைப்பாற்படுத்தித் தமிழாயிரத்தின்சுவையமுதம், கறைப்பாம்பணைப்பள்ளியானன்பரிட்டங்களித்தருந்த, நிறைப்பான்" என்பர் பிள்ளைப்பெருமாளையங்காரும்.

பதியமெனினும், பதிகமெனினும் ஒக்கும். பத்துச்செய்யுள் கொண்டது, பதிக மெனப்படும். திருவாய்மொழி, நூறுபதிகங் கொண்டது; அந்நூறுபதிகங்தோறும் பத்துச்செய்யுள் ஒவ்வொரு பதிகத்தின் ஈற்றிலுமுள்ள திருநாமப்பாசுரம் நீங்க வெனக் காண்க. இனி, செய்யுளைக்குறிக்கிற பத்யம் என்ற வடசொல் பதியமென விகாரப்பட்டுவந்ததெனக் கொண்டு, தமிழ்ப்பதியம் என்ன -தமிழ்ப்பாசுரங்களென்று சொல்லும்படியும் என்று உரைத்தலும் ஒன்று. அந்தமில் மதி எனக. 'அதி' என்பது, வடசொல்லான் மிகுதிப்பொருளதோர் இடைச்சொல். பொதியம்=பொதியில்; மலயபருவதம். பூஸுரர்-வடசொல்; வானுலகத்தில்தேவர்போல, பூலோகத்தில் அந்தணர் சிறப்புற்றுவிளங்குதலால், இப்பெயர்

http://acharya.org

பெற்றனர்; "நிலத்தேவர்" என்றார் ஆழ்வாரும். இங்கு 'பூசுரர்' என்றது, மதுரகவியாழ்வார் முதலிய வைதிகர்களை. 'கவியாயிரம்' என்றது, சொச்சந்தொகையைக் குறியாது, பெருந்தொகை மாத்திரத்தைக் குறித்தது; திருவாய்மொழிச்செய்யுள் - 1102 ஆகலின். (71)

72. பூட்சிகண்மீர்பொய்ச்சமயப்புலவர்க்குப்போக்குவல்வாய்
வாட்சிகண்மீர்மற்றைமாயத்தருகர்க்குமன் னுயிர்கட்
காட்சிகண்மீர்தொண்டர்க்கானந்தவாரிகண்மீரறிவைக்
காட்சிகண்மீர்பரவுங்குருகூர்வந்தகற்பகமே.

(இ - ள்.) குருகூர் வந்த கற்பகம்-திருக்குருகூரில் தோன்றிய கல்பகவிருக்ஷம்போன்ற நம்மாழ்வார்,—பொய் சமயம் புலவர்க்கு-(பிரபஞ்சத்தைப்) பொய்யென்றுகூறும் (பௌத்தமும் பிரச்சந்ந பௌத்தமுமாகிய) மதங்களிலுள்ள வித்துவான்களுக்கு, பூட்சி கண்மீர் - (வாயையடக்கும்) பூட்டு என்று அறியுங்கள்; மற்றை மாயத்து அருகர்க்கு - அவர்களினும் வேறான வஞ்சனையையுடைய ஜைநசமயத்தார்க்கு, போக்கு வல் வாய் வாட்சி கண்மீர் - (அவர்களமாறுபாட்டைப்) போக்குகிற வலியகூர்வாயையுடைய வாட்சி யென்னுங் கருவி யென்று அறியுங்கள்; மன் உயிர்கட்கு ஆட்சி கண்மீர் - உலகத்தில் நிலைபெற்ற உயிர்களுக்கு உரிமையான அறி வற்ற பொருளென்று அறியுங்கள்; தொண்டர்க்கு ஆநந்த வாரி கண்மீர் - (தமது) அடியார்களுக்குப் பேரின்பப் பெருக்காவ ரென்று அறியுங்கள்; அறிவை காட்சி கண்மீர் - (மற்றும் அவர் நமது) அறிவுக்குக் காணத்தக்க பொருளாவ ரென்று அறியுங்கள்; (ஆகவே), பரவும் - (எல்லீரும் அவரை) வணங்கிப் புகழ்ந்து வழி படுங்கள்; (எ - று.)— என்று உலகத்தார்க்கு உபதேசித்தபடியாம்.

பூட்சி=பூட்டு. கண்மீர் - தேற்றம். பொய்ச்சமயம் - மித்யா வாதமும், மாயாவாதமு முள்ள மதங்கள். மெய்ப்பொருளாகிய கடவுளையும் மறுபிறப்பையும் இருவினைப்பயனையும் இல்லை யென்றுகூறும் லோகாயதமதமும், மற்றும் இத்தன்மையனவான மாறுபாடுகளைக் கூறும் மதாந்தரங்களும் 'பொய்ச்சமயம்' என்றதில் அடங்கும். வாட்சி=வாய்ச்சி; மரத்தைச்சீவும் ஒருகருவி; அது மரக்கோணலைத் தீர்ப்பதுபோல, இவர் மனக்கோணலைத் தீர்ப்பரென்க. இனி, 'சி' என்பதைப் பகுதிப்பொருள்விகுதி யெனக் கொண்டு, வாட்சி - வாள்என்றலும் ஒன்று. "இலிங் கத்திட்டபுராணத்தீரும் சமணரும் சாக்கியரும், வலிந்துவாது செய்வீர்களும் மற்றுநுந் தெய்வமுமாகிநின்றான், மலிந்துசெந்நெற் கவரிவீசுந் திருக்குருகூரதனுட், பொலிந்துநின்ற பிரான்கண்டீர் ஒன்றும் பொய்யில்லை போற்றுமினே" என்று ஆழ்வார் திருவாய்மொழியில் பரமதநிரஸநபூர்வமாக ஸ்வமதஸ்தாபநஞ்செய்ததனால், 'பூட்சி கண்டீர் பொய்ச்சமயப்புலவர்க்குப் போக்குவல் வாய்வாட்சி கண்டீர் மற்றைமாயத்தருகர்க்கு' என்றார். ஜீவாத்மா நித்தியமாதலால், 'மன்னுயிர்' எனப்பட்டது. 'உயிர்கட்கு ஆட்சி' என்பதற்கு - ஜீவராசிகளை ஆளுபவரென்று பொருள் கொள்ளவுமாம்; ஆட்சி - ஆளுகை; 'சி' விகுதி பெற்ற தொழிற்

http://acharya.org

பெயர்: இங்கு, ஆளுபவர்க்கு ஆகுபெய ரென்க. ஆனந்தவாரி - வடமொழித்தொடர். அறிவை = அறிவுக்கு; உருபுமயக்கம்; அறிவைக்காட்சி - அறிவு கொண்டு காண்பதற்கு ஏற்ற பொருளென்க: அவசியம் அறியத்தக்க பொருளென்றபடி. இனி, 'அறிவைக்காட்சி' என்பதற்கு-ஞானமயமான பரப்பிரஹ்மஸ்வரூபத்தை புணர்ந்தவ ரென்று பொருள்கொள்ளவுங் கூடும். அறிவு ஐ காட்சி யென்று பிரித்து, அறிவுக்கு அழகிய காட்சிப்பொருளென்றது மொன்று. பரவும் - ஏவற்பன்மை; பெயரெச்சமாகக் கொண்டு, அனைவராலுந் துதிக்கப்படும் குருகூ ரெனினும் இழுக்காது. கற்பகம் - உவமையாகுபெயர்; வேண்டுவோர் வேண்டுவனவற்றை அருளுதலால், ஆழ்வார் கற்பக மெனப்பட்டனர். கல்பக மென்ற வடசொல் - வேண்டியவற்றைக் கல்பிப்பதென்று காரணப்பொருள்: கல்பித்தல் - உண்டாக்குதல். (72)

73. ***கற்றுஞ்செவியுறக்கேட்டும்பருகிக்களித்துமுள்ளே***
முற்று முகப்பெய்துமூழ்கிக்குடைதுமுகந்துகொடு
நிற்றுநிலையுறநீந்துதும்யாநிதமாறனெம்மை
விற்றும்விலைகொள்ளவுமுரியான்கவிவெள்ளத்தையே.

(இ-ள்.) எம்மை விற்றும் விலைகொள்ளவும் உரியான்-எம்மை விற்கவும் வாங்கவும் உரியவராகிய, மாறன்-நம்மாழ்வார் அருளிச்செய்த, கவிவெள்ளத்தை - பாடல்களாகிய பிரவாகத்தை, யாம் - நாம்,—நிதம் - நாடோறும், கற்றும் செவி உற கேட்டும் பருகி களித்தும்-ஓதியும் (பிறர்கூறக்) காதில்நன்றாகக்கேட்டும் குடித்து மகிழ்வோம்; உள்ளே முற்றும் உக பெய்தும் - அகத்திலே அவ்வெள்ளமுழுவதும் நிரம்பும்படி ஊற்றிக்கொள்வோம்; மூழ்கி குடைதும் - (அவ்வெள்ளத்தில்) இறங்கி அமிழ்ந்து நீராடுவோம்; முகந்து கொடு நிலை உற நிற்றும் - (அப்பெருக்கை) மொண்டெடுத்துக்கொண்டு நிலைபெற நிற்போம், நீந்துதும் - (அவ்வெள்ளத்தில்) நீந்துவோம்; (எ - று.)

ஆழ்வார்பாசுரங்களை வெள்ளமாக்கி, அதற்கேற்ப, 'பருகிக் களித்தும், முற்றும் உள்ளே உகப்பெய்தும், மூழ்கிக்குடைதும், முகந்துகொடுநிலையுற நிற்றும், நீந்துதும்' என்றார்; **உருவகவணி.** ஆழ்வாரது திவ்வியப்பிரபந்தங்களிலேயே இடைவிடாது பலவாறு பயின்று அவற்றை உபயோகித்துக்கொள்வோ மென்பது கருத்து. "பருகுவனன்ன வார்வத்தனாகி...........செவிவாயாகநெஞ்சுகளனாகக், கேட்டவைகேட்டவைவிடாதுளத்தமைத்தல்" முறைமையாதலால் 'கற்றுஞ் செவியுறக்கேட்டும் பருகிக்களித்தும்' என்றும், 'உள்ளேமுற்றும் உகப்பெய்தும்' என்றும் கூறப்பட்டது. உள்ளே - உள்ளத்திலே. உள்ளே முற்றும் உகப் பெய்தல்-மறந்துவிடாதபடி மனத்திலே நிரம்பப் பதியவைத்துக்கொள்ளுதல். மூழ்கிக்குடைதல் - பொருளாராய்ச்சி செய்தல். முகந்துகொடு நிற்றல் - அப்பொருளைப்பாராட்டித் தாம்உபயோகிக்குமாறு தேக்கிக்கொள்ளுதல். நீந்துதல் - அவற்றில் ஈடுபடுதல்.

http://acharya.org

தாம் ஸ்வாதந்திரியமின்றி ஆழ்வார்க்குப்பரதந்திரராய் நிற்பவரென்பதும் தம்மை அடிமையாக ஆழ்வார் ஆட்கொண்டருளியதும் தோன்ற, 'எம்மை விற்றும் விலைகொள்ளவும் உரியான்' என்றார்; அடிமைகொண்டவனென்ற பொருளை 'விற்றும் விலைகொள்ளவும் உரியான்' எனப் பிறிதொருவகையாற் கூறியது, **பிறிதினவிற்சியணி.** 'எம்மை' என்றது, இயற்கைத் தனித்தன்மைப்பன்மை: தம்மைப்போன்ற அடியார்களையுங் கூட்டிய உளப்பாட்டுத்தன்மைப்பன்மையுமாம்.

நிதம் - நித்ய மென்ற வடசொல்லின் விகாரம்; நித்தமெனவும் வழங்கும். விற்று=விற்க; எச்சத்திரிபு. விலைகொள்ளுதல் - விலைக்குக்கொள்ளுதல். (73)

[தலைவியின் கண்ணழகு கண்டு வியந்த தலைவன் கூறுதல்.]

74. வெள்ளம்பரந்தனவோகமலத்தன் றிவெண்மதிமேற்
கள்ளம்பரந்தனவோமுயனீக்கிக்கவிக்கரசன்
றெள்ளம்பரந்தவயற்குருகூர்க்கொம்பின்செம்முகத்தே
முள்ளம்பரந்தனவோகண்களோவொன் றுமோர்கிலமே.

(இ - ள்.) (இவை),—கமலத்து - (ஒரு) செந்தாமரைமலரின் மேல், வெள்ளம் பரந்தனவோ - பிரவாகம் பரவியவை தாமோ? —அன்றி - அல்லது, வெள் மதிமேல் - வெண்ணிறமான சந்திரன் மேல், முயல் நீக்கி - (களங்கமாகிய) முயலைப் போக்கி, கள்ளம் பரந்தனவோ - களவுத்தொழில் பரவியவை தாமோ,—கவிக்கு அரசன் - பாவலர்கட்கெல்லாம் மேலான தலைவராகிய நம்மாழ்வாருடைய, தெள் அம் பரந்த வயல் குருகூர் - தெளிவான நீர் பரவிப் பாயப்பெற்ற கழனிகளையுடைய திருக்குருகூரிலுள்ள, கொம்பின் - பூங்கொம்புபோன்ற இம்மங்கையினது, செம் முகத்து - சிவந்த முகத்திலே, எம் உள்ளம் பரந்தனவோ - எமது மனம் பரவியவை தாமோ?—(அன்றி), கண்களோ - கண்கள்தாமோ? —ஒன்றும் ஓர்கிலம் - (இவற்றில்) ஒன்றையும் துணிவாக அறிகின்றோமில்லை; (எ - று.)

தலைமகன் தலைமகளைப் பூஞ்சோலையில் ஏகாந்தத்திலே தற்செயலாகச் சந்தித்தபோது அவளது கண்ணழகில் ஈடுபட்டு அதுகுறித்து வியந்து தன்னிலே தான் சொல்லிக்கொண்டது, இது; நெஞ்சொடுகூறிய தென்க. இது நலம்பாராட்டல். 'நயப்பு' என்றும், 'கண்நயந்துரைத்தல்' என்றுங் கூறப்படும். ஒருவருள்ளக் கருத்தை ஒருவரறியாத ஒருதலைக்காமமாதலால், இது, இயற்கைப் புணர்ச்சியிலே கைக்கிளையின்பாற்படும்.

இவளது முகம் செந்தாமரை மலர் போன்றிருக்க, அதில் விசாலமாயுள்ள கண்கள் கடல்வெள்ளம்போலுதலால், 'கமலத்து வெள்ளம்பரந்தனவோ' என்றான்; "அஞ்சொற்களமுதிலள்ளிக் கொண்டவள் வதனம் மைந்தீர், கஞ்சத்தினளவிற்றேறுங் கடலினும்பெரிய கண்கள்" என்ற கம்பராமாயணம் இங்குக் காணத்தக்கது. தன்மனம் அக்கண்ணழகிலீடுபட்டு மீளவொண்

http://acharya.org

ஞதபடி ஆழ்ந்திட்டதனாலும், அக்கண்களை வெள்ளமென்றான். மகளிர் கண்களுக்குக் கடல் உவமையாதலை, "வேல் வாள் கணை வண்டு வேலைவிடமமுதம்" என்னும் இரத்தினச்சுருக்கத்தாலும் அறிக. மதிக்கு வெண்மை - இயற்கை யடைமொழி. இவளது முகம் களங்கமில்லாததொரு சந்திரமண்டலம்போன்றிருக்க, அதிலே விசாலமாயுள்ள மையுண்டகருங்கண்கள் மிக்க அழகுடைமையாற் காண்பவர்மனத்தைக் களவுசெய்யுந் தன்மையன வாதலின் 'மதி மேல் முயல்நீக்கிக் கள்ளம்பரந்தனவோ' என்றான். மிக்கவஞ்சனையின் வடிவமாகவேயுள்ளன இக்கண்க ளென்க. களவைக் கருநிறமுடையதென்று கற்பித்துக்கூறுதல் கவிமரபாதலை, "களவென்னுங் காரறிவாண்மை" என்ற திருக்குறள் கொண்டும் உணர்க. இப்பொழுது இருக்கிற சந்திரமண்டலம் களங்கமுடையதாதலால் இவளது முகத்துக்கேற்ற உவமையாகாதென்பது 'வெண்மதிமேல் முயல்நீக்கி' என்றதனாற் போதரும். முகத்துக்குச் சந்திரனுவமை - கண்டவர் கண்களுக்கு மகிழ்ச்சி விளைவித்தலினும், குளிர்ந்தவொளியினும் என்க. அன்றி, செம்முகத்துக்கு வெண்மதி - நிறத்தில் வேறாகாமை காண்க. கொம்பு - பூங்கொம்புபோல் மெல்லியவடிவமுடைய பெண்ணுக்கு உவமையாகு பெயர். அவளது அவயவங்கள் அழகிய மலர் போலுதலால், அவளை 'கொம்பு' என்றான். அவளது சிவந்தமுகத்திலுள்ள கண்கள், அவள் மேல் தனது மனத்தின் ஆசை எவ்வளவு பரவியுள்ளதோ அவ்வளவு விசாலமாயுள்ளதனாலும், அவள்முகத்தின் மேல் தன்மனம் பரந்துசென்றவாறு பரந்துள்ளதனாலும், அவற்றைக்காண்பவரது உள்ளம் காதல்மிகுதியால் அக்கண்மயமே யாகுதலாலும், அவள்முகத்திற் பதிந்த தன்மனம் அதனைவிட்டுப் போகாமையாலும் 'கொம்பின் செம்முகத்து எம்முள்ளம் பரந்தனவோ' என்றான். இங்ஙனம் கருங்கண்களுக்குத் தன்மனத்தை உவமைகூறியது, அம்மனம் காமமயக்கத்தால் இருண்டிருத்தல் பற்றி யென்க. இப்படி பலவகையாகக்கொண்டு காட்டிய உபமானங்களெல்லாம் அவ்வுபமேயத்தின் தகுதிக்குப் போதாவென்னுங் கருத்தினால், அந்த அதிருப்தி தோன்ற, கடையியில் கண்கள்தாமோ என்று கூறிவிட்டான். இப்படி உபமானத்தையும் உபமேயத்தையும் ஐயமுற்று உரைத்தது, **ஐயஉவமையணி.**

இச்செய்யுளின் மெய்ப்பாடு, உவகையைச்சேர்ந்த மருட்கை; கண்ணழகின் பெருமையை வியந்து உரைத்ததனால். இங்ஙனம் உரைத்தலின் பயன் - மகிழ்தல்.

சந்திரனிடத்திலுள்ள களங்கத்தை முயலென்றும் மானென்றுங் கூறுதல், மரபு. கவி-இங்கு, சாதிப்பெயர். ஆழ்வார் திருநாவினுடைய பிராதலால், 'கவிக்கரசன்' எனப்பட்டார். தெள் அம்-வினைத்தொகை; பண்புத்தொகையெனினும் இழுக்காது. அம் - வடசொல். இங்கு, 'தெள் அம்' என்றது, சுத்தமான தாமிரபர்ணி நதிதீர்த்தத்தை. செம் முகம் - செவ்வியுள்ள முகம் எனினுமாம். 'எம்' 'ஓர்கிலம்' என்பன - தனித்தன்மைப்பன்மை. 'வெள்ளம் பரந்தன,' 'கள்ளம்பரந்தன,' 'உள்ளம்பரந்தன' என்றவை-தனித்

http://acharya.org

தனி ஒருசொல்தன்மையுற்று, தோன்றா எழுவாயாக வருவிக்கப்பட்ட 'இவை' என்ற பன்மைப்பெயர்க்குப் பயனில்லையாம்.

'கண்ணுருகு என்பது, ஜ்ஞாநவைலக்ஷண்யத்தை' என்பர், ஸ்வாபதேசம்வல்லார்; ஆகவே, கம்பநாடரது ஞானவிளக்கத்தைக் கண்ட ஆழ்வார், அவர்பக்கல் பெருங்கருணைகொண்டு அந்த ஞானத்தைப் பெரிதாகப்பாராட்டுதல், இதற்கு உள்ளுறை பொருள். 'அகத்தினழகு முகத்தில்தெரியும்' என்றபடி அவரது மனத்திலுள்ள அறிவின்பெருமை செவ்வியமுகத்திலே தோன்றுமாகலின், 'செம்முகத்துக் கண்கள்' எனப்பட்டன. இவர்க்குப் பேரறிவு ஆழ்வாரது சங்கற்பத்தால் [அதாவது - அவரது உள்ளத்திற்கொண்ட திருவருளால்] உண்டாயினமைபற்றி, அவர் அதனை 'செம்முகத்து எம்உள்ளம்பரந்தனவோ' என்று கொண்டாடத்தகும். இவரது முகத்தை ஆழ்வார் குளிர்ந்ததிருவுள்ளத்தோடு கடாக்ஷித்ததனால் உண்டாகி வளர்ந்தது இவர்க்குப் பெருஞான மென்க. கவிக்கரசன் குருகூர்க் கொம்பு - ஆழ்வாரைநாடி அவரது திருவவதாரஸ்தலத்தைச்சார்ந்த கம்பநாடர். தென் அம் பரந்த வயல் குருகூர் - தெளிவான ஞானத்தினலாகும் பேரானந்தம் பெருக்கெடுத்து வெள்ளமிடுந் திவ்யதேசம் என்க. இதயகமலத்தி லெழுந்து பொங்கும் ஞானவெள்ளமாதலால், 'வெள்ளம்பரந்தனவோ கமலத்து' எனப்பட்டது. களங்கமற்ற இந்தச் சுத்தஞானத்திற்கு, பரமாத்மாவின் மனத்தையும் உட்பட வசிகரிக்குந்திறம் அமைந்திருத்தல், 'வெண்மதி மேல் முயல்நீக்கிக் கள்ளம் பரந்தனவோ' என்று பாராட்டப்பட்டதென்க. மற்றும்விவரம் நுண்ணறிநின் உணர்க. (74)

75\. ஓருந்தகைமைக்குரியாருமோங்கியஞானியருஞ்
சாருந்தனித்தலைவன்சடகோபன்றடம்பதிக்கே
வாருமுமக்கொருறுதிசொன்னேனும்மயக்கமெல்லாந்
தீருந்திருக்கறுஞ்சிந்தைசெவ்வேநிற்குந்தீங்கறுமே.

(இ-ள்.) ஓரும் தகைமைக்கு உரியாரும் - (தத்துவப்பொருளை) ஆராயுந்தன்மைக்கு உரியவர்களும், ஓங்கிய ஞானியரும் - (அங்ஙனம் ஆராய்ந்து தெளிந்து) உயர்ந்த ஞானத்தைப் பெற்றவர்களும், சாரும் - சரணமடையப்பெற்ற, தனி தலைவன் - ஒப்பற்ற தலைவரான, சடகோபன் - நம்மாழ்வார் திருவவதரித்த தலமான, தடம் பதிக்கே - பெருமையுடைய திருக்குருகூர்க்கே, வாரும் - வாருங்கள்; (அங்கு வருவீர்களாயின் அவர் திருவருளால்), உம் மயக்கம் எல்லாம் தீரும் - உங்களுடைய விபரீதஞானமெல்லாம் ஒழியும்; திருக்கு அறும் - மாறுபாடு நீங்கும்; சிந்தை செவ்வே நிற்கும் - மனம் (கோணாமல்) நேரே [நல்வழியிலே] நிலைநிற்கும்; தீங்கு அறும் - தீவினைகளெல்லாந்தொலையும்; உமக்கு ஓர் உறுதி சொன்னேன் - (இங்ஙனம்) உங்களுக்கு ஓர் உறுதிப்பொருள் கூறினேன்; [கேட்டு உய்வீராக என்றபடி]; (எ - று.)

என்று உலகத்தார்க்கு நல்லறிவு உணர்த்துகிற முகத்தால், அத்திவ்வியதேசமகிமை கூறியவாறும்.

http://acharya.org

விடுபேற்றுக்குக் காரணமாகும் பரம்பொருளை உணர்தற்கு உபாயம் மூன்று; அவை - கேள்வி, விமர்சம், பாவனை என்பன: அவற்றுள், கேள்வியாவது - ஞானநுட்டானங்களை யுடையரான நல்லாசிரியர்பக்கல் உபதேசமொழிகளைக் கேட்டல். விமர்சமாவது -அங்ஙனங் கேட்ட உபதேசமொழிப்பொருளைப் பிரமாணங்களைக் கொண்டும் யுக்தியைக்கொண்டும் தெளிய ஆராய்தல். பாவனையாவது - அம்முதற்பொருளை இடையறாது கருதுதல். இம்மூன்றனுள், முதலிரண்டுநிலையளவில் நின்றவர் 'ஒருந்தகைமைக்கு உரியார்' என்றும், மூன்றாநிலையையடைந்து ஐயந்திரிபற மூலப் பொருளையுணர்ந்தவர் 'ஓங்கியஞானியர்' என்றுங் கூறப்பட்டனர். திருக்குறளில் "ஓர்த்துள்ள முள்ள துணரின்" என்றாற்போல, 'ஒருந்தகைமைக்குரியார்' என்றார். இவர்களினும் ஞானியர் மேம்பட்டவராதலால், அவர்க்கு 'ஓங்கிய' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. இனி, 'ஒருந் தகைமைக்கு உரியார்' என்பதற்கு- அஷ்டாங்கயோகநெறியால் உண்மைப்பொருளைக் காண்பவர் [யோகிகள்] என்று பொருள்கொள்ளலும் ஒன்று. இவர்களெல்லார்க்கும் மேம்பட்டவர் ஆழ்வார் என்க. இனி ஒருந் தகைமைக்கு உரியார் - பரனையுணரும்இயல்பான பரபக்தியையுடையார் என்றும், ஓங்கிய ஞானியர் - அவரிற் சிறந்தவரான பரஜ்ஞானமுடையார் என்றுங் கொண்டு, இவ்விருவகையாரும் சரணமாக அடையும் ஒப்புயர்வற்ற இறைவர், பரனையுணர்ந்து சேர்ந்து அவனைவிடமாட்டாத பரமபக்தியையுடையரான நம்மாழ்வார் என்றலும் உண்டு; பரபக்தி-எம்பெருமானைத் தரிசித்தல், பரஜ்ஞானம்-அவனைச் சேர்தல், பரமபக்தி-அவனது பிரிவுக்கு அஞ்சுதல் எனக் கொள்வது சம்பிரதாயம்.

'மயக்கமாவது மெய்ப்பொருளல்லவற்றை மெய்ப்பொருளென்று உணர்தல். விபரீதவுணர்வாவது - மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளும் இல்லையெனவும், மற்றும் இத்தன்மையனவுஞ் சொல்லும் மயக்கநூல்வழக்குக்களை மெய்ந்நூல்வழக்கெனத்துணிதல்: குற்றியை மகனென்றும் இப்பியை வெள்ளியென்றும், இவ்வாறே ஒன்றனைப் பிறிதொன்றாகத் துணிதலும் அது. மருள், மயக்கம், விபரீதவுணர்வு, அவிச்சை என்பன-ஒருபொருட்கிளவி' என்று திருக்குறளுரையிற் பரிமேலழகருரைத்தது, இங்கு உணரத்தக்கது. "பொருளல்லவற்றைப் பொருளென் றுணரும், மருளானா மாணாப்பிறப்பு" என்றபடி இம்மயக்கம் பிறப்புக்கு முதற்காரணமாதலால், இதுபற்றற ஒழிதலை முக்கியப்பயனாக முதலில் எடுத்துக்கூறினர். திருக்கு - செருக்கு வஞ்சம்முதலியன. சடகோபன் தடம்பதி = ஆழ்வார்திருநகரி. (75)

76. அறுவகையாயசமயமுமைவகைத்தாம்புலனு [கே
முறுவகையாற்சொன்னவேட்டமெல்லாமொழிவித்தொருங்
பெறுவகையாறெனச்செய்தபிரான்குருகூர்ப்பிறந்த
சிறுவகையாரவரைத்தொழுதோமெம்மைத்தீண்டுகவே.

(இ - ள்.) அறு வகை ஆய சமயமும் - ஆறுவகைப்பட்ட சமய நூல்களும், உறு வகையால் சொன்ன - (தம்தமக்குத்) தோன்றிய

http://acharya.org

படி கூறிய, ஓட்டம் எல்லாம் - பொருள்விரிவு முழுவதையும், ஒருங்கே ஒழிவித்து - ஒருசேரப் போக்கி, பெறு வகை ஆறு என செய்த - முக்திபெறும்படியான வழி இதுவென்று காட்டி நூல் செய்த, பிரான் - உபகாரகரும், குருகூர் பிறந்த சிறு வகையார் அவரை - திருக்குருகூரில் அவதரித்த சிறியமனிதவடிவினருமாகிய நம்மாழ்வாரை, தொழுதோம் - வணங்கினேம் (யாம்); ஐ வகைத்து ஆம் புலனும் எம்மை தீண்டுக - ஐந்துவகைப்புலன்களும் (இனி) எம்மைச் சார்வனவாக; (எ - று.)

யாம், ஆழ்வார்திருவடிகளைச் சரணமடைந்தோ மாதலால், இனி ஐம்புலன்களைக்குறித்து அஞ்சவேண்டுவதில்லை; அப்புலன்களிற் கண்டபடிசெல்லாதவாறு எமது ஐம்பொறிகளையும் மனத்தையுஞ் சீர்திருத்தி எம்மை ஆண்டருள்வர் ஆழ்வார் என்பதாம். இங்ஙனம் தாம் அச்சம்தீர்ந்த களிப்பினால், 'தொழுதோம்' என்றும், 'எம்மை' என்றும் தம்மை உயர்வுப் பன்மையாற் கூறிக்கொண்டார்.

ஐவகைத்தாம்புலன் - மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐம் பொறிகளாலும் முறையே கொள்ளப்படுகிற ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை என்பன; இவை வடமொழியில், ஸ்பர்சம் ரஸம் ரூபம் கந்தம் சப்தம் என்னும் பஞ்சவிஷயங்களெனப்படும். ஆழ்வாரைச்சரணமடைந்த எம்மை இனி இவை சாரக்கடவனவல்ல வென்பதும், ஒருகால் சார்ந்தாலும் ஜிதேந்திரியரல்லாதவர்க்கும் அவரருளால் நற்கதிவாய்க்கத் தடையில்லை யென்பதும் கருத்து. சொற்கிடக்கையினும் பொருளமைதியே முக்கிய மாதலால், 'அறுவகைப்பாயசமயமும் உறுவகையாற்சொன்ன' என்றும், 'ஐவகைத்தாம்புலனும் தீண்டுக' என்றும் சொற்களைத் துணித்தெடுத்துக்கூட்டி இவ்வாறு பொருள்கொள்ளப்பட்டது; ஆசிரியர்நச்சினார்க்கினியர், சீவகசிந்தாமணியுரையில், 'இத்தொடர்நிலையிற் சொற்களைத் துணித்துப் பலவிடத்திலும் எடுத்துக்கூட்டியவாறு, செய்யுளுறுப்பு இருபத்தாறினும் மாட்டென்னும் உறுப்பாதலின்: "அகன்றுபொருள்கிடப்பினும் அணுகிய நிலையினும், இயன்று பொருள்முடியத் தந்தனருரைத்தல், மாட்டெனமொழிப பாட்டியல் வழக்கின்" என்றும், ...தொல்காப்பியனார் கூறினார்;..............இவ்விதி, மேல்வருவனவற்றிற்குங்கொள்க' எனவும், இவ்வகையாகவே திருமுருகாற்றுப்படையுரையிலும் மதுரைக்காஞ்சியுரையிலும் உரைத்தது காண்க. இது, கொண்டுகூட்டுப்பொருள்கோளில் அடங்கும்.

ஆழ்வார், ஞானவைலக்ஷண்யத்திற் பரமபதத்து நித்யசூரிகளோடு ஒப்பாராயினும், தோற்றத்தில் எளியமனிதவடிவினராயிருத்தலால், 'சிறுவகையார்' எனப்பட்டார்; அவர், திருவாய்மொழியில், "உறுமோ பாவியேனுக்கு" என்ற பாசுரத்தில், தமக்கு உத்தேசியரான பாகவதர்களை "அவனடியார், சிறுமாமனிசராய் என்னையாண்டார்" என்று அருளிச்செய்ததை அடியொற்றி, கம்பநாடர், தமக்கு உத்தேசியரான அவ்வாழ்வாரை

http://acharya.org

'சிறுவகையார்' என்றார். (இந்நூலின்஁ ஈற்றில் வருகிற பாயிரத்தின்படி, ஆழ்வார் விஷயமாக மதுரகவிகள் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும் பதிகம் பாடியதை அநுசரித்துத் தாம் இப்பிரபந்தஞ்செய்தனர் கம்பநாடர் ஆதலால், அம்மதுரகவிகளுக்கு முக்கியப்பிரமாணமான மேற்காட்டிய திருவாய்மொழிப் பாசுரத்தை இவர் அடியொற்றுதல் தகும்.)

பாகவதர்களுடைய அநுட்டானங்கள் "இடங்கொள் சமயத்தையெல்லாம் எடுத்துக்களைவனபோலே" உள்ளன வென்று ஆழ்வார் அருளிச்செய்ததைப் பின்பற்றி, அவர்செயலை இவ்வாசிரியர் 'அறுவகையாயசமயமும் உறுவகையாற்சொன்ன ஓட்டமெல்லாம் ஒருங்கே ஒழிவித்து' என்றார். உறுவகையால் - தத்தமக்குப் பொருந்தியவாற்றினால். 'எம்பெருமான் திருவடிகளைச் சரணமடைதலே அவனைப்பெறுதற்கு உபாயம்' என்று ஆழ்வார் பலபடியாலும் தமது திவ்யப்பிரபந்தங்களில் அருளிச்செய்து நிலைநாட்டியதனால், 'பெறுவகையாறெனச் செய்தபிரான்' என்றார்; கீழ் ஐந்தாஞ்செய்யுளில் "முத்தியெய்தும்வழி பலவாயவிட் டொன்றுய்யது..................குருகூரெந்தை தோன்றலினே" என்றதுங் காண்க. வெவ்வேறுமதங்களில் அந்தந்த மதத்துக்குஉரிய தெய்வத்தை வணங்குதல் முதலாகக் கூறப்பட்ட முக்திமார்க்கங்களெல்லாம் பூர்வபக்ஷமாய் மறுக்கப்பட்டுத் தலைகாட்டாது ஒழியத் திருமாலை வழிபடுதலொன்றே முக்திமார்க்கமென்று சித்தாந்தஞ் செய்து நிலைநிறுத்தினர் நம்மாழ்வார் என்பதும், வீடுபெறுதற்குச் சாதனமாக ஓதப்படுகிற கர்மம் ஞானம் முதலியவற்றை மறுத்து எம்பெருமானைச் சரணமடைதலாகிய பிரபத்தியொன்றே முத்திக்கு நேரான உபாயமென்று தாபித்தனர் நம்மாழ்வார் என்பதும், இங்குக் குறித்த பொருள். ஆறு - வழி. பெறுவகை ஆறு - ப்ராப்திக்கு வழி. "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்ற திருவாய்மொழி, இங்குக் கருதத்தக்கது. ஒருங்கே ஒழிவித்து என இயையும். ஒருங்கே பெறுவகை ஆறு என்று எடுத்து, ஜீவான்ம பரமான்மாவை ஒருசேர்க்கையாக அடையும் உபாய மெனினுமாம்.

அறுவகையாய சமயம் - சாக்ய உலூக்ய அக்ஷபாத க்ஷபண கபில பதஞ்சலிமதங்க ளென்பர்; வேறுவகை கூறுதலு முண்டு. புலன் = புலம்: ஈற்றுப்போலி. ஒருங்கு - இடைச்சொல்.

இச்செய்யுள், கம்பநாடர் தாமானதன்மையில் உரைத்தது; அன்றி, தலைவிநிலையை மேற்கொண்டு உரைத்த தென்றால், பரத்தையிற் பிரிவில் மீண்டுவந்த தலைவனதுசேர்க்கைக்கு உடன்படாது தலைவி மறுத்துப் புலவி காட்ட, அதுகண்ட தோழி "தொழுது வழிபடற்பாலை பிழைப்பெண்ணல் கோன்றலையே" என்றபடி இங்ஙனம் தலைவனது குற்றத்தை நோக்கி அவன்மீது மிகுதியாகக்கோபித்தல் குலமகளது கற்புநிலைக்கு அடாது என்று சிலகூறி உணர்த்தியபின்னர், தலைவி ஊடல்

http://acharya.org

தணிந்து அவன்வரவை ஏற்றுக்கொள்பவளாய் 'அவரைத் தொழுதோம், இனி அவர் எம்மைத்தீண்டுவாராக' என்றதாகத் துறைப்போக்கு அமைத்தல் சாலும்.

ஆறுவகைப்பிரிவினுள்ளே பரத்தையிற் பிரிவைப்பற்றிய சிலவிவரம்:—"பரத்தையிற்பிரிதலென்பது - தலைமகளை வரைந்தெய்தியபின்னர், வைகலும் பாலே நுகர்வா னொருவன் இடையே புளிங்காடியும் நுகர்ந்து அதனினிமையறிந்தாற்போல, அவள் நுகர்ச்சியினினிமையறிதற்குப் புறப்பெண்டிர் மாட்டுப் பிரியா நிற்றல்; அல்லதூஉம், பண்ணும் பாடலும் முதலாயின காட்டிப் புறப்பெண்டிர் தன்னைக் காதலித்தால் தான் எல்லார்க்குந் தலைவனாகலின் அவர்க்கும் இன்பஞ்செய்யப் பிரியாநிற்ற லென்றுமாம்: அல்லதூஉம். தலைமகளை ஊடலறிவித்தற்குப் பிரித லென்றுமாம். இவ்வாறெழுந்து தனக்கின்பம்வேண்டிப்பிரிவனாயின், "கண்டு கேட் டுண் டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடிகண்ணே யுள" என்பதனால் இவளுக்குத் தலைமகளென்னும் பெயரோடு மாறுபட்டுத் தனதுபெருமையோடும் மாறுபடாநிற்கும்" என்று திருக்கோவையாருரையிலும், "பரத்தையிற்பிரிவு:—இது, தலைவன் 'பரத்தைமேற் காதலாய்த் தலைவியைப்பிரிந்து பரத்தையர் சேரியிற் போதல். 'பரத்தையிற்பிரிவு' என்று ஓதவே, 'பொது நலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின், மாண்ட வறிவினவர்" என்பதனால் தலைவன் அறிவிலனும், தலைவியிடத்து அன்புமிலனும், பெருமையுமிலனும், பட்டியுமாம் எனின், அற்றன்று: அரசரிமையனாதலின்; அரசரிமைக்குப் பரத்தையரினும் வரைதற்குரியராய்த் தொன்றுதொட்டு நடக்கு முறைமையாரும் வரையாதவுரிமையாய்ச் சேரியின்கணுறைவாருமாய் அவரும் பிறந்த ஞான்றுதொட்டு இவர்க்கென வகுத்துரைக்கப்படுதலானும், அவரைநீக்குதல் தகுதியன்மையானும், பரத்தையிற்பிரிதல் குற்றமன்றெனக் கொள்க. அன்றியும், காலைக்கடன்கழித்தலும் ஒலக்கத்திலிருந்து நாடுகாவற்றொழில் செய்தலும், விருந்துடன் அடிசில்கைதொடலும், நாவலரோடு கல்விபயிற்றலும், ஆடல் பாடல்களிற் களித்தலும், மடவாரோடு கூடலும், துயிறலும், துயிலுணர்ந்து தேவர்ப்பரவலும் ஆகிய காலவரையறையிட்டிருவர் ஆடல்பாடல் முன்றுதலானும்'அதற்குரியர் பரத்தையராதலானும், அதற்குரியகாலத்தில் அவரிடத்தில் மனஞ்செல்லுத லியல்பாதலானும், பரத்தையிற் பிரிதலாற் குற்றமின்றெனக் கொள்க. ஆயின், பரத்தையர்சேரியிற் செல்லு மாறு என்னையெனின்,—அவர் பலரோடும் விளையாடற்பொருட்டும்,...............பரத்தையர் சேரியிற் செல்லு மென்று உணர்க" என்று தஞ்சைவாணன் கோவையுரையிலும் காண்க. "அஃதேயெனின், மற்றைப்பிரிவெல்லாம் வேண்டுக, ஆன்வினை மிகுதியுடைமையான்; இப்பிரிவு எற்றிற்கோவெனின்,—பரத்தையிற் பிரிந்தான் தலைமகனென்றால், ஊடலே புலவியே துனியே என்றிவை நிகழும்: நிகழ்ந்தால், அவைநீக்கிக் கூடினவிடத்துப் பெரியதோர் இன்பமாம்; அவ்வின்பத்தன்மையை வெளிப்படுப்பன அவையெனக் கொள்க" என்ற இறையனாரகப்பொருளுரையும் காணத்தக்கது.

http://acharya.org

இங்ஙனம் பரத்தையிற்பிரிந்த தலைவன் மீண்டுவந்து தலைவியின்மனையினிடத்துப் புகும்போது, அவளால் மறுக்கப்பட்டவனாய், பின்பு தோழியை வாயில்வேண்ட, அவளும் மறுத்தனளாக, அதன்பின் பாணனை வாயிலாக அனுப்ப, அவனும் தலைவியால் மறுக்கப்பட்டு நீங்கினனாக, பிறகு மகனை வாயிலாகக் கொண்டும் விருந்தினரை உடன்கொண்டும் புக, அதுகண்டு சினந்தணியவேண்டித் தோழி தலைவியைநோக்கி 'அன்பானன்றி அருளாற் பரத்தையர்க்குந் தலையளிசெய்ய வேண்டுமன்றே: புறப்பெண்டிரைப்போல யாம் அவனொடு புலக்கற்பாலேமல்லேம்: அவன்வரும்பொழுது எதிர்தொழுதும் போம்பொழுது புறந்தொழுதும் புதல்வனைப் பயந்திருக்கையன்றோ நமக்குக்கடனாவது' என்றும், நம்முடைய தோன்றலைத் தனக்குத்துணையாகக்கொண்டு வந்துதோன்றுதலான், நினது உளத்துக்கவற்சியை யொழிந்து, இனி நம் அரசற்குக் குற்றேவல்செய்வாயாக' என்றும், மற்றும் உரியபடியாகவுங்கூறி ஊடல்தணிவிக்க, அவைகேட்டுச் சினந்தணிகின்ற தலைவி தலைவனை ஏற்று எதிர்கொண்டு வழிபாடுசெய்பவளாய் "எங்கையைத் தீம்புனலாட்டிய விரம் புலர்த்திவந்தும், அங்கையிற் சிறடி தீண்டிச் செய்யீர்செய்யுமாரருளே" என்றாற்போலக்கூறி, அவன்வந்து தன்னைப்பரிசித்தற்கு உடன்படுவ ளென்க. இது, வழிபாடுமறுத்த தலைவி மறுத்து எதிர்கோடல் எனவும், தலைவனைத் தலைவி எதிர்கொண்டு பணிதல் எனவும்படும். ("பரத்தையர்சேரியினின்று மறுதந்து தோழியை வாயிலாகக்கொண்டான்: கொள்ள, தோழி புக்குப் பலகாரணமுங் காட்டினாள்: காட்டுவான் 'நாம் இல்லிருந்து இறைவழிப்பட்டு மக்களைவளர்த்து விருந்துபுறந்தருத லல்லது போகத்து உள்ளாமன்றே; எல்லாம் ஊடலும் புலவியுந் துனியுங் கொள்ளற்பாலமல்லம்; அல்லதூஉம், வண்டோரனையர் ஆடவர், பூவோரனையர் மகளிர்; என்பது என்னை? வண்டுகள் தாது ஊதுமிடத்து நன்மலரே ஊதுவேமென்னா: எல்லாமலரும் ஊதும்; இனி, பூ அவாவினக்கால், 'எம்மையே ஊதா, எல்லாப்பூவையும் ஊதின' என்று புலவாதன்றே: அதுபோல, தலைமகனும் எல்லாப்பெண்பாலகளையுந் தலைப்பெய்தல் தன்மையான்; அவர்தன்மை அறியேம்: போம்பொழுது புறந்தொழுது வரும்பொழுது முன்தொழுது எற்றுக்கொண்டு வழிபடுத லல்லது, மலைத்தற்கண்ணேம் அல்லம்: தலைத்திப்பற்றியமாதலே தலைமை' என்றும், இவ்வாறு வழிபடாதே எம்பெருமானை வருத்தி என்செய்தும்'? என்றும் 'ஏற்றுக்கொண்டு வழிபடுவது பொருளே போலக் காட்டும்' என்றும் இங்ஙனஞ் சொல்ல, 'அஃதொக்கும்பிற' என்று அப்போதைக்குச் சிவப்பு நீங்கிற்று; 'நீங்க, 'புகுதுக' என்றாள்" என்பது, இறையனாரகப்பொருளுரை.)

இப்பொருளிற் பதவுரை வருமாறு:—அறு வகை ஆய சமயமும் - ஆறுவகைப்பட்ட காலங்களிலும், ஐவகைத்து ஆம் புலனும் உறு வகையால் - ஐந்து வகைப்பட்ட பொறிகளும் அநுபவிக்குமாறு, சொன்ன - சொல்லப்படுகின்ற, ஓட்டம் எல்லாம் - போக்குகளை யெல்லாம், ஒழிவித்து - நீக்கி, ஒருங்கே பெறு வகை

http://acharya.org

ஆறு என செய்த-(அந்த ஐம்பொறிகளும்) ஒருங்கு இன்பம்பெறும் படியான விதம் இதுவென்று (தனது சேர்க்கையினுற்) செய்த, பிரான் - உபகாரகரும், குருகூர் பிறந்த சிறு வகையார் அவரை - திருக்குருகூரில் தோன்றியவரும் சிறிய ஒழுக்கமுடையவருமாகிய தலைவரை, தொழுதோம் - வணங்குகின்றோம் (யாம்); எம்மை தீண்டுக - (இனி அவர்) எம்மைத் தழுவுவாராக எனக் காண்க.

கண்ணாற் கண்டும், செவியாற் கேட்டும், நாவால் உண்டும், மூக்கால் மோந்தும், மெய்யால் தீண்டியும் இவ்வாறு வேறுவேறு காலங்களில் வேறுவேறு பொருள்களால் அனுபவிக்கப்படும் ஐம்புலவின்பங்களையும் ஒரேகாலத்தில் தன்பக்கல் யான் அனுபவிக்கும்படி செய்த தலைவன் என்பது 'அறுவகையாயசமயமும் ஐவகைத்தாம்புலனும் உறுவகையாற்சொன்ன ஒட்டமெல்லாம் ஒழிவித்து ஒருங்கேபெறுவகையாறெனச்செய்த பிரான்'என்றதன் கருத்து; என்றது, சிற்றின்பச்சுவைமயமாயிருந்தவனென்று முந்திய நிலைமையை மகிழ்ந்து கூறியவாறும்; திருக்குறளுரையிற் காமத்துப்பாலின் தொடக்கத்திற் பரிமேலழகர் 'சண்டு இன்பமென்றது, ஒருகாலத்து ஒருபொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காமவின்பத்தினை' என்றது, இங்கு உணரத் தக்கது. "வண்டமர்பூங்குழலாரை மணம்புணர்ந்த வன்றொண்டர், புண்டரிகத்தவன்வனப்பைப்புறங்கண்டதாநலத்தைக், கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றமர்ந்திருந்தார் காதலினால்" என்று பெரிய புராணத்திற் கூறியதும் இதுபற்றியே. "கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியுமைம்புலனும், ஒண்டொடி கண்ணேயுள" என்று தலைமகன் கூறினாற்போலத் தலைமகள் கூறியது, இது.

'அறுவகையாய சமயமும்' என்றது - வேறுவேறுகாலங்களி லெல்லாம் என்றபடி. 'அறுவகையாயசமயம்' என்றதில், பெரும்பொழுதுஆறும், சிறுபொழுதுஆறும் அடங்கும். பெரும்பொழுது ஆறு - இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என்ற ஆறு பருவகாலங்கள்; இவைமுறையே, சித்திரை மாதம்முதலாக இரண்டிரண்டுமாதம் ஒவ்வொன்றும். சிறு பொழுது ஆறுவன - விடியல், கண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை என்பன; இவை - முறையே, சூரியோதயகாலம்முதல் ஒவ்வொன்று பப்பத்துநாழிகை யென உணர்க.

'சிறுவகையார்' என்றது -பரத்தையரோடு கூடுதலாகிய சிறிய ஒழுக்கமுடையவரென்றபடி; இதனை, பெரியபுராணத்தில் "இன்மைமீதூர இன்பத்துறையினி லெளியரானார்" என்றாற்போலக் கொள்க. 'குருகூர்ப்பிறந்த சிறுவகையார்' என்றது - 'அவர் எம் போலல்லர், சிறந்த ஊரிற் பிறந்தவர்' என்று, முந்தியகோபத்தின் தொடர்ச்சியாற் கூறிய நிட்டூரவார்த்தையாம்; "நாடும் ஊரும் இல்லுஞ் சுட்டி, ஆடற்பூங்கொடி ஊடி யுரைத்தது" என ஊடியுரைக்கையில் ஊர்சுட்டுமாறு உணர்க. 'சிறுவகையாரவரை' என்றது-உயர்வுப்பன்மை; 'தொழுதோம்,' 'எம்மை' என்றவை-தனித்

http://acharya.org

தன்மைப்பன்மை: புலவிக்காலத்தே தலைவி தன்னையும் தலைவனையும் பன்மையாற் குறித்தலும் இயல்பாதலை, இலக்கியங்களிற் பலவிடத்துக் காணலாம்; ஆகவே, அங்ஙனங்கூறுதல் சிறுசினத்தின் காரியமென்க. திருநீலகண்டநாயனார்பரத்தையிடத்துச்சென்று மீண்டமை யுணர்ந்த கற்பிற்சிறந்த அவர்மனைவியார் ஊடல் கொண்டு அவரதுசேர்க்கைக்கு இசையாது "தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்" என்று ஆணையிட்டு மறுத்தாற்போலப் புலவிகொண்டபொழுது 'எம்மை அவர் தீண்டலு மாகாது' என்று மறுத்தன ளாதலாலும், "கால்தான்தொடல்தொடரேல் விடுதீண்டல் எம்மைத்தலமே" என்று ஊடலில்மறுத்தல் இயல்பாதலாலும், அப்புலவிதணியும்போது 'எம்மைத் தீண்டுகவே' என்றாள். 'தீண்டுக' என்பதற்கு, 'அவர்' என்ற எழுவாய் வருவிக்கப்பட்டது; அன்றி, சிறுவகையாரைத் தொழுதோம் அவர் எம்மைத்தீண்டுக என்று மொழிமாறினுமாம்.

இச்செய்யுளின் மெய்ப்பாடு - உவகையைச்சார்ந்த வெகுளி பெருமிதமுமாம். பயன் - ஆற்றாமை நீங்குதல்.

தியானநிலையிலே கம்பநாடரது அகக்கண்ணுக்குப் புலனாகி மறைந்த நம்மாழ்வார் மீளவும் வந்து தோன்றாராக, கம்பநாடர், தம்மினும் விலக்ஷணரான வேறுபல அடியார்கள்பக்கல் அன்பினால் தம்மை அவர் உபேக்ஷித்தனர் என்றுகொண்டு கலங்கி, அக்கலக்க மிகுதியால் 'இனி அவர்தாமே வந்தாலும், மீளவும்பிரிந்து வருத்துவ ராதலால், யாம் கண்எடுத்துப் பார்ப்பதில்லை: நிரந்தராநுபவமில்லாமல் இடையீடுள்ள அவரது அநுபவம், பிரிவாற்றாமைத்துயர்க்குக் காரணமாதலால், அது எமக்கு வேண்டா' என்று பிரணயரோஷங் கொண்டிருக்கிற நிலையில், அடியவரைக் கைவிடாத இயல்புடையரான ஆழ்வார் மீளவும் வந்து இவர்க்கு வந்தேறியாயுள்ள பராமுகத் தன்மையைப் போக்கி இவரை அபிமுகராக்கிக் கொள்ளுதற்குப் பலவகையால் முயன்றபோது, இவர் தமது முந்தின மநஸ்தாபம் மாறாதே நிற்க, அதுகண்ட அன்பர்கள் இவரையடுத்து, பரமாத்மாவாகிய ஆழ்வாருடைய ஸ்வாதந்திரியத்தையும், ஜீவாத்மாவுக்கு உரியதான பாரதந்திரியத்தையும், அவர் தமது இயல்பாகிய கருணையினாற் பலரையும் ஆட்கொண்டருளுதற்கு உரிய ரென்பதையும் எடுத்துக்காட்ட, அதுகேட்டவளவிற் கம்பநாடர் மநஸ்தாபந்தீர்ப்பவராய் 'அவரைத்தொழுதோம்; இனி அவர் எம்மைத் தம்பக்கல்சேர்த்துக் கொண்டருள்வாராக' என்று கூறும் வார்த்தை, இதற்கு உள்ளுறை பொருள்.

"அறுவகையாய சமயமும்.........செய்த பிரான்' என்றது - "வேட்கையெல்லாம்விடுத் தென்னை உன் திருவடியேசுமந்துழலக், கூட்டரிய திருவடிக்கண் கூட்டினை நான் கண்டேனே," "கண்டு கேட்டுற்றுமோந் துண்டுழலும் ஐங்கருவி, கண்டவின்பம் தெரிவரியவளவில்லாச்சிற்றின்பம், ஒண்டொடியாள் திருமகளும்

http://acharya.org

நீயுமேவிலாநிற்பக், கண்டசதிர் கண்டொழிந்தேன் அடைந்தேன் உன்திருவடியே" என்றபடி எல்லாக்காலங்களிலும் புறம்பான பற்பல பிரபஞ்சவிஷயங்களில் எனக்கு உண்டாகும் ஐம்புலவாசையெல்லாம் தன்னொருவன்பக்கலிலேயே யாகும்படி எனக்கு அருள் செய்த உபகாரகனென்றதாம். 'குருகூர்ப்பிறந்த சிறுவலகையார்' —மனிதவடிவாகிய சிறுமை தோன்றத் திவ்வியதேசத்திலே திருவவதரித்த மகாபுருஷரென்றபடி. "தயி ருருக்குநெய்யோ டுண்டா னடிச் சடகோபன்" என்றபடி, நம்மாழ்வார் எம்பெருமானது திருவடிகளுக்கு மிகவும் அந்தரங்கபக்தராக இருந்ததனால், அப்பெருமானது பாதுகை 'ஸ்ரீசடகோபன்' என்று இவரது திருநாமத்தையிட்டு வழங்கப்படும்; அத்திருவடிநிலைகள் தமது முடியின்மேல் வைக்கப்பெறுமாறு வேண்டுதல் பாகவதர்க்கு இயல்பாதல்பற்றியும், ஸ்ரீவைஷ்ணவசிகாமணியான கம்பர் 'சடகோபன் எம்மைத்தீண்டுக' என்று இசைதல் ஏற்கும். மற்றும் விவரம், சம்பிரதாயம்வல்லார்வாய்க் கேட்டு உணரத்தக்கது.

இனி, திருக்குருகூரிற் பிறந்த சிறுமாமனிசர்களைத் தொழுதோம், அவர்கள் எம்மைத் (தம்திருவடிகளினால்) தீண்டுவாராக என்று உரைத்தலும் ஒன்று; அத்திவ்வியதேசத்தில் தோன்றிய அடியார்களிடத்து ஈடுபாட்டினால் இதுகூறியவாறு: கீழ் 30-ஆஞ் செய்யுளில் "வழுதிநாட்டிற் பிறந்தவர்க்கு ஆளுஞ்செய்தேன்" என்றாற்போல.

[கல்வியிற்பெரிய கம்பரது வாக்கு 'கம்பசூத்திரம்' என்னும்படி சில்வகையெழுத்திற் பல்வகைப்பொருளைச் செவ்வனே செறித்து இனிதுவிளக்கித் திட்பநுட்பஞ்சிறந்த தாதலால், அதன் பொருளை நன்குவிளக்கப் புகுமிடத்து இங்ஙனம் விரிகின்றது உரை யென உணர்க.] (76)

77. தீண்டித்திருவடியைப்பற்றிக்கொண்டுசிந்தித்ததையே
வேண்டிக்கொளப்பெற்றிலேன்வினையேனிவ்வெறும்பிறவி
யாண்டிற்பிறந்தவக்காலத்திலேயன்பனுயணிநீர்ப்
பாண்டித்தமிழ்த்திருநாட்டுருக்காட்டியபாவகற்கே.

(இ - ள்.) வினையேன் - தீவினையுடையேனான யான், இவெறும்பிறவி ஆண்டில் பிறந்த அ காலத்திலே-பயனற்ற இந்தப் பிறப்பாகிய அவ்விடத்திற் பிறந்த அந்தக்காலத்திலே, அணி நீர் பாண்டி தமிழ் திருநாடு உரு காட்டிய பாவகற்கே அன்பன் ஆய்- அழகிய தன்மையையுடையதும் செந்தமிழ் வழங்குமிடமுமான சிறந்த பாண்டியநாட்டிலே திருவவதாரஞ்செய்த பரிசுத்தமூர்த்தியான நம்மாழ்வார்க்கே பக்தனாகி, தீண்டி திருவடியை பற்றிக் கொண்டு சிந்தித்ததையே வேண்டி கொள பெற்றிலேன் - கைகளால் தொட்டு அவர்திருவடிகளைச் சரணமாகப் பிடித்துக் கொண்டு நினைத்தவரத்தைவேண்டி அடையப்பெற்றேனில்லை;

http://acharya.org

நான் பிறந்தபொழுதேதொடங்கி நம்மாழ்வார்க்கே அடியவனாகி அவர் திருவடிகளைத்தொட்டுப் பிடித்துச்சரணமடைந்து நினைத்தவரத்தை வேண்டிப் பெற்றுக்கொண்டிலேன் என்று, இதுவரையிலும் பழுதேபலபகலும் போக்கினமையைக் குறித்துக் கழிவிரக்கத்தாற் கூறினார். முத்தியை நேரில் அடையக்கூடியதான மனிதஜன்மம் "அரிதரிது மானிடராத லரிது" என்னும்படி மற்ற எல்லாப்பிறப்புக்களினுஞ் சிறந்ததாயினும், அதனையடைந்தவர் செய்யுங்கடமையாகிய முத்திபெறும்நெறியை இவர் இதுவரை மேற்கொள்ளாததுபற்றித் தம்மை 'வினையேன்' என்றும் தமது ஜந்மத்தை 'வெறும் பிறவி' என்றும் வெறுத்துக்கூறினார். வேண்டுவார் வேண்டும் பயன்களை அவர்வேண்டியபடி யெல்லாம் அளிக்கும் ஆற்றலுடையவர்ஆழ்வார் என்பது, 'சிந்தித்ததையே வேண்டிக் கொள' என்பதனாற் போதரும். இங்கு இவர் சிந்தித்தது, முத்தி; ஆதலால், ஏகாரத்தை உயர்வுசிறப்பு என்னலாம். தமிழ் முனிவராகிய அகஸ்தியரும் பாண்டியராஜாக்களும் சங்கப்புலவர்களும் இனிதுவீற்றிருந்து தமிழ்ப்பாஷையைப் போற்றி வளர்த்த நாடாதலால், பாண்டியநாடு 'தமிழ்த்திருநாடு' எனப்பட்டது. உருக்காட்டுதல் - ரூபத்தைத் தோன்றுவித்தல், வடிவெடுத்துப்பிறத்தல். பாவகன் என்ற வடசொல் - (தன்னையடைந்தவர்களைப்) பரிசுத்தராக்குபவ னென்று பொருள் படும்; இக்காரணத்தால், இச்சொல் அக்னிக்குப் பெயராதலு முண்டு; ஆதலால், பாவகற்கு - ஜ்யோதிஸ்வரூபியான ஆழ்வார்க்கு என்று பொருள்கொள்ளவும் அமையும்; வடதிசையாத்திரை சென்றிருந்த மதுரகவிகளுக்கு நம்மாழ்வார் முதலில் திவ்யதேஜோமூர்த்தியாய்த் தென்னாட்டிற் காட்சிதந்தன ராதலால், அவரை 'பாண்டித் திருநாட்டுருக் காட்டிய பாவகன்' என்னத்தகும்.

பிறவியிற்பிறந்த என்று எடுத்து, ஆண்டுஎன்பதை 'ஆங்கு' என்பதைப்போல அசை யெனினுமாம். நீர் - நீர்மையென்ற பண்புப்பெயரின் விகாரம். இனி, அணி நீர் - ஓர் ஆபரணம் போல அழகிதாகத் தாமிரபர்ணிநதிதீர்த்தம் பாயப்பெற்ற என்றுங் கொள்ளலாம்.

இனி, அணிநீர்ப்பாண்டித்தமிழ்த்திருநாட்டு உருக்காட்டிய பாவகற்கு - நம்மாழ்வார்க்கு, பிறந்த அக்காலத்திலே - அவர் திருவவதரித்த அந்தக்காலத்திலே, அன்பனாய்த் திண்புத் திருவடியைப்பற்றிக்கொண்டு சிந்தித்து அதையே வேண்டிக்கொள - அன்பனாகி அவர் திருவடியைக் கைகளால்தொட்டுப்பிடித்துக் கொண்டு தியானித்து அத்திருவடியையே [அல்லது அந்தஅன்பையே] பிரார்த்தித்துப் பெற்றுக்கொள்ளும்படி, வினையேன் இவ் வெறும் பிறவி ஆண்டில் பெற்றிலேன் - தீவினையேனான யான் இப்பொழுது வீணாகப்பிறந்தபிறப்பை அக்காலத்தில் [அத்திருநகரியிலே] பெறாதொழிந்தேன் என்று உரைகொள்ளினுமாம். ஆழ்வார் அவதரித்த அக்காலத்திலே யான் ஆழ்வார்திருநகரியிற் பிறந்து அவர்க்கு அன்புசெய்திருந்தால், மீளவும் இங்ஙனம் பிறப்பெடுத்து உழலவேண்டாதபடி வீடுபெற்று உய்ந்திருப்பேன்

http://acharya.org

என்று கழிந்ததற்கு இரங்கிக் கூறியவாறும். "புலையாம்பிறவி பிறந்தென்செய்தோம் பொன்னிபொன் கொழிக்கும், அலையார் திருவரங்கத்தெம்பிரான் கமதன்னையொடுந், தொலையாதகானங் கடந்தவன்றாள் தடந்தோறும் புல்லாய்ச், சிலையாய்க் கிடந்திலமே நெஞ்சமே கழல்தீண்டுகைக்கே" என்ற திருவரங்கக்கலம்பகத்தோடு இதனை ஒப்பிடுக. (77)

78. பாவகத்தாற்றன் றிருவவதாரம்பதினென்றென்றிப்
பூவகத்தாரறியாதவண்ணந்தன்னையேபுகழ்ந்து
நாவகத்தாற்கவியாயிரம்பாடி நாந்தளித்த
கோவகத்தாற்கன்றியென்புறத்தார்செய்குற்றேவல்களே.

(இ - ள்.) பாவகத்தால் - (தனது) தோற்றத்தைக் கண்டு அதனால், தன் திரு அவதாரம் பதினொன்று என்று இப்பூ அகத்தார் அறியாத வண்ணம் - (திருமாலாகிய) தனது சிறந்த அவதாரங்கள் பதினொன்று என்று இந்நிலவுலகத்திலுள்ளார் அறிந்துகொள்ளாதபடி, தன்னையே புகழ்ந்து நாஅகத்தால் கவி ஆயிரம் பாடி - தம்மையே தாம் துதித்துத் தம்நாவினிடமாகத் திருவாய்மொழியாயிரம் பாசுரங்களைப் பாடி, நடித்து - வேறான ஒருவரைப்போலத் தம்மைக்காட்டி, அளித்த - (அப்பாசுரங்களை உலகத்தார்க்குக்) கொடுத்து அவர்களைப் பாதுகாத்தருளிய, கோஅகத்தாற்கு அன்றி - பரமபதநிலையையுடைய அத்திருமாலாகிய நம்மாழ்வார்க்கே குற்றேவல்செய்து உய்வு தல்லாமல், (அன்னியர்களுக்கு), புறத்தார் செய் குறு ஏவல்கள் - மதாந்தரங்களிலுள்ளவர்கள் செய்கிற சிறிய ஊழியங்கள், என் - யாதுபயன்தரும்? [யாதொருநற்பயனையுந் தரமாட்டா என்றபடி]; (எ - று.)

லோகாதீதமான பலவகைமகிமைகளை யுடைமையால், நம்மாழ்வார், ஸ்ரீமந்நாராயணனது அம்ச மெனப்படுவர்; "வங்கிப்புரத்து நம்பி, எம்பெருமான்தான் இப்படிவந்து அவதரித்தா னென்பர்: இப்படிசொல்லுகைக்கு அடி, ஆழ்வாருடைய ப்ரபாவத்தாலே" என்ற பெரியவாச்சான்பிள்ளைவியாக்கியானவாக்கியம் காணத்தக்கது. ஆழ்வார் திருவாய்மொழியில் "தானேயானென்பானாகித் தன்னைத் தானே துதித்து" என்றும், "நன்னுவசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த, எந்நாதனக ளெண்ணும் நன்முனிவரின்பந் தலைசிறப்பப், பண்ணார்பாடலின்கவிகள் யானாய்த் தன்னைத்தான்பாடித், தென்னாவென்னு மென்னம்மான் திருமாலிருஞ்சோலையானே" என்றும் பகவானுடைய ஸாந்நித்யவிசேஷம் தம்பிடத்து இருப்பதைத் தாமே அருளிச்செய்தார். ஆழ்வாரைப் பகவானுடைய அம்சமென்று பாத்மபுராணமுங் கூறும்; ஆனது பற்றியே, "நாராயணா அடியேன்காடும் தமிழ்வேத, பாராயணா சடகோபா" என்பர் பிள்ளைப்பெருமாளையங்காரும். (இவர்க்கு இருப்பிடமான புளியமரம், எம்பெருமானுக்குத் திருப்பள்ளிமெத்தையான ஆதிசேஷனது அம்சமென்று ப்ரஹ்மாண்டபுராணத்திற்

http://acharya.org

கூறப்பட்டிருக்கிறது.) "தீவினையாளரால் கெடுக்கப்பட்ட கலியுகத்திலே, விசுவாதிகரும் விசுவமயருமான விஷ்ணு, அடியார்கள் பக்கல் மிக்க அன்பினால் அனைவரையும் பாதுகாத்தற்பொருட்டு, பக்தரூபியாய்த் தோன்றினர்" என்று ருஷிகள் சொல்வர். "அத்திரியும் ஜமதக்கியுமாகிய பிராமணோத்தமர்களுக்குப் பிள்ளைகளான தத்தாத்ரேயனும் பரசுராமனுமாக முதல்யுகத்திலே முதல்வருணத்திலும், க்ஷத்திரியரான தசரதசக்ரவர்த்திக்குப் பிள்ளையாகிய இராமபிரானாக இரண்டாம்யுகத்திலே இரண்டாம் வருணத்திலும், யயாதிசாபத்தாலே அபிஷேகப்ராப்தியற்ற க்ஷத்திரியரில் தாழ்ந்து வைசியப்ராயரான யதுகுலத்தில்தோன்றிய வசுதேவர்க்கும் கோவைசியரான நந்தகோபர்க்கும் பிள்ளையாகிய கண்ணபிரானாக மூன்றாம்யுகத்திலே மூன்றாம் வருணத்திலும், ஆக இப்படி க்ருதாதியுகக்கிரமத்திலே பிராமணாதிவர்ணக் கிரமத்தால் இந்நிலவுலகத்திலே அவதரித்துவந்த ஸர்வேசுவரன்தானே, நான்காவதான கலியுகத்திலே நான்காம்வருணத்திலே காரியார்க்குப் புதல்வராகிய நம்மாழ்வாராய் வந்து அவதரித்தனன்" என்று விவரங்கூறுதலு முண்டு. இப்படி அம்சாவதார மென்பதன்றி, ஆவேசாவதாரமென்பர் சிலர்; 'ஸ்ரீமந்நாராயணன் வியாசர் முதலானவர்களிடம் ஆவேசித்து வேதங்களை வகுத்தல் முதலிய காரியங்களைச் செய்துமுடித்தாற்போல, நம்மாழ்வார்பக்கல் ஆவேசித்துத் தமிழ்வேதங்களை வெளியிட்டருளினன்' என்பது, அவர்கள் வகுத்துக் கூறுமாறு.

இப்படி ஆழ்வார் எம்பெருமானுடைய மத்ஸ்யம் கூர்மம் முதலிய தசாவதாரங்கள் போலத் தாமும் அப்பெருமானுடைய அவதாரவிசேஷமாயிருந்தும், அந்தரகசியம் அனைவர்க்கும் எளிதிற் புலனாகாதிருத்தற் பொருட்டு, அவர், தமக்கு மூலமான அப்பெருமானையே துதித்துக் கவிபாடி எம்பெருமானடியாரி லொருவர் போலவே தம்மைக்காட்டித் தமது திவ்வியப்பிரபந்த மூலமான உபதேசமுகத்தால் உலகத்தாரை உய்வித்தருளினர் என்பது, முதல்மூன்றடிகளின் தாற்பரியம். இவ்வகை இறைமைக்குணமுடைய ஆழ்வார்பக்கல் அன்புகொண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் அவர்க்குச்செய்யும் வந்தனை வழிபாடுகள் இம்மைமறுமைவீடுகளிற் பெறும் பேறுகளை விளைத்துப் பயன்படுமே யன்றி, இறைமைக் குணங்களில்லாதிருக்கையில் தம்மைத் தாமே இறைவரென்ற சிலஇடங்களிற் சொல்லிக்கொள்கிற இதரதேவர்களை இறைவரென மாறாகக்கருதிப் புறச்சமயத்தார் அந்தத்தேவதாந்தரங்கட்கு ஆட்பட்டுச் செய்யுங் குற்றேவல்கள் யாதொருநற் பயனையும் விளைக்கமாட்டுவன அல்ல என்பது, நான்காம்அடியின் கருத்து.

இனி, பாவகத்தால் - (தனது) தூய்மைசெய்யுந்திறத்தால் எனினுமாம். பூஅகத்தார் - பூமியிடத்தவர். தன்னையேதான் புகழ்ந்து கவிபாடுதல் உலகவியல் பன்றாதலாலும், ஆழ்வார் திருமாலை முன்னிலைப்படுத்தியும் படர்க்கையாக நிறுத்தியுந் துதித்துக் கவிபாடியுள்ளாராதலாலும், அவ்வாழ்வாரை அத்திருமால்தானே யென்று உலகத்திற்பெரும்பாலார் எளிதில்அறிந்திடா

http://acharya.org

ரென்க. 'பூவகத்தார்' என்பது, ஸாமாந்யஜனங்களை. நடித்தல் - நிஜஸ்வரூபந்தோன்றுதபடி வேற்றுவேஷங்கொண்டு வெளிப்பட்டுத் தொழில்செய்தல். கோ அகம் - மேலான இடம்; எனவே, பரமபதமாயிற்று. இனி, கோ+அகம் என்ற வடமொழி தமிழில் 'கோவகம்' என்று விகாரப்படும்; ஆதலால், கோவகத்தார் என்பதற்கு - பாதுகாப்பவ ரென்றும், (நம்மை) மறைக்குந் தன்மையுடையவ ரென்றும் பொருள்கொள்ளலாம். 'கோவகத்தார்க்கு அன்றி' என்றதனால், 'தேவதாந்தரங்களுக்கு' என்பது பெறப்பட்டது. இனி, 'புறத்தார்ச்செய' என்று பாடமாயின், அயலார்க்குச் செய்கிற என நான்காம்வேற்றுமைத் தொகையாகப் பொருள்படும். "தேவும் எப்பொருளும் படைக்கப், பூவில் நான்முகனைப் படைத்த, தேவ னெம்பெருமானுக்கல்லாற், பூவும் பூசனையுந் தகுமே" என்று ஆழ்வார் எம்பெருமான்விஷயத்தில் அருளிச்செய்தாற்போல, அவ்வாழ்வார்விஷயத்திற் கம்பநாட்டாழ்வார் 'அளித்த கோவகத்தார்க்கன்றி என் புறத்தார்செய் குற்றேவல்களே' என்றார். 'நடித்து' என்பதற்கு-"சீர்தான்தொல்புகழ்பாடிக் குனித்து நட்டமிட்டாடி" என்றபடி பக்தி மிகுதியால் ஆனந்தக்கூத்தாடியென்றும் உரைப்பர். திருமாலுக்கு மற்றும் பற்பல அவதாரங்கள் நூல்களிற்கூறப்பட்டிருப்பினும், தசாவதாரம் பிரதானமாதலால், அவற்றோடு இதனையுங் கூட்டி 'தன் திருவவதாரம் பதினொன்று' எனப்பட்டது. (78)

79. **குற்றேவலுஞ்செய்துமெய்கண்டுகைகொண்டுகும்பிட்டன்பு**
பெற்றேனென்போலெவர்பேறுபெற்றார்பின்னையேபிறந்து
வெற்றேவலினின்றபொய்யன்பர்தாங்களுமெய்யுணர்ந்தா
ரெற்றேகுருகைப்பிரானெம்பிரான்றனியலிசைக்கே.

(இ - ள்.) குருகைப் பிரான் - திருக்குருகூரில் அவதரித்த உபகாரகரும், எம் பிரான் தன் - எமது தலைவருமான நம்மாழ்வாருடைய, இயல் இசைக்கு - பண்ணமைதியோடுகூடிய இயற்றமிழ்ப் பாசுரங்களாகிய திவ்யபிரபந்தங்களினால், (யான்), மெய் கண்டு - தத்துவார்த்தங்களை யுணர்ந்து, கைகொண்டு கும்பிட்டு - (அவ்வாழ்வாரை எனது) கைகளைக்கொண்டு தொழுது, குற்றேவலும் செய்து - (அவர்க்குச்) சிறியஅடிமைத்தொழில்களையுஞ் செய்து, அன்பு பெற்றேன் - (அவருடைய) கருணையை அடைந்தேன்; என் போல் எவர் பேறு பெற்றார் - என்னைப்போல (வேறு) எவர்தாம் இவ்வகைநற்பயன் பெற்றனர்? (இதுவன்றி), பின்னையே பிறந்து - (ஆழ்வாரவதாரத்திற்குப்) பிற்காலத்திலே தோன்றி, வெற்றேவலில் நின்ற-(தேவதாந்தரங்களுக்குச்செய்யும்) பயனற்ற பணிவிடைகளில் நிலைநின்ற, பொய் அன்பர் தாங்களும் - (உண்மையுணர்வில்லாமல்) திரிபுணர்வையேயுடைய தொண்டர்களும், மெய் உணர்ந்தார் - (ஆழ்வாருடைய பிரபந்தங்களினால்) தத்துவப் பொருளை அறிந்து கொண்டார்கள்; எற்றே - (இது) என்னவியப்புடையது! (எ - று.)

ஆழ்வாருடையபிரபந்தங்களினால், யான் பரமாத்மஸ்வரூபம் ஜீவாத்மஸ்வரூபம் முதலிய தத்துவார்த்தங்களை ஐயர்

http://acharya.org

திரிபற உண்மையாக உணர்ந்து, அவ்வாழ்வாரை ஆசிரியராகக்கொண்டு, கைகூப்பித்தொழுது, அவர்க்கு அடிமைத் தொழில்செய்து, அவரருளைப் பெற்றேன் என்பது, முதல் வாக்கியத்தின் பொருள். 'என்போல் எவர் பேறுபெற்றார்' என்றது - தம்மைப்போல வேறு எவரும் பாக்கியம் பெற்றிலரென்று, தமது பக்தியதிசயத்தையும் அதனலாகிய பெரும்பயனையுங் குறித்துக் கொண்டாடிக் களித்துக் கூறிய வார்த்தை. ஆழ்வாரவதாரத்துக்குப் பிற்காலத்தார் பலரும் அவர்பிரபந்தங்களினுற் பிறப்புவீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களால் அன்றி உண்மையால் உணரலாயினர் என்று, அத்திவ்வியப்பிரபந்தங்கள் தம்மைக்கற்பார்யாவர்க்குந் தத்துவஞானேதயத்துக்குக் காரணமாகுந் திறமுடைமையை எடுத்துக்காட்டியது, மூன்றும்வாக்கியம். "மருளாய்ப்பரந்த மயக்கத்துயக்கற்றமாறனெங்கோ, னருளாற் சமயமெல்லாம் பரனுண்டென்றறிவுற்றதே" என்றார் முன்னும்; (49 - ஆஞ் செய்யுள்.) 'எற்றே' என்றது, இம்மகிமைகளைக்குறித்து வியந்து கூறியவாறு.

'குருகைப்பிரான் எம்பிரான் தன் இயலிசைக்கு' என்பதனை 'மெய்கண்டு' என்றதனேடும், 'மெய்புணர்ந்தார்' என்றதனேடுங் கூட்டுக; **கடைநிலைத்தீவகம்.** இயலிசை - "பண்ணார்பாடலின் கவிகள்," "குருகையர்கோன், யாழினிசை வேதத்தியல்" என்றபடி முதிர்ந்த குறிஞ்சி நட்டபாஷை இந்தளம் முதலான பண்ணிசையோடு இசைந்த பாடல். இயலிசை = இசையியல். இசைக்கு = இசையினல்; உருபுமயக்கம். கும்பிடுதல் - அஞ்சலி செய்தல். 'எவர்' என்ற வினப்பெயர் - இங்கு, இன்மைகுறித்து நின்றது. வெற்றேவலி வின்ற பொய்யன்பர் - பொய்யாகிய வழிகளிற் சென்று அன்புகொண்டு குற்றேவல் செய்பவர்; தத்துவ ஞானமின்றி விபரீதஞானமுடையராய் மதாந்தரங்களில் தெய்வ வழிபாடு செய்து நின்றவர். (79)

[தலைமகளைத் தலைமகன் கண்ணுற்று 'இஃது ஒரு வியப்பு என்?' என்றல்.]

80. இயலைத்தொடுத்தின்னிசையைப்புணர்த்தெம்மையிப்பிறவி
மயலைத்துடைத்தபிரான்குருகூர்மதியைக்கொணர்ந்து
முயலைத்துடைத்துத்தனுவைப்பதித்துமுத்தங்குயிற்றிக்
கயலைக்கிடத்திக்கொல்சாளரத்தூடுகநவிட்டதே.

(இ - ள்.) இன் இசையை புணர்த்து - இனிமையான பண்ணிசைகளை அமைத்து, இயலை தொடுத்து - இயற்றமிழ்ப் பாசுரங்களைப் பாடி, எம்மை இ பிறவி மயலை துடைத்த - எமது இந்தப் பிறப்புத்துன்பங்களைப் போக்கியருளிய, பிரான் - உபகாரகராகிய நம்மாழ்வாருடைய, குருகூர் - திருக்குருகூரிலே,—மதியை கொணர்ந்து - சந்திரமண்டலத்தைக் கொண்டுவந்து, முயலை துடைத்து - (அதன் நடுவிலுள்ள) முயலெனப்படுகிற களங்

http://acharya.org

கத்தைப்போக்கி, தனுவை பதித்து - (அதிலே இரண்டு) விற்களைப் பதியவைத்து, முத்தம் குயிற்றி - முத்துகளைப் பதித்து, கயலை கிடத்தி - (இரண்டு) கயல்மீன்களையும் வைத்து, சாளரத்து ஊடு-பலகணியினுள்ளே (அச்சந்திரமண்டலத்தை நிறுத்தி), கதவு இட்டதுகொல் - (புறத்தே) கதவு அமைக்கப்பட்டதோ! (எ - று.)—'இத்தோற்றம்' எனத் தோன்றாஎழுவாய் வருவித்து முடிக்க.

ஒருவருள்ளக்கருத்தை ஒருவரறியாத ஒருதலைக்காம மாகிய கைக்கிளைத்திணையின் முதலதான காட்சியென்னுந் துறை, இது. விசுவாமித்திரமுனிவர்பின்னே இலக்குமணனுடன் சென்ற இராமபிரான் மிதிலாபுரியின் வளங்களைக் கண்டுகொண்டே இராஜவீதிவழியாக அந்நகரினுட் புகும்போது கன்னிமாடத்தின் மேலிடத்து முன்புறத்தில் நின்ற ஜாநகியைக் கண்டு காதல் கொண்டதுபோலவும், இராசமாபுரத்து வீதிவழியே சென்ற சீவகன் அங்கு எழும்பிச்சென்று விழுந்த தன் பந்தை யெடுத்தற்கு வந்த விமலையைக் கண்டு வேட்கைகொண்டதுபோலவும் ஒரு தலைமகன் திருக்குருகூரின் வீதியிற் போம்போது "வாளரம் பொருதவேலும் மன்மதன்சிலையும் வண்டின், கேளொடுகிடந்த நீலச்சுருளுஞ் செங்கிடையுங்கொண்டு, நீளிருங் களங்கநீக்கி நிரை மணிமாடநெற்றிச், சாளரந்தோறுந் தோன்றுஞ் சந்திரோதயங் கண்டார்" என்றபடி அங்கு ஒரு மாளிகையின் சாளரத்திலே ஒரு தலைமகளது முகமண்டலத்தைக் கண்டு காதல்கூர்ந்து அதன் சிறப்பை வியந்து பாராட்டி இங்ஙனம் தன்னுட் கூறினனென்க. பொருளதிகாரத்திற் கூறப்பட்ட குணநலங்களிற் சிறந்த தலைமகனும் தலைமகளும் ஒருசோலையினிடத்து ஏகாந்தத்திலே தற்செயலாகச் சந்தித்து ஒருவரையொருவர் நோக்கியபொழுது ஒருவர்மேலொருவர் அன்புகொண்டு இயற்கைப்புணர்ச்சி பெறுமாறு போல, இதுவும் ஒருநிகழ்ச்சி. இச்செய்யுளின் மெய்ப்பாடு - உவகையைச் சார்ந்த மருட்கை; கண்ட பொருளால் நெஞ்சில் மயக்கந் தோன்றி ஒன்றை ஒன்றாகக்கூறுதலின். இங்ஙனஞ்சொன்னதனாற் பயன் - மகிழ்தல்; "சொல்லெதிர் பெறாஅன் சொல்லியின்புறுதல், புல்லித் தோன்றுங் கைக்கிளைக்குறிப்பே" என்றார் தொல்காப்பியனார்.

மதி-கலைநிறைந்த சந்திரன். இங்கு 'மதி' என்றது, அம்மாதின் முகமண்டலத்தை. கண்டவர்கண்களிக்கச்செய்யும் இயல்பினும், குளிர்ந்த இனிய ஒளியினும், முகத்துக்குச் சந்திரன் உவமை. அச்சந்திரனுக்காயின் முயலெனப்படுங் களங்கம் உண்டு. இம்முக சந்திரனுக்கோ அதுஇல்லை யென்னும் விசேடங் கூறுவான், 'மதியைக்கொணர்ந்து முயலைத்துடைத்து' என்றான்; கீழ் 74-ஆஞ் செய்யுளில் "வெண்மதிமேற், கள்ளம்பரந்தனவோ முயல் நீக்கி" என்றதும் காண்க. விற்போல வளைந்து ஆடவர்நெஞ்சுறுதியைப் போக்கும் ஆற்றலுடைய புருவங்களின் சிறப்பைப் பாராட்டி 'தனுவைப்பதித்து' என்றும், புன்முறுவல்செய்கையிற் சிறிது வெளித்தோன்றிய வெண்மையான பற்களின் அழகில் ஈடுபட்டு "முத்தங்குயிற்றி' என்றும், பிறழ்கிற கண்களின் நலத்தைக்

http://acharya.org

கொண்டாடி 'கயலைக் கிடத்தி' என்றுங் கூறினன். 'சாளரத்தூடு கதவிட்டதே' என்றது. பலகணியுங் கதவு முள்ள இடத்தே இவ்வகைமதியமொன்றுஉண்டோ எனவியந்தவாறு: இது, தற்குறிப்பேற்றவணியின்பாற்படும்; 'கொல்' என்ற இடைச்சொல் அவ்வணிக்கு உருபாய் நின்றது.

பிரான் குருகூர் - ஆழ்வார்திருவவதரித்த தலமான திருநகரி. பாமாலையென்ப வாதலால், 'இயலைத் தொடுத்து' எனப்பட்டது. பிறவித்துன்பங்களாலாகும் மயக்கத்தைத் தம்மைச்சார்ந்தவர்கட்குப் போக்கியருளுதலால் ஆழ்வார் 'எம்மை இப்பிறவிமயலைத் துடைத்த பிரான்' எனப்பட்டனர். ஆழ்வாரை அடுத்தார்க்கு அவரருளால் வினையனைத்துந் தீரவே, பிறவித் துயர்க்குவருந்துதல் இல்லையாம்.

ஆழ்வாரிடத்தில் அன்புகொண்ட பாகவதர் ஆழ்வாரையுத்தேசித்துத் திருக்குருகூரைச்சார்ந்துள்ள கம்பநாடரது திருமுகமண்டலத்தின் விளக்கத்தைக் கண்டு அதனைக் கொண்டாடுதல், இதற்கு உள்ளுறைபொருள்: ஆழ்வார் பாட்டுடைத்தலைமகனென்றும், அவரிடத்து அன்புள்ள பாகவதர்கள் கிளவித்தலைமக்களென்றும் வேறுபாடு அறிக. கிளவித்தலைமகனும் பாட்டுடைத்தலைமகனுமாக இரண்டுதலைமகன் அமைதல், இறையனாரகப்பொருளுரையாலும் விளங்கும். ஆழ்வாரிடத்திற்போல அவரடியாரிடத்தும் "சடகோபனைச்சென்றிறைஞ்சுக், தலையாரேவ ரவரெம்மையாளுந் தபோதனரே," "மாறனென்றுற் பதுமக்கரங்கள், முடியெடுத்துக்கொண்ட வந்தணர் தாளென்முடி" என்று கம்பநாடர் மிக்கபக்திகொண்டு அவர்களையுந் தமக்குத் தலைவராகக் கொள்ளுதல், அவ்வடியார்களைக் கிளவித்தலைமகனாகக்கொண்டதற்குக் காரணம். இங்ஙனம் தலைமகன் வார்த்தையாலே தமது வைபவத்தைப் பேசி மகிழ்கின்றனர் கம்பநாடரென்க. "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங், கடுத்தது காட்டும் முகம்" என்றபடி இவரது அகத்தி லுண்டான ஞானானந்தங்களால் முகம் மலர்ச்சியுற்றுக் களங்கமில்லாததொரு சந்திரன்போன்று விளங்குதலால், 'மதியைக்கொணர்ந்து முயலைத்துடைத்து' எனப்பட்டது. வில்என்பது - அம்பைச்செலுத்திக்குறியையெய்வதாகையாலே, இவரது ஸாதநபூர்த்தி முகக்குறிப்பிலே விளங்குதல் 'தனுவைப் பதித்து' எனப்பட்டது. இனிய துதிமொழிகளை இவர் வாய் மலர்ந்து கூறும்போது சிறிதுவெளித்தெரிகிற தந்தபங்க்தியின் பொலிவை 'முத்தங் குயிற்றி' என்று பாராட்டியவாறு. ஆராய்ச்சியாற் பல விஷயங்களில் விரைந்துசெல்லவல்ல இவரது ஞானக்கண்ணின் அமைதியை 'கயலைக் கிடத்தி' என்று கொண்டாடினரென்க. அம்முகமண்டலத்தின் விகாசம் மேல்நோக்காகவன்றி ஊன்றி நோக்கினல்மாத்திரமே நன்கு புலனாவதென்பதனை 'சாளரத்தூடு கதவிட்டதே' என்றதனாற் பெறவைத்தபடியாம். பிறவும் விரிப்பிற் பெருகும்; உய்த்துணர்ந்துகொள்க.

கொல் என்ற இடைச்சொல், பிரித்துக்கூட்டப்பட்டது. 'எம்மை மயலைத் துடைத்த' என்பது இரண்டு செயப்படுபொருள்

http://acharya.org

வந்த வினை. 'எம்மை' என்பதை 'எமது' என உருபுமயக்கமாகக் கொள்ளுதலும் நேராம். (80)

81. இட்டத்திலுந்தந்தமுள்ளத்திலும்மெண்ணிலும்மிருப்பின்
இட்டத்திலும்வலியாருமுருகுவர்கேணியிலும்
பட்டத்திலும்பைந்தடத்திலுமோடைப்பழனத்திலுங்
குட்டத்திலுங்கயல்பாய்குருகூரர்குணங்களுக்கே.

(இ - ள்.) கேணியிலும் - கிணறுகளிலும், பட்டத்திலும் - (பெருக்குக் காலத்தில் நீர் வடிப்பாயும்) பட்டக்கால்களிலும், பைந் தடத்திலும் - பசுமையான தடாகங்களிலும், ஓடை பழனத்திலும் - நீரோடை சூழ்ந்த வயல்களிலும், குட்டத்திலும்-ஆழமான குட்டைகளிலும், கயல் பாய் - (நீர்வளத்தால்) கயல்மீன்கள் பாய்ந்து குதிக்கப்பெற்ற, குருகூரர் - திருக்குருகூரில் அவதரித்தவரான நம்மாழ்வாருடைய, குணங்களுக்கு - நற்குணங்களைக் கண்டு அவற்றிற்காக,—இருப்பின் இட்டத்திலும் வலியாரும் - இரும் புருக்கிய உருக்குக்கிட்டத்தைக்காட்டிலுங் கடினமானவர்களும், —தம் தம் இட்டத்திலும் உள்ளத்திலும் எண்ணிலும் உருகுவர் - தம்தம்முடைய மனம் புத்தி சித்தம் என்னும் அகக்கரணங்களிற் கரைவார்கள்; (எ - று.)

மனம் மொழி மெய் என்னுந் திரிகரணங்களின் புடை பெயர்ச்சியாகிய எண்ணம் சொற் செயல்களி லெல்லாம் இருப்புக் கிட்டத்திலுங் கடினமான இயல்புடையவர்களும், நம்மாழ்வாருடைய திருக்கல்யாண குணங்களை நோக்குமிடத்து, அவற்றின் சிறப்பினால், தங்கடுமையொழிந்து, அகக்கரணங்கள் நெகிழ்ந்து உருகி நீராய்க்கரைவர் என்று அந்நிவ்வியகுணங்களின் மேன் மையை எடுத்துக்காட்டியவாறும்; எனவே, இளகுநெஞ்சுடையார் உருகுவது சொல்லவேண்டாதாயிற்று. ஆகவே, அவை யாவரும் ஈடுபடும்படியுள்ளன வென்க. (திருமாலையில் "இரும்புப்போல் வலிய நெஞ்சம் இறை யிறை யுருகும் வண்ணம்" என்றஇடத்தில் 'இரும்பாகில் அக்நியாலே நிமிர்த்துக் கொள்ளலாம்; இது ஒருபடி யாலுந் திருத்தவொண்ணுதென்கை,' கடிநஸ்தலத்திலே வர்ஷித் தால் காடிந்யமடங்க நெகிழ்ச்சித்து உறப்பாமாபோல, விஷயாந் தரத்தாலே மனஸ்அதிகடிநமாறுலும் சிதிலமாம்படி வயிர வுருக் காயிறே பகவத்ப்ரபாவ மிருப்பது' என்ற பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானவாக்கியங்கள் நோக்கத்தக்கன.) மனம் புத்தி அகங் காரம் சித்தம் என்ற நான்கு அந்தக்கரணங்களுள், அகங்காரம் ஒழிந்த மூன்றும், முதலடியில் எடுத்துக்கூறப்பட்டன.

'இட்டத்திலும்' என்ற இடத்து, இல் - ஐந்தனுருபு, எல்லைப் பொருளது; இது, உறழ்பொருவுஎனப்படும். உம்மை - இழிவு சிறப்பு; 'வலியாரும்' என்ற உம்மையும் அறுவே. 'இட்டத்திலும்' என்பது முதலியவற்றில், இல் - ஏழனுருபு; உம்மை - எண்ணுப் பொருளது. சிறுகுளத்தைக் கேணி யென்பது அருவாநாட்டுச்

http://acharya.org

சொல்; அது, தமிழில் வந்துவழங்கியபோது, திசைச்சொல்லாம். 'ஓடைப்பழனத்திலும்' என்பதற்கு - நீரோடைகளிலும் வயல்களிலும் என்று உரைப்பினும் அமையும். பைந் தடம் - குளிர்ச்சியான தடாகம்; இங்குப் பசுமை, குளிர்ச்சியின்மேலது: குளிர்ந்த நீரை 'பச்சைஜலம்' என்றல், உலகவழக்கு. இனி, பைந் தடம் - (தாமரையிலைகளினால்) பசுமைநிறமுடைய தடாகம் என்றலுமாம். இருப்பின் = இரும்பின்: மென்றொடர், வன்றொடராயிற்று. ஆழ்வாரது திருவருட்பெருக்கினாலாகும் இடையறாதநீர்ப்பெருக்கால் மேடுபள்ளமென்னும் வாசியின்றி எங்கும் ஒப்பக் கயல்பாய்தல்போல, அவரது குணவிசேஷத்தால் வல்நெஞ்சரோடு மெல்நெஞ்சரோடு வாசியற அனைவரும் உருகுவர் என்பது, குருகூர்க்குக் கொடுத்த 'கேணியிலும் பட்டத்திலும் பைந்தடத்திலும் ஓடைப்பழனத்திலும் குட்டத்திலும் கயல்பாய்' என்ற விசேடணத்தாற் போதரும். (81)

82. குணம்வேண்டுமே நற்குலம்வேண்டுமேயக்குலத்தொழுக்காம்
பிணம்வேண்டுமேசெல்வப்பேய்வேண்டுமேபெருந்தண்வகுள
மணம்வேண்டுந்தண் டெரியற்பெருமான்செய்யுண்மாமணியின்
கணம்வேண்டுமென்றறிவாரைக்கண்டாற்சென்றுகைதொழுமே.

(இ - ள்.) பெருந் தண் வகுளம் மணம் வேண்டும் - பெரிய குளிர்ந்த மகிழமலர்களின் வாசனை (அனைவராலும்) விரும்பப்படுகிற, தண் தெரியல்-இனிமையான மாலையைத் தரித்த, பெருமான் - பெருமையையுடையவரான நம்மாழ்வார் அருளிச்செய்த, செய்யுள் - பாசுரங்களாகிய, மா மணியின் கணம் - சிறந்த இரத்தினங்களின் கூட்டத்தை, வேண்டும் என்று அறிவாரை - (தமக்கு) இன்றியமையாதனவென்று தெரிந்து ஓதியுணர்பவர்களை, கண்டால் - (நீங்கள் எங்குக்) கண்டாலும், சென்று கைதொழும் - (உடனே) அருகிற்சென்று கைகூப்பிவணங்குங்கள்; குணம் வேண்டுமே - நற்குணம் வேண்டுமோ? நல் குலம் வேண்டுமே - நல்ல குலத்திற் பிறத்தல் வேண்டுமோ? அக்குலத்து ஒழுக்கு ஆம் பிணம் வேண்டுமே - அந்த நற்குலத்துக்கு ஏற்ற ஆசாரமாகிய பிணம் வேண்டுமோ? செல்வம் பேய் வேண்டுமே - செல்வப் பொருளாகிய பேய் வேண்டுமோ? [ஒன்றும் வேண்டுவதில்லை யென்றபடி];

விலையுயர்ந்த இரத்தினங்கள்போல அனைவரும் நன்குமதிக்கத்தக்கனவான ஆழ்வார்பாசுரங்களின் மகிமையை யறிந்து அவற்றை அன்புடன் ஓதுபவரைக் கண்டால், அவர்களுடைய குணம் குலம் ஒழுக்கம் பொருள் எதனையும் பார்க்கவேண்டுவதில்லை: உடனே அவரருகிற்சென்று அவரை வணங்குங்கள்: நற்குணவமைதி, உயர்குடிப்பிறப்பு, அதற்குஏற்றஆசாரபூர்த்தி, செல்வப்பொருள் என்பவற்றில் எதுவும் இலராயினும் அவர்கள் நன்கு மதிக்கத்தக்கவர் என்றும்; ஆழ்வாரருளிச்செயல்களை யதிபவர்களை அடுத்துத் தொழுவதுமாத்திரமே நீங்கள் மிக்கமேன்மையடைதற்குப் போதும்: உங்கட்கு மேன்மையினைத்தற்காகக் குணம் முதலியன வேண்டுவதில்லை யென்றும் இருவகையாகக் கருத்து அமையும்.

http://acharya.org

"அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன, அவா விலந்தாதிகளா லிவையாயிரமும் முடிந்த, அவாவிலந்தாதியிப்பத் ததிந்தார்பிறந்தாருயர்க்கே" என்று ஆழ்வார்தாமே அருளிச் செய்ததனல் அப்பாசுரங்களையறிவாரது மேன்மையும், "நல்லார் பலர்வாழ் குருகூர்ச் சடகோபன், சொல்லார் தமிழாயிரத்துள் ளிவைபத்தும், வல்லார் தொண்ட ராள்வது சூழ்பொன்விசும்பே" என்று ஆழ்வார்தாமே அருளிச்செய்ததனுல் அப்பாசுரங்களை யோதுவார்க்கு ஆட்பட்டவர்கள் அடையும் பெரும்பயனும் விளங்குதல் காண்க.

குணம் - அன்பு, அருள், அடக்கம் முதலியன. ஒழுக்கு - வருணாச்சிரமதருமங்களில் வழுவாது ஒழுகுதல்; ஒழுகு என்ற முதனிலைதிரிந்த தொழிற்பெயர். பகவத் பாகவத பக்தியில்லாதாரது ஆசாரம் பயனற்றதும் அருவருக்கத்தக்கதுமா மென்பார், 'அக் குலத்து ஒழுக்காம்பிணம்' என்ருர். பேய்தாக்கி வருத்துதல் போலச் செல்வம் தன்பக்கல் ஆசையையூட்டி வருத்துதலால், 'செல்வப்பேய்' எனப்பட்டது. தெரியல் என்ற பெயர்-விளங்கு வது என்று காரணப்பொருள்பெறும். 'பெருமான்செய்யுள்' என்ற விடத்துத் தொக்கு நின்ற ஆறும்வேற்றுமையுருபு - செய்யுள் கிழமைப் பொருளது. தொழும் - பன்மையேவல். (82)

83. தொழும்பாக்கியவினைத்தொல்லைப்பிறவிச்சுழியிடைநின்
றெழும்பாக்கியமுடைத்தாக்கவுந்தென்னியலோடிசைந்து
கெழும்பாக்கெழுமியகீர்த்தியைநாளுங்கிளத்தியென்னுத்
தழும்பாக்கவும்வல்லகோசடகோபன்றயாபரனே.

(இ - ள்.) தொழும்பு ஆக்கிய - (உயிரைத் தனக்கு) அடிமை யாகச்செய்த, வினை -கருமமாகிய, தொல்லை பிறவி சுழி-தொன்று தொட்டுவருகிற பிறப்புக்களாகிய கடலின் சுழியினது, இடை நின்று - நடுவிலிருந்து, எழும் பாக்கியமுடைத்து ஆக்கவும்- (அவ் வுயிர் தப்பி) வெளியேறி உய்யும்படியான அதிருஷ்டத்தை யுடையதாம்படி செய்யவும், தென் இயலோடு இசைந்து கெழும் - அழகிய இலக்கணங்களுடன் அமைந்து விளங்குகிற, பா - (தாம் பாடிய திருவாய்மொழி முதலிய திவ்வியப்பிரபந்தங்களின்) பாடல் களிலே, கெழுமிய - எங்கும்நிறைந்துள்ள, கீர்த்தியை - (எம்பெரு மானுடைய) புகழை, நாளும் கிளத்தி என் நா தழும்பு ஆக்கவும்- நாள்தோறுஞ் சொல்லிச்சொல்லி எனதுநாக்கில் தழும்பேறும்படி செய்யவும், வல்ல கோ - திறமைமிக்க தலைவர், (யாவரெனில்,—) தயாபரன் சடகோபனே - (எல்லாவுயிர்கட்குங்) கருணை செய்தலி லேயே ஊன்றியவரான நம்மாழ்வாரே; (எ - று.)—ஈற்று ஏகாரம்- பிரிநிலை.

வினைச் சுழி யென இயையும்; வினையாகிய சுழி யென்க. கருமம் அநாதி யாதலின், அதன்தொடர்பாலாகும் பிறப்பும் உயிர் கட்கு அநாதியாய் வருதல்பற்றி, 'தொல்லைப் பிறவி' எனப்பட்

http://acharya.org

டது. "மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து" என்றபடி மாறிமாறி வருகின்றனவான பிறப்புக்கள், மாறிமாறி வரும் அலைகளையுடைய கடல் போலும். அப்பிறப்புக்களிலேயே உயிர்களைச் சுழலச்செய்வதான ஊழ்வினையானது அகப்பட்டபொருள்களைக் கடல்வெள்ளத்திலேயே உழலச்செய்வதான அதன்நீர்ச்சுழி போலுதலால், வினை 'பிறவிக்கடலின்சுழி' எனப்பட்டது; "சென்மக்கரங்கக்கருமச் சுழி" என்பர் பிள்ளைப்பெருமாளையங்காரும். 'வினைச் சுழி'என்பதற்கு ஏற்ப 'பிறவிக் கடல்'என்றது,ஏகதேசவுருவகம். ஒருதலைவனுக்கு அடிமைப்பட்டவர் அவனுக்கு அதீனராய்ச் சுவாதந்திரியமிலராதல்போல, உயிர்கள் கருமவசப்பட்டுத் தம்வசமிழத்தலால், வினைக்கு 'தொழும்பாக்கிய' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. ஜீவான்மாக்கள் கருமவசத்திலேயே கிடந்து பிறப்புத்துன்பங்கட்கு உள்ளாகி உழலாது மீண்டு வினைதொலைத்துப் பிறப்பற்றுப் பரமபதமடையும்படியான பாக்கியம்பெறுமாறு செய்ய வல்ல இறைவர் நம்மாழ்வார் என்பது, 'தொழும்பாக்கிய வினைத் தொலைப் பிறவிச்சுழியிடை நின்று எழும் பாக்கிய முடைத்தாக்கவும் வல்ல கோ சடகோபன்' என்பதன் கருத்து. இது, செயற்கருஅரியனசெய்யவல்ல பெரியவர் ஆழ்வார்தாம் என்றவாறு. இங்ஙனங்கூறினது, உயிர்கள் எளிதில் முத்திபெறுமாறு பிரபத்தி மார்க்கத்தை ஆழ்வார் தமது திவ்வியப்பிரபந்த மூலமான உபதேசத்தால் நன்கு வெளியிட்டனராதலின்; "முத்திக்கு மூலம் ....குருகைப்பிரான் சொன்ன ஆயிரமே" என்றார் மூன்றும்.

திருவாய்மொழிமுதலிய அருளிச்செயல்களை யான் நாள்தோறும் இடையறாது ஓதி அப்பாசுரங்களைக்கொண்டு ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்விய கீர்த்திகளைத் துதித்து நாக்குத்தழும்பேறும்படி அந்தமெய்ப்புகழ்களே எங்கும்நிறைந்த பாசுரங்களைப் பாடியருளியவர் ஆழ்வாரென்பார், 'தென்னியலோடிசைந்து செழும்பாங் கெழுமிய கீர்த்தியை நாளுங்கிளத்தி என்நாத்தழும்பாக்கவும் வல்ல கோ சடகோபன்' என்றார். "கேட்பார்கள் கேசவன் கீர்த்தி அல்லால் மற்றுங் கேட்பரோ,""இறைவன்,பொருள்சேர் புகழ்"என்றபடி, கேட்கத்தக்கதும் பொருள்சேர்ந்ததுமான புகழ் ஸர்வேசுவரனது கீர்த்தியொன்றே யாதலால், 'கீர்த்தி' என்ற பொதுப்பெயர் சிறப்பாய்த் திருமாலின்புகழையே குறித்தது. ஆழ்வார் பாசுரங்கள் அக்கீர்த்தியே நிறைந்தனவாதலே, "செயிகளாவார நின்கீர்த்திக்கனியென்னுங் கவிகளே காலப்பண்தே னுறைப்பத் துற்று" என்ற திருவாய்மொழி கொண்டும் உணர்க. "அருள்கொண் டாயிரமின்தமிழ்பாடினான், அருள்கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே" என்றபடி, இங்ஙனம் ஆழ்வார் "ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல் அவனுடைய பேரும் தார்களுமே பிதற்ற"ம்படி பண்ணியதற்குக் காரணம் அவர்க்கு இயல்பாக எல்லாவுயிர்களின் மேலும் எழுந்த கருணையே யாதலால், 'சடகோபன் தயாபரன்' என்றார்.

சடகோபன் என்ற திருநாமத்தின் காரணம்-மதாந்தரத்தவர்களாகிய சடரைக்கோபித்துத் தம்திருவாய்மொழிகொண்டு

http://acharya.org

வெல்பவர் என்றுங்கூறுவர்;* சடர் - மூர்க்கர், விடாப்பிடியுடையோர். தொல்லைப்பிறவி - பண்புத்தொகை. 'இடைநின்று' என்பதில், நின்று - ஐந்தாம்வேற்றுமைச்சொல்லுருபு, நீக்கப் பொருளது. கோ - உயர்திணைப்பெயர்; இது, 'சடகோபன்' என்ற பெயர்ப்பயனிலை கொண்டது. தயா பரன் - தயையினாற் சிறந்தவன்: பரமதயாளு எனினுமாம். (83)

[நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நிற்றல்.]

84. பரந்தலைக்கும்பொருநைக்குருகூரென்னிற்கண்பனிக்குங்
கரந்தலைக்கொள்ளுமுள்ளும்முருகுங்கவியாலுலகைப்
புரந்தலைக்கும்வினைதீர்த்தான்புனைமகிழ்பூவுமன்றி
மரந்தலைக்கொள்ளவும்போதுநங்காயுன்மகள்கருத்தே.

(இ - ள்.) நங்காய் - மகளிரிற்சிறந்தவளே! பரந்து அலைக்கும் பொருநை குருகூர் என்னில் - பரவி அலைவீசுகிற பொருநையாறென்னும் தாமிரபர்ணி நதியையுடைய திருக்குருகூர் என்று (யாரேனும் தலைவனது ஊர்ப்பெயர்) சொன்னமாத்திரத்தில், (நின்மகள்), கண் பனிக்கும் - கண்ணீர் பெருக்குகின்றாள்; கரம் தலை கொள்ளும் - கைகளைத் தலைமேற்கொண்டு கூப்பித்தொழுகின்றாள்; உள்ளும் உருகும் - (புறமாகிய உடல் உருகுதலேயன்றி) அகமாகிய மனமும் கரைந்து நீராகின்றாள்; கவியால் உலகை புரந்து - (தான் பாடிய) பாசுரங்களினால் உலகத்தைப் பாதுகாத்து, அலைக்கும் வினை தீர்த்தான் - (உயிர்களை) வருத்துகின்ற கருமத்தைப் போக்கியருளியவனான அத்தலைவன், புனை - அணிந்த, மகிழ் பூவும் அன்றி - (மாலையாகிய) மகிழமலர்களைத் தான் சூடிக்கொள்ள விரும்புவதும் அல்லாமல், மரம் தலைக்கொள்ளவும் போதும் - (அந்தமலர்களைப் பூக்கின்ற) மகிழமரத்தைச் சார்ந்து அதனைத் தலைமேற்கொள்ளுதற்குஞ் செல்கின்றாள்: உன் மகள் கருத்து - உனது பெண்ணின் மனநிலை, (இத்தன்மையதாம்); (எ - று.)—'இத்தன்மையதாம்' என வினை வருவித்து முடிக்க.

தலைவியைக் களவொழுக்கத்தாற் கூடிநின்ற தலைவன், பின்பு 'ஊரெங்கும் பழிபரவுதலாலும், இவ்வஞ்சனையொழுக்கத்தைத் தாய்மார் அறிதல்கூடுமாதலாலும், இனி இதனை விட்டு, வெளிப்படையாக இவளை நீ மணம்புரிந்து கொள்ளுதலே தகுதி' என்று தோழியால் வற்புறுத்தப்பட்டு, அத்தலைவிக்காகத் தாய்தந்தைய

---

* ஆசார்யஹ்ருதயத்தில் "சடரை யோட்டி" என்றதும், "சடகோபராகையாலே "வேதசாஸ்த்ராவிரோதிநா" என்கிறபடியே ப்ரமாணாநுகூல தர்க்கங்களாலே மத்யஸ்தமாக அர்த்தத்தை ஸாதிக்கையன்றிக்கே ஸ்வபுத்திகல்பிதகுதர்க்கங்களாலே ஸ்வஸ்வமதஸ்தாபநம்பண்ணும் பாஹ்யகுத்ருஷ்டிகளாகிற சடரை, ஸ்ருத்யந்ததாத்பர்யமான ஸ்வோக்திவிசேஷங்களாலே ஸ்வஸந்நிதாநத்தில் நில்லாதபடி துரத்தி" என்ற அதன் வியாக்கியானமுங் காண்க.

http://acharya.org

ரிடங்கொடுத்தற்குஉரிய அருங்கலம் முதலிய பொருளைத் தன் முயற்சியால் ஈட்டுதற்பொருட்டுப் பிரிந்துசெல்வன்; இப்பிரிவு, வரைபொருட்பிரிவென்றும், வரைவிடைவைத்துப் பொருள் வயிற் பிரிதலென்றுங் கூறப்படும். அங்ஙனம் அவன்பிரிந்துசெல்லவே, தலைவி அப்பிரிவுத்துயரை ஆற்றமாட்டாமலும் தந்தைதாய ரிடத்துத் தன்னைக்குறித்துப் பிறர் மணம் பேசுவதை யுணர்ந்தும் வருந்தி மெலிவடைய, அம்மெலிவுகண்ட செவிலித்தாய் இம்மெலிவு தெய்வாவேசத்தா லாகியதென்று மாறாக எண்ணி அதற்கு உரிய பரிகாரங்களைச் செய்யத்தொடங்க, அதுகுறித்து வருத்தம்மிக்க தலைவி தோழியைத் தூண்ட, அவள் செவிலிபக்கல் உண்மைக் காரணத்தை உரைக்க, அவள் அதனை நற்றாய்க்கு உரைத்தல், இச்செய்யுளிற் கூறிய விஷயம். (நற்றாய் - பெற்றதாய்.) இச்செய் யுளின் மெய்ப்பாடு - உவகை. இதன் பயன் தந்தைதமர்க்கும் அவள் சொல்லி வெளிப்படையாக இவனுக்கு அவளை மணம் புரி விக்கும்படி தூண்டுதல். இங்ஙனங் களவை வெளிப்படுத்துதலை 'அறத்தொடுநிற்றல்' என்பர்; மகளிர்க்குச் சிறந்ததருமமாகிய கற்போடு இசைய நிற்பதனால், இவ்வாறு பெயராயிற்று: "தலைவி பாங்கிக்கு அறத்தொடுநிற்கும், பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்கும், செவிலி நற்றாய்க்கு அறத்தொடுநிற்கும், நற்றாய் தந்தை தன்னையர்க்கு அறத்தொடு நிற்குமென்ப நெறியுணர்ந் தோரே" என்பதனால், களவை வெளிப்படுத்திநிற்கும் முறை மையை அறிக.

தலைவனதுபெயரைக் குறியாமல் அவனது ஊரின்பேரைக் கூறக்கேட்குமளவிலும் தலைவி ஆசைநோயால் அடையும் பலவகை நிலைவேறுபாடுகளும், ("தாராயினும் தழையாயினும் தண்கொம்பதாயினும் கீழ் வேராயினும் நின்ற மண்ணாயினும் கொண்டுவம்மினே", "போரரிதான்புனைதாரரிதாகில் தண்பூந் துளவின், தாரரிதாவுந்தழையரிதாகில் தழைதொடுத்த, நாரரி தாகிற் பிழைப்பரிதாம் எங்கள்நன்னுதற்கே," "கொழுந்தோ டிலையும் முகையுமெல்லாங் கொய்யுங் கொய்மகிழ்க்கீழ், விழுந் தோடுவதோர்சருகும்பொருள்" என்றபடி) பிரிவாற்றுதலிலையில் தலைவி தலைவனது மாலையாயினுங் கிடைக்கப்பெறவேண்டு மென்று விரும்புவதேயன்றி அம்மாலைக்குஉரிய மலரின் சம்பந்த முள்ள பொருள் எதுகிடைத்தாலும்போதுமென்று விரும்புவதும் இங்கு எடுத்துக்கூறப்பட்டன.

பனிக்கும், கொள்ளும், உருகும், போதும் என்ற செய்யுமென் முற்றுக்கள் - பெண்பாலுக்குவந்தன. இம்முற்றுக்கள், இங்கு நிகழ்காலங் காட்டின; "செய்யும் நிகழ்பு எதிர்வும்" என்றார் நன் னூலார். உள் - உள்ளம்: அந்தக்கரணமாகிய மனம். 'உள்ளும்' என்பதை 'உள்' என்ற வினைப்பகுதியடியாப் பிறந்த செய்யுமென் முற்றெனக் கொண்டு, அதற்கு - நினைக்கின்றாளென்று உரைத்த லும் ஒன்று; உள்ளுதல் - நினைத்தல். உன்மகள்கருத்துப் போதும் - நினதுமகளின்கருத்துச் செல்லும் என்றுங் கொள்ளலாம்.

http://acharya.org

கவியா லுலகைப் புரந்து—"கவியா லுலகை யுய்தலைச்செய்தது" என்றூர் முன்றும், (38 - ஆஞ் செய்யுள்.) 'கவியால்' என்றதை 'வினைதீர்த்தான்' என்பதனேடுங் கூட்டுக. கவி - திருவாய்மொழி முதலியன. 'உலகு' என்பது - பலபொருளொருசொல்லாய், நிலத்தையும் உயிர்களையும் ஒழுக்கத்தையும் உயர்ந்தோரையும் உணர்த்திநிற்குமேனும், இங்கே 'புரந்து' என்றதனால், நிலவுலகத்தில்வாழுஞ் சீவான்மாக்களையுணர்த்திற்று; "உலக முவப்ப" என்றவிடத்து 'உலகம்' என்பது போல.

சிற்சிலசமயங்களிற் கம்பநாடரது ஞானக்கண்ணுக்குப் புலனை ஆழ்வார் அப்பொழுதே அவர்க்குச் சதாசாந்நித்யத்தைத் தந்தருளாமற் பரம்பொருளோடு மறைந்தவளவிலே, அப்பிரிவைப்பொறுது அவர் வருந்துகிற நிலைமையைப் பிரிவுடையார் ஞானிகட்குக்கூறுதல், இதற்கு உள்ளுறைபொருள். இங்ஙனம் செவிலிபேச்சாலே தமதுநிலைமையை வெளியிடுகின்றனர் கம்பநாடரென்க. ஆழ்வாரவதரித்த திவ்யதேசத்தின் திருநாமத்தைக் கேட்டமாத்திரத்தில் இவர்க்குஉண்டாகும் பக்திகாரியமான மெய்ப்பாடுகளும், ஆழ்வாரது பிரசாதத்தைச் சிரமேற்கொள்வதில் இவர்க்குஉண்டான அதியாதரமும், இதில் நன்கு வெளியாகின்றன. 'வினைதீர்த்தான் புனைமகிழ்ப் பூவுமன்றி மரந்தலைக் கொள்ளும்' என்பதற்கு ஸ்வாபதேசம் - ஆழ்வாரது சம்பந்தத்தை நேரேயேனும் இடையிட்டேனும் உடைய அடியார்களைத் தலைமேற்கொள்ளச் செல்கின்றனரிவரென்றும் உரைக்கலாம்; ஆழ்வாரது அன்பர்கள் எழுந்தருளியிருக்கிற இடமும் இவராற் சிரமேற் கொள்ளுமாறு விரும்பப்படுகிறதென்பதுந் தோன்றும். பிறவுங் கண்டுகொள்க. (84)

[தலைவனைநோக்கித் தோழி தலைவியை உடன்கொண்டுபோகச் சொல்லுதல்.]

85. கருத்திற்கருணைவைத்தேகுமிதுவுங்கலைமறையோர்
திருத்திற்றொருமணந்தீருந்தினமயலீரிறை
முருத்திற்செருந்தயலேயிவனோடுமுயற்கரும்பின்
குருத்திற்பிரசம்வைக்குங்குருகூர்சென்றுகூடுமினே.

(இ - ள்.) கருத்தில் கருணை வைத்து - (நுமது) மனத்திற் பேரன்புகொண்டு, இவளோடு ஏகும் - இம்மங்கையுடனே (நீர்) செல்லக்கடவிர்; இதுவும் - இவ்வாறு நீர் இவளைக்கைப்பற்றுவதும், கலை மறையோர் திருத்திற்று ஒரு மணம் - சாஸ்திரம்வல்ல அந்தணர்கள் செவ்விதாக அமைத்த விவாகங்களுள் ஒன்றன்பாற்படும்; (அன்றியும்), தினம் மயல் தீரும் - நாள்தோறும் (உங்களிருவர்க்கும் இடையீடுகளினால் உண்டாகும்) மயக்கமும் (இவளை நீர் உடன்கொண்டுசென்றால்) நீங்கிவிடும்; (ஆதலால்),—நீரில் நிறை - நீர்வளத்தால் நீருகிலே முளைத்து நிறைந்துள்ள, முருத்தின் செருந்து - வெண்மையான அடிக்குருத்துக்களையுடைய செருந்தி

http://acharya.org

யென்றுங் கோரைகளின், அயலே - அருகிலே (யுள்ள), கரும்பின் - கரும்புகளின், குருந்தில் - குருந்துக்களிலே, முயல் - முயற்கூடெனப்படுகிற சந்திரமண்டலம்போல, பிரசம் வைக்கும் - தேன் கூடு கட்டப்பெற்ற, குருகூர் - (நமது) திருக்குருகூர்க்கு, சென்று கூடுமின் - (இவளை அழைத்துக்கொண்டு) போய்ச் சேர்வீராக;

அகப்பொருளிலக்கணநெறிகளுள் ஒன்றான 'உடன்போக்கின் இயல்பு' கீழ் 20,67 - ஆஞ் செய்யுள்களின் உரையிற் சிறிதுகூறப்பட்டது. இயற்கைப்புணர்ச்சி இடந்தலைப்பாடு பாங்கற்கூட்டம் பாங்கியிற்கூட்டம் என்பவற்றாற் களவுநெறியில் தலைமகனோடு கலந்த தலைமகளை நோக்கி, தோழி, 'இங்குப் பழிபரவுதலால், இனி இக்களவொழுக்கம் ஆகாது: மற்றும், இவளைப் பலர் மணம்பேசுகின்றாராதலின், இவட்குப் பரிசமாக இவளது தந்தை தாயரிடம் கொடுக்கவேண்டிய அருங்கலம்முதலிய பொருள்களை நீ விரைவிற்கொடுத்து முற்பட்டு இவளை மணம்புரிந்துகொள்ளவேண்டும்; அதற்கு இப்பொழுது சௌகரியப்படாதாயின், இவளை உடன்கொண்டு உன்னூர்க்குச்சென்று, இடையூறின்றி இவளோடு கூடி வாழ்வாய்' என்று சொல்லித் தலைவனை உடன்போக்குக்குஉடன்படுத்துதல், இச்செய்யுளிற்குறித்த துறைப்பொருள்; இது 'தனர் வறிந்துரைத்தல்' எனவும், 'பாங்கி தலைவற்கு உடன் போக்கு உணர்த்துதல்' எனவுங் கூறப்படும். இதன் மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - உடன்போக்குணர்த்தல்.

இந்தக் களவுப்போக்கு எட்டுவகைவிவாகங்களுட் காந்தர்வ விவாகத்துக்குஉரிய முறைமை யாதலின், இது தக்கதேயாமென்றும், இது தகாதோவென்று ஒன்றும் ஆலோசிக்க வேண்டுவதில்லையென்றுங் கூறுவாள், 'இதுவும் கலைமறையோர்திருத்திற்று ஒருமணம்' என்றாள்.

(இவ்விவாகர், பின்பு தந்தைதாயர்முதலிய பெரியோர்களால் அங்கீகரிக்கப்படுமென்க; "காந்தர்வமென்னும் விவாகத்தாற் பல இராசவிருடி கன்னிகைகள் மணஞ்செய்யப்பட்டனராகவும், அவர்கள் தந்தைதாயரால் ஆமோதிக்கப்பட்டனராகவுங் கேள்விக்கு வருகிறார்கள்" என்ற வடமொழிச் சாகுந்தலநாடகமும், "காந்தர்ப்பமென்பதுண்டாற் காதலிற்கலந்தசிந்தை, மாந்தர்க்கும் மடந்தைமார்க்கும் மறுகளேவகுத்தகூட்டம், எந்தப் பொற்றொளிறு யிந்திரையைந்தபி னெனக்குமுந்த, வேந்தர்க்கும் விரும்பிற்றாகும்" என்ற கம்பராமாயணமுங் காண்க.) தந்தைதமர்களின் உடன்பாடு காந்தர்வவிவாகத்துக்கு வேண்டுவதில்லையென்றும், காதலிருவர் கருத்து ஒருமித்துத் தம்மிற்சேர்தலே அதனிலக்கணமாதலால் அங்ஙனஞ் சேர்ந்தவிடத்துப் பெரியோர் சம்மதித்துக் கொண்டாடுவார்களென்றும் உணர்த்தியவாறு. சுபத்திரை விஷயமாகக் கண்ணன் அருச்சுனனை நோக்கி "அடிகள் திருவுளத்தெண்ணமெய்ம்மறுேர்கள் நீரிவிஷையலர்படிக்க திவருமற்,கடியயர்வுற்றும் பதிகொண்டாடக வென்றுங் காவலர்க்குக் கடனென்றுங் கபிலக் கூறி" னாற்போல, இப்பாங்கியும் தலைவனுக்குக் கூறின

ளென்க. கந்தர்வ வழக்க மெனப்படுகிற களவொழுக்கத்தின் பகுதிகளுள் உடன்போக்கும் ஒன்றாதலுணர்க. "கொடுப்போரின்றியுங் கரணமுண்டே, புணர்ந்துடன்போகிய காலையான" என்பது தொல்காப்பியம். சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட எட்டுவகைவிவாகங்களாவன - பிராம்மம், ப்ராஜாபத்தியம், ஆர்ஷம், தைவம், காந்தர்வம், ஆஸுரம், ராக்ஷஸம், பைசாசம் என இவை. இவற்றுள், பிராம்மமாவது - ஒத்தகோத்திரத்தானும் உரியகால மளவும் பிரமசரியவிரதம் அநுட்டித்தவனை அழைத்து உபசரித்துக் கன்னிகையை அலங்கரித்து அவனுக்குத் தானமாகக் கொடுப்பது; இதற்கு 'அறநிலை' என்றும் பெயர். ப்ராஜாபத்தியமாவது - மகட்கோடற்குஉரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசத்து இரட்டி தம்மகட்குச்சேர்த்து அவனைக் கொடுப்பது; இதற்கு 'ஒப்பு' என்றும் பெயர். 'மைத்துனகோத்திரத்தான் மகள் வேண்டிச் சென்றால் மறாது மனமொத்துக் கொடுப்பது' என்றும், 'ஒப்பவிவர்களிருவரும் ப்ரஜோத்பாதநாதிரூபமான தர்மங்களை அநுஷ்டிக்கக் கடவர் என்று வாக்காலே அறுதியிட்டுச்சொல்லி அங்கீகாரத்தையும் தானே அநுஷ்டித்துக் கந்யகையை அலங்கரித்துக்கொடுத்தல்' என்றும் இதற்கு இலக்கணங் கூறுதலு முண்டு. ஆர்ஷமாவது - பொற்கோட்டுப்பொற்குளம்பினவாக அலங்கரிக்கப்பட்ட பசு எருதுகளினிடையே கன்னிகையை அலங்கரித்து நிறுத்தி 'நீரும் இவைபோற் பொலிவுற்று வாழ்விர்' என்றுசொல்லி அவற்றுடன் கன்னிகையைத் தக்கவொருவனுக்குக் கொடுப்பது; இதற்கு 'பொருள்கோள்' என்றும் பெயர். தைவமாவது - யாகத்தில் ருத்விக்காயிருந்து அதனைநடத்திவைத்தவரில் ஒருவனுக்கு அந்த யாகாக்நியின்முன்னிலையிலே கன்னிகையை அலங்கரித்துத் தக்ஷிணையாகக் கொடுத்தல்; இது, 'தெய்வம்' எனப்படும். காந்தர்வமாவது - கந்தர்வ குமாரரும் கன்னியரும் நல்வினைப் பயனால் தனியிடத்துச் சந்தித்து ஒருவரையொருவர் காதலித்துப் பிறர்கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றி இயைதல்போல, உருவுந் திருவுங் குலனுங் குணனும் அன்பும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமையுடையராய்த் தலைவனும் தலைமகளும் பிறர்கொடுப்பவும் அடுப்பவுமின்றித் தாமே நல்வினைவசத்தால் வேட்கைமிகுதியாற் கூடுகை; இதற்கு 'யாழோர்கூட்டம்' என்றும் பெயர். ஆசுரமாவது - வரன் தானே கன்னிகைக்கு ஆபரணம் பூட்டி இயைந்தவளவு தந்தைதன்னையர்க்கும் பொருள்கொடுத்து மணஞ்செய்து கொள்ளுதல்; இதற்கு 'அரும்பொருள்வினை' என்றும் பெயர். 'கொல்லேறுதழுவியவன் இவளைப்பெறுவன், வில்வளைத்து நாணேற்றியவன் இவளைப்பெறுவன், இயந்திரப்பொறியிலக்கை யெய்தவன் இவளைப்பெறுவன், சுயம்வரத்தில் மாலை சூட்டப்பட்டவனிவளைப்பெறுவன்' என இவ்வாறு தந்தைதன்னையர் சொல்ல அங்ஙனம் ஒருவன் செய்துநிறைவேற்றி மணம்புரிந்து கொள்ளுதலும் இதன் இலக்கணமாம். ராக்ஷஸமாவது - உறவினரை உபேக்ஷித்து தலைவியின் காதலையும் எதிர்பாராது அவளை வலிந்திற் கைக்கொள்வது; இது, 'இராக்கதம்' எனப்படும். பைசாசமாவது - தன்னினும் மூத்தவளையாவது மதுபானத்தால் மயங்கியவளையாவது துயின்றவளையாவது இரகசியத்திற்கூடுகையும், இழிந்தவளை மணஞ்செய்

http://acharya.org

தலும், ஆடைமாறுதலும் பிறவுமாம்: இதற்கு 'பேய்நிலை' என்றும் பெயர். மற்றும் இவ்விவாகங்களின் இலக்கணவிரிவை, ஸ்மிருதிகளெனப்படுகிற வடமொழித் தர்மசாஸ்திரங்கள் முதலிய பரந்த நூல்களுட் கண்டுகொள்க. கலை மறையோர் - கலைஞானத்திற் கைதேர்ந்த அந்தணர். மறையோர் - வேதியர், வைதிகர். இந்த எண்வகை மணமும் வேதத்திற் கூறப்பட்டு வேதவிதிப்படி அநுஷ்டிக்கும் ஆன்றோரால் அங்கீகரிக்கப்பெற்றனவுமாமென்பாள், 'கலைமறையோர் திருத்திற்று' என்றாள். "அறநிலை ஒப்பே பொருள்கோள் தெய்வம், யாழோர்கூட்டம் அரும் பொருள்வினையே, இராக்கதம் பேய்நிலை யென்று கூறிய, மறையோர் மன்றலெட்டிவை அவற்றுள், துறையமைநல்யாழ்ப் புலமையோர்புணர்ப்புப், பொருண்மை யென்மனார் புலமையோரே," "அன்பினைந்திணைக் களவெனப்படுவது, அந்தணருமறை மன்றலெட்டினுட், கந்தருவ வழக்க மென்மனார் புலவர்," "மறையோர்தேஎத்து மன்றலெட்டனுள், துறையமைநல்யாழ்த் துணைமையோரியல்பே," "அதிர்ப்பில் பைம்பூணும் ஆடவரும் தம்முள், எதிர்ப்பட்டுக் கண்டியைதலென்ப—கதிர்ப்பொன்யாழ், முந்திருவர் கண்ட முனிவறு தன் காட்சிக், கந்திருவர் கொண்ட கலப்பு" என்றவை இங்கு அறியத்தக்கன.

இனி, 'இதுவும் கலைமறையோர் திருத்திற்றொருமணம்'-இதுவோ இன்பக்கலைகளையுணர்ந்த அந்தணர்களாற் சிறப்பித்துக் கூறப்படுகிற ஒப்பற்ற மணம்என்றுங் கொள்ளலாம். அன்பு குணம் கல்வி உரு திரு முதலியவற்றிற் சிறந்ததலைவன்தலைவியர் அநுட்டிக்கும் இந்தமணம் இன்பச்சுவைமயமாய்க் கற்புக்கும் முதலாகையாற் சிறப்பிதென்று பலர் கொண்டாடிப் பேசுதலால், இங்ஙனங் கூறப்பட்ட தென்க. களவொழுக்கத்தில் நாள்தோறும் நேர்கிற பல இடையீடுகளும் அவற்றாலாகும் மதிமயக்கமும் இனி இல்லையாக இடையூறின்றிக்கூடிவாழலா மென்பாள், 'தீரும்மனமயல்' என்றாள். மயல் - வியாமோகம். ஏகும், கூடுமின் - ஏவற்பன்மைகள்; தலைவனைத் தோழி உயர்த்திக் கூறுதலால் வந்தன. 'ஏகும்' என்பதைப் பெயரெச்சமாகக்கொண்டு 'இது' என்பதனோடு இயைத்தலும் ஒன்று. 'குருகூர் சென்று கூடுமின்' என்றது-நீவிரிருவரும் சௌக்கியமாகத் திருக்குருகூர்க்குப் போய்ச் சேர்ந்து கூடிவாழ்வீராக என்று தோழி தலைவியையும் உளப்படுத்தித் தலைவனை வாழ்த்தியதாகவும் பொருள்படும். கயல் நீரைப் பிரிந்து வாழாதவாறுபோல இவள் நின்னைப்பிரிந்துவாழாளாதலால், நீ உடன்கொண்டு போகாயாகில் இறந்துபடுவாள்: அங்ஙனமாகாதபடி இவள்பக்கல் அருள்வைத்து இவளை உடன்கொண்டு போதல்வேண்டும்' என்று இறந்துபாடு உரைத்து உடன்போக்கு வற்புறுத்துதல் தோன்ற 'கருத்திற் கருணைவைத்து ஏகும்' என்றாள், 'இவளிடத்து என்றும் நின் அருள் திரியாமற் பாதுகாப்பாய்' என்று ஓம்படுத்து உரைத்தலும் 'நீவிர் இருவிரோடுசென்று நும்பதியிடைச் சேர்விராமின்' என்று வாழ்த்துக் கூறலும் தோன்ற 'சென்று கூடுமின்' என்றுங் கூறினளென்க.

http://acharya.org

முருந்து - வெண்மையான அடிக்குருத்து; "முருந்தே முதனிற் செறிவெண் குருத்தே" என்றார் திவாகரத்திலும், பிங்கலந்தையிலும். அது 'முருத்து' என மென்றொடர் வன்றொடராயிற்று; இன்-சாரியை. செருந்து எனினும், செருந்தி எனினும் ஒக்கும். மதுரைக் காஞ்சியில் "கனிறுமாய் செருந்தியோடு கண்பமன் றார்தர" (172) என்றவிடத்து, நச்சினார்க்கினியர், 'செருந்தி' என்பதற்கு - 'வாட்கோரை' என்றும், 'கெட்டிக்கோரையுமாம்' என்றும் பொருளெழுதியிருக்கின்றனர். சந்திரனிடத்துள்ள களங்கத்தை முயலென்ப வாதலால், சந்திரன் 'முயற்கூடு' என்று ஒரு பெயர் பெறும்; முயலை அகத்துக்கொண்டதொரு கூடு போன்றதென்க: ("உடுவேந்தன் பிறை முயற்கூடு பசுங்கதிர், சந்திரன் திங்கள் சோமன்தன் பெயர்" என்ற பிங்கலந்தையையும். "சிதைவிலா முயலின்கூடு பசுங்கதிர்த்தேவென் றெல்லாம், புதியசந்திரன்" என்ற சூடாமணிநிகண்டையுங் காண்க.) தேனிறாலுக்குச் சந்திரன் வடிவில் உவமை; "கொம்பினேறு வாங்க நிமிர் குஞ்சரக்கை **அம்புலிமேல்**, வெம்பியெழுங் கோளரவாம் வேங்கடமே" என்றார் பிறரும். நமதுஊரில் நீர்வளமுள்ள நிலத்திலே செழித்துவளர்கிற கோரையைச் சார்ந்து சிறக்கிற கரும்பின் குருத்தில் தேனடைவைப்பதுபோல நீவிர் உயர்ந்த இக்குடும்பத்திலே என்னினுஞ்சிறந்து விளங்குகிற தலைவிபக்கல் தலையளி செய்யக்கடவீர் என உள்ளுறையுவமங் காண்க. நீர்வளமுள்ள நிலத்தை உயர்ந்த குடும்பமாகவும், அதிற்செழித்து வளர்கிற செருந்தியை அக்குடும்பத்தைச் சார்ந்துசிறக்கிற தோழியாகவும், செருந்தியின் அயலிலே சிறந்துவிளங்குகிற கரும்பைத் தோழியிற்சிறந்த தலைவியாகவும், தலைவிபக்கல் தலைவன்வைக்குந் தலையளியைத் தேனீவைக்குந் தேனிறாலாகவுங் கொள்க.

இனி, செருந்து - செருந்திமரம் என்றுவைத்து, அயல் எய் இவளோடு என்றுபிரித்து, நீர்வளத்தால் நிறைந்த முருந்துகளையுடைய செருந்திமரத்தின் அருகிலே பொருந்திய இவளுடனே யென்று பொருள்கொண்டு, 'முன்பு இரவுக்குறியில் வந்து இவளை எதிர்ப்பட்ட இடமாகிய செருந்திமரத்தின்கீழே வந்தாகில்: இன்றைநள்ளிரவில் இவளை அங்குக்கொண்டு சேர்ப்பேன்; இனிது அழைத்துக்கொண்டு செல்லலாம்' என்று குறியிடங்கூறல் குறிப்பால் நிகழ இந்த அடைமொழியைத் தலைவிக்குக்கொடுத்தனனென்னலுமாம்; முருந்து-கொழுந்து, அல்லது அரும்பு: இலக்கணை.

திருத்திற்று-திருந்திற்று என்பதன் பிறவினை. இங்கே, முயல் முயற்கூட்டுக்கும், கோல்தேனையுணர்த்தும் 'பிரசம்' என்பது - தேன்கூட்டுக்கும் தானியாகுபெயர்.

கம்பநாடர்க்குத் தமது நிரந்தராநுபவத்தைத் தராமல் இடையிட்டுக் காட்சிதந்துநின்ற நம்மாழ்வாரை நோக்கி, கம்பநாடரது அன்பர்கள், 'இனிப்பிரிவுத்துயரில்லாது நிரந்தராநுபவங்கிடைக்குமாறு திருவுள்ளத்திற் பூரணகிருபைவைத்து இவரைத் தேவரீர் திருநாட்டுக்கு உடன்கொண்டு செல்வீராக' என்று வேண்டுதல், இதற்கு உள்ளுறைபொருள். ஜீவாத்மாவைப் பரமாத்மா தன்பக்

http://acharya.org

கல் சேர்த்துக்கொள்ளுதலை வேதசாஸ்திரங்களில் வல்ல வைதிகரான ஆன்றோர் ஒருவிவாகமென்பராதலால், 'இதுவும் கலைமறையோர் திருத்திற்று ஒருமணம்' எனப்பட்டது; (இதன் விவரம், பிற்காலத்தில் வேதாந்தி நஞ்சீயர் தாம் பட்டர் நல்லருளால் அறிந்து அருளிச்செய்த 'ஆத்மவிவாஹம்' என்ற ரகஸ்யக்கிரந்தத்திற் பரக்கக்காணலாம்). "நானடிமைகொள்ள விடாய்நானுனேன் எம்பெருமான், தானடிமைகொள்ளவிடாய்த்தானானான் - ஆனதற்பின், வெள்ளக்குளத்தே விடாய் இருவரும் தணிந்தோம், உள்ளக்குளத்தேனையொத்து" என்றபடி, பரமாத்மாவைச் சேர்தலில் ஆசையும் சேராததில் வருத்தமும் விவேகியான ஜீவனுக்கு உண்டாதல்போல, ஜீவாத்மா தன்பக்கல் வந்துசேராததில் வருத்தமும் அதனைச்சேர்த்துக்கொள்ளுதலில் ஆசையும் பரமகாருணிகனான பகவானுக்கும் உண்டாதலால், இருவர்க்குமாகப் பொதுப்பட 'நீரும் நினைமயல்' எனப்பட்டது. நீர்மையால் நிறைந்த ஞானக்கொழுந்தையுடைய நித்தியமுக்தர்களினிடையே ஸர்வாஸனை எம்பெருமான் பூர்ணசந்திரன்போன்று இனிது வீற்றிருக்குந் தேசமென்பது, 'நீரில் நிறைமுருத்திற் செருந்தயலே மூயற்கரும்பின் குருத்திற்பிரசம்வைக்குங் குருகூர்' என்பதன் உள்ளுறைபொருள். ஸர்வேச்வரனைத் திருமங்கையாழ்வார் "கரும்பினிடைத்தேறல்" என்றும், "மாமதி" என்றுங் கூறியது, இங்கு நோக்கத்தக்கது. பிறவுங் கண்டுகொள்க. (85)

86. *கூட்டங்கடோறுங்குருகைப்பிரான்குணங்கூறுமன்ப*
ரீட்டங்கடோறுமிருக்கப்பெற்றேமிருந்தெம்முடைய
நாட்டங்கடோறும்புனல்வந்துநாலப்பெற்றேமினிமேல்
வீட்டெங்கடோழர்க்கென்றேபெரும்போகம்விளைகின்றதே.

(இ - ள்.) கூட்டங்கள் தோறும் - தாம் கூடும்பொழுதெல்லாம், குருகைப்பிரான் குணம் கூறும் - திருக்குருகூரிலவதரித்த உபகாரகரான நம்மாழ்வாருடைய திவ்யகுணங்களைச் சொல்லிப் புகழ்கிற, அன்பர் - அடியார்களுடைய, ஈட்டங்கள் தோறும் - கூட்டங்களிலெல்லாம், இருக்க பெற்றேம் - கூடியிருக்கப்பெற்றோம்; இருந்து - அங்ஙனங் கூடியிருந்து, எம்முடைய நாட்டங்கள் தோறும் புனல் வந்து நால பெற்றேம் - (அன்புமிகுதியால்) எங்கள் இரண்டு கண்களிலும் ஆனந்தக்கண்ணீர் பெருகியொழியப் பெற்றோம்; இனிமேல் - நாங்கள் இங்ஙனம் ஆனபின்பு,— வீடு - பரமபதத்தில், எங்கள் தோழர்க்கு என்றே பெரும் போகம் விளைகின்றது - எங்களைச் சார்ந்தவர்கட்காகவே பேரின்பநலம் நிகழாநின்றது; (எ - று.)

தாம் கூடுமிடத்தெல்லாம் நம்மாழ்வாருடைய சமம் தமம் முதலிய திருக்கல்யாணகுணங்களைக் கொண்டாடித் துதிக்கிற அடியார்களுடைய குழாங்களிலெல்லாங் கூடியிருக்கவும், அங்கு இருந்து பக்திமிகுதியா லனுபவிக்கும் ஆனந்தாதிசயத்தாற் கண்ணீர் பெருகவும் பெற்றோம்; ஆதலால், இனி எங்கட்கேயன்றி எங்களைச் சார்ந்தவர்க்கும் பரமபதத்திற் பேரின்பநலம் வாய்ப்பது திண்ணமென்பதாம். 'வீட்டெங்கள் தோழர்க்கென்றே பெரும்

http://acharya.org

போகம் விளைகின்றதே' என்பதை, "தமரங்களைவர்க்கு மெந்ஞான்று நரகில்லையே" என்றாற்போலக் கொள்க. (ததிபாண்டனுக்காக அவனுக்குவேண்டிய இருபத்தெட்டுமனையிலுள்ளார்க்கும் அவனது தயிர்த்தாழிக்கும், கண்டாகர்ணனுக்காக அவன் தம்பியான நந்தகனுக்கும் பரமபதம் கிடைத்தமை காண்க.) "வாய்க்குங் குருகைத் திருவீதி யெச்சிலைவாரியுண்ட, நாய்க்கும் பரமபதமளித்தார்" ஆழ்வார் ஆதலால், அவர்திறத்தில் இங்ஙனஞ் சொல்லத்தகும். 'இவர்கள் தோழர்க்கென்றே வீட்டுலகத்திற் பெரும்போகம் விளைகின்றது' எனவே, இவர்கட்கு அங்குப் பெரும்போகம் விளைதல் சொல்லவேண்டாதாயிற்று. அருத்தாபத்தியாற் பெறப்படுதலின், இவர்கள் தாங்கள் "விண்ணுளாரிலுஞ் சீரியர்" என்பது தொனிக்கின்றதென்றுங் கொள்ளலாம். 'பெற்றேம்', 'எங்கள்' என்ற பன்மை, மற்றும் பல அடியார்களையும் உளப்படுத்தியது.

விடு 'வீட்டு' என நெடிற்றொடர்க்குற்றுகரம் டகரவொற்று இரட்டிற்று. (86)

[பகற்குறியில் தலைமகனுடன் தலைமகளைக் கூட்டுவித்த தோழி, பின்பு தலைவன் சிறைப்புறமாக அவன் செவிப்படுமாறு தினையொடு வெறுத்து வரைவுகடாதல்.]

87. *விளையாதொழியமருந்துமுண்டேயெம்வினைதினையின்*
கிளையாக்கொரவிளைகின்றதாற்கிளையாம்பிறவித்
தளையாசழியத்தடுத்துத்தென்பாலைவழிதடுத்துக்
களையாசறத்தடுத்தாண்டான்குருகையிற்காப்புனமே.

(இ - ள்.) கிளை ஆம் - மேன்மேற்கிளைத்து வளருந்தன்மையதான, பிறவி - பிறப்புக்களினுலாகிற, தளை - பந்தத்தை, ஆசு அழிய - விரைவில் அழியும்படி, தடுத்து - போக்கி, தென் பாலை வழி தடுத்து - தென் திசையிலுள்ள பாலைநிலவழியையும் தவிர்த்து, களை - (விலக்களாகிய) களைகளை, ஆசு அற தடுத்து - முற்றும் அழியும்படி களைந்து, ஆண்டான் - (உயிர்களை) ஆட்கொண்டருளியவராகிய நம்மாழ்வாருடைய, குருகையின் - திருக்குருகூரைச் சார்ந்த, கா புனமே - (எம்மாற்) பாதுகாக்கப்படுதலையுடைய தினைக்கொல்லையே!—எம் வினை - எமது தீவினையே, தினையின் கிளையா - தினைப்பயிர்களாக முளைத்து வளர்ந்து, கொர விளைகின்றது - நன்றாகக் கதிர்முற்றிப் போகின்றது; விளையாதொழிய - (இவ்வாறு) முற்றுமற் கதிர்பறிந்தபடியே யிருக்கும்படி செய்தற்கு, மருந்தும் உண்டே - (ஏதேனும்) மருந்தும் உளதோ? (சொல்வாயாக என்றபடி); (எ-று.)—ஆல் - சற்றசை; இரக்கமுமாம்.

இயற்கைப்புணர்ச்சியும் பாங்கற்கூட்டமும் பெற்றபின்பும் களவொழுக்கநெறியிலேயே நின்ற தலைவன் தலைவியின் காதற்பாங்கியை உணர்ந்து அவளை அநுசரித்துத் தன்குறைகூறிஇரப்ப, அவன்கருத்துக்கு அரிதின் இசைந்த அப்பாங்கி, அத்தலைமகனுக்கு

http://acharya.org

ஒருகுறியிடங் கூறி, தாம் தினைப்புனங்காப்பதாகச் சொல்லி மனையிலுள்ளாரிடம் விடைபெற்று அந்த வியாஜத்தால் தலைமகளை அழைத்துவந்து குறியிடத்திற்கொண்டுசேர்த்து, அங்குத் தலைமகன் வந்து சந்தித்துத் தலைமகளுடன் சேருமாறு செய்விக்க, அத்தலைமகன் பின்னரும் அக்களவுநெறியையே வேண்டி நின்றானாக, அவனுக்கு அத்தோழி, 'இனி இவ்வாறு ஒழுகுவது தகுதியன்று' என்றும், 'விரைவில் இவளை வெளிப்படையாக மணஞ்செய்து கொள்ளுதலே தகுதி' என்றும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் எதிரில் நின்று பேசியும் முன்னிலைப் புறமொழியாகக்கூறியும் பலவாற்றான் உணர்த்துவள். இது, பாங்கியிற்கூட்டத்திலே பகற்குறியில் வரைவுகடாத லெனப் படும். (வரைவு வெளிப்படையாக மணஞ்செய்துகொள்ளுதல்: அதனை, கடாதல் - வற்புறுத்தி உணர்த்துதல்.)

மேற்கூறியவாறு பகற்குறிவந்து ஒழுகுகின்ற தலைமகன் வழக்கப்படி ஒருநாள் சிறைப்புறமாக (சிறைப்புறம் - வேலிக்கு வெளி)க்குறியிடத்து வந்து நிற்க, தோழி, அவன் செவிப்படுமாறு, 'இத்தினைக்காவல் வியாஜமாக நாம் உன்னைச் சந்திக்கலா மென்று நினைந்து இதுவரையிலும் தினைகாத்துவந்தோம்: அத்தினை நன்றாகக் கதிர்முற்றிவிட்டதாதலால், எம்மவர் தினை கொய்து விடுவார்கள்: யாம் இன்று ஊர்க்குப் போய்விடுவோம்: இனி எமக்குத் தினைப்புனங்காவல் இல்லையாதலால், நாம் இனி உன்னைச் சந்திக்க இயலாது' என்பது தோன்ற; தினைப்புனத்தைநோக்கி 'எம்மாற் பாதுகாக்கப்பட்டுவந்த புனமே! தலைவன்மேல்வைத்த விருப்பினால் தினைகாத்து மகிழ்ந்து நின்ற எங்கட்கு, அத்தினை எங்கள் தீவினையாய் வளர்ந்து விளைகின்றது; இதனை விளையாதபடி செய்ய வகையுண்டோ?" என்று தினையைவெறுத்துக்கூறுதல், இச்செய்யுளிற் குறிக்கப்பட்ட விஷயம். திருக்கோவையாரில் "பொருப்பன் விருப்பில், தினைவித்திக்காத்துச் சிறந்துநின்றே முக்குச்சென்று சென்று, வினைவித்திக் காத்து விளைவுண்டதாகி விளைந்ததுவே" என்றது, நோக்கத்தக்கது. இதன் மெய்ப்பாடு - அழுகை: பயன் - பகற்குறிவிலக்கல். தினைப்புனங்கூறியதனால், திணை குறிஞ்சியாயிற்று.

தினைவிதைத்தநாளில் இத்தினைக்காவல் வியாஜமாகத் தலைவனைச் சந்திக்கலாமென்று மகிழ்ந்து தினைக்காவற்கு உடன்பட்டன ராதலாலும், அத்தினை கதிர்முற்றிவிடவே கொய்து விடுவராதலின் இனிப் பாதுகாவலில்லையாகவே அவனைச்சந்திக்க இயலா தாதலாலும், தினைவிளைந்ததைத் தங்கள் தீவினையே இங்ஙனம் விளைந்ததாக வெறுத்துக் கூறுவாள், 'எம்வினை தினையின்விளையாக்கிளர விளைகின்றது' என்றாள். பரியச்செய்வதாகிய தீவினையே இங்ஙனம் தினைவடிவாய்வந்து விளைந்த தென்றா ளென்க. 'விளையாதொழிய மருந்தும் உண்டே' என்றது, இரக்கத் தாற் கூறிய வார்த்தை. கதிர்முற்றாதிருப்பின் இன்னமும் தாங்கள் அங்கே புனங்காத்திருக்கலா மென்பதுபற்றி, இங்ஙனங் கூறிய வாறு. 'எம்' என்ற பன்மை, தலைவியையும் உளப்படுத்தியது;

http://acharya.org

'என்' என்ற பாடத்துக்கு, தலைவியைத் தன்னில் அடக்கிக்கூறினனென்க. கா - காத்தல்; முதனிலைத் தொழிற்பெயர்; இங்கே செய்வினை செயப்பாட்டுவினைப் பொருளதாய், காக்கப்படுதலென்ற பொருளை யுணர்த்திற்று. காப் புனம் - காக்கப்படுதலையுடைய புனம் என இரண்டனுருபும் பயனுந்தொக்கதொகை. 'கார்ப் புனம்' என்ற பாடத்துக்கு - கரியபுனமென்க; (திருக்கோவையாரில் 'கார்ப்புனம்' என்றதற்கு - 'கரியபுனம்' என்றும், 'கார்காலத்துப்பொலியும் புனமெனினும் அமையும்' என்றும் உரையெழுதியிருக்கின்றனர் பேராசிரியர்.) ஏகாரம்பிரிக்கது, விளியுருபு.

தம்மைச் சார்ந்தவர்களை நரகவழிச் செல்லவேண்டாதபடி அவர்கள் கொடுவினைகளை முற்றத்தொலைத்து அவர்கட்கு இனிப் பிறப்புமில்லையாம்படி செய்தருள்கிற ஆழ்வார் என்பது, 'இளையாம்பிறவித்தளையாசழியத்தடுத்துத் தென்பாலை வழிதடுத்துக் களையாசறத்தடுத்தாண்டான்' என்பதன் பொருள். "வினையின் வந்தது வினைக்குவிளைவாயது" என்றபடி பிறப்புக் காரணகாரியத் தொடர்ச்சியாய் மேன்மேல் வளர்ந்துவருதலால், 'இளையாம் பிறவி' எனப்பட்டது. அது ஆன்மாவை விடுபெறுதபடி பந்தப்படுத்துதலால், 'பிறவித் தளை' என்றார். ஆசு-விரைவு: வடசொல். விரைவில் அழிதலாவது - ஆழ்வாரைச் சரணமடைந்ததாகிய இப்பிறப்போடு முடிதல். தென்பாலைவழி - தென்திசையிலுள்ளதான நரகத்துக்குச் செல்லும் வழி. அக்கொடுவழியிலுள்ள அஸிபத்ரவனம்போன்ற வெப்புநிலம் 'பாலைவழி' எனப்பட்டது; பிறரும் "கோடில்தீக்கூற்றங், தொடுத்தாறு செல்லுஞ் சுரம்" என்றார். பாலை - நீருந்நிழலும் அற்ற கொடுஞ்சுரம். பயிர்செழித்தற்குத் தடையாய் அதனுடன்தோன்றிவளர்கிற புல் பூண்டு முதலிய களைபோல, உயிர் உயர்கதிபெறுதற்குத் தடையாய் அதனுடன் அநாதியாய் அமைந்து வளர்ந்துவருகின்ற கருமமென்பார், அதனை 'களை' என்றார்; உவமையாகுபெயர். ஆசறத் தடுத்தல்-வேரோடறும்படி களைந்தெடுத்து மீண்டும் உண்டாகாதபடிசெய்தல்; இங்கு, சஞ்சிதகருமமுமுட்படத் தொலைத்தல். ஆண்டான் - (எம்மை) ஆண்டவனெனினுமாம். களை ஆசு அற என்று பிரித்து, பேற்றுக்கு விரோதியான குற்றந் தீர என்று உரைப்பாருமுளர்.

ஆழ்வாரது காட்சிக்கு இடையூறாக இப்பிரபஞ்சத்திலே பலவாறு தீவினை விளைதலைக்குறித்து இரக்கங்கொண்ட கம்பநாடரது அன்பர்கள் அப்பிரபஞ்சத்தை முன்னிலைப்படுத்தி இரங்கிக்கூறுதல், இதற்கு உள்ளுறை பொருள். 'ஆழ்வாரது திருவவதாரஸ்தலமான திருக்குருகூரை அகத்துக் கொண்டதும் அவரதுபாதுகாவலுக்கு உட்பட்டதுமான உலகமே!' என்று இந்த லீலாவிபூதியை விளித்து, 'எமதுஊழ்வினை தினைப்பயிர்போலக் கிளைத்து நன்றாகப்பலிக்கத்தொடங்குகின்றது: இதனை ஒழித்தற்கு உபாயமும் உண்டோ?' என்று வினையை வெறுத்துக்கூறினரென்க. இவ்வார்த்தை செவியுறப்பெற்ற ஆழ்வார் கம்பநாடரை

http://acharya.org

இந்த லீலாவிபூதியினின்று நித்யவிபூதியாகிய பரமபதத்துக்குக் கொண்டுசென்று நிரந்தராநுபவந் தந்தருளவேண்டு மென்பது, இவர்களுத்தேசம்; பிறவுங் கண்டுகொள்க. (87)

[தலைவன் வறும்புனங்கண்டு வருந்தல்.]

88\. புனம்பாழ்படுத்துப்புகழ்பாழ்படுத்ததல்லாற்புகுந்தென்
மனம்பாழ்படுத்தனைவாழ்தியன்றேவழுவாநரகத்
தினம்பாழ்படுத்தபிரான்சடகோபனின்றுக்கலியின்
சினம்பாழ்படுத்தநின்றான்குன்றுசூழ்கின்றசெந்தினையே.

(இ - ள்.) வழுவா- (தீவினைசெய்தவர்கட்கு அவ்வினைப்பயனை அநுபவிக்கச்செய்தலில்) தவறாத, நரகத்து இனம் - நரகவகைகளை, பாழ்படுத்த - பாழாக்கிய [தமது அன்பர்கட்கு இல்லாதபடி செய்த], பிரான்-உபகாரகரும், இன்று கலியின் சினம் பாழ்படுத்த நின்றான் - துன்பஞ்செய்வதான கலியுகபுருஷனது கோபத்தையும் பாழாக்குமாறு நிலைகொண்டருளியவருமாகிய, சடகோபன் - நம்மாழ்வாருடைய, குன்று - (பொதிய) மலையை, சூழ்கின்ற - சார்ந்துவிளைந்த, செம் தினையே - சிவந்த தினையே!— (நீ), புனம் பாழ்படுத்து-(கதிர்கொய்துவிட்டதனால்) கொல்லையைப் பாழாக்கி, புகழ் பாழ்படுத்தது அல்லால்- (நினது) கீர்த்தியையும் பாழாக்கியதல்லாமல், என் மனம் புகுந்து பாழ்படுத்தனை - என்மனத்தைச் சார்ந்து (அதனையும்) பாழாக்கினாய்; வாழ்தி அன்றே - (இவ்வளவு கொடுமைசெய்த நீ) வாழ்வாயன்றோ? (எ - று.)

கீழ்க்கூறியவாறு பகற்குறிக்கு உபயோகமாகத் தினைப்புனங் காத்து நின்ற தலைமகளும் தோழியும், அத்தினை கதிர்முற்றியிட்டதனாற் கொய்து விடப்பட்டமைபற்றிப் புனங்காவலின்றி அவ்விடத்தைவிட்டுத் தம்மனையிடஞ் சேர்ந்தனராக, வழக்கம்போல மறுநாள் தலைமகன் அக்குறியிடத்து வந்துநின்று தலைவியில்லாத தினைக்கொல்லையை நோக்கி வருந்தி அதன் பொலிவழிவுகூறுதல், இச்செய்யுளிற்குறிக்கப்பட்ட விஷயம். "மென்புனம் விடுத்து மெல்லியல்செல்ல, மின்பொலி வேலோன் மெலிவுற்றது" என இதன் இலக்கணங் காண்க. இத்துறையை 'வறும்புனம்நோக்கி மன்னவன் மறுகல்' என்றும், 'தலைவன் வறுங்களம்நாடி மறுகல்' என்றும் வழங்குதலுமுண்டு. இதன் மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றாமை நீங்குதல்.

(பகற்குறியிலே கீழ்ச்செய்யுள் - 'ஒருசார்பகற்குறி' யின்பாலும், இச்செய்யுள் - 'பகற்குறியிடையீட்' டின்பாலும் படும். 'ஒருசார்பகற்குறியாவது- ஒருகூற்றுப்பகற்குறி; அது யாதெனில், தலைவன் மற்றைநாள் தன்வேட்கை மிகுதியாற் பகற்குறியிடத்து வந்துநிற்க, தலைவியைப் பாங்கி குறியிடத்துச் செலுத்தாது மறுத்துக்கூற, தலைவன் வருந்திப்போத லாதலால், பகற்குறியாகாது ஒருசார்பகற்குறியாயிற்று' என்பர். 'இரங்கல் வன்புறை இற்செறிப்புணர்த்த லென்று, ஒருங்கு மூவகைத் தொருசார் பகற்குறி" என்று கூறப்பட்ட ஒருசார்பகற்குறியின்வகை

http://acharya.org

மூன்றனுள், கீழ்ச்செய்யுள் இற்செறிப்புணர்த்தற்கு உரியது. பகற்குறியிடையீடாவது-பகற்குறிக்கண்வந்த தலைமகன் அவளது சேர்க்கை பெறாது இடையீடுபட்டுப்போதல். "விலக்கல் சேறல் கலக்கமென்றாங்கு, இகப்பின்மூவகைத்தே பகற்குறியிடையீடு" எனப்பட்ட பகற்குறியிடையீட்டின்வகை மூன்றனுள் இச்செய்யுள் - கலக்கத்துக்கு உரியது என்று உணர்க.)

தினைக்கதிர் கொய்யப்பட்டு வெறுந்தட்டை மாத்திரமாய் நின்ற புனம் பொலிவிழத்தலாலும், அப்புனத்துக்கு அணியாக வழக்கமாய் அங்கு இருக்குந்தன் உயிர்த்தலைவி இன்று அங்கு இல்லாமை பற்றி அப்புனம் பொலிவிழந்ததாக இவனுக்குத்தோன்றுதலாலும், 'புனம்பாழ்படுத்து' என்றான்; ("மதுவினிற் கைப்பு வைத்தாலொத்தவாறற்றிவ்வான்புனமே," "கறுங்களவன்ன குழல்நீங்க மங்கலகாணிழக்க, வறுங்களமென்ன விருந்ததந்தோ இம்மணியிதணே" என்றார் பிறரும்.) இப்படி புனம் இருவகையாலும் பொலிவிழந்ததற்குக் காரணம் தினையின்முதிர்வே யாதலால், புனம்பாழ்படுத்தற்குத் தினை கருத்தாவாக்கப்பட்டது. 'புகழ்பாழ்படுத்தது' என்றது - தன்னைத் தலைவி சந்தித்தற்கு ஒரு வியாஜமாக இருந்து உபகரித்ததனாற் பெற்ற புகழை இழந்து விட்டது என்றபடி. தினையுடன் காதலியையுங் காணலாமென்ற மனத்துக் காதல்கொண்டு தான்வந்தவிடத்து, அத்தினை தானும் இன்றித் தலைவியையுங் கொண்டு சென்று தன்மனத்து ஆசையைப் பயன்பெறாது வீண்படச்செய்ததனால், 'புகுந்து என்மனம் பாழ்படுத்தனை' என்றான். புகுந்து - விளைந்த நீ இங்கு இராமல் மனையிடத்தே தலைவியுடன்சென்று புகுந்து எனினும் அமையும். 'வாழ்தியன்றே' என்றது, நினக்கு ஒருதீங்குஞ்செய்யாத எனக்கு இவ்வளவு பெருந்தீங்குசெய்த நீ இனிது வாழமாட்டாய் என்ற வைதற்குறிப்பு. 'அன்றே' என்பதை அசையென்றுகொண்டு, வாழ்தி - வாழ்வாய் என்று பொருள்கொண்டாலும், கருத்து இதுவே. இனி, நீ தலைவியுடன் மனையிலே இனிதுவாழ்வையன்றோ எனினுமாம்; தனக்கு நேர்ந்த தலைவியின் பிரிவு அதற்கு இல்லையென்று அழுக்காறுதோன்றக்கூறியது.

"எதிருநீர்வெறிகொள்வேலை மாநிலத்துயிர்களெல்லாம், வெறிகொள் பூந்துளவமாலைவிண்ணவர்கோனையேத்த, அறிவிலா மனிசரெல்லாம் அரங்கமென்றழைப்பராகில், பொறியில்வாழ் நரகமெல்லாம் புல்லெழுந்தொழியுமன்றே" என்றபடி எல்லாவுயிர்களும் எம்பெருமானுக்கு அடிமைப்பட்டு உயர்கதி சேர்தலேயன்றி நரகம்புகுதலில்லாதபடி ஆழ்வார் அனைவர்க்கும் நல்லுபதேசஞ் செய்தருளினராதலால், 'பாவிகட்குக்குவருத நரகவர்க்கத்தைப் பாழாக்கிய தலைவர்' எனப்பட்டார். கலி - கலியுகபுருஷன்; சனியின் அம்சமானவன். இந்தயுகத்துக்கு அதிதேவதையான இவன் பிராணிகட்குப்பாபசிந்தையைவிளைத்து அவை அதுசெய்து துயருறும்படி பண்ணுபவனாதலால், 'இன்னுக்கலி' எனப்பட்டான். அவனதுசினமாவது - உயிர்களைத்தீவழிச்செலுத்திவருத்தும் முயற்சி. ("கலியும்நரகமும்கைந்த நமனுக்குஇங்குயாதொன்று

http://acharya.org

மில்லை,கலியும்கெடும் கண்டுகொண்மின்", "திரியுங்கலியுகம்நீங்கித் தேவர்கள்தாமும்புகுந்து,பெரியகிதயுகம்பற்றிப்பேரின்பவெள்ளம் பெருக", "ஒக்கத்தொழுகிற்றிராகிற்கலியுகமொன்றுமில்லையே", "கலியுகமொன்றுமின்றிக்கே தன்னடியார்க்கு அருள்செய்யும், மலியுஞ்சுடரொளி மூர்த்தி மாயப்பிரான்கண்ணன்" என்றபடி.) பகவத்ஙுசிவிரோதியான கலியுகத்தன்மை போய்க் கிருதயுகத்தன் மையான வைஷ்ணவதர்மமே எங்கும் நடக்கும்படி ஆழ்வார் தமது உபதேசத்தால் உலகில் திருந்தாதார் தம்மையுந் திருத்தியருளின ராதலால், 'கலியின்சினம்பாழ்படுத்தபிரான்' என்றார்; கலிகால தோஷத்தைப் போக்கிவிட்டவரென்றபடி. இப்படி ஆழ்வார் இவ்வுலகத்தில் தாம் மனிதவுடம்புடன் வாழ்ந்திருந்தபோது செய் ததே யல்லாமல், பிற்காலத்திலும் விக்கிரகரூபத்தில் அர்ச்சாவ தாரமாக ஆவிர்ப்பவித்துத் தம்மைச் சார்ந்தவர்க்கு அருள்செய்து வருகிற இயல்பு தோன்ற, கலியின்சினம்பாழ்படுத்தி நின்றான் என்னாது 'கலியின்சினம் பாழ்படுத்தநின்றான்' என்றார். அவரது திருவவதாரம் முடிந்தாலும், அவரது உபதேசரூபமான திவ்யப் பிரபந்தங்கள் இவ்வுலகில் நிலைநின்று பலரைக் கலிதோஷத்தி னின்று மீட்டலும்,இங்ஙனங் கூறக்காரணமாம். ஆழ்வார் திருவவ தரித்த திருநாடாகிய பாண்டியநாட்டில் தலைமைபெற்ற மலை யாத லாலும், அவரது திருவவதாரஸ்தலமான திருக்குருகூரைச் சார்ந்து பெருகுகிற பொருநையாற்றுக்கு உற்பத்திஸ்தானமாதலாலும், 'சடகோபன்குன்று' என்றது, பொதியமலையெனக் கொள்ளப்பட் டது; முன் "பொதியந் தரு நதியங் குருகூரெந்தை" என்றதுங் காண்க. திணை - ஒருவகைத்தானியம். செந்திணை -செவ்விய திணையு மாம்.

கம்பநாடர் நம்மாழ்வாரிடத்திற்போலவே அவரடியாரான பாகவதர்கள் பக்கலிலும் ஆராதகாதல்கொண்டு அவர்களையும் தமக்குத்தலைவராகப் பாவித்து அடிமைபூண, அப்பாகவதர்களும் ஆழ்வார்போலவே கம்பநாடரிடத்து அன்புவைத்து அவருடன் கூடிக் குலாவிக்களித்துவருகிற காலத்திலே, த்ரிகுணாத்மகமான பிரபஞ்சமாதலால் தமோகுணம் அழிந்தபின்பும் தான் முற்றும் அழியாது சிறிது மிச்சப்பட்டு நின்ற ரஜோகுணகாரியமான ராகம் [அவா] தலையெடுத்துக் கம்பநாடரைத் தங்களோடு சேராதபடி சம்சார பாசபந்தத்துக்கு உள்ளாகித் தங்கள் சேர்க்கைக்கு இடை யூறுசெய்ய, அந்தராகத்தைப் பாகவதர்கள் பழித்து உரைத்தல், இதற்கு உள்ளுறைபொருள். இங்ஙனம், தலைவன்பேச்சாலே தமதுநிலைமையை வெளியிடுகின்றனர் கம்பநாடரென்க. 'எனக்கு இதுவேண்டும்' என்று ஒருபொருளினிடத்து முதலில் உண்டாகும் அவாவாகிய அந்த ராகமானது, செந்நிறகுணமுடையதெனப் படு கிற ரஜோகுணத்தின் காரியமாய்த் தானும் செந்நிறமுடைய தெனப்படுதலால், 'செந்திணை' எனப்பட்டது. திணை - மிக்க சிறு மைக்கு எடுத்துக்காட்டப்படுவதோர் அளவையாதலை, "திணைத் துணை நன்றி செயினும்," "திணையனைத்தே யாயினுஞ் செய்தநன் றுண்டால்" என்ற இடங்களிற் காண்க. ராகம் ஸூக்ஷ்மபதார்த்த மாதலாலும், இங்குச் சிறிதே சேடித்து நின்றதனாலும், தொடக்

http://acharya.org

கத்திற் சிறியதே யாதலாலும், அதனைத் தினையென்றல் சாலும். செம் தினையே-செந்நிறமான ராகமே! என்று விளி. அந்த ராகம், சுத்த ஸத்வமயராய் வைராக்கியம்மிக்க ஆழ்வாரது குணமென்னுங்குன்றின் அகத்துச் சாரமாட்டாது புறத்தேநிற்றல்தோன்ற, அதற்கு 'சடகோபன் குன்று சூழ்நின்ற' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. புனம் - போகஸ்தாநம்; இங்கே, பாகவதர்கள் தாங்களும் கம்பநாடருமாக "ஆராதமனக்காதல் தொண்டர் தங்கள்குழாங்குழுமித் திருப்புகழ்கள் பலவும்பாடி, ஆராத மனக் களிப்போடு" என்றபடி கூடிக்குலாவிக்களித்திருந்த இடம். 'அதனைப்பாழ்படுத்து' என்றது, அந்த ராகம் கம்பநாடரை அங்குச் சேரவொட்டாது இடையீடுபடுத்தலால். அந்த அவாவானது சுருங்கியிருந்த நிலையிலே பாகவத சகவாசத்துக்கு இடையூறாகாது முதிர்ந்து அகத்திற் சேர்ந்தவளவில் இடையூறுகின்றது பற்றி, 'புகழ்பாழ்படுத்தது' என்றனரென்க. மற்றவையும் இங்ஙனமே நுட்பமாக நோக்கிக்கொள்க. இப்பாசுரத்துக்கு ஸ்வாபதேசம் வேறுவகை கூறுவராயினும் பொருந்துமாற்றுன் உய்த்துணர்ந்து கொள்க. (88)

[பிரிவாற்றுத தலைவி, அன்றிலின் குரல்கேட்டு அயர்தல்.]

89. *இனையொன்றியகுற்றமற்றுணர்ந்தோர்மகிழின்றிறத்தின்*
மனையொன்றியகொடியாடுயின்று லுந்தன்வாயடங்கா
வினையொன்றியவன்றிலுக்கிடங்காட்டவிரிதலைய
பனையன்றியுமுளதோதமியேற்குப்பழம்பகையே.

(இ-ள்.) மனை ஒன்றிய கொடியாள் துயின்றாலும் - வீட்டின் அகத்தே பொருந்திய கொடியவளான தாய் (வாயடங்கித்) தூங்கினாலும், தன்வாய் அடங்கா - (தான் தூக்கமின்றித்) தன்வாய் திறந்து கத்துகிற, வினை ஒன்றிய அன்றிலுக்கு - கொடுமை பொருந்திய அன்றிற்பறவைக்கு, இடம் காட்ட - (தங்க) இடங் கொடுக்குமாறு, விரி தலைய - விரிந்த தலையையுடைய, பனை அன்றியும் - பனைமர மல்லாமலும்,—தமியேற்கு - (தலைவரைப் பிரிந்து) தனியளாயிருக்கிற எனக்கு,—இனை ஒன்றிய குற்றம் அற்று உணர்ந்தோர் மகிழின் திறத்தின் - இனையளவுகுற்றமுமில்லாமல் (மெய்ப்பொருளை) உணர்ந்தவரான தலைவரது மகிழமலர்மாலை விஷயமாகக்கொண்ட ஆசையினாலே, பழம் பகை உளதோ - பழமையானபகை (வேறொன்று) உளதோ? [இல்லையென்றபடி]! (எ - று.)

கீழ் "அன்றுதஅன்றிலையும் அன்றுவித்து" என்றபடி அன்றிற்பறவை இரவில் இணைபிரிந்துகத்துகிற குரல் காமோத்திபகமாய்ப் பிரிந்தாரைவருத்துமாதலால், தலைவனைப்பிரிந்து வருந்துகிறநிலையில் அக்குரல்கேட்டு ஆற்றுதவளான தலைவி, அவ்வன்றில் தங்குதற்கு இடமாகத் தன்மனைவாயிற் புறத்தே வளர்ந்துள்ள பனைமரத்தைத் தனக்குப்பகையெனக்கொண்டு பழித்து உரைத்தல், இச்செய்யுளிற் கூறப்பட்ட விஷயம். பிரிவாற்

http://acharya.org

ருததலைவியின் இரங்கல் வகைகளில் ஒன்று, இது. மெய்ப்பாடு - அழுகை. பயன் - அயர்வுயிர்த்தல்.

இப்படி இவள் வருந்துதற்குக் காரணம், தலைவனது சேர்க்கை இடையாவிடினும் அவன்தோளில்தரித்த மாலையேனுங் கிடைக்க வேண்டுமென்று தான்கொண்ட மிக்ககாதலே யாதலால், 'நினை யொன்றிய குற்றமற்றுணர்ந்தோர் மகிழின்நிறத்தின்' என்றாள்: (முன்னும் "குருகைப்பிரான் மகிழேயன்றி வேறில்லை" என்றாள்:) இதனை, 'பகைஉளதோ' என்பதனோடு கூட்டுக. "நினைத்துணை யாங் குற்றம்" என்றாற்போல, 'நினையொன்றியகுற்றம்' எனப் பட்டது; நினைபோன்ற குற்றம்: அதாவது - மிகச்சிறியகுற்றம் என்றபடி; ஒன்றிய - ஒத்தஎன உவமவாசகம்: "வேலொன்று கண்ணார்" என்றவிடத்துப்போல. இனி, நினையினளவு பொருந்திய குற்றமென்று பதப்பொருள் கூறினும் அமையும். உணர்வுக்குக் குற்றம் ஐயந்திரிபுகளாதலை "கற்ககசடற" என்றவிடத்துங் காண்க. சந்தேகவிபரீதங்கள் சிறிதுமின்றித் தத்துவங்களை உள்ளபடி அறிந்தவர் ஆழ்வார் என்பது, 'நினையொன்றிய குற்ற மற்றுணர்ந்தோர்' என்றதன் கருத்து.

'மனையொன்றியகொடியாள்' என்றது, செவிலித்தாயை. தனதுவேட்கைநோய்க்குஏற்ற பரிகாரஞ் செய்யாததுமன்றித் தன்னைக்குறித்து வெகுளிகொண்டு எதிரிலும் மறைவிலும் பலவாறுபுன்சொற்கூறிப் பழிதூற்றி வருத்துதலுஞ் செய்கின்றன ளென்பதுபற்றி, செவிலியைத் தலைவி 'கொடியாள்' என்று குறித்தாள்; "சொல்லிற் கொடிய நம்மன்னையைப் போல்பவர் சூழ்ந்திருக்கும், இல்லிற் கொடியகொல்லோ செல்லுநாட் டவ் விருஞ்சுரமே" என்ற தஞ்சைவாணன் கோவையையுங் காண்க: இங்ஙனம் அவளை வெறுத்துரைக்க வேண்டியிருத்தல் தோன்றவே, முன்னம் "அன்னையுடன் பின்றுதவண்ணமெல்லாம் பின்றவித்து" என்றதும்; "பூதனையாருயிர்கழித்தார்.........தூற்றும் அன்னை யை.........விடுத்தார் தோன்றிய மதியை என்சொல்வேனே...... ...பிறர்க்கு உபகாரமொன்றிலரே" என்று ஒருதலைவி இரங்குவதுங் காண்க. 'கொடியாள்' என்பது - கொடுமையென்னும் பண்பி னடியாய்ப் பிறந்த பெண்பாற்பெயர். இச்சொல் கொடிபோன்றவ ளென்று பொருள்பட்டு மாதென்றமாத்திரமாயும் நிற்கும். தலை மகளது களவொழுக்கத்தை அவளது வடிவுவேறுபாட்டினாலும் ஊரார்பழிதூற்றுதலாலும் வேறுசிலகுறிப்புக்களாலும் உணர்ந்த செவிலி அக்களவொழுக்கத்தைக்குறித்துக் காய்ந்து மனம்மாறு பட்டு மற்றும் அதுநிகழாதபடி குறிக்கொண்டுகாப்பவளாய்த் தலைவியை மனையகத்தேசெறித்து நள்ளிரவிலுமுட்படத் துயிலாது விழித்திருத்தல், 'கொடியாள் துயின்றாலும்' என்ப தனாற் பெறப்பட்டது; சிறைக்காவல்களுள் தாய்துஞ்சாமை முதலதாதலுங் காண்க. இச்சிறைக்காவல் வரைதற்குமுன்பு இரவுக்குறியிடையீடாகவும் ஒருவழித்தணத்தலிலும் வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிவிலும் நிகழுமென்று உணர்க. கொடி யாட்குக் கொடுத்த 'மனையொன்றிய' என்ற அடைமொழியினால்,

http://acharya.org

அன்றில் மனைப்புறத்தே நிலைகொள்ளாதிருக்கிற தென்பது தோன்றும். 'தன்வாய் அடங்கா' என்று அன்றிற்குக்கொடுத்த விசேஷணம், அச்செவியியும் வாயடங்காது இரைபவளென்பதைக் குறிப்பிக்கும்; ("ஓவலில் வாயன்னை ஞாளி இவ்வூர்கணுறங்கி னும்," "துன்னெனன் கடுங்குரல் வாயன்னை துஞ்சினும்," "வன்சொலன்னை துஞ்சாள்," "சின்றரற்றும், அன்னைக்கு மாரற்கு அயர்ந்தாள்" என்றார் பிறரும்.)

வினை - இங்கே, தீவினை; இனி, வாய்மூடாதுகத்துதலாகிய செயல் பொருந்திய என்று உரைப்பினுமாம்; (எனது) தீவினைப் பயனும் அமைந்த அன்றிலென்றலுமாம். அன்றில் பனைமரத்தில் வாழ்வது இயல்பாதலால், 'அன்றிலுக்கு இடங்காட்ட விரிதலைய பனை' எனப்பட்டது; ("முன்றில் தனிநின்ற பெண்ணைமேற் கிடக்கின்ற, அன்றிலின் கூட்டைப் பிரிக்க கிற்பவரார் கொலோ" எனப் பெரியாரும் பணித்தார்: "தனியே பறவாய் தகவேதுமிலாய், பனைமேலுறைவாய் பழிபூணுதியோ" என்றார் இராமாயணத்திலும்.) என்னைக் குரலால்வருத்துகிற அன்றிற்கு இடங்கொடுத்தற்காகவே செழித்துவளர்ந்துள்ளது இப்பனையென்று கீர்த்தித்தவாறு. 'விரிதலையபனை' என்றதனால், காட்சிக்கு அலங்கோலமாகத் தலைவிரிகோலமாயுள்ளது இதுவென்று பழித்ததும் தோன்றும். தமியேன் - துணைவனைப்பிரிந்துள்ள யான் என்றபடி. இப்பனை இங்ஙனம் என் எதிரிக்கு இடங்கொடுத்து உதவி எனக்கு எதிர்செய்யுமாறு இம்மையில் இதற்கும்எனக்கும் பகைமைக்காரணம் ஒன்றும் இல்லையாதலால், இது பூர்வஜன்மத்தில் ஏதேனும் நேர்ந்த விரோதத்தின் தொடர்பாதல்வேண்டுமென்பாள், 'பழம்பகை' என்றாள்.

கம்பநாடரது ஞானக்கண்ணுக்கு ஒரோசமயத்தில் இலக்கான நம்மாழ்வார் மறைந்தவளவிலே, அவரது நிரந்தரானுபவத்தை விரும்பிய கம்பநாடர், அப்பிரிவாற்றாமையாலும் தம்மைவருத்தக் கடவனவான லௌகிக பதார்த்தங்களைக் குறித்தும் அவற்றிற்கு ஆதாரமான இப்பிரபஞ்சத்தைக் குறித்தும் மிகவருந்தி வெறுத்துரைத்தல், இதற்கு உள்ளுறைபொருள். ('வாடை அன்றில் தென்றல் முதலான பாதகங்கள் [பாதகங்கள்] என்பது, ஸ்மாரகத்வேந அஸஹ்யங்களான லௌகிகபதார்த்தங்களை' என்பது, ஸ்வாபதேசவுரை.) தம்மைப்போலப் பிரிந்துவருந்துவாரது அரற்றொலியைக் கேட்குமிடத்து உய்யக்கடவரல்ல ரிவரென்பது; ஈற்றடியில் வெளியாம். பகவத் ஸ்வரூபரூபகுணவிபூதிகளை உள்ளபடியறிவாரில் தலைவரான ஆழ்வார் சூடிக்களைந்த மகிழமலர் மாலையை [அல்லது அவரது இனிமையை]ப் பெறுவதில் ஆதரத்தால் என்பது, முதலடியின் உட்கிடை. 'மனையிடத்துக்கொடியாள்' என்றது - தம்பக்கல் பரிவுடையரென்றும் ஞானிகளை. விரிதலைய பனை = பரந்த இடத்தையுடைய இப்பிரபஞ்சம். தன்னைச்சார்ந்த உயிர்கட்கெல்லாம் பொல்லாங்கையே மிகுதியாக விளைக்கின்ற இப்பிரபஞ்சம், தன்மேலேறுவார் கொடும்புண்படும்

http://acharya.org

படி மடற்கருக்குநிறைந்த பனைமரத்துக்கு உட்கிடையாகத் தரும். பிறவும், முன் கூறியவாற்றால் விளங்கும். (89)

90. பகையாய்வருகின்றமூன்றையும்வேரினெடும்பறித்து
வகையாய்வருவன யாவையுமாற்றியிவ்வையமுய்யத்
தொகையாயிரங்கவிசொன்னேன்பெயர்சொல்லச்சூழ்பனியின்
புகையாமிருள்பின்னையெந்நாட்கழியப்புகுகின்றதே.

(இ - ள்.) பகை ஆய் வருகின்ற மூன்றையும் வேரினெடும் பறித்து - உட்பகையாய் வருகின்ற (காமம் வெகுளி மயக்கம் என்னும்) முக்குற்றங்களையும் அடியோடு ஒழித்து, வகை ஆய் வருவன யாவையும் மாற்றி - (அக்குற்றங்களின்) கூறுபாடாய் விளைவனவான கருமங்களெல்லாவற்றையும் போக்கி [தமக்கும் தமது அடியார்க்கும் இல்லையாக்கி], இ வையம் உய்ய தொகை ஆயிரம் கவி சொன்னேன் - இந்நிலவுலகத்தார் உய்வு பெறும்படி (நூறுபதிகமாகத்) தொகுக்கப்பெற்ற (திருவாய்மொழி) ஆயிரம் பாசுரங்களை அருளிச்செய்தவராகிய நம்மாழ்வாரது, பெயர் - திரு நாமங்களை, சொல்ல—, (அதனால்), சூழ் பனியின் புகை ஆம் இருள் கழிய புகுகின்றது - நெருங்கிச் சூழ்கிற பனியும் புகையும் போல்வதான அஜ்ஞானவிருள் நீங்கப்போகின்ற காலம், பின்னை எந்நாள் - இனி எப்பொழுது வாய்க்குமோ? (எ - று.)

"குரோர் நாம ஸதா ஜபேத் [=குருவின் பெயரை எப்பொழுதும் ஜபிக்கவேண்டும்]" என்றபடி, மகோபகாரகரான பரமாசாரியராகிய நம்மாழ்வாரது திருநாமங்களை யான் இடையறாது உச்சரித்து, அதனால் அஜ்ஞாநாந்தகாரம்நீங்கி ஞானானந்தச் சுடர்பெற்று உய்வது எந்நாளோ? என்பதாம். இதுவரை பழுதே கழிந்த பலநாளும்போலவன்றி இனியாயினும் நற்பயன் பெறுங் காலம் வாய்க்கவேண்டுமே யென்று ஆதரங்கொண்டு கழிவிரக்கத்தோடு கூறிய வார்த்தை, இது.

காமம் - இப்பிரபஞ்ச விஷயங்களில் ஆசை. வெகுளி-கோபம். மயக்கம் - விபரீதவுணர்வு. இம்மூன்றும், உயிரை உய்வுபெறவொட்டாது கெடுத்தலால், 'முப்பகை' எனப்படும். எல்லாவினைகளும், இவற்றின்காரியமே யாதலால், 'வகையாய்வருவன' எனப்பட்டன. இங்கு 'வகை' என்பதை, "சுவையொளியூறோசைநாற்றமென்றைந்தின், வகை" என்றவிடத்துப்போலக் கொள்க. சஞ்சிதம் பிராரப்தம் ஆகாமியம் என்ற கருமவர்க்கங்களெல்லாம், 'வகையாய் வருவனயாவையும்' என்றதில் அடங்கும். ஆழ்வார், தாம் முப்பகையும் வினைத்தொடர்பும் சிறிதும் உடையராகாததோடு, தம்மைச்சார்ந்தவர்கட்கும் முப்பகையையும் வினையினைத்தையும் போக்கியருள்பவ ராதலின், 'பகையாய் வருகின்ற மூன்றையும் வேரினெடும்பறித்து வகையாய் வருவனயாவையும் மாற்றி இவ்வையமுய்யத் தொகையாயிரங்கவி சொன்னேன்' எனப்பட்டனர். பொருள்களை உள்ளபடி உணரவொட்டாது

http://acharya.org

செய்தவால், அஜ்ஞானம், இருளெனப்படும். அஜ்ஞானவிருளைப் போக்குபவனென்ற பொருள்பற்றியே 'குரு' என்ற பெயர் நிகழ்தலால், அக்குருவின்பெயர் சொன்னவளவிலே பேதைமை யிருள் கழியுமென்க. அக்குருவினது அருட்சுடரின் முன் இவ்விருள் எளிதில் நீங்குமென்பது தோன்ற, அதற்குப் பனியும் புகையும் உவமை கூறப்பட்டன.

ஆம் - உவமவுருபு; "வேதாவாம் வேங்கடம்" என்னு மிடத்துப் போல. மூன்று - எண்ணலளவையாகுபெயர். வையம் - இடவாகுபெயர்.

இச்செய்யுள், கம்பநாடர் தாமானதன்மையில் உரைத்தது; அன்றி, தலைவிநிலையை மேற்கொண்டு உரைத்ததென்றுல், பிரிவாற்றாத நிலையில் இரவுநீட்டித்ததாகத்தோன்ற அவ்விருட் பொழுதின் நெடுமைக்குத் தலைவி இரங்கி இங்ஙனங்கூறியதாகத் துறைப்போக்கு அமைத்தல் சாலும். தலைவன் பெயரை என்செவிப் படுமாறு எவரேனுஞ் சொல்வராயின் அதுகேட்டுச் சிறிது ஆறுத லடைவேன்; அங்ஙனம் இவ்விருட்பொழுது இனிதுகழியப் பெறு வேனே என்பது தாற்பரியம். உதயகாலத்தில் அனைவரும் துயி லெழும்போது 'ஆழ்வார் திருவடிகளே சரணம்' என்று தொடங்கி அவர் திருநாமங்களை உச்சரித்தல் இயல்பாதலால் அங்ஙனம் தலைவன்பெயர் சொல்லுமாறு இவ்விருள்கழிவது எப்பொழுதோ என்று இரங்கிக்கூறியதாகவுங் கொள்ளலாம். பகலில் இந்திரி யங்கள் பலவேறுவகைப்பட்ட பொருள்களை நாடுதல் கூடுமாத லால், ஒருவாறு பிரிவை ஆற்றியிருக்கலாம்; இரவில் அங்ஙனமன்றி எல்லாப்பொருளும் அடங்க இந்திரியங்களோடு மனம் பிரிந்த பொருளொன்றையே நாடுதலாலும், கலவிக்கு உரியகாலமாத லாலும், அதில் ஆற்றமாட்டாது வருந்தி இங்ஙனம் அவ்விருட் பொழுதின் கழிவை வேண்டுகின்றுளென்க. 'சூழ்பனியின் புகை யாம் இருள்' என்பதற்கு - சூழ்ந்தபனியாகிய புகையையுடைய தான இருள் என்று பதப்பொருள்கொண்டு, புகைபோலப் பனிபரந்துசூழப்பெற்ற இருள் என்று கருத்து உரைத்தலுமாம். ஆழ்வாரது நிரந்தரானுபவத்தைப் பெறாத நிலையிலே மோஹாந்த காரம் தலையெடுத்துக் காலவிளம்பம் பொறுக்கமாட்டாமையாற் காலம் நீட்டித்ததாகத் தோன்ற அதனால்வருந்துகிற கம்பநாடர் 'ஆழ்வாரது திருநாமமந்திரோச்சாரணபலத்தால் மோகாந்தகாரம் தணிவது எப்பொழுதோ?' என்று இரங்கிக்கூறும் வார்த்தை, இதற்கு உள்ளுறைபொருள். ('இருள் என்பது - அஜ்ஞாநத்தை, இரவு நெடுமையென்பது - விளம்பாக்ஷமத்வத்தை' என்பர் ஸ்வாப தேசம் வல்லார்.) ஆழ்வார் இவரது உட்பகைகளை யொழித்து இவரைத் தம்பக்கல் உடனேசேர்த்துக்கொள்ள வல்லராயிருக்க அதுசெய்யாது விளம்பித்தலால் இவர்க்கு இந்த இருள்தருமா ஞாலத்திலிருப்பு நெடுகித்தோற்றுகையாலே ஆற்றாமைமிறந்து அதுவிஞ்சுதலால் இவர் அத்தன்மையை வாய்விட்டுக்கூறி ஆற்றுகின்றனரென்க. (90)

http://acharya.org

[பிரிவாற்றாது வருந்துந் தலைவிநிலைகண்டு பாங்கி இரங்கல்.]

91. புகுகின்றதுவிருள்போகின்றதுவண்ணம்பூவைகண்ணீ
ருகுகின்றதென்றுயிரோய்கின்றதாலுலகேழுமுய்யத்
தொகுகின்றவாயிரஞ்சொன்னேன்குருகைச்சொல்லால்விளங்
தருகின்றனரல்லர்மேன்மேலுங்காதறருமவரே. [கத

(இ - ள்.) இருள் புகுகின்றது - இருட்டோ வந்து நிறைகின்றது; பூவை - கிளிபோன்றவளான இம்மங்கையினது, வண்ணம் - (உடம்பின்) நல்லநிறம், போகின்றது - நீங்குகின்றது; பூவை கண்ணீர் உகுகின்றது - (மற்றும்) இம்மங்கையின் கண்களிலிருந்து நீரும் பெருகுகின்றது, என்று - என்ற இக்காரணத்தால், உயிர் ஓய்கின்றது - (எனது) உயிர் சோர்வடைகின்றது; மேன்மேலும் காதல் தருமவர்-(இவளுக்கு இங்ஙனம்) ஆசைநோயை மேல்மேல் விளைப்பவரான, உலகு ஏழும் உய்ய தொகுகின்ற ஆயிரம் சொன்னேன்-ஏழுலகத்தாரும் உய்வுபெறும்படி (பதிகம் பதிகமாகச்) சேர்கின்ற (திருவாய்மொழி) ஆயிரம் பாசுரங்களை அருளிச்செய்தவராகிய தலைவர், குருகை சொல்லால் விளங்க தருகின்றனர் அல்லர் - (தாம் பிறந்ததலமான) திருக்குருகூர்க்கு உரிய கீர்த்தியால் விளங்கத் தக்கவரல்லர்; (எ - று.)

'குருகைச்சொல்லால் விளங்கத்தருகின்றனரல்லர்' என்றது-நல்லவரல்லர் என்றபடி. தாம்பிறந்த இடமான திருக்குருகூரென்னுந் திவ்வியதேசத்தில் வசிக்கின்ற பலவகைமனிதர்களும் நல்லவரென்பது விளங்க ஆழ்வார்தாமே "நல்லார் பலர்வாழ் குருகூர்ச் சடகோபன்" என்றும், "நல்லார்நவில் குருகூர்நகரான்" என்றுஞ் சொல்லியிருத்தலை மேற்கொண்டு, நல்லவரென்னும் பொருளில் 'குருகைச்சொல்லால் விளங்கத் தருகின்றனர்' எனப்பட்டது; இது பிறிதினவிற்சியணியின் பாற்படும். 'குருகைச்சொல்லால்விளங்கத் தருகின்றனர்' என்பதை, "வையம்பெறினும் பொய்யுரைக்கமாட்டார் தொண்டைநாட்டாரே", "வையகாட்டுறைவோர், புதையார்தனம்" என்றாற்போலக் கொள்க. 'பிரியேன் பிரியினுந் தரியேன்' எனவும் 'நமதுடம்பு இரண்டுக்கும் உயிரொன்றே' எனவும் 'நீ என் கண்மணியே' எனவும் 'ஒருபொழுதும் உன்னை மறவேன்' எனவும் 'இம்மைப்பிறப்பிற்பிரியலன்' எனவும் இவ்வாறு பல பசப்புவார்த்தைகளைத் தலைவிக்குக்கூறிப் பின்பு அவற்றில் ஒன்றனடியேனும் நடவாதவரென்றும், தம்மையே நம்பியடைந்தவளும் வேறுகதியில்லாதவளுமான இம்மெல்லியலாளிடத்துச் சிறிதும் தயைதாக்ஷிணியமின்றி இவளை விட்டுப் பிரிந்துசென்றவரென்றும், தமது அகத்தே மெய்யன்பு இன்றிப் புறத்தே பொய்யன்பு பாராட்டியவரென்றும், இவ்வாறு நினைப்பும் சொல்லும் செயலும் மாறுபடுதலால் திரிகரணசுத்தியில்லாதவரென்றும், இவளது ஆற்றாமைகருதாது பிரிந்ததுமன்றிக் குறித்தபருவத்தில் மீண்டுவாராது நீட்டித்துப் பொய்த்தவரென்றும், மற்றும் பலபடியாகவும் பழிப்பாள், அக்கருத்துக்களெல்லாம் தோன்றப்பொதுப்பட 'நல்லவரல்லர்' என்றாளென்க. 'மேன்மேலும் காதல்தருமவர்'

http://acharya.org

என்றது - ஆசைகாட்டி மோசஞ்செய்தவரென்று பழித்தற் குறிப்பு. 'உலகேழுமுய்யத் தொகுகின்ற ஆயிரஞ்சொன்னோன்' என்றது - தாம் கூறிய சிலசொற்களின்படி நடந்து தமது அகத்து அடிமையை உய்வியாமல் உலகங்களையெல்லாம் உய்வித்தற்குப் பலதொடுத்துச்சொல்லத் தொடங்கினர்போலும் என்று பரிகசிக்கின்ற குறிப்பு; கீழ் 38 - ஆஞ்செய்யுளில் "கவியாலுலகை உய்தலைச்செய்ததும் பொய்யென்றமோ" என்றதுங் காண்க. 'சொன்னோன் தருகின்றனரல்லர்...தருமவர்' என்றது, ஒருமைப்பன்மை மயக்கம்: பால்வழுவமைதி; [நன் - பொது 29.] இதனை, சீவகசிந்தாமணியில் "பெற்றவங்கிமித்தத்தாலும்" என்று தொடக்கத்துச் செய்யுளில் "கொண்டவர் முனிவரன்" என்றதுபோலக் கொள்க; 'ஒருமைசுட்டிய பெயர்நிலைக்கிளவி, பன்மைக்காகு மிடனுமாருண்டே" என்றார் தொல்காப்பியனாரும். இம்மயக்கம், இலக்கியங்களிற் சிறுவரவிற்று. 'சொன்னோன்' என்றது - இயற்கையொருமை; மற்றவை - உயர்வுப்பன்மை: ("எனைத்துணையராயினு மென்னும் தினைத்துணையுந், தேரான்பிறனில் புகல்" என்ற திருக்குறளின் உரையிற் பரிமேலழகர் "என்னீரறியாதிர்போல விவைகூறல்நின் னீரவல்ல நெடுந்தகாய்" என்புழிப்போல உயர்த்தற்கண் பன்மை யொருமைமயங்கிற்று' என்றதையும் உணர்க.) உலகேழும் உய்ய - ஏழுதீவுகளாகவுள்ள இந்நிலவுலகம் முழுவதிலு மிருக்கிறஜனங்களெல்லாரும் பிறவிப்பெருங்கடலினின்றுகரையேறி உஜ்ஜீவிக்க வேண்டியென்றபடி. 'ஆயிரம்' என்பது - எண்ணலளவையாகுபெயராய், அத்துணைச்செய்யுள்களை உணர்த்திற்று.

கலவிக்கு உரியகாலமாதலாற் பிரிவுத்துயரை மிகுவிப்பதான இராக்காலத்தின் வரவைக் குறித்து அஞ்சுவாள், 'புகுகின்றது இருள்' என்றாள். போகின்றது வண்ணம் — "போகின்றது மணிமாமை பிறங்கி யள்ளற்பயலை, யூர்கின்றது கங்குலூழிகளே", "வண்ணம் பயலை, விரிகின்றது முழுமெய்யும் என்னுங்கோல் என் மெல்லியற்கே" என்றார் ஆழ்வாரும்; மகளிர்க்கு இளமைப்பருவத்திலுண்டாகிற ஒளிபெற்ற அழகியமாமையெனப்படும் நல்லநிறம் மாறி, பிரிவினாலுண்டாகும் பசப்புநிறம் பரவுகின்ற தென்றபடி.

இங்ஙனம் தோழி தான் தலைவனைப்பழித்துக்கூறுதலைத் தலைவிகேட்பாளாயின், ஆற்றுமை சிறிதுதணிவள்; தலைவன்கேட்பானாயின், விரைவில்தலைவியை வெளிப்படையாக மணம்புரிந்து கொள்வன்; எவரும் கேளாராயின், தோழி தான் அயர்வுயிர்ப்பள் என இதன்பயன் காண்க. இதன் மெய்ப்பாடு - அழுகை.

புகுகின்றது இருள் - குற்றியலுகரம் உயிர்வரச் சிறுபான்மை கெடாதுபொதுவிதியால் வகரவுடம்படுமெய்பெற்றது. வண்ணம் - வர்ணம் என்றவடசொல்லின் விகாரம்; இதனைத் தனியே தமிழ்ச் சொல்லென்பாருமுளர். பூவை - கிளி, அல்லது நாகணவாய்ப் பறவை; அதுகொஞ்சுவதுபோல இனிமையாகப் பேசுகிற பெண்ணுக்கு இங்கு உவமையாகுபெயர். இதனை, மத்திமதீபமாக, முன்நின்ற 'வண்ணம்' என்றதனோடும், பின்நிற்கும் 'கண்ணீர்' என்பத

http://acharya.org

னோடுங் கூட்டுக, ஆல் - ஈற்றசை; அந்தோ என இரக்கமுமாம். மேன்மேல் - அடுக்குத்தொடர்.

ஆழ்வாரது பிரிவையாற்றாத நம்பநாடரது வருத்தத்தைக் கண்ட அவரது அன்பர்கள் இரங்கிக்கூறும் வார்த்தை,இதற்கு உள்ளுறைபொருள் .இப்படி, தோழிபேச்சால் தமது நிலையை வெளியிடுகின்றனர் நம்பநாடரென்க. 'புகுகின்றது இருள்' என்றது-உரிய காலம் நேர்ந்தவிடத்தும் பெறுவாய்க்காமையால் மோகாந்தகாரம் மேலிடுதலைக் குறித்து இரங்கியது. 'பூவை வண்ணம் போகின்றது' என்றது - இவர்க்கு இப்பிரிவினாலாகும் வைவர்ண்யத்தை [நிற வேறுபாட்டை]க் கூறியது. 'பூவைகண்ணீர்உகுகின்றது' என்றது -இப்பிரிவுத்துயரை ஆற்றமாட்டாமல் இவர் புலம்பிக் கண்ணீர் சொரிதலைக் காட்டும். 'என்று உயிர்ஓய்கின்றது' என்றது - இவர் படுகிற துன்பத்தைக்கண்டு இவரது அன்பர்கள் தாம் துன்புறுதலைக் கூறியது. இவர்க்கு இங்ஙனம் பரமபக்தி தலையெடுக்கும்படி மேன்மேற் காதலை விளைப்பவரும் இந்நிலவுலகத்தாரனைவரும் உஜ்ஜீவிக்கும்படி திவ்யப்பிரபந்தம் திருவாய்மலர்ந்தருளியவருமான ஆழ்வார் இவர்பக்கல் இன்னமும் பூர்ணகடாக்ஷம் வைத்திலரே யென்று குறைகூறுவது,பிந்நியவாக்கியத்தின் உட்கிடை. "குருகூர் நகர் நம்பிக்கு ஆளுரியனாய், அடியேன் பெற்ற நன்மையே," "திருக்குருகூர்நகர்நம்பி, என்றும் என்னை இகழ்விலன் காண்மினோ" என்று களித்துக்கொண்டாடிப்பேசும்படி மதுரகவியாழ்வார்க்குப் பேரருள் செய்தாற்போல இந்நம்பநாட்டாழ்வார்க்கு நம்மாழ்வார், இன்னமும் பூர்ணகடாக்ஷஞ் செய்திலரே யென்று நம்மாழ்வார்மேற் குறைகூறுவார், 'குருகைச்சொல்லால் விளங்கத் தருகின்றனரல்ல' ரென்றாரெனக் கொள்க. (91)

92\. தருமமுங்காமமுத்தாவிலரும்பொருளுந்தணவாக்
கருமமுமாகியகாரணங்கண்டவக்காரணத்திற்
பெருமையுமாயப்பிணக்குந்தவிர்ந்துறுபேதஞ்செய்யு
மிருமையுந்தீர்ந்தபிரான்சடகோபன்றனின்னருளே.

(இ - ள்.) தருமமும்—, காமமும் - இன்பமும், தா இல் அரும் பொருளும் - குற்றமற்ற அருமையான செல்வமும், தணவா கருமமும்-எம்பெருமானை விட்டுப்பிரியாது செய்யுங் கைங்கரியமும் [மோக்ஷமும் என்றபடி], (ஆக நான்கு புருஷார்த்தங்களும்), ஆகிய-உண்டாவதற்கு, காரணம்-ஏது, (ஏதுவென்றால்),—கண்ட அ காரணத்தின் - (தம்மாலே) காணப்பட்ட ஆதிமூலப்பொருளாகிய அந்தப் பரப்ரஹ்மம்போலவே, பெருமையும் மாயப்பிணக்கும் தவிர்ந்து - அனைத்திலும் பெரியதாம் மகாமாயையெனப்படுகிற பிரகிருதியின் சம்பந்தமும் அந்தப்பிரகிருதியின் சலனத்தாலாகும் மாறுபாடுகளும் இல்லாமல், உறு பேதம் செய்யும் இருமையும் தீர்ந்த-மிக்க பலவேறுபாடுகளை யுண்டாக்குகிற (நல்வினை தீவினை யென்னும்) இருவகை வினைகளும் தொடரப்பெறாத, பிரான் - தலைவராகிய, சடகோபன் தன் - நம்மாழ்வாருடைய, இன் அருளே - இனிமையான கருணையேயாம்; (எ - று.)

http://acharya.org

காரணம், சடகோபன்தன் இன்னருளே என மாறுபடு காண்க. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகை உறுதிப்பொருள்களும் ஆழ்வாரது திருவருளாலே அவரடியார்க்கெல்லாம் சித்திக்குமென்பது, கருத்து.

பொருளும் இன்பமும் போலாது, அறம், இம்மை மறுமை வீடு என்னும் மூன்றிலும் நன்மைவிளைக்குஞ் சிறப்புடைமையால், முதலிற் கூறப்பட்டது; ("சிறப்புடைமரபிற் பொருளும் இன்பமும், அறத்து வழிப்படூஉந்தோற்றம்போல" என்றார் பிறரும்.) இம்மையே பயப்பதாய இன்பத்தை அதனைச்சாரவைத்து, இவ்விரண்டும் பொருளாற் பெறப்படுதலின், அதனை இவற்றின் பின் வைத்தார். த்ரிவர்க்கமெனப்படுகிற இம்மூன்றன்பின் அபவர்க்கமெனப்படுகிற வீட்டை நிறுத்தியது, "பரனைநினைந்து இம்மூன்றும், விட்டதே பேரின்பவீடு" ஆதலின். நல்வழியால் ஈட்டப்பட்டதும் நற்பயன்களைத் தருவதுமாகிய பொருளென்பது பட, 'தாவிலரும்பொருள்' எனப்பட்டது. "குருகூர்ச்சடகோபன் குற்றேவல் செய்து, ஆய்ந்ததமிழ்மாலையாயிரத்துள்ளிவையுமோர் பத்தும்வல்லாருலகில், எந்துபெருஞ் செல்வத்தராய்த் திருமாலடியார்களைப் பூசிக்கநோற்றார்களே," "குருகூர்ச்சடகோபன், குழலின்மலியச்சொன்ன வோராயிரத்துளிப்பத்தும், மழலைதீரவல்லார் காமர்மானேய் நோக்கியர்க்கே", "குருகூர்ச் சடகோபன் சொன்ன, பண்கொளாயிரத்துள்ளிவைபத்தும் திருவண்வண்டூர்க்கு, இன்கொள்பாடல் வல்லார் மதனர்மின்னிடையவர்க்கே," "குருகூர்ச்சடகோபன், சொல்லப்பட்ட வாயிரத்து இவையும்பத்தும் வல்லார்கள், நல்லபதத்தால் மனைவாழ்வர் கொண்டபெண்டிர்மக்களே" என்று ஆழ்வார்தாமே அருளிச்செய்தமை கொண்டு, இடையிரண்டு புருஷார்த்தங்களுக்கும் சடகோபனருள் காரணமாமெனப்பட்டது. மற்றையிரண்டுக்கும் அது காரணமாதல், வெளிப்படை. தா - உரிச்சொல். தர்மம், காமம், கர்மம், காரணம் வடசொற்கள். ஆகிய - செய்யிய வென்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்; அதன்மூன்றும் வலி இயல்பே.

"காரணந்த்யேய: [=காரணப்பொருள் தியானிக்கத்தக்கது]" என்ற மறைமொழியினும், காரணமென்பது ஆதிமூலப்பரம்பொருளை யுணர்த்துதல் காண்க; கீழ் (47) "புரைதுடைத்துப் பெரும்பொய்யுந் துடைத்து" (49) "மருளாய்ப்பரந்த மயக்கத்துயக்கற்ற மாறன்" என்றாற்போல, 'பெருமையும் மாயப்பிணக்குந் தவிர்த்து' என்றார்; பெருமை - மூலப்பிரகிருதி: மாயப்பிணக்கு - பிராகிருதவிஷயங்கள். ("தெரிமாண்தமிழ் மும்மைத்தென்னம் பொருப்பன்", "இருமைவகை தெரிந்தீண்டறம்பூண்டார்" என்ற இடங்களில் 'மும்மை', 'இருமை' என்றவைபோல) இங்கு 'இருமை' என்பது - இரண்டின் தன்மையென்னும் பொருளையுணர்த்தாமல், இரண்டு என்னும் எண்ணையே உணர்த்திற்று. இது, இங்கு இருவகைவினைகட்கு எண்ணலளவையாகுபெயர். 'இருமையுந்தீர்ந்த' என்பதற்கு, இம்மை மறுமை யென்னும்

http://acharya.org

இரண்டையுந் தவிர்ந்து விடுபெற்ற என்றும், அகங்கார மமகாரங்க ளாகிய இருவகைப்பிமானத்தையும் ஒழிந்த என்றும் பொருள்கொள்ள லுமாம். 'பெருமைதவிர்ந்து' என்றது, தமது பெருமிதத்தைப் பாராட்டாது அடியவர்க்கு எளியராய் நின்று என்னும் பொருள்படும். 'தவிர்த்து', 'தீர்த்த' என்ற பாடத்துக்கு - அடிமைப்பட்ட எனது பெருமையையும் மாயப்பிணக்கையும் போக்கி, இருமையையும் ஒழித்த தலைவனெனப் பொருள் காணலாம். பெருமையென்பது, பெரு மை என்று இரண்டு சொல்லாய்ப் பெருங்குற்றத்தை யுணர்த்தலுங் காண்க; இனி, பெருமையென்பதற்கு வித்தியாமதம் தனமதம் குலமதம் என மூவகையாற் பெருமிதம் பாராட்டுஞ் செருக்குக்களென்று உரைப்பாரு முளர். (92)

[இருளுக்கு ஆற்றுத தலைவியைக்குறித்துத் தோழி இரங்குதல்.]

93\. அருளிற்சிலமகிழாயிழைக்கீவர்கொலந்திவந்த
இருளிற்பிறிதுதுயருமுண்டோவியலோடிசையிற்
பொருளிற்சிறந்தவலங்காரவல்லியிற்போக்கிலுள்ளந்
தெருளிற்கரும்பொக்குமாயிரம்பாப்பண்டுசெய்தவரே.

(இ - ள்.) இயலோடு இசையின் பொருளில் சிறந்த - இயற்றமிழ்ப் பொருளமைதியிலும் இசைத்தமிழ்ப்பொருளமைதியிலும் சிறப்புற்ற, அலங்கார வல்லியின் - அலங்காரங்க ளமைந்ததொரு பூங்கொடி போலும்படி, போக்கு இல் உள்ளம் தெருளின் கரும்பு ஒக்கும் ஆயிரம் பா பண்டு செய்தவர் - குற்றமற்றவையும் மனத்தினால் ஆராயுமிடத்துக் கருப்பஞ்சாற்றை யொத்து இனியவையுமான திருவாய்மொழி ஆயிரம்பாசுரங்களை முன்பு செய்தருளினவராகிய நம்மாழ்வார், ஆய் இழைக்கு-தேர்ந்தெடுத்த ஆபரணங்களையுடையளான இத்தலைவிக்கு, அருளின் - கருணையினால், சில மகிழ் - (தாம்சாத்திய மாலையிலுள்ள) சில மகிழம்பூக்களை, ஈவர்கொல் - கொடுத்தருள்வரோ? அந்தி வந்த இருளின் - மாலைப்பொழுதில் வந்த இருள்போல, துயர் பிறிதும் உண்டோ - (இவட்குத்) துன்பந்தருவது வேறொன்றும் உளதோ? [இல்லை யென்றபடி];

கூடிப்பிரிந்த தலைவனது பிரிவை ஆற்றாது வருந்திய தலைவியின் நிலைமை கண்டு தோழி இங்ஙனம் இரங்கிக்கூறின ளென்க. பிரிந்த நிலையிலே தலைவி தலைவன் தரித்த மலர்மாலை கிடைக்கப் பெற்றால் அதுகொண்டு ஒருவாறு மகிழ்ந்து ஆறியிருப்பள்; அம்மாலைமுழுவதும் கிடையாவிடின் அதிலுள்ள சிலமலர்களேனும் கிடைக்கப்பெற்றால் அவைகொண்டு சிறிதுதணிந்திருத்தல்கூடு மென்பதுபற்றி, 'அருளிற் சிலமகிழ் ஆயிழைக்கு ஈவர்கொல்' என்றான். ஆழ்வார் வகுளாபரணரென்று ஒருதிருநாமம்பெறுமாறு மகிழமலர்மாலை தரிப்பவ ராதலால், மகிழ் கூறப்பட்டது. காதல்நோய் மற்றைப் பொழுதுகளிலும் உளதாயினும், "மாலையுழக்குந்துயர்", "மாலைதுனியரும்பித், துன்பம் வளரவரும்", "காதலரில்வழி மாலைகொலைக்களத், தேதிலர் போல வரும்" என்றபடி மாலைப்பொழுதில் வளர்ந்து மிகவருத்துதலால்,

http://acharya.org

அந்திவந்த இருளிற் பிறிதுதுயரு முண்டோ' எனப்பட்டது. இச்செய்யுளின் முதலடியைக் கீழ் 46 - ஆஞ் செய்யுளின் முதலடியாகிய "அரிவளை பொன்மகி ழாயிழைக்கீயுங்கோலந்திவந்து" என்றதனோடு ஒப்பிடுக. பிரிந்து வெளிச்சென்ற தலைவர் மீண்டு வருதற்கு உரிய காலம் மாலையாதலால், அப்பொழுது தலைவனுக்கு மகிழ்ச்சி விளைத்தற்பொருட்டுச் சிறந்த அணிகலங்களைத் தெரிந்தெடுத்து அணிந்து அவன்குறித்தகாலத்திலே மீண்டுவருவதை எதிர்நோக்கிநிற்கின்றன ளென்க. அங்ஙனம் வான்பார்க்கும் பைங்கூழ்போல வரவெதிர்பார்க்கின்ற சமயத்தில் அவன் தான்வர இயலாதாயின் இவட்குத் தாரகமாகத் தனதுமாலையின்மலர்களைக் கொடுத்தனுப்புதலாவது செய்வனோ வென்பாள், 'அருளிற்சில மகிழீவர்கொல்' என்றாளென்க. 'ஈவர்கொல்' என்றவினா, கொடுத்தருள்வாராக என்று வேண்டுதற்பயத்தது. துயர் தருவதைத் 'துயர்' என்றது, உபசாரவழக்கு; காரணம் காரியமாகக் கூறப்பட்டது.

பலவகைச் சொல்லணி பொருளணி குணவணி சுவையணிகள் அமைந்து சொற்றொடர்நிலையோடு பொருட்டொடர்நிலையு மாகி அவ்வலங்காரங்களாகிய மலர்கள்பூத்ததொரு கொடிபோலத் திருவாய்மொழி இருத்தலால், 'அலங்காரவல்லியின்' எனப்பட்டது. எம்பெருமானுடைய குணஞ்செயல்களை அழகாகத் தொடுத்துக்கூறிய தொடர்நிலை யென்க. உபநிஷத்துக்களை கடவல்லி, ப்ரஹ்மவல்லி, ப்ருகுவல்லி, ஆநந்தவல்லி என வழங்குதல்போல, அவ்வுபநிஷத்துக்களின் பொருளடங்கிய திருவாய்மொழியை 'அலங்காரவல்லி' என்றதாகக் கொள்ளலாம். 'இயலோடிசையின் பொருளிற்சிறந்த' என்பதற்கு - இலக்கணநடையாலும் இசைத்தமிழ்வகையாலும் மெய்ப்பொருளுணர்த்துந் திறத்தாலும் சிறந்த என்று உரைப்பினும் அமையும். 'போக்கு இல்', 'உள்ளந்தெருளிற் கரும்பொக்கும்' என்ற இரண்டும், ஆயிரம்பாவுக்கு அடைமொழி. தொல்காப்பியம் "போக்கறு பனுவல்" எனப்பட்டாற்போல, திருவாய்மொழி 'போக்கில் ஆயிரம்பா' எனப்பட்டது; போக்கு - சொற்பொருட்குற்றங்கள். போக்கற்பாலது போக்கு எனக் காரணக்குறி. கீழ் 63 - ஆங் கவியிற் கூறியபடி ஆழ்வாரருளிச்செயல்கள் ஆராயுந்தோறும் மேன்மேல் இனிமைசுரத்தலால், 'உள்ளந் தெருளிற் கரும்பொக்கும் ஆயிரம் பா' எனப்பட்டன. பண்டு - கலியுகத்தொடக்கத்தி லென்க.

அகக்கண்ணுக்கு இலக்காகி மறைந்த ஆழ்வாரது பிரிவை யாற்றாமல் மோகாந்தகாரத்தில் மிகவும்வருந்துகிற கம்பநாடரது துயரத்தை நோக்கிய அன்பர்கள், 'அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடியவராகிய ஆழ்வார் இவர்க்கு உரியசமயத்தில் தமது இனிமையைத் தந்து தலையளிசெய்யவேணும்' என்று ஆதரத்தோடு கூறிய வார்த்தை, இதற்கு உள்ளுறைபொருள். இங்ஙனம் தோழிவார்த்தையாலே தமது நிலைமையை வெளியிடுகின்றனர் கம்பநாட ரென்க. ஆயிழை - ஆழ்வார் திருவுள்ளத்தை மகிழ்விக்கும்படியான சற்குணபூர்த்தியையுடையவர்;

http://acharya.org

நல்லோர்க்கு நற்குணமே ஆபரணமாம். இப்லோடு இசையின் பொருளிற் சிறந்த ஆயிரம்பா = "குருகையர்கோன், யாழினிசை வேதத்து இயல்". (93)

94. அவரேயயற்குமரற்குமல்லாவமரர்க்குமெல்லாம்
பவரேகையுற்றென்பணிகொள்ளுமோபடர்நீரினிட்ட
நவரேகையுட்கொள்ளச்செய்ததல்லானம்பிமாறனைப்போ
லெவரேதிருவாயிரமோக்கமாலையிசைத்தவரே.

(இ - ள்.) அயற்கும் - பிரமனுக்கும், அரற்கும் - சிவபிரானுக்கும், அல்லா அமரர்க்கும்-இவர்களல்லாத (இந்திரன் முதலிய) மற்றைத்தேவர்கட்கும், எல்லாம் - ஆகிய அவர்கட்கெல்லாம், பவ ரேகை உற்று என் - பிறப்புவகை நேர்ந்து என்னபயன்? (அவர்களுடையபிறப்பு), படர் நீரின் இட்ட நவரேகை உட்கொள்ள செய்தது அல்லால் - பரவுமியல்புள்ளநீரிலே யெழுதிய புதிய எழுத்துப்போலச்சிறிதும் நிலையில்லாதனவான இப்பிரபஞ்ச விஷயங்களை (அவர்கள் தாமும் பிறரும்) மனங்கொள்ளும்படி செய்ததல்லாமல், பணி கொள்ளுமோ? - (எம்பெருமானுக்கு நிரந்தர) கைங்கரியஞ்செய்தலைப் பெறுமோ? (அன்றியும்), அவர் எவரே - அவர்களில் எவர்தாம், நம்பி மாறனை போல் திரு ஆயிரம் மோக்கமாலை இசைத்தவர் - திருக்குருகூர்நம்பியாகிய நம்மாழ்வாரைப்போல(த் தாமும் உய்ந்து பிறரும் உய்யுமாறு) சிறந்த ஆயிரம்பாசுரங்களாகிய மோக்ஷமாலையைப் பாடியவர்? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)

'ஆழ்வார், ஜீவாத்மாவாகிய பத்தரேயன்றிப் பரமாத்மாவாகிய பகவானல்லர்; நித்யர் முக்தர் பத்தர் என்ற மூவகையாத்மாக்களுள் முதல்தரமான நித்யருமல்லர்; இரண்டாந்தரமான முத்தருமல்லர்: கடைசித்தரமான பத்தாத்மாக்களில் ஒருவராய்ப் பகவானது லீலாவிபூதிக்கு உட்பட்டுப் பிறந்தவரே' என்பாரது கொள்கையை ஏற்றுக்கொண்டு, அங்ஙனம் பத்தாத்மாக்களாய்த் தலைமையும் புகழும்பெற்ற பிரமருத்திரேந்திராதி தேவர்களுடைய பிறப்புக்கும் சாதாரண சம்சாரிகளிலொருவராய்த் தோன்றிய ஆழ்வாருடைய திருவவதாரத்துக்கும் உள்ள தாரதம்மியத்தை எடுத்துக்காட்டி, அவ்வுயிர்களனைத்தினும் ஆழ்வார் மேம்பாடுடையவரென்று நிரூபிக்கிறார். அவர்கள் தாங்கள் எம்பெருமானுக்கு நிரந்தரகைங்கரியஞ்செய்து முத்திபெறுதலாலும், அவர்களுடைய போதனைகளும் முத்திக்கு நேரே காரணமாகாமையாலும், அவர்களுடைய பிறப்பு, தாமும் பிறரும் நிலையற்ற பிரபஞ்ச வாழ்க்கைக்கு உட்பட்டு உழலுதற்கே காரணமாகிறது; அங்ஙனமன்றி, நம் ஆழ்வாரோ எம்பெருமானுக்கு நிரந்தர கைங்கரியஞ்செய்து தாம் வீடுபெற்று உய்ந்ததுமன்றி, தமது உபதேசத்தால் பிறரும் வீடுபெற்று உய்யுமாறு மோக்ஷமாலையென்று ஒருபெயர் பெறத்தக்க திருவாய்மொழியை அருளிச்செய்தனராதலால், இவர் அவர்களினும் மிகமேம்பட்டவரென்பதாம். 'அராஜகமான தேசத்திலே பட்டத்துக்கு உரிய யானையைக் கண்ணைக் கட்டிவிட்டால்

http://acharya.org

அது எடுத்துத் தன்கழுத்திலே வைத்துக்கொள்ளப் பெற்றவன் அரசனுய் விடுமாறுபோல, இவ்வுலகத்தில் வைதிகமரியாதை யழிந்துபோன சமயத்திலே அதனை நிலைநிறுத்துதற்பொருட்டு எம்பெருமான் தனது நிரங்குசஸ்வாதந்திரியத்தால் பத்தாத்மாக்களி லொருவர்பக்கல் விசேஷகடாக்ஷஞ்செய்ய அதனல் இவர் மற்றையோரையும் சீர்திருத்தும்படி சிறப்புற்றனர்' என்பர் ஆன்றோர்.

ரேகையென்பது - இரண்டாமடியில் வரிசையென்ற பொருளிலும், மூன்றாமடியில் வரிவடிவெழுத்தென்ற பொருளிலும் வந்தது. நீரிலெழுதும் வரிவடிவு சிறிதுபொழுதேனும் நில்லாமல் உடனே கலைந்து வருதலால், அது, சிறிதும் நிலைநில்லாமைக்கு உவமைகூறப்படும்; "நீர்மேலெழுத்துக்கு நேர்", "நீரிலெழுத்தாகும் யாக்கை" என்பன காண்க. இங்கு படர்நீரினிட்ட நவரேகை' என்பது - உவமையாகுபெயராய், நிலையற்ற பிரபஞ்ச விஷயங்களை உணர்த்திற்று. நம்பி - ஆடவரிற் சிறந்தவன்; ஆண்பாற் சிறப்புப்பெயர்: நமது தலைவ னென்றும், நம்பிச்சரணமடையத்தக்கவ னென்றும் இதற்குக் காரணப்பொருள் கூறப்படும்; இப்பெயர்ப்பொருளை 'பூர்ணன்' என்ற வடசொற்கொண்டு வழங்குவர். 'முகுந்தமாலை' என்றாற்போல, 'மோக்ஷமாலை' எனப்பட்டது; முத்திநிலையையும் அதுபெறும் உபாயத்தையும் கூறும் பாடல்களின் வரிசையா லமைந்த சொன்மாலையென்க. ஏ - அசை. (94)

95. தவஞ்செய்வதுந்தழல்வேள்விமுடிப்பதுந்தம்மையொறுத்
தெவன்செய்யுமெய்யன்குருகைப்பிரானெம்மையின்னமொரு
பவஞ்செய்கைமாற்றியபண்டிதன்வண்டமிழ்ப்பாவுமுண்டே
யவஞ்செய்கைமாற்றச்செவியுண்டுநாவுண்டறிவுமுண்டே.

(இ - ள்.) தம்மை ஒறுத்து - தங்களை வருத்தி, தவம் செய்வதும் - தவத்தைச் செய்வதும், தழல் வேள்வி முடிப்பதும் - அக்கினிமுகமாக யாகத்தைச் செய்துமுடிப்பதும், எவன் செய்யும் - யாதுநற்பயனைத் தரமாட்டும்?—அவம் செய்கை மாற்ற - கொடிய கருமங்களை யொழித்தற்கு,—மெய்யன் - உண்மைப்பொருளை உணர்ந்து உரைப்பவரும், குருகைப்பிரான் - திருக்குருகூரில் அவதரித்த உபகாரகரும், எம்மை இன்னம் ஒரு பவம் செய்கை மாற்றிய பண்டிதன் - (அடிமைபூண்ட) எங்களை இனிமேல் ஒரு பிறவிபிறத்தலைப் போக்கியருளிய புலவருமான நம்மாழ்வாருடைய, வண் தமிழ் பாவும் - (சொற்பொருட்கருத்துக்களின்) வளமுடைய தமிழ்ப்பாசுரங்களும், உண்டு - இருக்கின்றன; செவி உண்டு - (அவற்றை அனைவரும் உபதேசமுகமாகக் கேட்பதற்கு அவரவர்க்குக்) காதுகளும் இருக்கின்றன; நா உண்டு - (ஓதிப் பாராயணஞ்செய்தற்கு) நாக்கும் இருக்கின்றது; அறிவும் உண்டு - (அதிலுள்ள அர்த்தபஞ்சகங்களை அறிதற்கு) அறிவும் இருக்கின்றது; (எ - று.)—ஏகாரம் இரண்டும் - தேற்றம்.

http://acharya.org

வேதத்தின் முற்பகுதியாகிய கர்மகாண்டத்தை முக்கியமாகக் கொண்டு அதன்படி தவமும் வேள்வியும் செய்பவர்களை நோக்கி, 'அவை, அழியுமியல்பினவான சுவர்க்கம் முதலிய காமியபலன்களைத் தருவனவாய் முத்திக்கு நேரேகாரணமாகாமையாலும், சிரமசாத்தியமாயிருத்தலாலும், சிறந்தமார்க்கமாகா; திருக்குருகூரில் அவதரித்து லோகோபகாரமாய்த் தத்துவார்த்தங்களை வெளியிட்டுத் தமது அடியார்கள் இனியொருபிறப்பின்றி முத்தியைப் பெறுமாறு அருள்செய்த பொய்யில்புலவராகிய நம்மாழ்வாருடைய அருளிச்செயல்களைக் கேட்டும் ஓதியும் உணர்ந்து அந்தமிலின்பத்து அழிவில்வீட்டை எளிதிற்பெறலாமே' என்று உணர்த்தியவாறும். "காயோடு நீடுகனியுண்டு வீசு கடுங்கால் நுகர்ந்து நெடுங்கால மைந்து, நீயோடுநின்று தவஞ்செய்ய வேண்டா திருமார்பனைச் சிந்தையுள்வைத்து மென்பீர்" என்று திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளியதுங் காண்க. இங்ஙனம் தவத்தைத் தாழ்த்திப் பிரபந்தத்தலைவனது சம்பந்தத்தை உயர்த்தியுரைப்பது, கலம்பக வுறுப்புப் பதினெட்டனுள் தவம் எனப்படும். 'பரமபதஞ் சேர்தற்குளிதான நல்வழி இருக்க, கடுநெறியைக் கைப்பற்றுவானேன்?' என்றார். தம்மையொறுத்து எவன்செய்யும் என்று எடுத்து, தம்உயிரை வருத்துவதேயன்றி மற்று என்ன நன்மை செய்யவல்லன! எனினுமாம். "நா வாயிலுண்டே நமோ நாரணவென்று, ஓவாதுரைக்குமுரை யுண்டே - மூவாத, மாக்கதிக் கட்செல்லும் வகையுண்டே யென்னொருவன், தீக்கதிக்கட் செல்லுந்திறம்" என்ற பொய்கையாழ்வாரருளிச்செயலினொருசார் அடியொற்றியது இச்செய்யுளென்னலாம்.

'எம்மை' என்ற பன்மை - மற்றையடியார்களை உளப்படுத்தியது. இன்னம் ஒருபவஞ்செய்கை மாற்றுதல் - மீண்டுபிறத்தலில்லாதபடி முத்திபெறுவித்தல். ஆழ்வாரருளால் தாம் அடைந்த பயனை உலகத்துக்கு எடுத்துக்காட்டுவார், 'எம்மையின்னமொரு பவஞ் செய்கைமாற்றிய பண்டிதன்' என்றார். நான்காமடியில், 'செய்கை' என்றது, கர்மம் என்ற வடசொற்பொருளையுணர்த்தியது. 'அவஞ்செய்கை மாற்ற' என்பதற்கு - காலத்தை வீணுக்கு தலையொழிக்க [ஸத்காலக்ஷேபஞ்செய்ய] என்று பொருள் கொண்டு, அதனை, 'செவியுண்டு நாவுண்டு அறிவுமுண்டே' என்பதனோடு கூட்டவுந் தகும். எவன்-வினாவடியாய்ப்பிறந்த அஃறிணைப் பொதுக்குறிப்பு வினையாலணையும் பெயர். 'வேள்விமுடிப்பது' என்றது, அதனைப் பிழைபாடின்றி முடித்தலின் அருமைதோன்ற நின்றது. (95)

[தலைவன், தலைவியின்நோக்கினாலாய வருத்தங் கூறுதல்.]

96. **உண்டாட்டியனுந்திருமானுருவையுயர்த்துலகைத்**
தொண்டாட்டியவந்துதோன்றியதோன்றறுறைக்குருகூர்
தண்டாட்டியநங்கைநாட்டங்களாலிந்தநாட்டையெல்லாந்
திண்டாட்டியநண்கண்போற்செய்யுமோகயறிங்குகளே.

http://acharya.org

(இ - ள்.) உண்டாட்டு இயலும் - (பலவகைத்) திருவிளையாடல்கள் பொருந்திய, திருமால்-ஸ்ரீமந்நாராயணனுடைய, உருவை-திருவுருவங்களை, உயர்த்து-சிறந்தமோக்ஷசாதநமெனக் கூறி வெளியிட்டு, உலகை தொண்டுஆட்டிய - உலகத்தவர்களை அப்பெருமானடியவர்களாகச் செய்ததற்பொருட்டு, வந்து தோன்றிய -வந்துதிருவவதரித்த, தோன்றல்-பெருமையிற் சிறந்தவரான நம்மாழ்வாருடைய, துறை குருகூர்-(தாமிரபர்ணிநதியின் சங்கணி துறையென்னுந்) திருமுகத்துறையையுடைய திருக்குருகூரிலே, நண்டுஆட்டிய நங்கை - கைவளைகளை அசைத்துக்கொண்டு நடந்துவருகிற சிறந்த பெண்ணினது, நாட்டங்களால் இந்த நாட்டை எல்லாம் திண்டாட்டிய கண்கள் போல் -தம் பார்வைகளால் இவ்வுலகத்தவரையெல்லாம் வருத்துகின்றகண்கள்போல, கயல் நீங்கள் செய்யுமோ - கயல்மீன்கள் வருத்தஞ்செய்யவல்லனவோ? [அல்ல என்றபடி]; (எ - று.)

இச்செய்யுட்குக் கைகோள் - களவு. கிளவி - இயற்கைப் புணர்ச்சி. திணை-குறிஞ்சி; புணர்ச்சியும், புணர்தல்நிமித்தமும் குறிஞ்சிக்குஉரிப்பொருளாதலுணர்க: (நெய்தலென்றல், இரங்குதற்பயத்தது.) துறை - நலம்புனைந்துரைத்தல்; அதாவது - ஒரு பூஞ்சோலையினிடத்து ஏகாந்தத்திலே தலைவியைச் சந்தித்த தலைவன் அவளாற்கு தன்னை வருத்தமுறுவித்ததைச் சொல்லுதல். திருக்குறளிற் காமத்துப்பாலிற் களவியலிலே 'தகையணங்குறுத்தல்' என்ற முதலதிகாரத்தில் "கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப், பேதைக் கமர்த்தன கண்" என்றதுபோல, தலைமகன் தலைமகளது காதற்குறிப்புநோக்கினால் தனக்குஉண்டான வருத்தத்தைக்கூறியது இது.கயல்கள் பிறழ்ச்சிபற்றிக்கண்களுக்கு உவமைகூறப்படுமேனும், இவைபோல அவை வருத்தஞ்செய்ய மாட்டா என்றான். இங்கு உபமானத்திலும் உபமேயத்துக்குச் சிறப்புத் தோன்றுதலால், வேற்றுமையலங்காரம்; ஆதலால், இக்கண்கட்குக் கயலுவமை பொருந்தாது, இவை கயலினுஞ் சிறப்புடையன என்ற தாத்பரியம் அமையும். மெய்ப்பாடு-உவகையைச் சார்ந்த மருட்கை. பயன் - மகிழ்தல். கூற்று - தலைமகன் கூற்று. கேட்பது - நெஞ்சு; இங்ஙனம் நெஞ்சொடுகூறினனென்க.

உண்டாட்டெனினும், விளையாட்டெனினும் ஒக்கும். "உண்டாட்டுக்கிரீடையுப்புக்கேளி, வண்டல் தொடலை மகளிர்விளையாட்டு" என்ற திவாகரத்தால், உண்டாட்டு என்பது மகளிர்விளையாட்டென்று தெரியவரினும், அது, பொதுப்பட விளையாட்டுக்கு வழங்கும்; சிறப்புப்பெயர், பொதுப்பொருளின்மேலது. படைத்தல் காத்தல் அழித்தல் முதலிய தொழில்களையெல்லாம் எம்பெருமான் சிறிதும்சிரமமின்றி மிகஎளிதில்விளையாட்டுப்போல நடத்துதலால்,'உண்டாட்டிய ஒருந்திருமால்'என்றார். இக்கம்பர்தாமே இராமாயணத்தொடக்கத்தில் "உலகம்யாவையுந் தாமுளவாக்கலும், நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா, அலகிலாவிளையாட்டுடையாரவர், தலைவரன்னவர்க்கே சரண்நாங்களே" என்றதுங் காண்க;

http://acharya.org

(ஸ்ரீபாஷ்யகாரரும், தமது பாஷ்யத்தின் தொடக்கத்தில் "அகிலபுவந ஜந்மஸ்தேமபங்காதிலீலே" என்பர்.) இங்கு 'உண்டாட்டு' என்றதில், பகவானது அற்புதத்திருவிளையாடல்களனைத்தும் அடங்கும். உண்டாட்டு - உண்டாடு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர். திருமால் = ஸ்ரீமகாவிஷ்ணு. 'திருமாலுரு' என்றது - பரத்வம், வியூகம், மத்ஸ்ய கூர்மாதி விபவாவதாரம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம் என்ற ஐவகைவடிவையும் உணர்த்தும். எம்பெருமானது பலவகை மகிமைகளையும் எடுத்துக் காட்டி உலகத்தவர்களை வைஷ்ணவர்களாக்கிச் சீர்திருத்துதற் பொருட்டுத் திருவவதரித்தவ ராதலால், ஆழ்வார், 'திருமாலுரு வையுயர்த்து உலகைத் தொண்டாட்டிய வந்து தோன்றிய தோன்றல்' எனப்பட்டனர். தொண்டாட்டுதல்-ஆட்படுத்துதல். இங்கு 'ஆட்டிய' என்றது செய்யிய, என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்; செய் என்றபொருளை யுணர்த்துகிற 'ஆடு' என்ற வினைப்பகுதியின் பிறவினையான ஆட்டு - பகுதி. தோன்றல் - (அனைவரினுஞ்) சிறந்து தோன்றுபவர்; ஆண்பாற்சிறப்புப் பெயர்: இதில், அல் - கருத்தாப்பொருள் விகுதி யென்னலாம். ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந்நாராயணனது அம்சமும், அவன் திருமார்பிலணிந்துள்ள திவ்வியரத்தினமாகிய ஸ்ரீகௌஸ்துபத்தினது அம்சமும், அவனது அடியார்களின் குழாத்துக்குத் தலைவராகிய விஷ்வக்ஸேந ரென்னும் சேனைமுதலியாரது அம்சமுமாக வந்து திருவவதரித்தவர் ஆழ்வா ரென்பது தோன்ற, 'வந்துதோன்றிய' என்ற தென்னலாம்.

இம்மங்கை நடக்கிறபோதும் பூக்கொய்தல்முதலாகப் பொழில்விளையாடுகிறபோதும் அவளதுகைவளைகள் அசைதல் பற்றி, 'கண்டாட்டியநங்கை' என்றான். 'கண்டு' என்றது - தனது பரியாயநாமமாகிய கடகமென்ற சொல்லைக் குறிப்பிட, அது - தன் பொருள்களில் ஒன்றான கைவளையை யுணர்த்திநிற்று; இது, லக்ஷித லக்ஷணை: (கம்பராமாயணத்தில் கேகயராஜவம்சத்தை "மயின் முறைக்குலம்" [மயில் = கேகயம். கேகயம் = கேகயநாடு] என்றதும், திருச்சந்தவிருத்தத்தில் பக்தியை "எட்டிரேடிரண்டு" [எட்டிரேடிரண்டு = பத்து; பத்து = பத்தி, பக்தி] என்றதும், சீவகசிந்தாமணியில் புத்திசேனனை "திங்கள்விரவியபெயரினான்" [திங்கள் = மதி. மதி = புத்தி] என்றதும் இத்தன்மையனவே.) உலகு, நாடு என்றவை - உலகத்தவர்மேலும், நாட்டார் மேலும் நின்றன. நங்கை கண்கள் என இயையும்.

நம்மாழ்வாரது திருக்குருகூரைச் சார்ந்த கம்பநாடரது ஞான வகைகள் தங்களையும் உலகத்தாரையும் பிறிதொன்றிற் செல்லவொட்டாதபடி வசப்படுத்துந் திறத்தை, அவ்வாழ்வாரிடத்தில் அன்புகொண்ட பாகவதர் பாராட்டிக்கூறுதல், இதற்கு உள்ளுறை பொருள். இங்கு ஸ்வாபதேசத்தில், தலைவி - கம்பநாடர். தலைவன்-நம்மாழ்வாரடியார்களான பாகவதர். கண்கள் - ஞானவகைகள்; ஆராய்ச்சியாற் பலவிஷயங்களில் விரைந்துசெல்லவல்ல இவரது ஞானக்கண்ணின் அமைதிக்குக் கயல் ஒப்புமையாகத்தக்கதேனும்,

http://acharya.org

அதற்கு, இங்ஙனம் அனைவரையும் சிந்தைமற்றொன்றின் திறத்தகதா காதபடி தன்பக்கல் அகப்படுத்துந்தன்மை இல்லையாதலால், 'நங்கை நாட்டங்களா லித்தநாட்டையெல்லாம் நிண்டாட்டிய கண்கள்போற் செய்யுமோகயல் தீங்குகள்' என்றனர். 'நண்டாட்டிய நங்கை' என்றதன் உட்கிடை - ஸ்ரீவைஷ்ணவர்கட்குத் தாம் அடிமைசெய்தற்கென்று கங்கணங்கட்டியுள்ள கம்பநாடரென்க. இங்ஙனம் தலைமகன் வார்த்தையாலே, தமது நிலைமையை வெளியிட்டனர் கம்பநாடர். (96)

[பிரிவாற்றுது வருந்துந்தலைவி இரங்கல்.]

97\. *தீயைக்கிழித்தொருதிங்கட்கொழுந்தெனச்செய்ததல்லாற்*
பேயைக்கிழித்தெனவன்றிற்பனைபிளவாருளவோ
நோயைக்கிழிக்கும்வகுளநல்காரந்த நுண்பிறவி
மாயைக்கிழியைக்கிழித்தெம்மைவாங்கிடவல்லவரே.

(இ - ள்.) இந்த—, நுண் பிறவி - எளிய பிறப்பாகிய, மாயை கிழியை - மாயாரூபமான ஆடை எமது உயிரைப் போர்த்துள்ளதை, கிழித்து—, எம்மை—, வாங்கிட வல்லவர் - எடுத்துத் தமது திருவடிகளிற் சேர்த்துக்கொள்ள வல்லவராகிய எமது தலைவர்,—தீயை கிழித்து-நெருப்பைத் துண்டாகப் பிளந்தெடுத்து (அப்பிளவை), ஒரு திங்கள் கொழுந்து என செய்தது அல்லால் - ஒருபிறைச்சந்திரனுகச் செய்ததே யல்லாமல்,—அன்றில் பனை - அன்றிற்பறவைகட்கு இருப்பிடமான பனைமரத்தை, பேயை கிழித்து என பிளவார் - பேயை இரண்டாகக் கிழித்தாற்போலப் பிளந்திட்டாரு மில்லை; உள ஆம் நோயை கிழிக்கும் வகுளம் நல்கார் - (அவர்விஷயமாக எமக்கு) உண்டாகிய காதல்நோயை நீக்கும்படியான மகிழம்பூமாலையைக் கொடுத்தலுஞ்செய்யார்;

தலைவனைப் பிரிந்து தவிக்கிற நிலையிலே பிறைக்கும் அன்றிற்கும் ஆற்றுத தலைவி தாரும்பெருது வருந்தி இரங்கி இங்ஙனங் கூறினளென்க. இதன் மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றுமை நீங்குதல்.

கூடினூர்க்குக் குளிர்ச்சியைச்செய்து மகிழ்ச்சியை விளைப்பதாய் மாலைப்பொழுதிலே விளங்குகிற பிறைச்சந்திரன், பிரிந்தார்க்குத் தாபத்தைச்செய்து வருத்தந்தருதலால், நெருப்புத்துண்டாகக் குறிக்கப்பட்டது: இது, சந்திரோபாலம்பநம் [சந்திரனைவெறுத்தல்.] திங்கட்கொழுந்து - இளஞ்சந்திரன். "ஓங்காகின்ற விருளாய்வந் துலகைவிழுங்கி மேன்மேலும், வீங்காநின்ற கருநெருப்பி னிடையே யெழுந்த வெண்ணெருப்பே" என்று (கம்பராமாயணத்திற்) பிராட்டி சந்திரனை நெருப்பென்றமை காண்க. இங்கு 'திங்கட் கொழுந்து' என்றமையின், '**தீயைக்கிழித்து**' என வேண்டிற்று; தனக்குப் பிறை இங்ஙனமாதற்குக் காரணம் தலைவர்செய்த பிரிவேயாதலால், 'தீயைக்கிழித்து ஒருதிங்கட் கொழுந்தெனச் செய்தது' என அவரைக் கருத்தாவாக்கிக் கூறினள்.

http://acharya.org

("விளரிக்குரலன்றில் மென்படைமேவின்ற முன்றிற் பெண்ணை, முளரிக்குரம்பை", "முன்றிற்பெண்ணைமேல் முளரிக் கூட்டகத்து, அன்றிலின் குரலடருமென்னையே", "பெண்ணைமேற், பின்னுமவ்வன்றிற் பேடைவாய்ச் சிறுகுரல்" என்று பெரியாரும் பணிக்கும்படி,) பனைமரம் அன்றிற்பறவைகள் கூடுகட்டி வாழுமிடமாம். காமோத்தீபகமான குரல்கொண்டு வருந்துகிற அப்பறவைகள் தங்குமிடமாகிய பனைமரத்தைப் பிளந்தெறிந்துவிட்டால், அப்பறவைகள் இங்கு நிலைபெறாது அப்பாற்சென்றுவிடுமாதலால், தனக்கு அவற்றாலாகுந் துயரமின்றாமென்பதுபற்றி, அதனை வேண்டுகின்றவளும், அது செய்யாமையைக்குறித்துத் தலைவன்மேற் குறைகூறுபவளுமாயினள். (முன்றில் தனிநின்ற பெண்ணைமேற் கிடந்தீர்கின்ற, அன்றிலின்கூட்டைப் பிரிக்கிற்பவரார்கொலோ" என்று ஒருதலைவி கூறியதுங் காண்க.) 'கருநெடும்பனங்காடு முழுமையுங் காலுங்கையுமுடையது போல்வன" என்னும்படி பனைமரமும் பேயும் வடிவில் ஒத்தலால், 'பேயைக்கிழித்தென அன்றிற் பனைபிளவார்' எனப்பட்டது.

பிரிந்தநிலையிலே தலைவனதுமாலை கிடைக்கப்பெற்றால் அது கொண்டேனும் ஆறியிருக்குங் கருத்தினளாதலின், அதனைக் கொடுத்தலுப்பாமையைப்பற்றியும் குறைகூறினள். உள-பலவின்பாற் குறிப்புவினையாலணையும்பெயர். துய்ப்பனதெவிட்டல், துயில்கொள்ளாமை, மொழிபலபிதற்றல். வெய்துயிர்ப்பு, நிறம்மாறுதல், உடல்மெலிதல், கண்ணீர்சோர்தல், அரற்றுதல், அழுங்கல், அயர்ச்சி, மயக்கம் முதலாக விரகவேதனை பலவகைப்படுதலால், 'உளவாம்நோய்' எனப் பன்மையாற்கூறப்பட்டது. "தெய்வந்தொழாஅள்கொழுநற் றொழுதெழுவாள்" என்றபடி குலமகட்குத்தெய்வம் கொழுநனேயாதலால், தனதுதலைவனை 'இந்நுண்பிறவிமாயைக்கிழியைக் கிழித்து எம்மை வாங்கிட வல்லவர்' என்றாள். பிரிவாற்றாமையும் பிறவித்துயரங்களுள் ஒன்றேயாதலால், அதனைப்போக்கி எம்மைத் தம்மொடுசேர்த்துக் கொள்ள வல்லராயிருந்தும் அதுசெய்திலரென்று பழித்தவாறுமாம். நுண்மை - இங்கு, எளிமையின்மேலது. பிறப்பு மாயாகாரியமாதலால், அதனை மாயைக்கிழியாக உருவகப்படுத்துதல் ஏற்கும்.

தமதுஞானக்கண்ணுக்கு ஒரோசமயத்தில் இலக்கான நம்மாழ்வார் மறைந்தவளவிலே, அவரது நிரந்தரானுபவத்தைப் பெறும் விருப்பினாற் பிரிவாற்றாதுவருந்துகிற கம்பநாடர், மற்றும்தம்மை வருத்துவனவான விவேக விளக்கத்தையும், லௌகிகபதார்த்தங்களையும் குறித்தும், தமக்கு ஆழ்வார் அருள்செய்யாமையைக் குறித்தும் இரங்கிக்கூறும் வார்த்தை, இதற்கு உள்ளுறைபொருள். உளவாம்நோயைக்கிழிக்கும் வகுளம் நல்கார் - எமக்குஉள்ளனவான துன்பங்களைப் போக்கவல்ல தமதுஇனிமையை அருளாரென்றபடி. ஆழ்வார்சூடிக்களைந்த மகிழமாலையைப் பெறுவதில் ஆதரத்தால் இங்ஙனங்கூறியதுமாம்; பகவத் பாகவதர்களுடைய பிரஸாதமாகக் கிடைப்பது எதுவும் அடியார்கட்கு உள்ள

http://acharya.org

நோயைத் தீர்க்குந்தரத்த தாதலால், 'உளவாம் நோயைக் கிழிக்கும் வகுளம்' என்றது எற்கும். அந்யாபதேசத்தில் சந்திரனென்றது, ஸ்வாபதேசத்தில் விவேகமாம்; பேறுகிடையாத நிலையில் விவேக மும் வருத்தத்துக்கே காரண மாதலால், அதுவும் வெறுப்புக்கு இடமாம். 'அன்றிற்பனிபிளவார்' என்றது, தம்மைவருத்தக்கட வனவான லௌகிகபதார்த்தங்கட்கு ஆதாரமான இப்பிரபஞ்சத்தி னிடத்து வெறுப்பினாற் கூறியது; கீழ் 89 - ஆஞ் செய்யுளில் "தன்வாராடங்கா, வினையொன்றியவன்றிலுக்கிடங்காட்டவிரி தலைய, பனையன்றியுமுளதோ தமியேற்குப்பழம்பகையே" என்ற தன் உள்ளுறையும் காணத்தக்கது. பிரகிருதிசம்பந்தத்தாலாகிய எமதுபிறப்புத்துன்பங்களைப்போக்கி எம்மைத் தம்பக்கல் சேர்த்துக்கொள்ள வல்லராயிருந்தும் அதுசெய்தருளினரில்லை யென்று குறைகூறுவார், 'நுண் பிறவிமாயைக்கிழியைக்கிழித்து எம்மைவாங்கிடவல்லவர்' என்றார். (97

[இதுவும் அது.]

98. வல்லம்புலிமுகவாயிற்கரும்பின்மறுபிறப்பைக்
கொல்லம்புலியோர்வகுளங்கொடார்கொடுங்கோருகட்டிச்
சல்லம்புலியிட்டெதிரிடப்பாய்வதுதாயென்றிங்கோ
ரில்லம்புலியுமுண்டம்புலிமீளவெழுகின்றதே.

(இ - ள்.) அம்-நீரிற்பொருந்திய, புலி-தாமரைமலர்போன்ற, முகம் - திருமுகமண்டலத்திலேயுள்ள, வாயில் - திருவாய்மலரி னின்று வெளியான, கரும்பின் - கருப்பஞ்சாறுபோ லினிய திருவாய்மொழிமுதலிய திவ்வியப் பிரபந்தங்களைக்கொண்டு, வல் - விரைவிலே, மறு பிறப்பை கொல் - (கருமவசத்தால் மனிதர் கருட் உண்டாகும்) மறுபிறப்பை யொழித்திட்ட, அம் புலி-அழகிய சிங்கம்போன்றவராகிய எமதுதலைவர் [நம்ஆழ்வார்], ஓர் வகுளம் கொடார் - ஒப்பற்ற (தமது) மகிழமலர்மாலையை (எனக்கு)த் தந்தருளுகின்றாரில்லை; கொடுங் கோரு உகட்டி - கொடுமையான முறைகேடு தலைக்கேறி [அக்கிரமம்விஞ்சி], சல்லம் பு(ல்)லியிட்டு எதிரிட பாய்வது - முள்ளம்பன்றியைப்போன்று எதிர்த்துப்பாய் வதாகிய, தாய் என்ற ஓர் இல்லம் புலியும் - தாயென்கிற ஒரு வீட்டுப்புலியும், இங்கு உண்டு - இவ்விடத்திலே (என்னை இடை விடாது வருத்திக்கொண்டு) உள்ளது;(இவ்வளவோடு நிற்காமல்), அம் புலி மீள எழுகின்றது - (வானத்திலும்) ஓர் அம்புலி [சந்தி ரன்] (என்னை வருத்துமாறு) மீளவும் தோன்றுகின்றது; (எ - று.) —ஈற்றுஏகாரம் - இரக்கம்.

தலைவனைப்பிரிந்து அப்பிரிவைப்பொறாது வருந்தும்நிலையிலே தாரும்பெறாது துயருறுகிற தலைவி, தாயின்கொடுமைக்கும் சந்தி ரோதயத்துக்கும் ஆற்றாது இங்ஙனம் இரங்கிக்கூறினளென்க. மெய்ப்பாடும், பயனும் - கீழ்ச் செய்யுட்குக் கூறியவையே.

வல் - விரைவுகுறிக்கும் இடைச்சொல்: இது, 'கொல்' என்ப தனோடு இயையும். 'அம்' என்ற சொல்-முதலடியிலே நீரையும், இரண்டாமடியிலே அழகையும் உணர்த்திற்று; நான்காமடியிற்

http://acharya.org

சாரியையாய் நின்றது. முதலடியில் 'புலி' என்ற சொல் - தன் பரியாயநாமமான புண்டரீக மென்பதையுணர்த்தி, அதன் ஒருபொருளாகிய தாமரையைக் குறித்தது; லக்ஷிதலக்ஷணை. ("புலியைக்கொடுத்துப் பசுவாங்கியோர் புலிப்பூங்குழலாள், புலியைப் பசுதின்னவிட்டுப் புலியைத்தினுதகற்றிப், புலியையரைத்துப் பலகாரஞ் செய்து பொருந்து முகப், புலியைக் களிப்புடன் சாறுவைத்தாள் தன் புருடனுக்கே" என்ற பிற்காலத்துச் செய்யுளிலே, முகத்தாமரையென்ற பொருளில் 'முகப்புலி' என்றதுங் காண்க. [அச்செய்யுளில், முறையே, புலி = வேங்கை = பொன். புலி - மயிர்ச்சாந்து. புலி-புல். புலி - ஓர் மிருகம். புலி = வரி = நெல். புலி = புண்டரீகம் = தாமரை. சாறு - திருவிழா.] வேங்கையென்ற பொருளில் "நீத்தீண்டுகையார்" என்றலும் [நீத்நீண்டுகை = வேம்கை = வேங்கை] அவலக்ஷணமென்ற பொருளில் "எட்டேகால் லக்ஷணம்" என்றலும் [எட்டேகால் = அவ = அவ] போல்வனவும் இவ்வகையிலக்கணையே.) நீரினின்று பறிக்கப்பட்டுச் சிறிதுவாடிய தாமரையன்றி நீர்நிலையிலேயே செழித்துப் பொலிவுமாறுது நிற்குந் தாமரைமலர் போன்ற முகமென்பாள், 'அம் புலி முகம்' என்றான்; இது, ஆழ்வாரது திருமுகத்தினழகிற் கொண்ட ஈடுபாட்டினாற் கூறியது. இது, வாய்க்கு அடைமொழியாய் நின்றது. முகவாயின் - முகத்தினிடத்திலிருந்து எழுந்த எனினுமாம்.

கரும்பு - அதுபோல் இன்சுவைத்தானபாசுரத்துக்கு உவமையாகுபெயர்; இன் - ஐந்தனுருபு, ஏது. தமதுபாசுரங்களிற் கூறிய உபதேசத்தால் மனிதர்கள் இனிப்பிறத்தலில்லாது முத்திபெறுமாறு செய்தருளியவ ரென்பது, 'வாயிற்கரும்பின் மறுபிறப்பைக் கொல் அம்புலி' என்றதன் கருத்து. மறுபிறப்பு - புநர்ஜந்மம். "சரண மாகுந் தனதாளடைந்தார்க்கெல்லாம், மரணமானால் வைகுந்தங்கொடுக்கும் பிரான்" என்றபடி இப்பிறப்பின் முடிவிலேயே முத்தியருள்கின்ற அருமையைக் குறித்தற்கு, 'மறுபிறப்பை விரைவிற்கொல்லுகிற' எனப்பட்டது. "சிங்கவிராசியும் நால்வகைச்சார்த்தத்து ஒன்றும் வியாக்கிரமு முரைப்பர் புலியே" என்றபடி புலியென்றசொல் சிங்கவிராசியையுணர்த்தலால், அது இங்குச் சிங்கமென்றமாத்திரமாய் நின்றதென்க. பலவகைப்பிராணிகளை விரைவிற்கொல்லவல்ல சிங்கம் போல, மறுபிறப்பை விரைவிற் கொல்லுஞ் சிங்கம் ஆழ்வா ரென்க. பரசமயங்களாகிய யானைகளை அழிக்குந் திறம்பற்றியும், அவரைச் சிங்கமெனத் தகும்; பரசமய கோளரி யென்பர். அன்றியும், கம்பீரமான தோற்றத்திலும் நடையிலும் உத்தமபுருஷனுக்குச் சிங்கம் உவமைகூறப்படும். சிங்கம் போன்றவரைச் சிங்கமென்றது, உபசார வழக்கு.

'கோகுகட்டு' என்ற சொல்தொடர் - "பைதலைக்கோகுகட்டிட்டேட்டி வேற்றியாண்பனையே" எனக் கீழ் 38 - ஆஞ் செய்யுளிலும் வந்துள்ளது. திருவாய்மொழியில் "கும்பிடுநட்டமிட்டாடிக்கோகுகட்டுண்டுழலாதார்" என்றதுங் காண்க. கோகு - அடைவுகேடு, உகட்டுதல் - தலைமண்டையிடுதல், மேலிடுதல். முன்னம்பன்றியைக் குறிக்கிற ஶல்ய மென்ற வடசொல், சல்ல

http://acharya.org

மென விகாரப்பட்டது; புல்லியிட்டு என்பது, புலியிட்டு எனத் தொகுத்தல்விகாரமடைந்தது; புல்லுதல்-சார்தல், தழுவுதல்: இது இங்கு உவமவாசகமாய் நின்றது; ("புத்தேளுலகிற் பொன்மரம் புல்ல" என்றவிடத்துப்போல: "எள்ளவிழையப் புல்லப் பொருவக், கள்ள மதிப்ப வெல்ல வீழ, என்றாங் கெட்டே பயனிலையுவமம்" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும்). இனி, சல்லம் புல்லியிட்டு - முள்ளம்பன்றியின் தன்மையைக்கொண்டு எனினுமாம். என்றிங்கு - தொகுத்தல். தாயைப் புலியென்றதற்கு ஏற்ப, 'பாய்வது' என்றஅடைமொழி கொடுக்கப்பட்டது. பாய்வது - ஒன்றன்பால் வினையாலணையும் பெயர்; தொழிற்பெயராகக்கொண்டு, புலி பாய்வதும்உண்டு என மொழிமாற்றியுரைத்தலும் ஒன்று. காட்டுப் புலியினும் வேறுபாடுதோன்ற, 'இல்லம்புலி' எனப்பட்டது. இவ்வனம் தாயைவெறுத்துரைத்தற்குக் காரணம், கீழ் (53) "அன்னையுடன், பின்றுதவண்ணமெல்லாம் பின்றுவித்து", (85) "மனையொன்றிய கொடியாள்" என்ற இடங்களிற் கூறிப்போந்தாம். தாயினது மிக்ககொடுமை விளங்க, அவட்கு, முள்ளம்பன்றியும் புலியும் உவமைகூறப்பட்டன. அவள்சொல்லும் கொடுஞ்சொற்கள் முட்போலத் தன்னெஞ்சில் தைத்தல்பற்றி அவளை முள்ளம்பன்றி யென்றும், அவளது சீற்றம் தனக்கு மிக்க அச்சத்தைத் தருதல்பற்றி அவளைப் புலியென்றும் ஒப்புமையாற் குறித்தான்.

ஒரு கொல்லம்புலியோ எனக்கு வருணமாலை கொடுக்கின்றதில்லை; அதுபற்றி யான் வருந்துஞ்சமயத்திலே இம்மண்ணுலகத்து இல்லம்புலியொன்று எதிரிடப்பாய்கின்றது; அதனோடு, வானத்திலும் ஓர் அம்புலி எழுந்து பாயவருகின்றதே! இனி இங்ஙனம் பலபுலிகளால் ஒறுக்கப்படுகிற ஒரு நான் பிழைப்பது எவ்வாறு? என்று இரங்கினனென்க. இது, சந்திரோபாலம்பநம். 'அம்புலி' என்பது ஒரு சொல்லாய்ச் சந்திரனையுணர்த்தும். நிலாத்தோற்றத்தால் முந்தினநாளிரவிலாகிய துயரத்தை ஞாபகத்திற் கொண்டு, 'மீளவெழுகின்றதே' என்றான். மீள - நேற்றுவந்து போனதேயன்றி இன்றைக்கும் என்றபடி. எழுதல் - உதித்து வருதல்.

இச்செய்யுளில் 'புலி' என்ற சொல் வெவ்வேறுபொருளில் அடுத்து வந்தது, **சொற்பின்வருநிலையணி**. அதனோடு நிரிபு என்ற சொல்லணியுங் காண்க. நான்காமடியில், 'இல்லம்புலியுமுண்டு அம்புலி மீள எழுகின்றது' என்ற சொல்நயமும் கருதத்தக்கது. 'சல்லம்புலியிட்டு எதிரிடப்பாய்வது' என்றது, **உவமையணி**. 'தாயென்றிங் கோரில்லம்புலியு முண்டு' என்றது, **உருவகவணி**. இங்ஙனம் பல **அணிகள்** சேர்ந்துவந்தது, **சேர்வையணி**யாம்.

அகக்கண்ணுக்குப் புலனாகி மறைந்த நம்மாழ்வாரது பிரிவையாற்றாது வருந்துகிற கம்பநாடர் இரங்கிக்கூறும் வார்த்தை, இதற்கு உள்ளுறை பொருள். 'அவ்வாழ்வார் தாமாகவந்து அருள் செய்யுமளவும் ஆறியிராது பேற்றுக்கு விரைந்துதுடித்தல் தகுதியன்று' என்பது முதலாக உறுத்திகூறுகிற பரிவுடைய ஞானிகள், **'கொடுங்கோகுசட்டிச் சல்லம் புலியிட்டெதிரிடப்பாய்வது**

http://acharya.org

தாயென் றிங்கோரில்லம்புலியு முண்டு' என்று வெறுக்கப்பட்டன ரென்க. 'அம்புலி மீனவெழுகின்றது' என்றது, பிரிவாற்றாத போது ஞாயிறுதயமும் வருத்துவதாதல்பற்றி; ('சந்த்ரோதயமென்பது, அலாபதசையில் விவேகமும் பாதகமானபடியை' என்றனர் ஆன்றோர்.) பிறவும், முன்கூறியவாற்றால் விளங்கும். (98)

99. **எழுதியநாளும்வினையுந்தொகுத்தெம்மைஇப்பிறவிப்**
புழுதியினாற்றிட்டுவைப்பரிதாற்புகழ்மெய்ப்புலவோர்
தொழுதியனாயகனோதுங்கனற்றுறைநீர்ப்பொருநை
வழுதிநன்னாடன்றிருவாய்மொழியெம்மனத்தனவே.

(இ-ள்.) புகழ்-கீர்த்தியையுடைய, மெய் புலவோர்-உண்மைப் புலவர்கள் [தத்துவஞானிகள்], தொழுது இயல் - வணங்கி அடியார்களாகி ஒழுகப்பெற்ற, நாயகன் - தலைவரும், ஓதும் கனல் துறை நீர் பொருநை வழுதி நல் நாடன் - (வேதங்களால்) சொல்லப்படுகிற அக்கினிகாரியமாகிய யாகவகைகள் நடக்கப் பெற்றதும் நீரறாத தாமிரபர்ணிநதி பாயப்பெற்றதுமாகிய சிறந்த பாண்டியநாட்டிலே திருவவதரித்தவருமான நம்மாழ்வார் அருளிச்செய்த, திருவாய்மொழி - திருவாய்மொழியென்ற பிரபந்தத்தின் பாசுரங்கள், எம் மனத்தன - எமதுமனத்திலே நிலைகொண்டிருக்கின்றன; (ஆதலால்),—எழுதிய நாளும் வினையும் தொகுத்து - (இவ்வளவென்று பிரமன் எமக்கு) எழுதிவைத்துள்ள ஆயுளையும் பழவினைத்தொடர்பையும் (எம்மோடு) இயைபுபடுத்தி, எம்மை—, இ பிறவி புழுதியில் நாற்று இட்டு வைப்பு - இவ்வாறு பிறத்தலாகிய புழுதிக்காலில் நாற்றுநட்டு விளையும்படிவைத்தல், அரிது - முடியாததாம்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

கீர்த்திபெற்ற மதுரகவிகள் முதலிய உண்மைப்புலவர்கள் வணங்கி வழிபடப்பெற்ற பரமாசாரியரும், வேதவிதிமுறை தவறாது நிகழும் வேள்விகளும் அவற்றின் பயனாகும் பருவமழைப் பெருக்கும் அறாத பாண்டிவளநாட்டில் திருவவதரித்தவரு மாகிய நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழிப்பாசுரங்களை யான் இடையறாது சிந்தித்துவருகின்றேனாதலால், இனி என்னைப் பிரமன் வினைவசமாக ஆயுளைக்கற்பித்து இவ்வுலகத்திலே பலவகைப் பிறப்புக்களில் இட்டுவைக்க முடியா தென்பதாம். "மாதவன்பாற் சடகோபன், தீதவமின்றியுரைத்த, ஏதமிலாயிரத் திப்பத்து, ஓதவல்லார் பிறவாரே." "குருகூர்ச்சடகோபன், நேர்ந்தவோராயிரத்திப்பத்து அருவினைநீறு செய்யுமே" என்று ஆழ்வார்தாமே திருவாய்மொழியிற் பயன் அருளிச்செய்தபடி, அதனை அநுசந்தானஞ் செய்வார் வினையனைத்துந் தொலைந்து பிறப்பற்று வீடுபெறுதல் நிச்சயமாதலால், இங்ஙனம் கூறினர்.

எம்மை, எம் என்றவை - தனித்தன்மைப்பன்மை; தம்மைச் சேர்ந்தவர்களையுங் கூட்டிய உளப்பாட்டுத்தன்மைப்பன்மை யெனினுமாம். நாள்-உடம்போடு கூடிவாழும் நாள். வினை-சஞ்சித கருமம். 'எம்மை' என்றது, தமது உயிரை. நாறுவது நாற்று எனக் காரணக்குறி; நாறுதல் - முளைத்தல். 'எம்மை இப்பிறவிப்

http://acharya.org

புழுதியில் நாற்றிட்டுவைப்பு' என்றது, உருவகவிசேடம். புலவர் - புலவோர் எனச் சிறுபான்மை ரகரவீற்று அயல் அகரம் ஓகாரமாயிற்று. நாயகன் - பிரபந்நஜநகூடஸ்தர். (99)

100\. மனையும்பெருஞ்செல்வமுமக்களுமற்றைவாழ்வுந்தன்னை
நினையும்பதமெனநின்றபிரான்குருகூர்நிமலன்
புனையுந்தமிழ்க்கவியாலிருணீங்கிப்பொருள்விளங்கி
வினையுந்திரிவுற்றனகுற்றநீங்கினவேதங்களே.

(இ - ள்.) 'மனையும் - மனைவியும், பெருஞ்செல்வமும்—, மக்களும் - பிள்ளைகளும், மற்றை வாழ்வும் - மற்றுமுள்ள வாழ்வுகளும், (ஆகிய இவையெல்லாம்), தன்னை நினையும் பதம்-(ஆழ்வாராகிய) தம்மைத் தியானிக்கின்ற நிலைமைதான்,' என - என்று (ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும்) கொள்ளும்படி, நின்ற பிரான் - (அத்தொண்டக்குலத்துக்குத்) தலைவராய் நின்றவராகிய, குருகூர் நிமலன் - திருக்குருகூரில் அவதரித்த குற்றமற்ற நம்மாழ்வார், புனையும் - பாடிய, தமிழ் கவியால் - தமிழ்ப்பாசுரங்களால், இருள் நீங்கி - அஜ்ஞாநாந்தகாரம் ஒழிந்து, பொருள் விளங்கி - தத்துவார்த்தம் விளங்க, வினையும் திரிவுஉற்றன - (உயிர்களின்) கருமசமூகங்களும் அழிவடைந்தன; வேதங்கள் குற்றம் நீங்கின - வேதங்களும் (எளிதில் மெய்ப்பொருள் விளங்காதிருந்த) குற்றம் நீங்கப்பெற்றன; (எ - று.)

ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் நம்மாழ்வாரையே தமது பலவகை ஐசுவரியங்களாகக்கருதுகின்றனரென்பது, முதலிரண்டடியில்விளக்கப்பட்டது. நம்மாழ்வார் விஷயமாக ஆளவந்தார் அருளிச்செய்த "மாதா பிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ் ஸர்வம் யதேவநியமேநமதந்வயாநாம் - ஆத்யஸ்யந: குலபதேர்வகுளாபிராமம் ஸ்ரீமத்ததங்க்ரியுகளம்ப்ரணமாமி மூர்த்நா" என்ற தனியன் 'எமது வம்சத்தார்க்கு எந்நாளும் தாயும் தந்தையும் மனைவியரும் மக்களும் செல்வமும் எல்லாம் ஆவது எதுவேயோ, அந்த, எமதுகுல முதல் தலைவரான நம்மாழ்வாருடைய மகிழமலர்மாலை யணிந்து விளங்கும் திருவடியிணையை, தலையால் வணங்குவேன்' என்னும் பொருளதாதலுங் காண்க. "உறுபெருஞ் செல்வமுந் தந்தையுந் தாயு முயர்குருவும், வெறிதருபூமகள் நாதனு மாறன்விளங்கியசீர், நெறிதருஞ் செந்தமிழாரணமே யென்றிந் நீணிலத்தோ, ரறிதர நின்ற விராமாநுசன்" என இராமாநுசநூற்றந்தாதியில்வருவதும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. 'தன்னை நினையும் பதம்' என்பதற்கு-தமது திருவடிகளைத் தியானித்தலென்று அரிதிற் பொருள்கொள்ளவும் அமையும். இங்குக்கூறப்படாத இம்மைப்பயன்களனைத்தும் மோக்ஷோபாயமும் 'மற்றை வாழ்வு' என்றதில் அடங்கும். மனைவிபோல மனத்துக்கு மிக இனிய பொருளும், இளமையில் தமக்கு இன்பந்தந்து பின்பு தம்மைப்பாதுகாப்பவராய் மறுமையில் நரக நிவிருத்திக்குங் காரணமாகிற மக்கள்போலப் பலவாற்றால் உதவுபவரும், சகல போகங்களுக்கும் இன்றியமையாததாகிற செல்வம் போல மிக விரும்பப்படும் பொருளும், மற்றுமெல்லாம் தமக்கு நம்மாழ்வாரென்றே கருதுகின்றனர் அடியார்களென்க. அவ்விஷயங்களின்

http://acharya.org

அநுபவத்தால் அடையும் ஆனந்தமெல்லாம் ஆழ்வாரைத்தியானித்தலாற் பெறலாகுமென்பது கருத்து.

இனி, இதற்கு 'மனைவியும் பெருஞ்செல்வமும் மக்களும் மற்றை வாழ்வும் எல்லாமாவது, தமது ஆதிஸ்வருபமான ஸ்ரீமந் நாராயணனை இப்பொழுது அடியவராகிய தாம் மனத்திற் கொண்டு தியானித்தலே' என்று சொல்லி நின்ற உபகாரகரென்று பொருள்கொள்ளவும் இடமுண்டு; "மேலாத்தேவர்களும் நிலத்தேவரும் மேவித்தொழும், மாலார் வந்தினநா ளடியேன் மனத்தே மன்னினர், சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும், மேலாத் தாய்தந்தையும் அவரே யினியாவாரே" என்ற திருவாய்மொழிப்பாசுரங் காண்க. மிக்க விருப்பத்துக்கு இடமாதல்பற்றி மனைவியை முதலிற் கூறி, "இல்லாளை யில்லாளும் வேண்டாள்" என்றபடி அவனநுகாதற்கும் "பொருளிலார்க்கு இவ்வுலகமில்", "பொருளுடையான்கண்ணதே போகம்" என்றபடி அவளோடு கூடியநுபவிக்கும் இன்பங்கட்கும் இன்றியமையாமைபற்றி அவளையடுத்துப் பெருஞ்செல்வத்தையும், அச்செல்வத்தைப் பிற்காலத்திற் பெற்றுக்கொள்ளுதற்கு உரியராய் வேண்டப்படுதலும் "மக்கட்பேற்றிற்பெறும்பேறில்லை" என்றபடி எல்லா ஐசுவரியங்களினும் புத்திரபாக்கியம் சிறந்ததாதலும் "தம்பொருளென்ப தம்மக்கள் அவர் பொருள், தந்தம்வினையான் வரும்" என்பதும் பற்றி அச்செல்வத்தையடுத்து மக்களையும் நிறுத்தி, பிறவற்றை 'மற்றைவாழ்வு' எனக்கடையிவைத்தார்.

'புனையுந் தமிழ்க்கவி' என்ற சொற்போக்கினால், தொடுத்துச் சாத்திய தமிழ்ப்பாமாலை யென்னலாம். ஆழ்வாருடைய திவ்வியப் பிரபந்தங்களினால் ஐயந்திரிபற உண்மைப்பொருள் விளங்கவே, வேதத்திற்கு 'மயங்கவைத்தல்' என்னுங் குற்றம் இல்லையாயிற்றென்க.

விளங்கி — விளங்க: எச்சத்திரிபு. மனை - மனைவி: இடவாகு பெயர். விமலன் - வடசொல். (100)

மன்றேபுகழுந்திருவழுந்தூர்வள்ளன்மாறனைமுன்
சென்றேமதுரகவிப்பெருமாடென்றமிழ்த்தொடையி
லொன்றேபதிகமுரைத்தவன்பொன்னடியுற்றுநின்று
னென்றேபதிகம்பதிகமதாகவிசைத்தனனே.

(இ - ள்.) மன்றே புகழும்-எச்சபையாராலும் புகழப்படுகிற, திருஅழுந்தூர் வள்ளல்-திருவழுந்தூரில் அவதரித்த உதாரியாகிய கம்பநாட்டாழ்வார்,—'முன் - முற்காலத்தில், மதுரகவி பெருமான் - மதுரகவியாழ்வார், மாறனை - நம்மாழ்வாரை, சென்று - போய் அடைந்து, தென் தமிழ் தொடையில் - அழகிய தமிழ்ப்பாமாலை கொண்டு, ஒன்றே பதிகம் உரைத்து - ('கண்ணிநுண்சிறுத்தாம்பு' என்னும்) ஒருபதிகத்தையே பாடி, அவன் பொன் அடி உற்று நின்றான்-அவ்வாழ்வாருடைய திருவடிகளைச் சேர்ந்து வாழ்ந்தனர்,' என்றே - என்று உட்கொண்டு, பதிகம் பதிகம் அது ஆக இசைத்தனன் - அப்பதிகம் பத்துள்ளதாக [நூறுபாடல்களாக] (இவ்வந்தாதியை அந்த நம்மாழ்வார்விஷயமாகப்) பாடினர்; (எ - று.)

http://acharya.org

வள்ளல் இசைத்தனன் என இயையும். முற்காலத்திலே மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரைச்சரணமடைந்து 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும் ஒரு பதிற்றந்தாதியைப் பாடிப் பரமபத மடைந்தனரென்பதைக் கருதி, பிற்காலத்திலே கம்பநாட்டாழ்வார் தாமும் அங்ஙனமே பேறுபெறுமாறு அதற்குப் பத்து மடங்காக இந்த ஆழ்வார் நூற்றந்தாதியைப் பாடினரென்பதாம். கம்பர் தாம் ஆழ்வார் விஷயமாகப் பிரபந்தம்பாடுதற்கு மதுரகவியாழ்வாரை "மார்க்கதர்ஸீ மஹர்ஷி:" என்றபடி வழிகாட்டியாகக் கொண்டனரென்க. மதுரகவியாழ்வாரோடு கம்பநாட்டாழ்வார்க்கு ஒருபுடையொப்புமை இங்குத் தோன்றும். இவ்விருவரும் ஆழ்வாரெனப்படுதற்குக் காரணம், நம்மாழ்வார்விஷயமாகப் பிரபந்தம்பாடிய சிறப்பன்றோ? அந்த மதுரகவி ஒரு பதிகம்பாடினர்; அதற்குஈடாக இவர் பத்துமடங்கு பாடியதனால், விஸ்தாரகவியாவர். அவர் வடதிசையினின்று ஆழ்வா திருநகரிக்குச்சென்று தசகம்பாடினர்; இவர் திருவரங்கத்திலிருந்தே சதகம் பாடினர்.

மன்று - பலர்கூடும் இடம். சிலரேனும் பலரேனும் கூடும் இடங்களிலெல்லாம் அவர்களனைவராலும் பாராட்டிப் பேசப்படுகின்றது கல்வியிற் பெரிய கம்பரது கீர்த்தியென்பது, 'மன்றே புகழுந் திருவழுந்தூர்வள்ளல்' என்றதனாற் போதரும். முன்பு ஐம்புலன்வழிச் சென்றிருந்தமை தவிர்ந்து பின்பு எம்பெருமானைச் சரணமடைந்து ஆழ்வாரருளைப் பெற்றதனாலாகிய தமதுபுகழை இங்ஙனம் பாராட்டிக்கூறுகின்றனராதலால், இது தற்புகழ்ச்சிக் குற்றத்தின்பாற்படாது. "மன்றின்மலிபுகழ் மங்கைமன் கலிகன்றி" என்று, திருமங்கையாழ்வார் தாம்பாடிய பெரியதிருமொழியின் ஈற்றில் தம்பெருமையைத் தாமே வெளியிட்டதுங் காண்க. கம்பர் பிறந்த இடம் திருவழுந்தூராதலை, "சீரணிசோழநாட்டுத் திருவழுந்தூருள் வாழ்வோன், காரணக்கொடையான் கம்பன் தமிழினாற் கவிசெய்தானே" என்ற கம்பராமாயணத்தனியன் கொண்டும் உணர்க. வடமொழியில்வழங்கிய ஸ்ரீராமசரித்திரத்தைத் தமிழ்நாட்டவர்யாவரும் எளிதில் ஓதியுணர்ந்துஉய்யும்படி சிறந்த பெருங்காப்பியமாகப் பாடியுதவிய பெருவண்மையுடைமை பற்றி, 'வள்ளல்' என்றார்; "கம்பநாடுடையவள்ளல் கவிச்சக்கரவர்த்தி பார்மேல், நம்புபாமாலையாலே நரருக்கின்றமுதமீந்தான்" என்ற கம்பராமாயணத் தனியனையுங் காண்க: "கவிநல்கு கொடைக்காரணன்" என இந்நூற்சிறப்புப்பாயிரத்திற் கூறியதும் இதுபற்றியே.

குலசேகராழ்வாரை 'குலசேகரப்பெருமாள்' என்றாற்போல, மதுரகவியாழ்வாரை 'மதுரகவிப்பெருமாள்' என்றார்; இராமாநுச நூற்றந்தாதியில், திருப்பாணாழ்வாரை "பாண்பெருமாள்" என்பதுங் காண்க. பெருமாள்பக்கல் கொண்ட பக்திமிகுதியாலாகிய ஈடுபாட்டினால் அப்பெருமான்மயமாகுதலால், ஆழ்வார்கள் 'பெருமாள்' எனப்படுவர். மதுரகவியாழ்வார் - பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவர்; "தேவு மற்றறியேன் குருகூர்நம்பி, பாவினின்னிசை பாடித்திரிவனே" என்று நம்மாழ்வார்க்கே தொண்டு

http://acharya.org

பூண்டொழுகியவர். முன் - கலியுகத்தொடக்கத்தில், பாண்டிய நாட்டில் திருக்குருகூர்க்கு அருகிலுள்ள திருக்கோளூரிலே நம்மாழ்வார்க்குமுன்னமே உதித்துச் செவிக்கினியசெஞ்சொற் கவிகளைப் பாடவல்லரானதனால் மதுரகவியென்று திருநாமம் பெற்ற மெய்யடியவர், திவ்வியதேசயாத்திரையாய் உத்தரதேசஞ் சென்று திருவயோத்தியி லிருந்தபோது தென்றிசையில் திவ்வியமானதொரு பேரொளிப்பிழம்பைக் கண்ணுற்று வியந்து அதனை இன்னதென்று அறியுமாறு குறிக்கொண்டு மீண்டு ஆழ்வார்திருநகரியையடைந்து அப்பெருஞ்சோதி அங்கு அவதரித்துள்ள நம்மாழ்வாரது திருமேனிவிளக்கமேயென்று அறிந்து அவர்க்கு ஆட்பட்டு, 'கண்ணிநுண்சிறுத்தாம்பு' என்ற திவ்வியப்பிரபந்தம் பாடின ரென்பது தோன்ற, 'சென்று' எனப்பட்டது. இங்ஙனம் அவர் நம்மாழ்வார்க்குத்திருவடித்தொண்டராய் ஒழுகி அவரது [illegible]த்திற் சேர்ந்தன ராதலால், அந்நம்மாழ்வாரது திருவடிநிலை 'மதுரகவிகள்' என இவர்திருநாமத்தையிட்டு வழங்கப்பெறும். பத்துச்செய்யுள் கொண்டது, பதிகமெனப்படும். திருநாமப்பாட்டு நீங்கலாகக் கண்ணிநுண்சிறுத்தாம்பு பத்துச் செய்யுளுடையது.

வள்ளல் - வண்மையையுடையவன். மாறனை உரைத்துளன இவையும். மதுரகவியாகியபெருமாள்என இருபெயரொட்டு. தென் தமிழ் - தென்றிசையில் வழங்குதலால் தென்மொழியெனப் படுகிற தமிழெனினுமாம். ஒன்றே, ஏ - சிறப்பு. பொன் அடி - அழகிய பாதம்; அரிய திருவடி. நின்றுன் - அழியாப்பேற்றில் நிலைநின்றனர். என்றே, ஏ - தேற்றம்.

இச்செய்யுள், நூலாசிரியர் தாமே தம்மைப் பிறன்போலும் பாயிரங் கூறியது. இது, திருநாமப்பாட்டு எனப்படும். பதிகம் பாயிரம் என்ற சொற்களால் இதனை வழங்குதலும் உண்டு. (பிரயோகவிவேகநூலார் 'இது, தன்னைப்பிறன்போலுங்காந்தி கூறுகின்றது.' 'வடநூலார் தாமே பதிகமும் உரையுஞ் செய்வார்', 'இனிச் சம்பந்தர் சடகோபர் முதலாயினோரும், திவாகரரும் பதினெண்கீழ்க்கணக்குச்செய்தாரும் முன்னுகப் பின்னுகப் பதிகங் கூறுவதுங் காண்க' என்றவை கருதத்தக்கன.) இதனைத் தற்சிறப்புப்பாயிரமென்பர். இது, ஒருவகைக்கவிசமயமாதலால், தற்புகழ்ச்சியாகாது.

இவ்வந்தாதியைப் பாடியவரும் ஓதினவர்களும் நம்மாழ்வாரது பொன்னடியையடைவ ரென்ற நூற்பயன் இச்செய்யுளில் தொனித்தலால், இது, பலஸ்ருதி கூறியவாறுமாம்.

சடகோபரந்தாதி முற்றிற்று.

அநுபந்தம்.

இந்நூலின் 12, 20, 21, 43 - இச்செய்யுள்களுக்கு—கம்பநாடர் தலைமகனாகவும், பாகவதர் அல்லது நம்மாழ்வார் தலைமகளாகவுங் கொண்டு உள்ளுறைபொருளுரைத்தலே சிறக்கும்.

---

http://acharya.org

பிழைத்திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	9	யடியார்வெ	[illegible]களை
37	27	அர்ந்தமான	அநந்தமான
56	[illegible]	யமைப்ப்பா	யமைப்பா
[illegible]6	18	குருகைபிரான	குருகைப்பிரான
94	39	படுமினே	பாடுமினே
126	3	ஒடை	ஓடை
131	20	மகிழ்ப்பூ	மகிழ்பூ
133	40	பட்டவ	பட்டவன்
140	8	சடகோனின்	சடகோபனின்

மற்றும் பிழைகள் காணப்படினும் திருத்திக் கொள்ளவும்.

http://acharya.org

சடகோபரந்தாதிச்

செய்யுண்முதற்குறிப்பகராதி.

செய்யுள்	பக்கம்
அந்தணர்க்கோ	55
அந்தமிலாமறை	33
அரிவனைபோன்	70
அருவிற்சிலமகி	152
அவரேயயறகு	[illegible]
அறிவேயுனைத்	77
அறுவகையாய	110
அன்றுதவன்றிலை	80
ஆட்செய்யலாவ	91
ஆயிரமாமறைக்	24
ஆரணத்தின்சிர	5
ஆற்றிற்பொதிந்த	29
இட்டத்திலுங்	125
இயலைத்தொடுத்	122
இருளாய்ப்பரந்த	77
இலவேயிதழன	30
இமைத்தாரொரு	89
உண்டாட்டிய	156
உயிர்த்தாரையிற்	54
உயிருருக்கும்புக்கு	32
உரிக்கின்றகோ	93
எழுதியாளும்	164
என்முடியாதென	51
ஒருந்தகைமைக்	109
கடலைக்கலக்கெழு	36
கருத்திற்கருணை	131
கவிப்பாவமுத	21
கற்றுஞ்செவி	106
கனவாயினவுங்	68
காலத்திலேகுரு	63
குணம்வேண்டு	126
குருகூர்நகரெம்	79
குற்றேவலுஞ்	121
கூட்டங்கடோ	136
கூறப்படாமறை	91
கைதலைப்பெய்த	60
கொடியெடுத்துக்	50
கொழுந்தோடிலை	49
[illegible]ந்தியுஞ்சந்திப்பத	56
[illegible]டிக்குமேபர	39
சாரற்குறிஞ்சி	42
சித்தர்க்கும்வேத	46
சுடரிரண்டேபண்	11
சுரக்குந்திருவும்	94
சுவடறக்கத்	74
சூட்டிற்குரு	52
செய்யன்கரிய	54
செய்யோடருவிக்	28
சேராதனவுள	69
சொல்லென்	40
தடம்பணைத்தன்	98
தருமமாங்காமமு	150
தவஞ்செய்வதுந்	155
தனமாஞ்சிலர்க்கு	45
திக்கிக்குமலத்	23
திணையொன்றிய	143
திண்டித்திருவடி	117
திரைக்கிழித்	159
துறவாதவர்க்குங்	59
தென்றலைத்தோன்	92
தேவரையேறிய	57
தேவிற்பிறந்திரு	2
தொகையுளவாய	47
தொடங்குகின்	103
தொழும்பாக்கிய	127
தோன்றுவுபமிட	20
நஞ்சடகோபனைப்	7
நாதனரங்கனயக்	8
நாய்போற்பிறர்	37
நாவலர்திவிற்கவி	88
பகையாய்[illegible]ரு	146
பண்ணப்[illegible]டுவன	34
பண்ணுறுந்தமிழ்	61
பதியந்தமிழென்	104
பரந்தலைக்கும்	129
பரவாதுகேட்டி	97
பாடுங்கறங்குஞ்	95
பாவ[illegible]ர்றும்	[illegible]
பாவைத்திருவாய்	[illegible]
பாவொடுக்குங்	1[illegible]
புகுகின்றதுவிரு	148
புரைதுடைத்துப்	72
புனம்பாழ்படுத்	140
பூட்சிகண்மலர்	105
பெரும்பாக்கிய	78
பொருளைச்சுவை	64
பொன்னையுரைப்	83
போந்தேறுக	45
மணித்தாரரசன்	85
மலையாரமுங்கட	44
மன்றேறுபுகழுந்	166
மனையும்பெருஞ்	165
மாலைக்குழலியும்	40
மூர்த்தத்திணையிம்	63
மெய்யுமெய்யாயது	53
மேகத்தையாற்	100
மொழிபலவாயின	19
வந்தடிக்கொண்ட	66
வல்லம்புலிமுக	161
விடவந்தகார	96
விழுப்பாசினியெம்	48
வினையாதொழிய	137
வெள்ளம்பரந்த	107
வேதத்தின்மூன்	9
வேறேநமக்கில	82

———

http://acharya.org